Released by Maran's Dog ,Toronto, Canada

# பிரம்மசூத்திரம்

## ஓர் எளிய அறிமுகம்

Released by Maran's Dog ,Toronto, Canada



Released by Maran's Dog ,Toronto, Canada

சுஜாதா
எஸ்.ராஜகோபாலன்

Released by Maran's Dog ,Toronto, Canada

விசா பப்ளிகேஷன்ஸ்

Released by Maran's Dog ,Toronto, Canada

பிரம்ம சூத்திரம் என்பது வேதாந்தம் என்னும் உபநிஷதுகளின் வாக்கியங்களைக் குறிப்பிட்டு 'பிரம்மம்' என்னும் இறுதி உண்மையை அறிய முயலும் சிறிய வாக்கியங்களின் தொகுப்பு. இது பிரம்மா, விஷ்ணு, சிவன் போன்ற எந்தக் கடவுளையும் பற்றியதல்ல. பிரபஞ்சத்தின் இறுதி உண்மையையும் ஆதாரத்தையும் ஆரம்பத்தையும் மனித சிருஷ்டியையும் ஜீவனையும் ஆத்மாவையும் வேறுபடுத்திக் காட்டி ஆராயும் பாதராயணரின் இந்நூலின் இரத்தினச் சுருக்கமான வாக்கியங்களை விளக்கமில்லாமல் புரிந்து கொள்வது மிகவும் கடினம்.

இந்துமதத்தின் மிகச்சிறந்த ஞானிகளான சங்கரர், மத்வர், ராமானுஜர் மூவரும் இதற்கு தத்துவ விளக்கங்கள் எழுதியுள்ளனர். வேதாந்த மதக் கோட்பாடுகளின், அடிப்படைத் தத்துவங்களின் சாரம் என்று இதை சொல்லலாம். இவைகளை பிரபல எழுத்தாளர் சுஜாதாவும் எம்.டி.என்.எல். சேர்மனாக இருந்து ஓய்வுபெற்ற அவரது சகோதரர் திரு. எஸ்.ராஜகோபாலனும் இணைந்து சாமானியர்களுக்கும் புரியும்படியாக ஓர் எளிய அறிமுக நூலாகத் தயாரித்திருக்கிறார்கள். இதைப் படித்தபின் இந்து மதத்தின் முக்கிய சிந்தனைகளை அணுகிப் பார்க்கும் ஆர்வம் ஏற்படும்.

Released by Maran's Dog ,Toronto, Canada

விசா பப்ளிகேஷன்ஸ்

அட்டை வடிவமைப்பு: கே.எம்.லீனா

Released by Maran's Dog ,Toronto, Canada

# பிரம்ம சூத்திரம்

ஓர் எளிய அறிமுகம்

சுஜாதா
எஸ். ராஜகோபாலன்

விசா பப்ளிகேஷன்ஸ்
புதிய எண்: 16, பழைய எண் 55,
வெங்கட் நாராயணா சாலை,
தி.நகர், சென்னை – 600 017.
☎: 24342899, 24327696
Fax: 91 - 44 - 24341559

முதற் பதிப்பு : மே, 2006
உரிமை : ஆசிரியருக்கு

**BRAHMA SOOTRAM**
**-Ôr Eḷiya Arimukham**

By: **SUJATHA** and **S. RAJAGOPALAN**

First Edition: May, 2006

No. of Pages: 232

Paper used: 18.6Kg N.S. Book Print

விலை ரூ. 105/-

**VISA PUBLICATIONS**
New No: 16, Old No: 55,
Venkatnarayana Road,
T.Nagar, Chennai-600 017.
Phone: 24342899, 24327696

Available at:
**THIRUMAGAL NILAYAM**
New No: 16, Old No: 55,
Venkatnarayana Road,
T.Nagar, Chennai-600 017.
Phone: 24342899, 24327696

Laser Typeset By: Sivaa Graphics, Chennai-26. Ph: 55413222

Printer at:

ஈஸ்வரி புத்தக நிலையம்
ஸ்ரீ ஆண்டாள் சந்நிதி
ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125.
போன் : 265149

## முன்னுரை

இந்தப் புத்தகத்தின் முதல் அத்தியாயத்தில் பிரம்ம சூத்திரத்தைப் பற்றிய விரிவான பொது அறிமுகம் உள்ளது. அதை நீங்கள் படிப்பதற்கு முகாந்திரமாகச் சில செய்திகள் சொல்கிறோம். இந்தக் கட்டுரைத் தொடர் ஏறத்தாழ இரண்டு வருஷங்களாக குமுதம் பக்தி இதழில் வெளிவந்த போது, பலர் எங்கள் அசாத்தியத் துணிச்சலைப் பாராட்டி எழுதினார்கள்; சந்திக்கும்போதும் சிலாகித்தார்கள். சிலர் 'சுத்தமாகப் புரியவில்லை, ஆனாலும் படித்து வருகிறோம்' என்றார்கள். நாங்கள் 'எல்லா சூத்திரங்களும் அறிமுகமான பின் இவைகளைப் பற்றிய ஒரு முழுமையும் பொது எண்ணமும் கிடைக்கும், அப்போது பிரம்ம சூத்திரத்தின் நோக்கம் என்ன என்பது மெல்லப் புரியும்' என்று சொன்னோம். அப்படித்தான் எங்களுக்கும் இந்த சூத்திரங்கள் படிப்படியாக அணுகும்போது தெளிவாயின.

சுருக்கமான, சில சமயம் முழுமை பெறாத 545 சூத்திரங்கள் ராமானுஜரின்படி: (சங்கரர் 555 என்றும், மத்வர் 564 என்றும் கொள்கின்றனர்) கொண்ட இந்த நூலை இயற்றியவர் பாதராயணர். இவர்தான் மகாபாரதத்தை இயற்றிய வேதவியாசர் என்று சிலர் கருதுகிறார்கள். இதற்கு ஆதாரம் இல்லை. 'பாதரம் என்னும் தாவரம் சூழ்ந்துள்ள தீவு' என்று அந்தச் சொல்லுக்கு ஓர் அர்த்தம் இருக்கிறது. அதனால் வேதவியாசரை இதனுடன் சம்பந்தப்படுத்துகிறார்கள். பாதராயணர்- யார் அவர்? எந்த நூற்றாண்டில் வாழ்ந்தவர்? போன்ற பல விவரங்கள் கிடைக்கவில்லை. பிரம்ம சூத்திரங்களின் உள்சாட்சியங்களை வைத்துப் பார்த்தால், அவை புராண இதிகாச காலங்களுக்கு முற்பட்டவை என்று தெரிகிறது. பிரம்மம் என்னும் இறுதி உண்மையை ஆராய்கிறது. இதில் ராமர், கிருஷ்ணர் போன்ற கடவுள் பெயர்கள் இல்லை. பிரம்மம் போன்ற Abstract ஆன எளிதில் மனவசப்படாத கருத்துக்களை பற்றி, சிறிய சிறிய வாக்கியங்களின் மூலம், பெரும்பாலும் வேதாந்தம் என்னும் உபநிஷத மேற்கோள்கள் மூலம்

சுட்டிக்காட்டி நம்முடன் சேர்ந்து பிரம்மம் என்ன என்று அதன் இறுதி உண்மையை யோசிக்க வைக்கிறது. இந்த சூத்திரங்கள் குறிப்பிடும் உப நிஷதுகள் சிலவே. சாந்தோக்யம், பிருகதாரண்யகம், முண்டகம், கடம், சுவேதாசுவதரம், தைத்திரீயம், கௌசீதகம் போன்றவை தான் பயன்பட்டுள்ளன. மற்ற உபநிஷதுகள் பாதராயணர் காலத்துக்குப் பிற்பட்டவை என்று எண்ணத் தோன்றுகிறது. மேலும் இந்த வாக்கி யங்கள் அவைகளின் சுருக்கத்தால் பலவிதமாக அர்த்தம் செய்து கொள்ளப்பட்டிருக்கின்றன.

பிரம்ம சூத்திரங்கள் மூலம் கேட்கப்படும் கேள்விகள் மிகவும் அடிப்படையானவை. இந்தப் பிரபஞ்சம் எப்படி உருவாயிற்று? யாரால் உருவானது? நாம் எப்படி உருவானோம்? இறந்த பின் என்ன ஆகிறோம்? மறுபிறவி எப்படி நிகழ்கிறது? மோட்சம் என்பது என்ன? போன்ற கேள்விகள் இன்றும் கேட்கப்படுகின்றன. பிரம்ம சூத்திரம் இக் கேள்விகளுக்கெல்லாம் விடைகளை ஒருவாறு துணிவுடன் தீர்மானிக்க முற்படும் மிக முக்கியமான நூல். அது வேதத்தில் சொல்லப்படுவது அனைத்தும் உண்மை என்கிற ஆரம்பக் கருத்துடன் துவங்குகிறது. சங்கரர், 'கடவுள் இருக்கிறாரா? என்ற கேள்வியே அபத்தமானது' என்கிறார். 'இருக்கிறார்' என்ற எண்ணத்தில்தான் எல்லாம் கிளைக்கிறது. கடவுளை உணர ஞானவழிதான் சிறந்தது என்றும் அது சொல்கிறது.

மறுபிறவி, விதி, நம் செயல்களுக்கு நாமே பொறுப்பு, இறந்தபின் நாம் செல்லும் பாதை, மோட்சம், கனவு நிலை, தூக்க நிலை, உயிர் திரும்பப் பிறப்பது போன்றவைகளை பிரம்ம சூத்திரம் விவரிக்கிறது. சூத்திரங்களின் ரத்தினச் சுருக்கத்தினால் அவை பலவிதமாக அர்த்தம் செய்து கொள்ளப்பட்டன. என்று சொன்னோம். பாதராயணர் இத்தனை சுருக்கமாக சூத்திரங்களை அமைத்ததற்கு இரண்டு காரணங்கள் சொல் கிறார்கள். மிகப் பரந்த ஞானத்தை, அனைத்தையும் சொல்லவேண்டிய கட்டாயம், சுலபமாக நினைவு வைத்துக்கொள்ள வேண்டிய அவசியம்.

இதனாலேயே இந்த சூத்திரங்களுக்கு விளக்கங்களை பல மகான்கள் பலவிதமாக எழுதியுள்ளார்கள். சங்கரர் தொடங்கி, பாஸ்கரர், ராமாநுஜர், மத்வர், ஸ்ரீகண்டர், நிம்பார்க்கர், ஸ்ரீபதி, வல்லபர், சுகர், பலதேவர், நேற்றைய டாக்டர் ராதாகிருஷ்ணன் வரை அநேகர் உரையெழுதி விளக்கியிருக்கிறார்கள். பதினைந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த சைதன்யரின் சீடரான பலதேவரின் 'கோவிந்த பாஷ்யம்' சிறப்பாக ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ராதாகிருஷ்ணனின் உரை,



ஆங்கிலப் புலமையும் வேதாந்தத்தில் ஈடுபாடும் உடையவர்களுக்குக் குறிப்பிடத்தக்கது.

**நாங்கள் எழுதியிருப்பது உரையல்ல, அறிமுகம்.** சங்கரர், ராமாநுஜர் இருவரின் வியாக்கியானங்களை, முக்கியமாக ராமாநுஜரின் ஸ்ரீபாஷ்யத்தை பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்டது. மத்வரின் கருத்துக்களைக் கொஞ்சமே தொட்டிருக்கிறோம். இம்மூன்று மேதைகளின் ஆதார கருத்து வேற்றுமைகளை நீங்கள் முதலில் அறிந்து கொள்வது பயன்படும்.

### சங்கரரின்படி, பிரம்ம சூத்திரங்கள் தெரிவிக்கும் முக்கியக் கருத்துக்கள் மூன்று

1. **பிரம்மம் ஒன்றே ஒன்றுதான் உண்மை. அதுவும் 'நாம்' என்னும் ஜீவாத்மாவும் கலந்து வேறுபாடே இல்லாத ஒன்றே.**
2. **பெயர், உரு இவைகளால் வெவ்வேறு பொருள்களாய் காணும் இவ்வுலகம் தோற்றமே. காலம், இடைவெளி (Space) இவைகளால் ஏற்படுத்தப்பட்ட காட்சிப் பிழைகள் (பாரதியார்) உண்மையை அறிந்தால் இவை மறைந்துவிடும். உண்மை அறிவான பிரம்மத்தின்மீது, அறியாமையால் சுமத்தப்பட்ட மாயையே இவ்வுலகமும், பிரபஞ்சமும்.**
3. **பிரம்மம், உலகைப் படைத்து, காத்து, அழிக்கும் 'கடவுள்' இல்லை. கடவுளுக்கு நாம் குணங்களைச் சொல்கிறோம். பிரம்மத்திற்கு குணங்கள் இல்லை.**

சங்கரர் வித்யாசங்கள், குணங்கள் (பிரம்மத்திற்கு) கூறும் உபநிஷத வாக்கியங்களை இரண்டாம்தர முக்கியத்துவம் வாய்ந்தவை-அவை நம் ஆராதனைக்காக, வழிபாட்டுக்காக மட்டுமே சொல்லப்பட்டவை. உருவம், குணமற்ற ஒருமையான பிரம்மமே நாம் அறியவேண்டிய பிரம்மம் என்கிறார். மேலும் அவர்,

'ஏகமேவ அத்விதீயம்' (ஒன்றேயாக, இரண்டில்லாமல் இருந்தது)

'தத்வம் அஸி'- (நீ அதுவாய் இருக்கிறாய்)

'அஹம் ப்ரஹ்மாஸ்மி' (நானே பிரம்மம்)

'ஸத்யம், ஞானம், அநந்தம் ப்ரஹ்ம (இருத்தல், அறிவு, ஆனந்தம், பிரம்மம்)

'ஸர்வம் கலு இதம் ப்ரஹ்ம (இங்கே எல்லாமே பிரம்மம்)

'நேதி நேதி' (இல்லை இல்லை (குணங்கள்)

போன்ற வாக்கியங்கள் (இவற்றை அத்வைதிகள் மஹா வாக்கியம் என்பர்) முதன்மையானவை என்கிறார்.

குணங்கள் அளிக்கும் மற்ற பேத, கடக வாக்கியங்கள் இரண்டாம் பட்சம்தான். அவைகளை நாம் வழிபாட்டுக்காக, பிரம்மத்தை அடை விக்கும் வழிகாட்டிகளாகவே கொள்ள வேண்டும் என்கிறார். இந்த அடிப்படையில்தான் அவர் வேற்றுமை, குணங்கள் காட்டும் சூத்திரங் களுக்குப் பொருள் கூறுகிறார்.

எங்களுக்குத் தோன்றியது போல-சங்கரரின் 'மாயிஸக் கொள்கை' அவர் காலத்தின் கட்டாயம் என்று-ராதாகிருஷ்ணன் கூறவில்லை. அவர் பௌத்தத்தையும் இந்து மதத்தின் (வேதத்தை அடிப்படையாகக் கொண்ட) ஒரு கண்ணோட்டம் என்கிறார். அடிப்படையாக பௌத்தக் கருத்துக்களும், உபநிஷதத்தின் அடிப்படைக் கருத்துக்கள் என்கிறார். நாம் (ஹிந்துக்கள்) புத்தரையும் ஒரு அவதாரமாகக் கொள்வதை இதற்கு எடுத்துக்காட்டாகக் கொள்கிறார்.

ஆனால், எங்களுக்கு ராதாகிருஷ்ணனின் இந்தக் கருத்தோடு உடன் பாடு இல்லை. பௌத்த சூன்யவாதம் கடவுளை 'நிராகரிக்கிறது. **பிரம்ம சூத்திரத்திற்கு கடவுள்தான் கதாநாயகன்.** சங்கரரின் அத்வைதம். மக்களைத் திரும்பி இந்தக் கதாநாயகனின் பக்கம், அவனுக்குப் பெயர், உரு, குணம் தராவிட்டாலும், இழுக்கிறது என்றே தோன்றுகிறது.

*ராமாநுஜரின்படி, பிரம்ம சூத்திரம்*

1. பிரம்மத்தை ஜடப்பொருள், உயிர், ஈசுவரன், இம்மூன்றும் எப்போதும் இணைந்தே உள்ள இவைகளின் கூட்டு என்று கூறுகிறது. அந்தக் கூட்டான பிரம்மம் ஒன்றே.

2. பிரம்மத்திற்கு எல்லா நற்குணங்களும் உண்டு. அதற்கு கெட்ட குணங்கள் அறவே கிடையாது. நற்குணங்கள் எல்லை யில்லாதவை என்கிறது.

3. உலகம் உண்மையில் 'உள்ள' பொருள். காட்சிப்பிழையல்ல. மாயையல்ல, கனவும் உண்மையே என்று கொள்கிறது.

4. உயிர் பிரம்மத்தை அடைகிற மோட்சம், பிரம்ம ஸாம்யம். அருகி ஆனால் அதோடு ஐக்கியமல்ல. எந்த நிலையிலும் உயிரும், ஜடமும் ஈசுவரனின் சரீரப் பொருளாகவே இருக்கும். பூரணமாகக் கலந்துவிடுவது இல்லை.



ராமாநுஜரின்படி 'தத்வம் அஸி' போன்ற அபேத வாக்கியங்களை ஈசுவரன் ஜீவனின் உயிரின் ஆத்மாவாக இருக்கிறது என்ற பொருளிலே கொள்ள வேண்டும். அதேபோல 'இரண்டில்லாதது' (அத்துவிதீயம்) என்பதற்கு, பிரம்மம் 'ஒப்பாரும் மிக்காரும் இல்லாதது' என்று கூற வேண்டும் என்கிறார் ராமாநுஜர். எல்லா வேத (பேத, அபேத, கடக) வாக்கியங்களும் உண்மை- ஒரே அளவான உண்மை- சில வாக்கியங்கள் மேலானவை, சில அவ்வளவு முக்கியமானதல்ல என்று சொல்ல முடியாது என்கிறார். **'நேதி நேதி'** என்பது **'இவ்வளவு மட்டும் இல்லை. இவற்றுக்கு மேலும் கல்யாண குணங்கள் பிரம்மத்திற்கு உண்டு'** என்று சொல்லவந்தவையே என்கிறார்.

5. சிருஷ்டி அல்லது உற்பத்தி என்பது சூக்ஷ்மநிலையில் ஈச்வர னுடன் சரீரமாக இருக்கும் ஜடப்பொருள் மற்றும் ஜீவாத்மாக்களின், ஸ்தூல நிலையை அடைதல். உபாதான காரணப்பொருள் (மண்), நிமித்த காரணப்பொருள் (குயவன்), சஹகாரி காரணப்பொருள் (சக்கரம், கோல் போன்றவை) மற்றும் விளைவான காரியம் (குடம்) எல்லாமே பிரம்மம்.

6. பிரம்ம சூத்திரங்கள், அளவற்ற நற்குணங்கள், குறையே இல்லாமை என்ற இரு அடையாளங்களைக் கொண்ட பிரம்மத்தைச் சொல்கிறது என்கிறார்.

மத்வர், பிரம்ம சூத்திரங்கள் கீழ் வரும் கருத்துக்களையே ஆதரிக்கின்றன என்கிறார்.

1. பிரம்மம் மிகமிக உயர்ந்து, குறையற்று, பூர்ணமானது; அளவற்ற நற்குணங்களைக் கொண்டது.

2. உயிர்கள் பல. தங்களுக்குள் வேறுபடுபவை. பிரம்மம் அல்ல அவை. பிரம்மம் ஜடப் பொருள் அல்ல, ஏனெனில் அவை குறை வுள்ளவை.

3. உலக உற்பத்திக்கு பிரம்மம் நிமித்த காரணம் மட்டுமே.

4. 'தத்வம் அஸி' (அது நீயாய் இருக்கிறாய்) போன்ற அபேத வாக்கியங்கள், உண்மையிலேயே வித்யாசத்தை (பேதத்தை) காட்ட வந்தவை. (நீயும் அதுவும் வேறு வேறு என்று காட்டவே இவை வந்தன. இல்லாவிடில் நீ, அது என்ற இரண்டு வார்த்தைகள் எதற்கு என்ற வாதம் மத்வருடையது') மத்வர் 'அதத்வம் அஸி' என்று பிரிக்கின்றார். (நீ அதுவாக இல்லை) பிரம்மமும் ஜீவனும் வேறுவேறு.

**5. குறைவுற்ற ஜீவன் குறையற்ற பிரம்மத்தை அணுகக்கூட முடியாது. மோட்சம் என்பது பிரம்மத்திற்கும் நமக்கும் இருக்கும் வித்தியாசங்களை உண்மையாக உணர்வதே.**

மத்வர், எல்லா சூத்திரங்களையும் சித்தாந்த சூத்திரங்களாகக் கொள்கிறார். மற்ற இருவரும் சிலவற்றை பூர்வபக்ஷ அல்லது வாதியின் கருத்துக்களாகக் கொள்கின்றனர்.

கீழே தந்திருக்கும் இரண்டு உதாரணங்கள், எப்படி ஒரே சூத்திரம் மூன்று உரையாசிரியர்களாலும் வெவ்வேறு விதமாகப் பொருள் காணப் படுகின்றன என்பதை விளக்கும்.

'ந ஸ்தானதோ அபி பரஸ்யே உபயலிங்காத் ஸர்வத்ர ஹி' (3.2.11)

சங்கரர்- பிரம்மத்திற்கு இரண்டு வகை அடையாளங்கள் கிடையாது. எந்த இடத்திலும்-அவ்வாறு குணமற்றதாகவே எல்லா இடத்திலும் வேதங்கள் சொல்வதால், மத்வர்- இடங்கள் வேறுபட்டாலும், பிரம்மத் தின் அடிப்படை அடையாளத்தில் வேறுபாடு இல்லை-வேதம் அவ்வாறு சொல்வதால்.

ராமாநுஜர்- நற்குணங்களின் இருப்பிடம், குறையே இல்லாதது என்ற இரண்டு அடையாளங்கள் பிரம்மத்திற்கு உண்டு என்கிறது வேதம்-அது ஜீவனின் ஆத்மா அல்லது ஜடத்தின் ஆத்மா என்ற இடங்களில் இருந்தாலும்,

இந்த சூத்திரம் வரும் அதிகரணத்தை சங்கரர். 'பிரம்மத்தின் இயற்கை' என்றும். மத்வர் 'பிரம்மம் எல்லா இடத்திலும் குறைவற்றது' என்றும் 'இரண்டு அடையாளங்கள்' என்று ராமாநுஜரும் பெயரிடுகிறார்கள்.

''அரூபவது ஏவ ஹி தத்து ப்ராதனத்வாத்'' என்ற சூத்திரத்திற்கு. (3.2.14)

சங்கரர்- 'நிச்சயமாக, பிரம்மம் உருவற்றதே. அந்நிலையே அதன் முக்கியத்துவம் என்றும்,

மத்வர்- 'பிரம்மம் ஜடப்பொருள் கலப்பற்றது- உருவமாவது ஜடப் பொருளின் கலவையால் ஏற்படுவது- பிரம்மம் ஜடப்பொருளிலும் மேம்பட்டது. ஆகவே அது அரூபம்' என்றும்.

ராமாநுஜர்-'மற்ற பொருள்களை நியமிப்பதால், பிரம்மம் ரூபம் இல்லாதது போலவே சொல்லப்படுகிறது. பிரதானத்வாத் என்பதற்கு மற்ற உயிர் ஜடப்பொருள்களை நியமிப்பது என்று பொருள் கொள்கிறார் (மற்ற பொருள்களுக்கு ரூபம் உண்டு)

இதுபோல பல சூத்திரங்களுக்கு இவர்களின் உரைகள் வேறுபடு கின்றன. பல இடங்களில் சங்கரர், ராமாநுஜர் இவர்களின் மாறுபாடான விளக்கங்களை நாங்கள், இந்தப் புத்தகத்தில் காட்டி இருக்கிறோம். இவர்களின் உரைகளை மேலும் படித்துப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவலை, இதைப் படிப்பவரிடையே உண்டாக்குவதே எங்கள் குறிக்கோள். பிரம்ம சூத்திரங்களைப் பற்றிய பயத்தை நீக்குவதே இந்த ஆரம்பப் புத்தகத்தின் முதல் குறிக்கோள்.

-'அவரவர் தமதமது அறிவறி வகை வகை, அவரவர் இறையவர். என அடி அடைவர்கள்' என்று நம்மாழ்வார் சொல்வதை இங்கு நினைவுகூறி உங்கள் அறிவுக்கு விட்டுவிடுகிறோம்.

நண்பர் திருமஞ்சனம் சுந்தரராஜன், சூத்திரங்களை வடமொழியி லிருந்து தமிழ்எழுத்தில் அமைக்க உதவினார். அவருக்கு எங்கள் நன்றி.

இந்தப் புத்தகத்தைச் சிறப்பாக வெளியிடும் திருமகள் நிலையத் தினருக்கு நன்றி.

என் இளையசகோதரர் எஸ்.ராஜகோபாலன் என்னைவிட பிரம்ம சூத்திரத்தில் ஆழ்ந்த ஞானம் பெற்றவர். அவரது ஒத்துழைப்பு இந்தப் புத்தகத்தில் முழுவதும் உள்ளது. அவருக்கு நன்றி.

இந்த நூலில் உள்ள சமஸ்க்ருத வார்த்தைகளின் உச்சரிப்பை பற்றி சில குறிப்புகள் தேவைப்படுகின்றன.

பிரம்மசூத்திரம் வடமொழியா ஸம்ஸ்க்ருதத்தில் அமைந்துள்ளது. இந்நூலில் பிரம்மசூத்திரங்களின் ஸம்ஸ்க்ருத வடிவைத் தமிழ் எழுத்துக்களில் கொடுத்துள்ளோம். இவ்வகையில் குத்துமதிப்பாக சூத்திரங்களின் ஒலியுணர்வு ஏற்படலாம். இதுகொண்டு மூலவடிவத்தைச் சற்று அடையாளம் கண்டுகொள்ளலாம்.

தமிழின் க-ச-ட-த-ப வல்லின எழுத்து ஒவ்வொன்றுக்கும் ஸம்ஸ்க்ருதத்தில் நான்கு வர்க்கங்கள் உண்டு. இவைகளை வேறுபடுத்திக் காட்ட நாங்கள் முயற்சிக்கவில்லை. தமிழின் இயல்பான இலக்கண விதிகள் காட்டும் வேறுபாடுகள் எங்களுக்குப் போதுமானதாக இருந்தன.

எனவே சூத்திரங்களை மணி-ப்ரவாள முறை அளவுக்கே எழுதியுள்ளோம். ஆனால், ஆங்கில-ரோமன் அமைப்பில் கோலன் என்ற (:) குறியீடு வடிவத்தை ஸம்ஸ்க்ருதத்தில் அஃ (வெஃகா) என்று உச்சரிக்க வேண்டும். விஸர்கம் எனும் இது ஒரு பெயர்ச்சொல் விகுதி. நம: என்பதை நமஹா என்று சொல்வது தவறு. ஸ: என்றால் அவன், ஸஹ என்றாக உடனாக.

தமிழில் கம்பர் வரை கிரந்த எழுத்துக்களான ஜ ஸ ஷ ஹ போன்றவை பயிலவில்லை. ஆழ்வார்களோ, கம்பரோ, விபீஷணன் என்றோ வஜ்ரதத்தன் என்றோ எழுதாமல் வீடணன், வச்சிரதத்தன் என்று ஒலி மாற்றி எழுதிவந்தார்கள்.

மணிப்ரவாள நடை வந்தபின்தான் க்ரந்த எழுத்துக்களும் ஒரு மூன்றாவது 'ச'வும் தேவைப்பட்டன. தற்காலத் தமிழில் க்ரந்த எழுத்துக்கள் சரளமாகப் பயன்படுகின்றன. அதனால் இந்தப் புத்தகத்திலும் பயன்படுத்தியுள்ளோம். அதேசமயம் ப்ரம்ம சூத்ரம் என்பதை பிரம்ம சூத்திரம் என்று அடிப்படையான இலக்கணத் தேவைகளை மீறாமல் எழுதியுள்ளோம்.

இந்த முயற்சி எங்கள் சொற்பான சம்ஸ்க்ருதப் புலமையைக் காட்டுவதல்ல, மூலத்தின் தொனியை வாசர்களுக்குக் காட்டுவதே.

**சுஜாதா**

# பிரம்ம சூத்திரம்

**முதலில், பிரம்ம சூத்திரம் என்பது என்ன என்று சொல்லி விடுகிறோம்.**

வேதாந்த தத்துவத்தில் மூன்று விஷயங்கள் முக்கியம். அவைகளை ப்ரஸ்தானங்கள் என்று சொல்கிறார்கள். (ப்ரஸ்தானம் என்பதற்குப் பல அர்த்தங்கள் உள்ளன. புறப்பாடு, ஊர்வலம், அணி வகுப்பு, எதையாவது அடையும் முறை, வழி, அல்லது மார்க்கம், இப்படி...) உபனிஷதுகள், பகவத் கீதை, பிரம்ம சூத்திரம், -இவை மூன்றும் ப்ரஸ்தான-த்ரயம் ஆகும்.

உபனிஷதுகளை ச்ருதிப்ரஸ்தானம் என்கிறார்கள் பகவத் கீதையை ஸ்மிருதி ப்ரஸ்தானம் என்கிறார்கள். பிரம்ம சூத்திரத்தை நையாயப்ரஸ்தானம் என்கிறார்கள். ரொம்ப சம்ஸ்க்ருதம் வந்துவிடுமோ என்று பயப்படாதீர்கள். உங்களுக்குத் தெரிந்த அளவுதான் எங்களுக்கும் சம்ஸ்க்ருதம் தெரியும். சில இடங்களில் தவிர்க்க முடியாமல் சம்ஸ்க்ருத வார்த்தைகள் தேவைப்படும் போது, அவைகளுக்குத் தமிழ் அர்த்தம் உடனே சொல்லி விடுவோம். சம்ஸ்க்ருதத்தில் சில விஷயங்களை நளினமாகச் சொல்ல முடியும். தமிழில், தெளிவாகச் சொல்ல முடியும். சில சமயம், ஆங்கிலத்தில் பளிச் சென்று சொல்லிவிட முடியும். மூன்றையும் பயன்படுத்தி எப்படியோ பிரம்ம சூத்திரத்தை உங்க ளுக்கு எளிமையாக்கிப் புரியவைப்பதுதான் எங்கள் குறிக்கோள். உதாரணமாக, ச்ருதி என்றால் கேட்பது; ஸ்மிருதி என்றால் நினை வில் இருத்துவது; நையாயம் என்றால் கோர்வையான தர்க்கம்.

பகவத் கீதையையும் உபனிஷதுகளையும் பற்றி ஏராளமான புத்தகங்கள் நிறைய பேர் தமிழில் எழுதிவிட்டார்கள். பிரம்ம சூத்திரத்தைப் பற்றி அதிகம் இல்லை. காரணம், பிரம்ம சூத்திரம் கொஞ்சம் கடினமானது.

கொஞ்சம் என்ன... நிறையவே கடினமானது. இதை விளக்கு வது எங்களுக்கு மிகப் பெரிய சவால். போகிற போக்கில் ஒரு

வைஷ்ணவன் என்கிற ரீதியில் ராமாநுஜரின் ஸ்ரீபாஷ்யத்தையும் பார்த்துவிடலாம் என்கிற ஆசைதான். அதே சமயம், இதை அற்பமாக எளிமைப்படுத்தவும் கூடாது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் பிரம்மத்தைப் பற்றி யோசித்த அந்த வியப்பை உங்களுக்குக் கடத்த முடிந்தால் எங்களுக்கு வெற்றி.

இந்தத் தொடர் யாருக்காக எழுதப்படுகிறது? இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் இருக்கும் இன்றைய தலைமுறைத் தமிழர் களுக்காக. இவர்களுக்கு அனேகமாக முப்பது முதல் நாற்பத் தைந்து வயது இருக்கும். அனேகருக்குத் தமிழ் புரியும். ஆங்கில அளவுக்குப் புலமை இருக்காது. வேதாந்தத்தின் சாரம் என்ன என்பதைப் பற்றிய ஒரு சந்தேகம் Fuzziness இருக்கும். இவர்கள் நிறைய சம்பாதிப்பார்கள். இந்தியாவின் தத்துவ ஞானத்தைப் பற்றி நண்பர்களுடன் குறிப்பாக வெளிநாட்டு நண்பர்களுடன் பேச ஆசையிருக்கும். சமஸ்க்ருதம் சுத்தமாகத் தெரியாது. இவர்களுக் காகத்தான் இந்தத் தொடர் எழுதப்படுகிறது. புத்தூர் கிருஷ்ண சுவாமி ஐயங்கார் போன்ற மேதைகளுக்கு அல்ல. அவர் போன்ற வர்களுக்கு இது அரிச்சுவடி, பாலபாடம், அவர் விமர்சனத்துக்குக் கூட இதற்கு அருகதையில்லை. ஆனால், இந்தத் தொடரை எழுத கோழியாலம் ஸ்ரீனிவாசாச்சாரியார் எழுதிய 'சாரீரக காரிகாவளீ' என்கிற புத்தகத்திற்கு புத்தூரார் எழுதிய தமிழ் விவரணம் இன்றியமையாததாக இருந்தது.

சுவாமிகளின் கூர்ந்த அறிவிற்கும் புலமைக்கும் எங்கள் முதல் வணக்கம்.

முதலில் புள்ளி விவரங்கள்...

இது 545 சூத்திரங்களைக் கொண்டது. மாக்ஸ் ம்யுல்லர் (சங்கரர்) கணக்குப்படி 555 சூத்திரம். அவர், சில சூத்திரங்களை ஒன்றுக்கு பதிலாக இரண்டாகக் கணக்கிட்டதால் வந்த குழப்பம். சூத்திரம் என்பது, தொல்காப்பியத்தில் நூற்பா என்று சொல்கிறார்களே அது போல, ஆங்கிலத்தில் Aphorism என்பார்கள். சுருக்கமாக நறுக்குத் தெறித்தாற்போல சொல்லப்படும் ஒரு கூற்று. முழு வாக்கியமாகக் கூட இருக்கத் தேவையில்லை. A Concise Statement of a principle என்கிறது வெப்ஸ்டர் அகராதி. இதில் நேரடியான அர்த்தங்களை விட, பொதிந்துள்ள அர்த்தங்கள் இருக்கும்.

முதல் சூத்திரமான, 'அதாதோ பிரஹ்ம ஜிஜ்ஞாஸா' (இப்போது இதனால் பிரம்மத்தைப் பற்றிய விசாரணை) என்பதே உள்ளுக்குள் எத்தனையோ கேள்விகளைஅடக்கியுள்ளது. பிரம்மத்தைப் பற்றிய



சூத்திரங்கள் இவை. பிரம்மம் என்பது படைப்புக் கடவுளான ப்ரம்மாவைக் குறிப்பதல்ல. **முழுமுதற் கடவுள், அல்லது பிரபஞ்சத்தின் கடைசி உண்மையை பிரம்மம் என்று சொல்லலாம்.** நவீன காஸ்மாலஜியும் பிரபஞ்ச இயலும்- அதைத்தான் தேடுகிறது, வேறு மார்க்கமாக. இது பற்றி பின்பு மிக மிக விளக்கமாகச் சொல்வோம். இப்போது, இந்நூலின் மற்ற விவரங்கள்.

இந்த நூல் கி.மு. முதலாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது என்று சொல்கிறார்கள். ஆனால், இது நம் இதிகாசங்களுக்கு முற்பட்டது என்று தோன்றுகிறது. காரணம், இதில் ராமர், கிருஷ்ணர் இல்லை. இதை எழுதியவர் பெயர் வியாசர் என்றும், பாதராயணர் என்றும் சொல்கிறார்கள். மகாபாரதத்தை எழுதிய வியாசரும் இவரும் வேறு என்றுதான் தோன்றுகிறது. இதற்குப் பல பெயர்கள் உண்டு. வேதாந்த சூத்திரம், உத்தர மீமாம்ச சூத்திரம், சாரீரக சூத்திரம், பிக்ஷு சூத்திரம் என்று.

மீமாம்ச என்றால், ஆழமாகச் சிந்திப்பது, யோசிப்பது, ஆராய்வது, சோதிப்பது, விவாதிப்பது, முரண்பாடுகள் போலத் தோன்றுபவைகளை நீக்குவது. வேதாந்த தத்துவம் பூர்வ மீமாம்ச, உத்தர மீமாம்ச என்று இரண்டு பெரிய பிரிவுகளின் கீழ் வருகிறது. உத்தர மீமாம்ச என்பது வேத உபனிஷதுகளில் உள்ள கருத்துக்களை யோசிப்பதும் முரண்பாடுகளை நீக்குவதும். இதற்கு பலர் விரிவுரை எழுதியிருக்கிறார்கள். முக்கியமாக சங்கர பகவத்பாதர், ராமாநுஜர், மத்வாச்சாரியார் இயற்றிய விரிவுரைகள் முக்கியமானவை. ராமானுஜரின் உரையை ஸ்ரீபாஷ்யம் என்பார்கள். வைணவர் ஒவ்வொருவரும் வாழ்நாளில் ஒரு முறையாவது ஸ்ரீபாஷ்யத்தைப் படிக்க வேண்டும் என்ற ஒரு அந்தரங்கமான அறிவுரை உள்ளது. மத்வாச்சாரியருக்கு முன்பே இதற்கு 21 வியாக்கியானங்கள் இருந்திருக்கின்றன. முக்கியமானவை சங்கரர், ராமாநுஜர், மத்வர், வல்லபர், பல தேவர். பலதேவரின் கோவிந்த பாஷ்யத்தைப் பலர் சிலாக்கிய மாகச் சொல்கிறார்கள்.

பிரம்ம சூத்திரங்கள் நாலு அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டிருக் கின்றன. ஒவ்வொரு அத்தியாயத்திலும் நான்கு பாதங்கள் உள்ளன. ஒவ்வொரு பாதத்திலும் அதிகரணங்கள் என்கிற சிறுபிரிவுகள் உள்ளன. சில அதிகரணங்களில் ஒரே ஒரு சூத்திரம் மட்டும்தான் இருக்கும். இந்தப் பாகுபாட்டை யார் செய்தார்கள்; தெரிய வில்லை. பிரம்ம சூத்திரம் முழுவதுமே கடவுளைப் பற்றிய ஆராய்ச்சி அல்லது சர்ச்சை அல்லது enquiry- விசாரணை- என்று

சொல்லலாம். முதல் அத்தியாயத்தை சமன்வய என்கிறார்கள். ஒத்திசைவு-harmony என்று அர்த்தம். இதில் உபனிஷதுகளில் உள்ள முரண்பாடான கருத்துக்களைச் சமன்படுத்தி பிரபஞ்சத்தில் கடவுள் ஒன்றுதான் அடிப்படையான உண்மை என்பது நிலைநாட்டப் படுகிறது. ஒவ்வொரு அத்தியாயத்திலும் சந்தேகங்களை எழுப்பி, அவைகளுக்கு உபனிஷத வாக்கியங்களை இட்டு சமாதானங்கள் சொல்லப்படுகின்றன. பிரம்ம சூத்திரங்களின் உரைகளிலும் இதே முறைதான் கையாளப்படுகிறது. சந்தேகங்கள் எழுப்பியவரை பூர்வபக்ஷி என்றும், முடிவான சமாதானங்கள் சித்தாந்தம் என்றும் சொல்கிறார்கள். ஓர் உதாரணத்தால் இம்முறையை விளக்கலாம்.

முதல் சூத்திரமே, ''அதனால் இனி பிரம்மத்தைப் பற்றிய விசாரணை'' என்பது. இங்கே எழும் வினாக்கள்; ஏன் இதுவரை ஆராய்ச்சி செய்யவில்லை? அப்படி ஆராயாமல் விட்டிருந்தால் இனிமேல் எப்படி ஆராய முடியும்? முன்பே ஆராய்ந்திருந்தால் இனி என்ன புதுசாக இருக்கிறது? இந்தச் சந்தேகங்களுக்கு எல்லாம் விளக்கமாக சங்கரர், 'முன்பு செய்த ஆராய்ச்சியால் நாம் பிரம்மத்தை சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. இப்போது சரியாகப் புரிந்துகொள்ளப் போகிறோம்' என்கிற முடிவுக்கு வருகிறார். இந்த முறை, சந்தேகம்- மாறுபட்ட கருத்துகள்- சமாதானம் என்பது எல்லா சூத்திரங்களுக்கும் வெளிப்படையாக இல்லை. சிலசமயம், இந்த முறை பொதிந்திருக்கிறது. ஆனால், பெரும்பாலும் இந்த முறையில்தான் சூத்திரங்கள் விளக்கப் படுகின்றன.

இது, முதல் அத்தியாயத்தில்.

இரண்டாவது அத்தியாயத்தில், முதல் அத்தியாயத்தில் சொன்ன கருத்துகளுக்கு எதிரான, விரோதமான கருத்துகள் சொல்லப்பட்டு, அவைகளை ஆராய்ந்து நீக்குகிறது. இதனை அவிரோதா-விரோத நீக்கம் என்கிறார்கள்.

மூன்றாவது அத்தியாயம், வாழ்க்கையின் இயற்கை, அதன் குறைகள், பிரம்ம ஞானம் எப்படி நம் வாழ்க்கையை மேம்படுத்து கிறது என்பதை விவரிக்கிறது. பிரம்மத்தை எப்படிச் சிந்திக்க வேண்டும். அதற்கான சாதானா என்கிற வழிமுறையைச் சொல்கிறது, நான்காவது அத்தியாயம். ஆங்கிலத்தில் eschatology என்பார்கள். இறப்பு மற்றும் இறப்பைப் பற்றிய கோட்பாடுகளைச் சொல்கிறது. எவ்வாறு ஞானமடைந்தவன் இறக்கிறான், கடவுளிடம் செல்கிறான் என்பதை விவரிக்கிறது. பிரம்ம



ஞானத்தின் விளைவை- பலனைச் சொல்வதால் இதற்கு, பலன் என்று பெயர் சொல்கிறார்கள். இந்த அத்தியாயத்தை நாம் படிக்கும் போது, நமது இக்கால விஞ்ஞானம் சார்ந்த சந்தேகங்களை யெல்லாம் கழற்றி வைத்துவிட வேண்டும். பிரம்ம சூத்திரத்தை யாத்த அன்றைய மனிதர்களின் மனோநிலைக்குச் செல்ல வேண்டும். இப்போது சூத்திரங்களை வரிசைப்படுத்தும் முறையை விளக்கி விடுகிறோம்.

ஒவ்வொரு அத்தியாயத்திலும் உள்ள சூத்திரங்களின், கணக்கை முதலில் சொல்லிவிடுகிறோம். இதற்கு நாங்கள் வரையறை செய்துகொண்ட குறியீடு அத்தியாயம், பாதம், சூத்திரம் என்கிற வரிசையில் உள்ளது. **2-1-4 என்றால், இரண்டாம் அத்தியாயம், முதல் பாதம், நாலாவது சூத்திரம்.** கீழே உள்ள பட்டியலில் ஒவ்வொரு அத்தியாயத்திலும் உள்ள சூத்திரங்களின் எண்ணிக்கை காட்டப் படுகிறது. அத்தியாயம் 1-138. அத்தியாயம் 2-149, அத்தியாயம் 3-182, அத்தியாயம் 4-76 மொத்தம் கூட்டிப் பார்த்தால் 545.

பிரம்ம சூத்திரங்களைப் படிக்குமுன், வேதகாலத்தைப் பற்றிச் சிறிது தெரிந்திருக்க வேண்டும். அக்கால மனிதர்கள் நிறையக் கடவுள்களை (தேவர்கள், தேவதைகள் என்று பெயரிட்டு) வணங்கினார்கள். இயற்கை தேவதைகளான இந்திரன், வருணன், அக்னி, வாயு என்று இடி, மழை, தீ, காற்று இவைகளுக்கு தேவரூபம் (பொதுவாக மனித வடிவில் - anthropomorphic) தந்து வழிபட்டனர். மாக்ஸ் ம்யுல்லர் போன்ற மேலைநாட்டுத் தத்துவ ஞானிகள் சொல்வது போல, வேத காலத்தில் முதலில் மனிதர்கள் பல கடவுளரை வணங்கினார்கள், பிறகு ஒன்றையே கடவுளாகக் கொண்டனர் (from pantheism to monotheism), என்ற கருத்து தவறானது. முதலில் இருந்தே பல கடவுள்களை ஏற்படுத்திக் கொண்டு பயந்து வழிபட்டாலும், அவற்றிற்கு அப்பாற்பட்டு இருக்கும் 'ஒருமை'யையும் வேதகால மனிதர்கள் உணர்ந்திருந் தார்கள் என்றே சொல்ல வேண்டும். கேந உபநிஷத்தின் மூன்றாவது, நான்காவது பாகங்கள், பிரம்மத்திற்கும், மற்ற தேவதைகளான அக்னி, வாயு, இந்திரனுக்கும் நடந்த உரையாட லாக அமைந்திருக்கிறது. அதைப் படித்தால் மேலே சொன்ன உண்மை தெரியவரும். இந்தக் கடவுளர்களில் விஷ்ணுவும் ருத்திரனும் உண்டு. விஷ்ணு, நாராயணன், இந்திரனின் நண்பர் என்று வருகிறது. இந்திரன் திடீரென்று 'நானே பிரம்மம்' என்று சொல்லுவார். தேவருக்கு தேவன் (விச்வே தேவா) அல்லது 'பெரியசாமி' என்ற சொல் வேதங்களில் அடிக்கடி வருகிறது. இந்த

சூத்திரங்களிலும் ஆதாரமான பிரம்மத்தைச் சொல்லும் போது சில சமயம் தேவதைகளைப் பற்றியும் சொல்லுகிறது. அப்போது பிரம்மம் 'இந்த தேவதைகளின் உயிர்' என்று கொள்ள வேண்டும். இந்தச் சிக்கல்களில் இருந்து விடுபட, நாம் இந்த சூத்திரங்களைப் படிக்கும்போது, முழு முதற் கடவுளை 'பிரம்மம்' என்று பெயரிட்டே அழைப்போம். அக்கால மனிதர்களின் உத்தியும் அதுதான். அன்றைய மனிதர்கள் இயற்கைச் சக்திகளைக் கண்டு பயந்து தேவர்களை (சிறு கடவுளர்களாக) வழிபட்டாலும், இவர்களுக்கு அப்பாற்பட்ட மிகப்பெரிய பொருள் ஒன்றுதான், இந்தப் பிரபஞ்சத்திற்கும், தேவர்களுக்கும் ஆதாரம் என்று நம்பினார்கள். *இன்றைய விஞ்ஞான அறிவைக் கொண்டு, இந்த தேவதைகள், அக்கால மனிதனின் அறியாமையின் உருவங்கள் என்று நினைத்து நாம் பிரம்ம சூத்திரங்களையே நிராகரித்தால், அவற்றில் பிரமிக்கும்படியாக உள்ள பிரபஞ்சக் கருத்துக்களையும் இழந்து விடுவோம்.* மேலும், இன்று நம்மிடம் விஞ்ஞான அறிவு இருந்தாலும், இயற்கையின் சக்திகளை நாம் சந்திக்கும்போது பிரம்மத்தின் அருகினை உணர்கிறோம். கங்கையின் பிரவாகம், நாயகரா நீர்வீழ்ச்சியின் நீர்ப்பெருக்கம், கடல் சீற்றம், கட்டுப் படுத்த முடியாத காட்டுத் தீயின் வெப்பம், இவற்றை உணர்ந்த வர்கள் பிரம்மத்தை ஒருவாறு புரிந்து கொண்டிருப்பர். உண்மைப் பொருளுக்கு மிக அருகில் வந்தது போன்ற உணர்வு இது. அந்தக் கணங்களில் நாம் நம்மையும், மற்றவர்களையும், மற்றவை களையும் முழுமையாக மறந்துவிடுவோம். திடீரென பிரம்மத்தின் 'விச்வரூபத்தை' உணர்வோம். ஆழ்வார்கள், நாயன்மார்கள், ஞானிகள் எல்லோரும் இந்த மாதிரிதான் கடவுளை உணர்ந்தனர். பகுத்தறிவிற்கு அப்பாற்பட்ட உணர்வு இது.

முன்னால் சொன்னபடி, இந்த ஆரம்ப அறிமுகக் கட்டுரை படிப்பவர்களிடம் இது, பிரம்மத்தை, மற்றவர்கள் (உரையாசிரி யர்கள்) எவ்வாறு அடையாளம் காட்டுகிறார்கள் என்று தெரிந்து கொள்ள ஆவலைத் தூண்டும் என்று நம்புகிறோம்.

முதல் அத்தியாயத்தின் சூத்திரங்களை அப்படியே கொடுக் கிறோம். அவைகளைப் பற்றிய ஒரு ப்ரஜ்ஞை ஏற்படுகிறதா பாருங்கள். பயப்படாதீர்கள். மெல்ல விளக்கத்தான் போகிறோம். முதலில் சூத்திரங்கள் மட்டும்.

# முதல் அத்தியாயம்
# சமன்-வயம் சமன்படுத்துதல்

## முதற் பாதம்

**1.1.1. அதாதோ ப்ரஹ்ம ஜிஜ்ஞாஸா**

*இனி பிரம்மத்தை ஆராய்வோம்.*

**1.1.2. ஜன்மாத்யஸ்ய யத:**

*உற்பத்தி முதலியன பிரம்மத்திலிருந்து*

**1.1.3. சாஸ்த்ர யோநித்வாத்**

*(இந்த அறிவு) சாஸ்திரங்களாலேயே (வேதங்களா லேயே) கிடைக்கும்.*

**1.1.4. தத் து ஸமந்வயாத்**

*(சாத்திரம் அல்லது வேதம்) பிரம்மத்தைப் பற்றிய அறிவை ஒருங்கிணைத்து சமமாகத் தருகிறது.*

முதல் நான்கு சூத்திரங்களை நான்கு சிறு பகுதிகளாகப் பிரித்து இருக்கிறார்கள். (ஒவ்வொரு சூத்திரமும் ஓர் அதிகரணம்)

எல்லா உரையாசிரியர்களும் இந்த நான்கு சூத்திரங்களுக்கும் மிக விரிவாகப் பொருள் சொல்கிறார்கள். இந்த நான்கையும் யோசித்து வையுங்கள். இவைகள் நேரடியாகப் புரிந்தால் உங்களுக்கு இந்தக் கட்டுரைத் தொடர் தேவையில்லை. புரியவில்லை என்றால், நீங்கள் எங்கள் கட்சி, வாருங்கள், நம் மகான்கள் இவைகளைப்

புரியவைக்க எப்படிப் பிரயத்தனப்பட்டார்கள் என்பதை இனி பார்ப்போம்.

முதல் நான்கு சூத்திரங்களையும் விளக்கமில்லாமல் பார்த்தோம். அவைகளை நீங்கள் யோசித்திருந்தால், அவற்றின் ரத்தினச் சுருக்கம் உங்களை வியப்படையச் செய்திருக்கும். வியாக்கியானம் இல்லாமல் புரிந்துகொள்ள இயலாது என்பதும் உடனே உங்களுக்குத் தெளிவாயிருக்கும். பல வியாக்கியானங்கள் உள்ளன. சுமார் பதினெட்டு வியாக்யானங்கள் (விரிவுரைகள்) உள்ளன. இராமாநுஜர் (நடுவில் தோன்றியவர்) விரிவுரையில் சங்கரரின் கருத்துக்கு எதிர்ப்பு உண்டு. மத்வரின் கருத்துக்கு இருக்காது. மத்வர் பின் வந்தவராதலால். சங்கரர், பிரம்மம் பிரிவினையே இல்லாத ஒன்றே என்கிறார். நம் அறியாமையால் பிரிவினை காண்கிறோம். பூரண அறிவு தோன்றி, அறியாமை அழியும்போது, ஒருமை புலப்படும். வேற்றுமையோடு தோன்றும் உலகப் பொருள்கள் யாவும் உண்மை இல்லை. மாயை அல்லது அறியாமையால் ஏற்பட்ட தோற்றம், வேத, உபநிஷத வாக்கியங்களில் வரும் 'பிரிவினை இல்லாத (அபேத) வாக்கியங்கள்' மிக முக்கியம் வாய்ந்தது. பிரம்மம் ஒருமை என்பதால் குணமற்றது. நிர்க்குணப் பிரம்மம். ராமாநுஜரின் படி காணும் உலகமும், உயிரும் உண்மை. கனவும் உண்மை, மாயை இல்லை. உலகமும், உயிரும் பிரம்மத்தின் உடல். பிரம்மம் நற்குணங்களின் வடிவம்- அது சகுணப் பிரம்மம். ஆனால் படைப்பிற்கு முன்,படைத்தபின், படைப்பவன் எல்லாமே பிரம்மம்தான். ஆகையால் இதுவும் ஒருவகை ஒருமைத் தத்துவம் தான். மத்வரின்படி ஒருமையே கிடையாது. பிரம்மம் வேறு; உயிர் வேறு. உயிர்களுக்கும் வேறுபாடு உண்டு. பிரம்மம், உலகு அல்ல. உற்பத்திக்கு முன் இருக்கும் உலகமும் பிரம்மம் அல்ல. பிரம்மம் மண்ணிலிருந்து பானை செய்யும் குயவன் மட்டுமே- மண் அல்ல. பானை அல்ல.

இதில் ஆச்சரியம் என்ன என்றால் ஒரே பிரம்ம சூத்திரங்களுக்கு இவ்வாறு மூன்று வகையாக பொருள் தருகின்றனர் உரையாசிரியர்கள். இவைகளில் எதை எடுத்துக் கொள்வது என்பதை உங்களுக்கு சிபாரிசு செய்ய நாங்கள் விரும்பவில்லை. பிரதான விளக்கங்களைக் கொடுக்கிறோம். சூத்திரங்களில் அடங்கியுள்ள சிந்தனை என்ன என்பதை நீங்களே யோசிக்க வேண்டும்.

முதல் அத்தியாயம் முதல்பாதத்தின் சூத்திரங்களை இப்போது பார்க்கலாம்.



முதல் அத்தியாய முதல்பாத முதல் சூத்திரம் இது.

***1.1.1. அதாதோ ப்ருஹ்ம ஜிஜ்ஞாஸா***

*இனி, பிரம்மத்தைப் பற்றிய விசாரணை*

இந்த ஆரம்பம் பதஞ்சலியின் யோக சூத்திரங்களிலும் உள்ளது. (அதாதோ யோக ஜிக்ஞாய)

இனி என்பதற்கு பல விளக்கங்கள் உள்ளன.

வேதங்களின் கர்ம காண்டத்தை நன்கறிந்த பின்பு, இந்த ஆராய்ச்சியைத் தொடங்க வேண்டும் என்பதை சங்கரர் எதிர்க்கிறார். கர்ம காண்டம் என்பது வேதத்தில் சொல்லப்பட்டிருக்கும் யாகம் போன்ற Rituals. பிரம்மத்தை ஆராய சங்கரர் எதிர்பார்க்கும் தயார் நிலை, நிலையாமைக்கும் நிலையானவைக்கும் உள்ள வேறுபாட்டை அறிதல், இறப்பை ஆராயும் விருப்பம், அடக்கம், கட்டுப்பாடு என்று ஒரு பட்டியலே சொல்கிறார். சங்கரர் வாழ்ந்த காலத்தில் மக்களை பிரம்ம ஞான ஆராய்ச்சியில் ஈடுபடுத்த வேண்டிய தேவை இருந்தது. வேதத்தின் கர்ம காண்டம் சிலருக்கு மட்டுமே விதிக்கப்பட்டது. அதிலிருந்து விடுபட்டு எல்லோரையும் ஆராய வாருங்கள் என்று அழைக்கிறார். ராமாநுஜரின் பார்வை வேறு. வேதத்தின் பூர்வ மீமாம்சை என்னும் கர்மத்தைப் பற்றிய விசாரணை தரும் அறிவு ஸ்திரமற்றது. இவைகளை விசாரித்தபின் அவை ஸ்திரமற்றது என்று நிச்சயித்த காரணத்தாலே பிரம்மத்தைப் பற்றிய விசாரணை தேவைப்படுகிறது என்கிறார்.

நாம் இந்த முதல் அதிகரணத்தை 'இனி பிரம்மத்தை ஆராய்வோம்' என்கிற ஒரே எதிர்பார்ப்புடன் மட்டும் அணுகுவோம்.

***1.1.2. ஜன்மாத்யஸ்ய யத:***

*உற்பத்தி முதலியவை பிரம்மத்திலிருந்து.*

உற்பத்தி என்பதை Origin, மூல காரணம், ஆரம்பம் என்று பல விதத்திலும் சொல்லலாம். பிரபஞ்சம் ஏற்பட, நிலை பெற, மாறுபட, அழிய, அனைத்துக்கும் காரணம் பிரம்மம்தான் என்கிறது இந்த சூத்திரம்.

நவீன இயற்பியலும் இதைத்தான் சொல்கிறது. பிரம்மம் என்கிற வார்த்தையைத் தவிர்த்துவிட்டு நோக்கினால், இயற்பியலும்,

அனைத்துக்கும் காரணம் ஓர் ஒருமித்த ஆரம்ப கணம் (Singularity) என்று சொல்கிறது.

**1.1.3. சாஸ்த்ர யோநித்வாத்**

*(இந்த அறிவு) சாஸ்திரங்களாலேயே (வேதங்களாலேயே) கிடைக்கும்.*

சாஸ்த்ரயோநித்வாத் என்ற ஒரு முற்றுப் பெறாத சூத்திரத்தில், எது சாஸ்திரங்களால் கிடைக்கும் என்பதை நாம் நிரப்ப வேண்டியிருக்கிறது. பிரம்மத்தைப் பற்றிய அறிவு என்று கொள்வதுதான் சரியானது; காரணம், நாம் பிரம்மத்தைப் பற்றிதான் பேசிக் கொண்டிருக்கிறோம்.

சாஸ்திரங்கள் என்பவை வேத உபநிஷதுகள் போன்ற வேதாந்த வாக்கியங்கள். இவைகளை அலசுவதால்தான் பிரம்மத்தைப் பற்றிய அறிவு கிடைக்கும். பிரம்ம சூத்திரங்களின் அத்தனை விளக்கங்களும் வேத உபநிஷத வாக்கியங்களைச் சார்ந்து இருப்பதன் காரணம், இந்த சூத்திரம்தான்.

**1.1.4. தத் து ஸமந்வயாத்**

*அந்த அறிவை ஒருங்கிணைத்துத் தருகிறது.*

சாஸ்திரங்கள் காட்டும் அறிவு. முரண்பாடுகள் நீக்கி, சமனப் படுத்தித் தருவது 'தத் து ஸமந்வயாத்' பிரம்மத்தைப் பற்றி அறிய, சாஸ்திரங்களைத்தான் நம்ப வேண்டும் என்பதால், அவைகளில் தான் அந்த அறிவு ஒருங்கிணைந்து முரண்பாடில்லாமல் கிடைக்கும். இந்த முதல் நான்கு சூத்திரங்களும் மிக விரிவாக உரையாசிரியர்களால் விளக்கப்பட்டுள்ளன. ஒவ்வொன்றையும் ஒரு அதிகரணமாகச் சொல்கிறார்கள். இனிவரும் எட்டு சூத்திரங்களை ஒரு அதிகரணமாக்கி, பிரபஞ்சத்தின் காரணம் ஜடப் பொருள் Matter அல்ல என்பதை வேத உபநிஷத் வாக்கியங்களைக் கொண்டு படிப்படியாக நிருபிக்கிறார்கள்.

**1.1.5. ஈக்ஷதேர் நாசப்தம்.**

*பிரபஞ்சம் தோன்ற ஜடப்பொருள் காரணமாகாது. 'அது நினைத்தது' என்று சொல்லப்படுவதால்.*



*மூலகாரணப் பொருளை அவர்கள் ஸத் என்கிறானைகள். அது Matter என்னும் வெறும் ஜடப்பொருளாகாது. -ஜடம் நினைக்காது.*

இந்த சூத்திரம், ஈக்ஷதேர் நாசப்தம், என்னும் போது பிரம்மம் சப்தத்தால் மாத்திரம் அறிய முடியாததான மூலப் பொருள் ஆகாது என்கிறது.

**1.1.6. கௌணச்சேந் ஆத்ம சப்தாத்.**

*ஆத்மா என்னும் சப்தமும் அதற்குப் பிரயோகிக்கப் படுவதால்- ஜடத்திற்கு ஏது ஆத்மா?*

**1.1.7. தந்நிஷ்டஸ்ய மோக்ஷ உபதேசாத்.**

*மோட்சத்திற்கு மார்க்கமாக அதை உபதேசிப்பதும் ஒரு காரணம். (அது ஜடப்பொருள் ஆகாது என்பதற்கு வலுவான விளக்கம், ஜடப் பொருளை நம்பி மோட்சத்திற்குப் போக முடியாது என்பதுதான்.)*

**1.1.8. ஹேயத்வா வசனாச்ச.**

*அதற்கு தாழ்வு சொல்லப்படாததும் ஒரு காரணம்- ஜடத்திற்குத் தாழ்வுகள் உண்டு.*

**1.1.9. ப்ரதிஜ்ஞாவிரோதார்**

*அதை அறிந்தால் எல்லாவற்றையும் அறிந்ததாகும் என்று உறுதியளிக்கப்படுவதும் ஒரு காரணம் (அது ஜடப் பொருளாகாது)*

Ultimate Knowledge என்பது பருப்பொருளை மட்டும் சார்ந்திருக்க முடியாது என்னும் அற்புதமான இந்தக் கருத்து, இயற்பியலுக்கு முழுவதும் பொருந்தும்.

**1.1.10. ஸ்வாப்யயாத்.**

*ஜீவன் தூங்கும்போது அதில் லயிருத்திருப்பதால்.*

**1.1.11. கதிஸாமாந்யாத்.**

*மற்ற (உபநிஷத) வாக்கியங்களை ஸமமாகக் கொள்ள வேண்டும் என்றால்,*

**1.1.12. ச்ருதத்வாச்ச.**

*(சாந்தோக்யத்தில்) எல்லாம் பரமாத்மாவிடமிருந்தே உண்டாயின என்பதால்.*

சுருக்கமாக இம்மூன்று சூத்திரங்களுக்கும் பொருள் 'எல்லா உபநிஷத சொற்களுக்கும் சரியாகப் பொருள் கொள்ள வேண்டும் என்றால், பிரம்மம் ஜடப்பொருள் என்று சொல்ல முடியாது.

எல்லா உபநிஷதுகளிலும் வெவ்வேறு தருணங்களில் பிரபஞ்ச காரணத்தைப் பற்றிச் சொல்வதற்குள் முரண்பாடு ஏற்படக்கூடாது என்பதால் ஜடப்பொருள் பிரம்மமாகாது. உபநிஷதுகள் அனைத்தும், பிரபஞ்சத்தின் மூலகாரணம் என்று ஒரு முழு முதற் கடவுளைச் சொல்லும்போது, ஜடப்பொருளைக் காரணமாகக் காட்டுவதே இல்லை. முண்டகோபனிஷத், ''எவனொருவன் எல்லாப் பொருள்களின் ஸ்வரூபங்களையும் சுபாவங்களையும் அறிகிறானோ அவனிடமிருந்து மூல ப்ரக்ருதி உண்டாயிற்று'' என்கிறது. ''பரமாத்மாவிலிருந்து ஆகாயம் உண்டாயிற்று'' என்று தைத்திரேய உபநிஷதும், ''முதலில் ஆத்மா இருந்தது'' என்று ஐதரேய உபநிஷதும் சாந்தோக்யம், தூங்கும்போது ஆத்மா பிரம்மத்தில் லயிக்கிறது' என்பதால் (தூங்கும்போது ஆத்மா எப்படி ஜடப் பொருளில் லயிக்கும்?) சொல்லும் கருத்துக்களிடையே, பிரம்மம் ஜடப்பொருளிலிருந்து தோன்றியது என்றால் முரண்பாடு வந்து விடும். எனவே, பிரம்மம் ஜடப் பொருள் அல்ல.

அடுத்த அதிகரணத்துக்குச் செல்லுமுன் சற்று மூச்சு விட்டுக் கொள்ளவும். அடுத்து வரும் எட்டு சூத்திரங்கள், பிரம்மம் ஆனந்த மயமானது என்பதைப் பலவிதங்களில் சொல்கின்றன. இந்த ஆனந்தம் வெறும் Physical pleasure அல்ல. வேறு என்ன? பார்ப்போம்.

**1.1.13. ஆனந்தமயோ அப்யாஸாத்.**

*பிரம்மம் ஆனந்த மயமானது. படிப்படியாக, திரும்பத் திரும்ப சொல்லப்படுகையால்*



தைத்திரீயோபநிஷதில்,

'உணவால் வளர்வது உடம்பு.
உடம்பில் உயிர் உள்ளது.
உயிரைப் போன்றது மனம்
மனதில் உள்ளது அறிவை உடைய ஜீவன்
அந்த ஜீவனே ஞான மயன்.
அதை உடுத்துக் கொண்டிருப்பது ஆனந்தமயமான பிரம்மம்'

என்று சொல்லப்படுவதன் சுருக்கம் இது.

சென்ற அதிகரணத்தில் பிரம்மம், அசேதனம் என்னும் ஜடப் பொருளாகாது என்பது காட்டப்பட்டது. இதனால் பிரம்மம் சிந்திக்கக் கூடிய சேதனம் என்று எண்ண வாய்ப்பிருக்கிறது அதுவும் அல்ல அது. ஜீவனும் அல்ல. அதனினும் சூட்சுமமான ஆனந்தம் அது என்பது இந்த அதிகரணத்தில் நிலை நாட்டப்படுகிறது.

என்ன இந்த ஆனந்தம்? உடல், உயிர், ஜீவன், அதன் அறிவு, அதில் உறையும் ஆனந்தம் பிரம்மம்.

இந்த ஆனந்தத்தை அளவிடவும் உரையாசிரியர்கள் முயல்கிறார்கள். மனிதன் மிக அதிகமாகப் பரவசப்படுவது எதனால்? சிலருக்கு நல்ல கவிதையிலோ, நல்ல இசையிலோ, ஆரோக்கியமான வருத்தமற்ற மன நிலையிலோ, நல்ல நட்பாலோ, வெற்றியாலோ, குழந்தையின் புன்னகையிலோ, நல்ல உணவிலோ, நல்லவர்கள் சபையிலோ, வியாதியற்ற தன்மையிலோ... இதெல்லாம் ஆளாளுக்கு மாறுபடும் தினவாழ்வின் பரவசங்கள். இதை ஒருபங்கு என்று கொண்டால், அதைப் போல நூறு பங்கு கந்தர்வர்கள் அனுபவிப்பார்களாம். அதைப் போல நூறு மடங்கு தேவ கந்தர்வர்கள். அதை விட நூறு மடங்கு சொர்க்கத்திற்குச் சென்ற நம் முன்னோர்கள். அதைவிட நூறு நூறு நூறு மடங்கு தேவர்கள். அதன் நூறு நூறு நூறு மடங்கு சந்தோஷம், படைப்புக் கடவுளான பிரம்மாவுக்கு, அதைவிட நூறு பிரம்மத்தின் ஆனந்தம்.

இத்தனை ஆனந்தம் துன்பத்தில் உழலும் நம் போன்ற ஜீவன்களுக்கு இயலாது. அதனால் பிரம்மம் ஜீவனில்லை என்பது குறிப்பு.

இதன் நோக்கம் ஆனந்தத்துக்கு ஒரு ஸ்கேல் அமைப்பதல்ல. எல்லையற்ற எதுவும் பிரம்மம் என்பதே. அதன் எல்லா குணங்களையும் எல்லையற்றதாகச் சொல்ல வேண்டும் என்பதே. நவீன இயற்பியல் infinite mass in Zero space என்று சொல்வது இந்தக் கருத்துக்கு நெருங்கி வருகிறது.

**1.1.14.** விகாரசப்தாத் நேதி சேந்ந, ப்ராசுர்யாத்.

*ஆனந்தம் வேறு, பிரம்மம் வேறு என்று கொள்ளக்கூடாது. ஆனந்தமே பிரம்மம். ஆனந்தம் அதன் குணமல்ல.*

**1.1.15.** தத்ஹேது வ்யபதேசாச்ச.

*ஜீவனின் ஆனந்தத்திற்குக் காரணம் பிரம்மம் என்பதால், ஜீவன் பிரம்மமல்ல.*

ஒரு கோயிலுக்கு பஸ்ஸில் சென்றால், அந்த பஸ்தான் கோயில் என்று சொல்ல முடியாது. அதுபோல்.

**1.1.16.** மாந்த்ரவர்ணிக மேவ ச கீயதே.

*மந்த்ரவர்ணத்தில் அதாவது தைத்திரீய உபநிஷதில் சத்யம், ஞானம், அனந்தம் என்று சொல்லப்பட்ட பிரம்மமே இங்கு ஆனந்தம் என்று சொல்லப்படுகிறது.*

**1.1.17.** ந இதரோ அனுபபத்தே:

*பிரம்மத்தை ஜீவன் என்று சொல்வது பொருந்தாது.*

**1.1.18.** பேத வ்யபதேசாச்ச.

*ஜீவனிடமிருந்து பிரித்துச் சொல்வதால் பிரம்மம் ஜீவனில்லை.*

**1.1.19.** காமாச்ச நாநுமாநாபேக்ஷா.

*பிரபஞ்சத்தை உண்டாக்க பிரம்மத்துக்கு இச்சை ஒன்றே போதும்; ஜடப்பொருள் ஜீவன் தேவையில்லை.*

**1.1.20.** அஸ்மிந்நஸ்ய ச தத்யோகம் சாஸ்தி.

*ஜீவன் இந்த ஆனந்தமயமான பிரம்மத்தைச் சேர்கிறது என்று சொல்வதால், ஜீவன் பிரம்மமில்லை.*



ஜீவன் ஆனந்த மயமான பிரம்மத்தை அடைகிறது என்பது தைத்திரீய உபநிஷதில் சொல்லப்பட்டிருக்கிறது ('அந்த ஆனந்த மயனை அடைந்து ஜீவனும் ஆனந்த மயனாகிறான்') ஜீவன் நதியைப் போல ஆனந்தமயன், கடல். நதி கடலாகாது. எளிய வாதம். இந்த அதிகரணம் இதனுடன் முடிகிறது. பிரம்மத்தை ஆனந்தமயன், கடல் என்று சொல்லி, திரும்பத் திரும்ப ஜீவன் பிரம்மமில்லை என்பதை வலியுறுத்தியது.

அடுத்த அதிகரணத்தில் இரண்டு சூத்திரங்கள் உள்ளன.

**1.1.21.** அந்தஸ்தத் தர்மோபதேசாத்

*சூரியனுக்கும், கண்ணுக்கும், பிரம்மத்திற்கு உள்ள சக்தி இருப்பதாகச் சொல்லப்படுவதால், அது பிரம்மமே.*

**1.1.22.** பேத வ்யபதேசாச்சான்ய:

*சூரியனிலிருந்தும் பார்வையிலிருந்தும் வேறுபடுத்திச் சொல்வதால், பிரம்மம் அவைகளுக்கு அந்நியமானது.*

பிருஹதாரண்யக உபநிஷது, 'எவன் சூரியனின் உள்ளே விரவியிருக்கிறானோ' என்று சூரியனிடமிருந்து பேதப்படுத்தி பிரம்மத்தை விவரிப்பதைக் குறிப்பிடுவதுதான் இந்த சூத்திரம்.

உன்னிப்பாகப் பார்த்தால், உங்களுக்குப் புரியும். பிரம்மம் இதுதான் என்று சொல்லாமல், இது, இதற்கும் மேல் என்று சொல்லும் போக்குதான் இந்த அதிகரணங்களில் உள்ளது. இது, சில சமயங்களில் குழப்பும். இவர்கள் என்ன சொல்ல வருகிறார்கள் என்று வியப்படைய வைக்கும்.

*பிரம்மத்தை வார்த்தைகளால் வர்ணிக்க முற்படும் அபார முயற்சி பிரம்ம சூத்திரங்கள். வார்த்தைகளுக்கு, அவை தரும் செய்திகளுக்கு, ஓர் எல்லை உள்ளது.* Semantic limitation *என்பார்கள். இதை வார்த்தைகளுக்கு அப்பாற்பட்ட ஒரு* விஷயத்தை வலைப்படுத்த முற்படும்போது பிரம்மம் இது, இது மட்டும் இல்லை, இதற்கு மேல் என்கிற முறையைத்தான் அவர்கள் கடைப்பிடிப்பார்கள்.

நம்மாழ்வார்,

ஆணல்லன் பெண்ணல்லன் அல்லா அலியுமல்லன்.
காணலுமாகான் உளனல்லன் இல்லை யல்லன்.
பேணுங்கால் பேணும் உருவாகும் அல்லனுமாம்.
கோணை பெரிதுடைத்து எம்பெம்மானைக் கூறுதற்கே.

(கோணை=பிரயாசம்)

**1.1.23. ஆகாசஸ் தல்லிங்காத்**

இதே போக்கில் ஆகாயம் பிரம்மமே என்கிறார்.

*பிரம்மத்திற்கான அடையாளங்கள் காணப்படுவதால் ஆகாயம் பிரம்மமே.*

(அடையாளங்கள் எங்கும் பரவி பெரியதாகி இருத்தல்) ஆனால், ஆகாயம் மட்டும் பிரம்மமல்ல என்றும் விளக்கம் கூறப்பட்டிருக்கிறது. ஆகாயம் என்ற பதம் Space என்னும் விண்வெளியாகக் கொண்டால், இயற்பியல் கருத்துக்கு இந்த சூத்திரம் ஒத்து வருகிறது. முதன் முதலில் ஒன்றுமே இல்லாமலிருந்து விண்வெளி பிறந்தது என்பது அறிவியல். 'எல்லா பூதங்களும் ஆகாயத்திலிருந்து உண்டாகின்றன. ஆகாயத்தில் மறைகின்றன' என்று சாமவேதத்தைச் சார்ந்த சந்தோக்ய உபநிஷத் சொல்கிறது.

**1.1.24. அத ஏவ ப்ராண:**

*இதே காரணங்களால் ப்ராணன் என்று சொல்லப்படுவதும் பிரம்மமே.*

சாந்தோக்ய உபநிஷதம். தீ, நீர், காற்று முதலியன எல்லாம் பிராணனிலிருந்து வெளியாகி மீண்டும் அடங்குகின்றன என்கிறது. ஆகையால் ப்ராணன் என்று சொல்லப்படுவது. எல்லா ஜீவராசிகளும் வாழக் காரணமாக இருக்கும் பிரம்மமே.

**1.1.25. ஜ்யோதிஸ் சரணாபிதாநாத்**

*அதுபோல், ஜோதி எனப்படுவதும் பிரம்மமே.*

பரமபதத்தில் ஒளிரும் சோதி நம்மிடமும் விளங்குகிறது என்று சாந்தோக்யத்தில் ஒரு வாக்கியம் உள்ளது. வரிசையாக ஆகாயம், காற்று, ஒளி இவைகளையெல்லாம் பரமாத்மாவின் வடிவங்



களாகச் சொன்னாலும் அவைகளைத் தனியாக பிரம்மமாகக் கொள்ளக்கூடாது. பிரம்மம் இவைகளுக்கு மேற்பட்டது, அப்பாற்பட்டது என்பதுதான் மையக்கருத்து.

**1.1.26. சந்தோ அபிதானாந் நேதி சேந்ந, ததா சேதோ: அர்ப்பண நிகதாத், ததா ஹி தர்சனம்**

*காயத்ரி மந்திரம் குறிப்பது பிரம்மமல்ல என்று சொல்வது சரியல்ல.*

இது மாதிரியான Double negative கள் பிரம்ம சூத்திரத்தில் பல இடங்களில் வலுவான பேச்சாக அமைகின்றன. எளியமுறையில் சொன்னால் காயத்ரி, பிரம்மம்தான் என்று கொள்ள வேண்டும்.

**1.1.27. பூதாதி பாத வ்யபதேசோபபத்தேச் சைவம்.**

*நான்கு பொருள்கள் காயத்ரிக்கு பாதங்கள் என்று சொல்வதால் காயத்ரி மந்திரம் எனப்படுவது பிரம்மமே.*

நான்கு பொருள்கள் என்று சொல்வது ஆத்மா, பூமி, உடல், ஆத்மா உறையும் மனம்.

**1.1.28. உபதேச பேதாதன் நேதி சேந் ந, உபயஸ்மின் அபி அவிரோதாத்.**

*இரண்டு மந்திரங்களும் வேறு வேறு பொருள்களைச் சொல்கின்றன என்றால் அவ்வாறில்லை. இரண்டிற்கும் வேறுபாடு இல்லை.*

சாந்தோக்ய உபநிஷத்தில் ஒரு மந்திரம், பிரம்மத்தின் மூன்று பாதங்கள் தேவலோகத்தில் உள்ளன என்கிறது. இன்னொரு மந்திரம் தேவலோகத்தின் மேலே உள்ளது என்கிறது. இரண்டிற்கும் வேறுபாடு இல்லை. மர நுனியில் பறவை இருக்கிறது என்பதும், மர நுனி மேல் பறவை வீற்றிருக்கிறது என்பதும் ஒன்று போல என்ற வேற்றுமை உருபுகளின் மயக்கம்தான் என விளக்கம் கூறப்படுகிறது.

பிரம்ம சூத்திரம், உபநிஷதுகளை மேலாகப் படித்தால் தோன்றும் முரண்பாடுகளைக் குறிப்பிட்டு அவைகளை நீக்கும் சூத்திரங்களாகவும் உள்ளன. இந்த சூத்திரம் சாந்தோக்ய

மந்திரத்தைத்தான் சொல்கிறது என்பதை நாம் நம்ப வேண்டும். பொதுவாக உபநிஷத் வாக்கியங்களில் முரண்பாடுகள் இல்லை என்பதை நிலை நாட்டுவதே நோக்கமாகத் தெரிகிறது.

**1.1.29. ப்ராணஸ்ததாநுகமாத்**

*பிராணன் பிரம்மமே*

(பார்க்க 1.1.24) ஆனந்தம் பிராணனுக்கும் உண்டு என்பதால், இந்திரன என்னும் தேவதை பிரம்மம் அன்று என்பதை இந்த அதிகரணம் விவரிக்கிறது.

**1.1.30. ந வக்துராத்மோபதேசாத் இதிசேத் அத்யாத்ம ஸம்பந்த பூமாஹ்யஸ்மிந்.**

மீண்டும் பிராணன் பிரம்மமே என்று சொல்லிவிட்டு, இந்திரன் என்னையே வணங்கு' என்று சொல்வதால், பிரம்மத்துடன் சம்பந்தப்பட்ட பெருமைகள் இந்திரனுக்குக் கொடுக்கப் படுகின்றன. ஆனால், இந்திரன் பிரம்மமல்ல.

**1.1.31. சாஸ்த்ர த்ருஷ்ட்யா தூபதேசோ வாமதேவவத்**

இந்திரன் மட்டுமல்ல, வாமதேவன் எனப்படும் ருத்திரன் கூட 'நான் ஒருவனே முதலில் இருந்தேன்' என்று சொல்லியிருக்கிறான்.

பிரகலாதன், அநந்தன் எங்கும் இருப்பதால் நானும் கடவுளா கிறேன் என்றான். இவர்கள் சொன்ன எல்லாவற்றிலும் உள்ளே உறைவது பிரம்மம் என்று கொள்ள வேண்டுமே தவிர, ருத்ரனோ, பிரகலாதனோ பிரம்மம் என்று சொல்லக்கூடாது.

நம்மாழ்வாரின்.

"கடல்ஞாலம் செய்தேனும் யானே என்னும்.
கடல்ஞாலம் ஆவேனும் யானே என்னும்
கடல் ஞாலம் கொண்டேனும் யானே என்னும்
கடல் ஞாலம் கீண்டேனும் யானே என்னும்."

என்று ஒரு தாய், தன் மகளைப் பற்றி கவலைப்பட்டுச் சொல்கின்ற பாசுரங்களில், அந்தப் பெண்ணை அவ்வாறு பேச வைப்பது பிரம்மமே தவிர, அந்தத் தலைவி பிரம்மமல்ல.



**1.1.32. ஜீவமுக்ய ப்ராண லிங்காந்நேதி சேந்ந, உபாஸாத்ரை வித்யாத் அச்ரிதத்வாத் இஹ தத்யோகாத்.**

*இந்திரன், ஜீவன்; பிராணன், ஜடப்பொருள், இவ்விரண்டு அடையாளங்களும் பிரம்மத்திற்குச் சொல்லப்படுவதால், பிரம்மத்தை ஜீவன் மட்டுமே, ஜடப்பொருள் மட்டுமே என்று சொல்ல முடியாது. அதை, மூன்று விதங்களில் வழிபடலாம். பிரம்மம் என்று நேராக, அறிவுள்ள ஜீவனாக, அறிவற்ற ஜடப்பொருளாக.*

சுவேதாசுவதர உபநிஷத்தில் இந்த மூன்று விதங்கள் சொல்லப் படுகின்றன. ஜீவனுக்கும் உயிருக்கும் உடலுக்கும் உள்ளே உறையும் பொருள் பிரம்மம் என்பதே மையக்கருத்து.

பொய்கையாழ்வார், இதை வெண்பாவில் அற்புதமாகச் சொல்லியிருக்கிறார்.

"செவி, வாய், கண், மூக்கு, உடல் என்று ஐம்புலனும்
புவி, கால், நீர், விண், பூதம் ஐந்தும்- அவியாத
ஞானமும் வேள்வியும் நல்லறமும் என்பரே,
ஏனமாய் நின்றாற்கு இயல்பு."

ஒரு வழியாக முதல் பாதத்தின் இறுதிக்கு வந்துவிட்டோம் இதில் முப்பத்து இரண்டு சூத்திரங்கள் இருந்தன. அவை 11 அதி கரணங்களாகப் பிரிந்தன. அவைகளின் எளிய பொழிப்புரையைப் பார்த்துவிட்டு அடுத்த பாதத்திற்குச் செல்லலாம்.

1. பிரம்மம் ஆராயத்தக்கது.
2. ஆரம்ப காரணம் அது.
3. பிரம்மத்தை அறிய வேதங்கள் தேவை.
4. அவைகளில் பிரம்மத்தைப்பற்றி முரண்பாடுகள் இல்லை.
5. உலகக்காரணம் பிரம்மமே.
6. அது ஆனந்த மயமானது.
7. சூரியனிலும் கண்ணிலும் உள்ள ஒளித்தன்மை அது.
8. அது ஆகாயம்- ஆனால் அது ஜடப்பொருள் இல்லை.
9. அது உயிர்- எல்லாவற்றுக்கும்
10. அது ஜோதி- ஆனால் அது தீ இல்லை.
11. இந்திரன், பிராணன் பிரம்மமே.

கொஞ்சம் கொஞ்சம் பிரம்மத்துடன் பரிச்சயம் கிடைக்கும் போலிருக்கிறதல்லவா? நிதானமாக இந்த அத்தியாயத்தை மறுமுறை படிக்கும்போது, சிருஷ்டியின் உண்மையை யோசித்துப் பார்க்கும் ஓர் ஆழ்ந்த சிந்தனையைத் தொட முடிகிறதல்லவா?

முதல் அத்தியாயத்தின் முதல் பாதத்தின் சூத்திரங்களை அறிமுகப்படுத்திவிட்டோம். அடுத்த பாதத்திற்குச் செல்லுமுன் ஒரு சிறிய விண்ணப்பம். பிரம்ம சூத்திரத்துக்கு பலவிதமான விளக்கங்கள் உள்ளன என்று சொன்னோம். சமஸ்கிருதத்தில் ஒரு சொல்லுக்குப் பல அர்த்தங்கள் உள்ளன. இதனால் வடமொழியில் இருக்கும் வ்யாக்யானங்களைத் தமிழில் சொல்லும்போது வேறு பாடுகளாகத் தோன்றுகின்றன. உரைகாரர்களுக்கேற்பவும் சூத்திரங்கள் வேறு விதமாக அர்த்தம் கொள்ளப்படுகின்றன. இவைகளை அவ்வப்போது சுட்டிக்காட்ட வேண்டியது எங்கள் கடமையாகிறது. உதாரணமாக முதல் பாதத்தில் 1.1.8-க்கு நாங்கள் பார்த்த விளக்கத்தில் 'ஹேயத்வ அவசனாச்ச' என்பதற்கு பிரபஞ்ச காரணத்துக்கு 'தாழ்வு சொல்லப்படாமையால்' பிரம்மம் ஜடப் பொருள் இல்லை என்ற அர்த்தம் சொன்னோம். ஜடப்பொருளுக் குத் தாழ்வு உண்டு. சிவப்பான ஜடப் பொருளுக்கு வெள்ளையாக இல்லாததுதாழ்வு அல்லது குறை.

இதைவிடச் சிறப்பாக சில உரைகாரர்கள் 'விடத்தக்கது என்று சொல்லப்படாமையால், அது ஜடப்பொருள் அல்ல' என்று சொல்லியிருக்கிறார்கள். மோட்சத்தை அடைய ஜடப்பொருளை விட வேண்டும் என்று சொல்லப்படுகிறது. ஆனால், பிரம்மத் தைப் பற்றி வேதங்கள் பேசும்போது, அதை விட்டுவிட வேண்டும் என்று சொல்வதில்லை. அதனால் பிரம்மம் ஜடப்பொருள் ஆகாது என்று தேறும். ஹேயத்வ என்பதற்கு விடத்தக்கது என்றும் பொருள். பிரம்மத்தைப் பற்றிய Clues என்றுதான் பல சூத்திரங்களைக் கொள்ள வேண்டும். ஒரு பொருளைத் தேடும் போது இங்கே இல்லை, அங்கே இல்லை, இது இல்லை என்ற ஒரு Process of elimination-ல் தேடுகிறோம். உதாரணம்: ஒரு சாவி காணாமற் போய்விடுகிறது. அதைத் தேடும்போது கடைசியாக எங்கே வைத்தோம். கடைசியாக எப்போது அதைப் பயன்படுத்தினோம்; இந்த அறைக்குப் போகவே இல்லையே; அப்படி யாரும் சொல்ல வில்லையே; இந்த அறையில் இருக்க முடியாது என்று ஒவ்வொரு சாத்தியக் கூறையும் நிராகரித்துக்கொண்டே போகிறோமே அதுபோலத்தான், 'பிரம்மத்தை விட வேண்டும் என்று வேதங்கள்



சொல்வதில்லை; ஜடப் பொருளைவிட வேண்டும்' என்று அவை சொல்கின்றன. அதனால் பிரம்மம் ஜடப் பொருள் இல்லை. Simple logic! ஒவ்வொரு சூத்திரமும் முதலில் எந்த உபநிஷத வாக்கியத்தை உதாரணமாகச் சொல்கின்றது என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். அது தெரியவில்லை என்றால் தலை சுற்றும். அதிர்ஷ்டவசமாக இதில் உரைகாரர்களிடையே அதிகம் கருத்து வேறுபாடு இல்லை.அவைகளை விளக்கும் போதுதான் வேறுபாடுகள் தோன்றுகின்றன.

இனி இரண்டாவது பாதத்தைப் பார்க்கலாம். இந்தப் பாதத்தில் 6 உட்பிரிவுகள் உள்ளன. 33 சூத்திரங்கள் உள்ளன.

பொதுவாக ஜீவன், ஜடப்பொருள் பற்றி வேதத்தில் சொன்ன தெளிவற்ற அடையாளங்களை ஆராய்கிறது. அதாவது பிரம்மம், ஜீவனோ அல்லது ஜடப் பொருளோ என்று சந்தேகம் தோன்றும் படியாகச் சொல்லப்படும் அடையாளங்கள். இந்தப் பாதத்தின் விளக்கங்களில்தான் முக்கியமான உரைகாரர்களிடையே கருத்து வேறுபாடுகள் தெரிகின்றன.

*இரண்டாம் பாதம் முதல் அதிகரணம்.*

**1.2.1. ஸர்வத்ர ப்ரஸித்தோபதேசாத்.**

*எல்லாப் பொருள்களும் பிரம்மம் அல்லவோ*

சாந்தோக்ய உபநிஷதில் ஒரு பிரசித்தமான வாக்கியத்தை இந்த சூத்திரம் குறிப்பிடுகிறது. ''ஸர்வம் கல்விதம் பிரம்ம தஜ்ஜலாநிதி சாந்த உபாஸீத'' (''இது எல்லாம் பிரம்மமே. அதனால் தோன்றி, வாழ்ந்து அதில் மறைவதால்'' என்று அமைதியுடன் வணங்கவும்) இதனால் பிரம்மம் ஜீவனாக இருக்குமோ எனில், ஜீவன் எல்லாப் பொருளுமாகத் தோன்றி வாழ்ந்து மறைகிறது. அதற்குக் காரணம், அதன் கர்மங்கள். ஆகவே ஜீவன் குறையுள்ளது. எனவே அது பிரம்மமாக இருக்க முடியாது. ஜீவன் ஒரே சமயத்தில் எல்லாமாக ஆக முடியாது. (அது சர்வாத்மா இல்லை.)

**1.2.2. விவக்ஷித குணோபபத்தேச்ச.**

*'பலவிதமான குணங்கள் சொல்லப்படுவதால்' என்பது சூத்திரம்.*

அது எங்கே சொல்லப்படுகிறது? சாந்தோக்ய உபநிஷத்தில் மற்றொரு இடத்தில் இந்தக் குணங்கள் பட்டியலிடப்படுகின்றன. 'பிரம்மம் பரிசுத்தமனத்தால் அறியத் தக்கவன், ஒளி மயமானவன், பிராணனை உடலாகக் கொண்டவன், தடைபடாத வைராக்யத்தை உடையவன், ஆகாயமான உருவத்தைக் கொண்டவன், எல்லாக் காரியங்களையும் செய்பவன், நல்லமணம், நல்ல சுவை உடையவன், எவரையும் ஆதரிக்க அவசியமில்லாதவன், இதனால் எவரிடமும் பேசாதிருப்பவன் (Supremely independant) என்றெல்லாம் பிரம்மத்தைப் பற்றிச் சொல்வதால், எந்த விவரணமும் இதற்குப் பொருந்த வேண்டும் என்கிறது இந்த சூத்திரம். பொருந்தாவிட்டால் அது பிரம்மத்தைப் பற்றியதல்ல; ஏனோ தானோ என்று குறைபாடாக பிரம்மத்தை வர்ணிக்க முடியாது.

பிரம்மத்தைக் குறிக்க சில சமயங்களில் சௌகரியத்துக்காக ஆண்பால் விகுதியைப் பயன்படுத்துகிறார்கள் உரைகாரர்கள். இதனால் பிரம்மம் ஆண் என்ற கொள்ளக் கூடாது. ஆழ்வார், 'ஆணல்லன் பெண்ணல்லன் அல்லா அலியுமல்லன்' என்னும் போது அன் விகுதியைப் பயன்படுத்துகிறாரே அதுபோல்.

**1.2.3. அனுபபத்தேஸ்து, ந சாரீர:**

*இந்த குணங்கள் ஜீவனுக்கு இல்லை. அதனால், ஜீவன் பிரம்மம் இல்லை.*

**1.2.4. கர்ம கர்த்ரு வ்யபதேசாச்ச.**

*அடையப்படுபவன் பிரம்மம். அடைபவன் ஜீவன். அதனால் பிரம்மம் ஜீவனல்ல.*

**1.2.5. சப்தவிசேஷாத்.**

*வேற்றுமைப்படுத்திச் சொல்வதால்.*

அதே சாந்தோக்ய உபநிஷத் இதயத்துக்குள் இவன் எனக்கு என்று ஜீவனையும், ஆத்மா என்று பிரம்மத்தையும் வேற்றுமைப் படுத்துகிறது.



**1.2.6. ஸ்ம்ருதேச்ச.**

*ஸ்ம்ருதியிலும் இதேதான்.*

ஸ்ம்ருதி என்பது மநு போன்றோர் இயற்றியவை. வேதங்களுக்கு அடுத்தபடி முக்கியத்வம் இவை களுக்கு.

**1.2.7. அர்ப்பகௌகஸ்த்வாத்... தத்வ்யபதேசாச்ச நேதி சேந் ந, நிசாய்யத்வாதேவம் வ்யோமவச்ச.**

*சிறிய இடத்தில் இருப்பவன் சிறியவன் என்றும் சொல்வதால் அது பிரம்மம் அல்ல என்று கொள்ளக் கூடாது. வணங்குவதற்கேற்பட்ட வசதி, அது பிரம்மமே.*

சாந்தோக்ய உபநிஷது, 'கட்டைவிரல் பரிமாணமுள்ள இதயத்தில் இருப்பான்; நெல்லை விடவும் கோதுமையை விடவும் கடுகைவிடவும் சிறியவன் என்கிறது. ஆத்மாவை வேறொரு இடத்தில் 'பூமியைவிடப் பெரியவன், தேவலோகத்தை விடப் பெரியவன், ஆகாயத்தை விடப் பெரியவன்' என்றும் கூறுகிறது. இது முரண்பாடல்ல என்கிறது இந்த சூத்திரம். திவ்யப் பிரபந்தம் ஓர் இடத்தில் பகவானை 'பெரிய அப்பன்' என்றும் மற்றொரு இடத்தில் 'சிறிய கள்வன்' என்றும் மற்றொரு இடத்தில் சின்ன வயிற்றில் பெரிய லோகங்களை வைத்தவன் என்றும் வருணிக்கிறது. ப்ரபஞ்ச உண்மை மிகச் சிறியதிலும் மிகப் பெரியதிலும் உள்ளதை க்வான்டம் இயற்பியலும் காஸ்மாலஜியும் சொல்கின்றன. 'ஸ்ட்ரிங் தியரி', பிரபஞ்சம் மிக மிக நுட்பமான நூல் போன்றவை களால் ஆனது என்கிறது. இது பிரபஞ்சம் முழுதும் வியாபித் திருக்கிறது என்றும் சொல்கிறது.

பெரியதும், சிறியதும் பிரம்மமே.

**1.2.8. ஸம்போகப்ராப்தி: இதிசேந்ந, வைசேஷ்யாத்.**

*உடலுக்குள் இருப்பதால் சுகதுக்கங்களும் பிரம்மனுக்கும் வர வேண்டும் என்றால் அது தவறு. சுகதுக்கங்களை அனுபவிப்பது உயிர், ஜீவன்.*

பிரம்மம் அதற்கு அப்பாற்பட்டது. நம்மாழ்வாரின், 'உடல் மிசை உயிர் எனக் கரந்தெங்கும் பரந்துளன்' என்னும் அந்த உயிர்தான் பிரம்மத்திற்கு அருகில் வருகிறது.

*இரண்டாம் பாதம், இரண்டாம் அதிகரணம்.*

*'உண்பவன் பிரம்மமே.'*

**1.2.9. அத்தா சராசர க்ரஹணாத்**

*உண்பவன் பிரம்மமே. அசைவன, அசையாதன எல்லாம் பிரம்மத்திற்கு உணவாகிறது. உண்பவனாகச் சொல்லப் பட்டது பிரம்மமே.*

கடோபநிஷதில் இது வருகிறது. பிராமணர்களையும் க்ஷத்திரியர் களையும் உணவாகக் கொண்டு யமனை ஊறுகாயாகக் (ஆம் ஊறுகாயாக) கொண்டு பிரம்மன் ஊழிக் காலத்தில் அழிப்பதாகச் சொல்லப்படுகிறது.

இறுதியில் எல்லாவற்றையும் உண்டுவிடுவது பிரம்மம் என்கிற Metaphor வேதாந்தத்தில் அடிக்கடி வருகிறது. ஒரு பொருளைச் உண்டு ஜீரணிப்பதில் அதன் அழிவு பூரணமாகிறது.

'பரந்த தெய்வமும் பல்லுலகும் படைத்து அன்று உடனே விழுங்கி' என்கிறார் நம்மாழ்வார்.

**1.2.10. ப்ரகரணாச்ச**

*மேலும் சொல்லப்படுவதும் இவனே.*

மேலும் கடோபநிஷத்தில் 'வேதத்தைப் படித்துச் சிந்தித்து மனத்தில் ஆழ்ந்து நினைப்பதால் மட்டும் பிரம்மத்தை அடைய முடியாது. பிரம்மம் எவனை வரிக்கிறானோ அவனே பிரம்மத்தை அடைகிறான். அவனுக்கே பிரம்மத்தின் உண்மை உருவம் காட்டப் படுகிறது. அதை யார் அறிவார்?'' என்று குறிப்பிடுவதை இந்த சூத்திரம் 'மேலே சொல்லப்படுவதும் இவனே' என்று மேற்கோள் காட்டுகிறது.

**1.2.11. குஹாம் ப்ரவிஷ்டாவாத்மாநௌ ஹி, தத்தர்சநாத்**

*இதயம் என்னும் குகையில் நுழைந்திருப்பவர் இருவர். ஜீவனும் பிரம்மமும்.*



இதுவும் கடோபநிஷதில் வரும் வாக்யம். இதில் குறிப்பிடப் படும் இருவர்- ஜீவாத்மாவும் பரமாத்மாவும். பிரம்மத்துக்கு கர்ம பலன் கிடையாது. அது எப்படி ஜீவனுடன் இதய குகையில் வசிக்க முடியும் என்பதற்கு. கர்மபலன் உள்ள ஜீவனுடன் இருப்பதால் மட்டும் பிரம்மத்துக்கு கர்மபலன் உண்டு எனக் கொள்ளக்கூடாது என்கிறார்கள். சற்றே குழப்பமான விளக்கம்தான். ஒரு கூட்டத்தில் பலர் குடை எடுத்துச் செல்கிறார்கள். இதனால் கூட்டமே குடை எடுத்துச் சென்றது என்று பொதுப்படுத்துகிறோமல்லவா; ஊரே திரண்டு வந்தது என்று பேசுகிறோமல்லவா? இதை Gestalting என்பார்கள். அப்படி முடிவு செய்யக் கூடாது.

**1.2.12. விசேஷணாச்ச**

*தனிப்பட்டு சொல்வதால், என்பது சூத்திரம்.*

ஜீவனையும் பரமாத்மாவையும் தனிப்படுத்தி கடோபநிஷத் சொல்வதை இங்கே குறிப்பிடுகிறது. பார்க்க சூத்திரம் 1.2.10

இரண்டாம் பாதம் மூன்றாவது அதிகரணம்: 'கண்ணில் உள்ளவன் பிரம்மமே.'

**1.2.13. அந்தர உபபத்தே:**

*கண்ணில் இருப்பவனாகச் சொல்லப்படுவதும் பிரம்மமே.*

காண்பதெல்லாம் பிரம்மமே.

எளிமையாகச் சொன்னால், உண்மை அறிவாளி, காண்பதில் எல்லாம் பிரம்மத்தைக் காண்கிறான் என்று சொல்லலாம்.

நம்மாழ்வார்,

'பூவையும் காயாவும் நீலமும் பூக்கின்ற
காவிமலரென்றும் காண்தோறும்- பாவியேன்.
மெல்லாவி மெய்ம்மிகவே பூரிக்கும் அவ்வவை.
எல்லாம் பிரான் உருவே என்று.'

என்னும்போது, இந்த சூத்திரத்தை நிச்சயம் எண்ணியிருப்பார் என்று தோன்றுகிறது.

**1.2.14. ஸ்தாநாதி வ்யபதேசாச்ச**

*கண்ணில்நிலைபெற்று நியமிக்கப்படுவது பிரம்மமே.*

இதே கருத்தை பிருகதாரண்யக உபநிஷது 'கண்ணில் நிலை பெற்று பார்க்க வைக்கிறான்' என்கிறது.

'கமலக்கண்ணன் என் கண்ணில் உள்ளான்' என்கிறார் நம்மாழ்வார். காட்சியும் அவனே. பார்வையும் அவனே.

**1.2.15. ஸுகவிசிஷ்டாபிதாநாதேவ ச**

*சுகத்தோடு கூடியவன் பிரம்மமே.*

திடீரென்று சுகம் எங்கே வந்தது என்பது புரிய, சாந்தோக்யக் கதை ஒன்று தெரிய வேண்டும் உபகோசலன் என்பவன் பன்னிரண்டு வருஷம் (குரு) சத்யகாம ஜாபாலரின் வேள்வி எரியினை வளர்க்க உதவி செய்கிறான். ஆயினும் குரு அவனுக்கு ஒன்றும் சொல்லித் தரவில்லை. இதைப் பார்த்த நெருப்புகளே அவனிடம் சொல்கின்றன. 'உயிரே, பிரம்மம், சுகமே பிரம்மம், ஆகாயமே பிரம்மம்' என்று, மேலும் ஒரு நெருப்பு, 'நானே அவையெல்லாம்' என்கிறது. பிறகு பிரம்மத்தை அடையும் வழியை குரு சொல்வார்' என்கிறது. குரு 'கண்ணில் காணப்படுபவன் பிரம்மம்' என்கிறார். பதிநான்காம் சூத்திரத்தின் கருத்து இது. இந்த சூத்திரம், சுகம் என்று சொன்னதும் பிரம்மமே என்கிறது. ஏனெனில் அதன் தொடர்ச்சியாக, கண்ணில் உள்ளவன் பிரம்மம் என்று சொல்வதால் ஜீவன் பூரண சுகம் அற்றது என்பது குறிப்பு.

**1.2.16. அத ஏவ ச ஸ ப்ரஹ்ம**

*அந்தக் காரணத்தாலேயே கூறப்படுவது பிரம்மம்.*

சாந்தோக்யம் கூறுவது பிரம்மமே, ஐம்பூதங்களில் ஒன்றான ஆகாசம் அல்ல.

**1.2.17. ச்ருதோ உபநிஷத்க கத்யபிதாநாச்ச**

*இறந்தபின் பிரம்ம அறிவு பெற்று ஜீவன் செல்லும் வழி (பிரம்மத்தை அடையும் வழி) சாந்தோக்யத்தில் சொல்லப்படுகிறது. கண்ணில் உள்ளவன் என்பதன் தொடர்ச்சியாக ஆகவே 'கண்ணில் உள்ளவன்' எனப்பட்டது பிரம்மமே.*



**1.2.18. அநவஸ்திதே: அஸம்பவாச்ச நேதர:**

*மற்றவை கண்ணில் நிலையாதது. இறப்பின்மையும் அதற்கில்லை. ஜீவன், சூரியன் கிரணங்கள் எப்போதும் கண்ணில் இருப்பதில்லை. அவை நிலையானவை அல்ல. கண்ணில் என்றும் உள்ள பிரம்மத்திற்கு இறப்பில்லை.*

*இரண்டாம் பாதம் நான்காவது அதிகரணம்: உள் உறைபவன்.*

**1.2.19. அந்தர்யாம்யதிதைவாதிலோகாதிஷு தத் தர்மவ்யபதேசாத்**

*எல்லா தெய்வங்களுக்கும் எல்லா உலகங்களுக்கும் உள்ளே உறைபவன் பிரம்மம். அவனுக்கே உரிய விதிகளைச் சொல்வதால் இந்தக் கருத்து பிரகதாரண்ய உபநிஷதில் இருக்கிறது.*

**1.2.20. ந ச ஸ்மார்த்தம் அதத் தர்மாபிலாபாத் சாரீரச்ச.**

*அந்த உள் உறையும் பொருள் ஜடப் பொருளோ, ஜீவனோ அல்ல.*

**1.2.21. உபயேபி ஹி பேதே: நைநமதீயதே**

*இந்த இரண்டு பிரிவிலும் உள் உறைபவனை ஜீவனிலிருந்து வேறுபட்டவனாகத்தான் சொல்கிறது. காண்வம், மாத்யந்தினம் என்பவை, பிருகதாரண்யக உபநிஷத்தின் இரண்டு பிரிவுகள்.*

இந்த சூத்திரங்கள் திரும்பத் திரும்பச் சொல்வது, உள் உறைபவனாக இருப்பது பிரம்மமே, ஜீவனல்ல.

நமக்குள் இருப்பது உயிர் அல்லது ஜீவன், அது சுகதுக்கங்களுக்கு உட்பட்டது. அது பிரம்மமல்ல. எங்கும் வியாபித்து உயிரின் உள்ளே உறைவதுதான் பிரம்மம்.

இதுவரை இரண்டாம் பாதத்தின் ஐந்து அதிகரணங்களின் 21 சூத்திரங்களைப் பார்த்தோம். இப்போது இந்தப் பாதத்தின் மற்ற பன்னிரண்டு சூத்திரங்களையும் பார்த்துவிட்டு, இதன் முக்கியக் கருத்துக்களைச் சுருக்கமான பொழிப்புரையாகக் கொடுக்கிறோம்.

**1.2.22. அத்ருச்யத்வாதி குணகோ தர்மோக்தே:**

*அந்தப் பொருள் காணப்படாதது என்பதால்.*

முண்டகோபனிஷது எல்லாவற்றையும் காணும் பொருள் என்று சொல்வது இங்கே காணப்படாததாகிறது.

இது எப்படி?

**1.2.23. விசேஷண பேதவ்யபதேசாப்யாம் ச நேதரௌ**

*வேறுபாடான சிறப்பான குணங்கள் சொல்லப்படுவதால் அது பிரம்மமே.*

முண்டக உபநிஷது 'இப்பொருளை அறிந்தால் எல்லாவற்றையும் அறிந்ததாகும். எல்லாவற்றிற்கும் மேலானவன் இதை வணங்கினால் மோட்சம் கிடைக்கும்' என்று சொல்கிறது. இந்த வருணனை ஜீவனுக்கும் ஜடப் பொருளுக்கும் பொருந்தாது. எனவே இது (காணப்படாதது) பிரம்மத்தைத்தான் குறிக்கிறது.

**1.2.24. ரூபோபந்யாஸாத் ச**

*(உலகத்தை) இதற்கு சரீரமாகச் சொல்வதாலும் இது பிரம்மமே.*

முண்டகோபனிஷதில் சொல்வதுபோல், ஜீவனுக்கோ ஜடப் பொருளுக்கோ உலகத்தை சரீரமாகக் கொள்ளமுடியாது. அதனால் சொல்லப்படுவது பிரம்மமே.

*ஆறாவது அதிகரணம்: வைச்வாநரன், தலைவன் அல்லது வழிகாட்டி.*

இந்த உட்பிரிவுக்கு ஒரு சிறிய முன்னுரை தேவை.

சாம வேதத்தைச் சார்ந்த சாந்தோக்ய உபனிஷதில் ஒரு நிகழ்ச்சி காணலாம்.



நான்கு பேர் ஜீவனைப் பற்றியும் பிரம்மத்தைப் பற்றியும் விவாதித்து வைச்வாநரன் (வழிகாட்டி, பெரியவன்) என்று ஒருவனுக்கு திடுதிப்பென்று பெயர் இட்டு, அந்த நரன் யார் என்று பலரிடம் கேட்டார்கள்.

முதலில் உத்தாலகர் என்பவர் ''எனக்குத் தெரியாது, அசுவபதி என்கிற மன்னருக்கே தெரியும்,அவரிடம் செல்வோம்'' என்றார். அசுவபதி அந்தக் கேள்வியைக் கேட்டவரிடமே திருப்பி விட்டார்.

''நான் வைச்வாநரன் யார் என்று சொல்லு முன், நீங்கள் அது யார் என்று எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள், அதை முதலில் சொல்லுங்கள்'' என்றார்.

முதலில் ஒருவர் ''சொர்க்கம்'' என்றார்.

அசுவபதி, ''ஒளியுடையவன்'' என்றார்.

இரண்டாமவர் ''சூரியன்'' என்ன, அசுவபதி ''சரியே'' என்றார். மூன்றாமவர் ''காற்று'' என்று சொல்ல, அசுவபதி ''வைச்வாநரனை அறியப் பலவழிகள் உள்ளன'' என்றார். நான்காமவர், ''நீர்'' என்று சொல்ல, அசுவபதி சரியே' என்றார். ஐந்தாமவர் ''பூமி'' என்றதும், சரியே என்றார்.

வைச்வாநரனைப் பற்றிக் குறிப்பிடும் இந்த உபனிஷத உரையாடல், இந்தப் பாதத்தில் இனி வரும் ஒன்பது சூத்திரங்களின் அடிப்படை ஆகிறது. வைச்வாநரன் பிரம்மமே என்று நிலை நாட்டப்படுகிறது.

**1.2.25. வைச்வாநரஸ் ஸாதாரண சப்த விசேஷாத்**

*வைச்வாநரன் என்று பொதுவாகச் சொல்லப்படுவது பிரம்மமே.*

**1.2.26. ஸ்மர்யமாணம் அநுமாநம் ஸ்யாத் இதி**

*இப்படி அறிவுறுத்தப்படுவது பிரம்மமே.*

முண்டகோபனிஷதில், வைச்வாநரன் தலை முதல் கால்வரை உலகங்களே, என்பது, பிரம்மத்திற்கும் சொல்லப்படுகிறது.

**1.2.27.** சப்தாதிப்யோ அந்த: ப்ரதிஷ்டாநாத்ச, தேதி சேந்...ந ததா த்ருஷ்ட்யுபதேசாத் அஸம்பவாத் புருஷமபி சைநம் அதியதே.

*இந்த சூத்திரத்தை நிதானமாகக் கவனிக்க வேண்டும், இதன் உட்கருத்து இதுதான். ஜாடராக்னி என்னும் வயிற்றின் தீயும் பிரம்மமே என்பது.*

**1.2.28.** அத ஏவ ந தேவதா பூதம் ச

*அதேபோல தேவதையும் தீயும் மட்டுமே வைச்வாநரன் அல்ல*

**1.2.29.** ஸாக்ஷாதபி அவிரோதம் ஜைமிநி:

*தீயிற்கு நேரடியாக பிரம்மம் என்றே பொருள் கொள்ளலாம் என்கிறார் ஜைமிநி.*

**1.2.30.** அபிவ்யக்தே: இதி ஆச்மரத்ய:

*வணங்குவதற்கு எளிதாக்குவதே பிரம்மத்தை அளவு படுத்தும் நோக்கம் என்கிறார் ஆச்ரமத்யர் என்பவர்.*

**1.2.31.** அநுஸ்ம்ருதே: பாதரி:

*வணங்குவதற்கென்றே ஒரு புருஷனின் வடிவம் பிரம்மத்திற்குத் தரப்பட்டது என்கிறார் பாதரி.*

**1.2.32.** ஸம்பத்தே: இதி ஜைமிநி: ததா ஹி தர்சயதி

*வணங்குபவனின் அவயவங்களாகவே வைச்வாநரன் உருவாகிறான் என்கிறார் ஜைமிநி.*

நம்மைப் போல் கை கால் மார்பு அங்கங்கள் கொண்டவாறு பிரம்மத்தை வணங்குவது எளிது என்கிற கருத்து. நம் நாட்டில் பல்வேறு கடவுள் வடிவங்கள், முக்கிய கடவுள்களிலிருந்து கிராம தேவதைவரை மனித ரூபம் பெற்றிருப் பதன் விளக்கம் இதுதான்.



**1.2.33.** ஆமநந்தி ச ஏநம் அஸ்மின்

*வணங்குபவரின் மற்ற அங்கங்களும் வணங்கப்படுவோரின் உருவகங்களாக அமையும்.*

பிரம்மத்தை அளவிலாதது. உருவிலாதது. உலகெங்கும் பரந்து விரிந்தது. என்று சொன்னால் பலருக்கு கற்பனை பண்ணிக் கொள்ளச் சிரமமாக இருக்கும். அதனால்தான் இந்த (anthropomor phism) மனித உருவமைப்பு பிரம்மத்திற்குத் தரப்பட்டிருக்கிறது.

இந்தப் பாதம் இதனுடன் முடிகிறது. இதில் நாம் சொன்னதை ஒரு முறை வரிசையாக நினைவுபடுத்திப் பார்ப்போம்.

1. எல்லாமே பிரம்மம்.

2. பிரம்மத்தின் குணங்கள் இவை: ஒளி, பரிசுத்த மனத்தால் அறியத்தக்கது, நல்ல மணமுடையது, நல்ல சுவையுடையது, ஆகாய உருவானது, எவரையும் ஆதரிக்கத் தேவையில்லாதது, எவரிடமும் பேசாதது.

3. பிரம்மம் ஜீவன் இல்லை. ஒன்று அடையப்படுவது மற்றது அடைவது.

4. சிறிய இதயத்தில் இருப்பது பிரம்மம், ஆனால் அதற்கு சுகதுக்கங்கள் கிடையாது.

5. எல்லாமே பிரம்மத்தின் உணவு.

6. காண்பது எல்லாமே பிரம்மம்.

7. சுகமாக இருப்பது பிரம்மம்.

8. உள் உறையும் பொருள்.

9. காணப்படாதது.

10. நம்மை நடத்திக் கொண்டுபோகும் வைச்வாநரன் அது.

இந்தத் தொடர் பிரம்ம சூத்திரத்திற்கான எளிய அறிமுகம். ***எளிய*** என்பதை மறுபடியும் அடிக்கோடிட்டுக்காட்ட விரும்புகிறோம். வியாக்கியானங்களைச் சிறுமைப்படுத்தாமல் எளிமைப் படுத்தும் முயற்சிதான் இக்கட்டுரைத் தொடர். என்னவோ பிரம்ம சூத்திரம் என்கிறார்களே, அதில் என்னதான் இருக்கிறது? என்று உங்களை அடுத்த முறை யாராவது கேட்டால், இதில் இருப்பதெல்லாம் பொதுவாக வேதாந்த (வேத உபநிஷத்) வாக்கியங்களில், அறுதி உண்மையைப் பற்றின சந்தேகங்களையும், முரண்படும் தோற்றங் களையும் நீக்கி, ஒரு வழிப்படுத்தி அவையெல்லாம் சொல்வது

ஒரே ஒரு முழுமுதல் பரம்பொருளைப் பற்றியது, என்று நிலை நாட்டும் நூல்தான் பிரம்ம சூத்திரம் என்று சொல்லுங்கள்.

பிரம்ம சூத்திரங்கள் அதிகரணம், பாதம், அத்தியாயம் என்று பகுத்திருப்பதை நினைவு படுத்துகிறோம். இவைகளில் முதல் அத்தியாயத்தின் இரண்டு பாதங்களை இதுவரை விளக்கியிருக் கிறோம், இனி, மூன்றாம் பாதம்.

இதில் பிரம்மத்தின் மேலும் சில அடையாளங்கள் விளக்கப் படுகின்றன. குறிப்பாக, பிரம்மம் ஜடப் பொருளோ ஜீவனோ என்று சந்தேகம் தோன்றும்படியான அடையாளங்கள் தெளிவடை கின்றன.

இந்தப் பாதத்தின் சூத்திரங்களுக்குள் நுழையுமுன் ஒரு முக்கிய மான அறிமுக உரை தேவைப்படுகிறது.

முண்டக உபநிஷத் அழிவில்லாத பொருள் என்ற ஒன்றை ஆராய் கிறது. 'அதில் ஆகாயம், நிலம், மனம், உயிர், உணர்வுகள், எல்லாம் பின்னப்பட்டிருக்கின்றன' என்கிறது. 'எவனிடத்தில் தேவலோக மும் பூமியும், விண்வெளியும், மனமும் எல்லா உறுப்புகளும் சேர்ந்திருக்கின்றனவோ அவன் ஒருவனையே அறியுங்கள். மற்ற வார்த்தைகளை விடுங்கள்.'' எல்லாப் பொருள்களும் எவ்வாறு பிரம்மத்தினுள் அடங்கும் என்பதை சங்கரர் விளக்குகிறார். எல்லாமே பிரம்மம் என்னும் புகழ்பெற்ற சாந்தோக்ய உபநிஷதின் வாக்கியத்தை எடுத்துக் கொள்கிறார். பிரம்மம் பல பொருள்களால் இணைந்தது என்று சொல்வது தவறு என்கிறார். வேர், கிளை, இலைகளால் ஆன மரம் போலல்ல பிரம்மம். முதற் பொருளை அடையும் கருவிகள் பல இருக்கலாம்; அதை அடைந்தபின், அதைப் பிடித்த பிறகு மற்றவைகளை விட்டுவிட வேண்டும் என்கிறார். 'மற்ற வார்த்தைகளை விட்டு விடுங்கள்' என்று உபநிஷத் சொன்னதற்கு இவ்வாறுதான் அவர் பொருள் தருகிறார். 'தேவதத்தன் உட்கார்ந்திருந்த நாற்காலி' என்பது நாற்காலி மட்டுமே, தேவதத்தன் அல்ல. சங்கரர் Monism என்னும் ஒருமைத் தத்துவத்தை இப்படித்தான் பார்க்கிறார். இதைக் கொஞ்சம் நிதானமாகப் படிக்கவும்.

சாந்தோக்ய உபநிஷதில் இரண்டு வாக்கியங்கள் உள்ளன.

1. *முதலில் 'ஸத்' என்பதே இருந்தது, இரண்டில்லாமல்.*

2. *நீ அதுவாக இருக்கிறாய், ஓ சுவேதகேது!*



இவ்விரண்டு வாக்கியங்களையும் சங்கரர் 'அபேத', பிரிவற்ற, வாக்கியங்களாகக் கொள்கிறார்.

சுவேதகேது என்கிற தன்மகனை முன்னிலைப்படுத்தி அவனு டைய தந்தை சொல்வதாக உள்ளது (சங்க இலக்கியங்களிலும் இவ்வகையிலான முன்னிலைப்படுத்தும் பாடல்கள் பல உள்ளன. கலித்தொகையின் *சுடர்த் தொடீஇ கேளாய்* என்னும் பாடல் ஓர் உதாரணம்).

ஸோம்யேதம் அக்ரே, ஸத் ஏவ ஆஸீத், ஏகமேவ அத்விதீயம். *(6:1:1)*

''சந்திரனைப் போல முகமுள்ளவனே, முதலில் பிரம்மம் மட்டும் இருந்தது, ஒன்றேயாக இரண்டில்லாமல்''

இதில் ஸத் என்பதற்கு பிரம்மம் என்று கொள்வதே பொருத்தம். மாக்ஸ் ம்யுல்லர், இருத்தல் (Existence) என்று பொருள் கொள்கிறார். ஸத் என்பதற்கு உண்மை என்றும் பொருள் கொள்ளலாம். சத்யம் என்பது அன்றாட வார்த்தை.

முதலில் (அக்ரே) என்பதற்கு பிரபஞ்சம் தோன்றுவதற்கு முன் என்று கொள்ள வேண்டும். In the beginning there was the Word என்கிறது பைபிள். முதலில் எதுவுமே இல்லை, இல்லை என்பதே இல்லை என்கிற அறிவியல், ஆரம்பக் காலத்தில் காலமும் வெளியும் பிறந்தது என்கிறது.

இதற்கு இசைவாக ஸ்ரீராமாநுஜர் போன்றவர்கள், இந்த முதலில் என்கிற சொல்லின் சாரத்தைப் பலவிதமாகக் கறக்கிறார்கள். காலம் என்கிற தத்துவம் நிலை நாட்டப்படுகிறது. பிரம்மத்துடன் காலமும் சொல்லப்படுவதால் இரண்டற்றது என்று எப்படிச் சொல்ல முடியும் என்று வாதிட்டிருக்கிறார்கள்.

ஆனால், இது சங்கரரின் வாதங்களுக்கு மாறாக அமைவது, அத்விதீயம் என்ற சொல்லை வடமொழி இலக்கணப்படி ஆராய்ந்தால், இதற்கு இரண்டாவது பொருளோடு ஒப்பாகச் சொல்ல முடியாதது' என்றும் அர்த்தம் கொள்ள வழியிருக்கிறது. பிரம்மத்தைத் தவிர இரண்டாவது பொருளே இல்லை என்று கொள்ள முடியாது. இரண்டாவது இல்லை என்றால், பிரம்மம் முதலானது, இரண்டாவதல்ல என்று பொருள் கொள்ள வேண்டும் என்பது எதிர்வாதத்தின் ஆதார நாதம்.

சங்கரரின் அத்வைதக் கருத்துக்களுக்கும் மாயாவாதத்திற்கும் ராமாநுஜரின் விசிஷ்டாத்வைதத்திற்கும் ஆனந்த தீர்த்தர் என்னும்

மத்வரின் த்வைதத்துக்கும் உள்ள முக்கியமான கருத்து வேறு பாடுகள் வேதாந்தத்தின் 'பேத' வாக்கியங்களையும் 'அபேத' வாக்கியங்களையும் சார்ந்தவை. சங்கரர், பிரம்மத்திற்கும் சேதன, அசேதன (உயிருள்ள, உயிரற்ற) உலகிற்கும் உள்ள பேதங்களைச் சொல்லும் வாக்கியங்கள் முக்கியமல்ல என்கிறார். ஒரு குணமும் இல்லாத அறிவாயிருக்கும் பிரம்மம் ஒன்றே உண்மை. இந்த குணமற்ற பிரம்மத்தை மாயை மறைப்பதால் உயிர்களும் ஜடப் பொருள்களும் அடங்கிய உலகமான பொய்த்தோற்றம் உண்டா கிறது. ஜீவன் தன்னை பிரம்மம் என்று உணர்ந்தால் அவனே பிரம்மமாகிறான். இது சங்கரர் சொன்ன முக்கியக் கருத்து.

மத்வர், பேத வாக்கியங்கள்தான் முக்கியம் என்கிறார். ஜீவன் தனி. பிரம்மம் தனி... உயிருள்ள பொருள்களும் உயிரற்ற பொருள்களும் தனி. இவை எல்லாம் உண்மையே. பிரம்மமும் உலகும் ஒன்று என்று சொல்லும் வேத உபநிஷத வாக்கியங்கள் முக்கியமானவை அல்ல. இது மத்வரின் கருத்து.

ராமானுஜர், பேத அபேத வாக்கியங்கள் இரண்டும் முக்கிய மானவை. இவைகளிடையே மேலெழுந்தவாரியாகத் தோன்றும் முரண்பாட்டை மூன்றாவது வகைப்பட்ட சில 'கடக' (Ghataka என்று உச்சரிக்கவும்) வாக்கியங்கள் நீக்குகின்றன. எதுவுமே மாயை இல்லை. உயிருள்ளவை, உயிரற்றவை, பிரம்மம், எல்லாம் ஒன்றே. எதுவும் மாயையோ தோற்றமோ இல்லை. இது விசிஷ்ட அத்வைதம், கூட்டான ஒருமைத் தத்துவம். இம்மூன்றில் உங் களுக்கு எது மனசில் சரியாகப் படுகிறது என்று தீர்மானிக்கலாம். எங்கள் கருத்தை உங்கள் மேல் திணிக்காமல் இதன் வாதப் பிரதி வாதங்களை உங்களிடம் பாரபட்சமில்லாமல் வைத்துவிட்டு, உங்களையே சிந்திக்க வைத்துவிட்டு விலகுவதுதான் குறிக்கோள்.

உபநிஷதின் ஒரு சொல்லுக்குள் எத்தனை வியப்புகள் பாருங்கள். இதைத் தூக்கிச் சாப்பிடும்படியாக இருக்கிறது அடுத்தது. தத்வமஸி சுவேதகேது. சுவேதகேது, நீ அதுவாய் இருக்கிறாய்.

இது ஒன்பது முறை அந்த உபநிஷதில் வருகிறது. தத் என்பது பிரம்மம்; த்வம் என்பது சுவேதகேது என்னும் ஆசாபாசங்களும் குறைகளும் உள்ள ஜீவன். பிரம்மம் என்கிற முழுமுதற் பொருள் எவ்வாறு குறையுள்ள ஜீவனாக இருக்க முடியும்? இதனால் இந்த வாக்கியத்திற்கு சரியான பொருள், உனக்குள்ளும் பிரம்மம் இருக் கிறது என்பதே. சுவேதகேது மானிடரின் பிரதிநிதி. நம் எல்லோ ருக்குள்ளும் பிரம்மம் இருக்கிறது என்பதே சரியான விளக்கம்.



உடல், உயிர், பிரம்மம், இம்மூன்றும் எவ்வாறு இருக்கின்றன என்றால், உடலுக்குள் உயிரும், உயிருக்குள் பிரம்மமும் உள்ளன என்று சொல்லலாம். சங்கரர், உயிரும் பிரம்மமும் ஒன்று என்று பொருள் கொள்கிறார். இதை அளவுக்கு மேல் சிக்கலாக்க எங்களுக்கும் விருப்பமில்லை. புதிய பாதத்தைப் பார்க்குமுன் கொஞ்சம் மூச்சுவிட்டுக் கொள்ளுங்கள், அல்லது ஒரு கப் காப்பி சாப்பிடுங்கள்.

இந்தப் பாதத்தில் 44 சூத்திரங்கள் 10 அதிகரணங்களாக உள்ளன.

### 1. உலகங்களின் இருப்பிடம்

**1.3.1. த்யுப்வாத்யாயதநம் ஸ்வசப்தாத்**

*தேவலோகம் பூமி முதலான உலகங்களின் நிலை பிரம்மமே.*

இருப்பிடம் என்பதை உலகத்தின் கொள்கலன் (Container) என்ற அர்த்தத்தில் கொள்ள வேண்டும்.

**1.3.2. முக்தோபஸ்ருப்ய வ்யபதேசாச்ச.**

*மோட்சத்தை அடைந்தவர்களின் பேறு என்று சொல்வதால் (சொல்லப்பட்டது பிரம்மமே)*

முண்டகோபனிஷதில் இது வருகிறது.

''பிரம்மத்தை அறிந்தவன், எப்போது பொன்னிறமானவனும், உலகைப்படைப்பவனுமான, நியமிப்பவனும், உலக காரணமான வனும், ஆன பரமபுருஷனைப் பார்க்கிறானோ, அப்போது அவன் பாவ புண்யங்களை விட்டு உலக சம்பந்தமற்று பரம புருஷனோடு ஒன்றிப் போகிறான்.'' சுருங்கச் சொன்னால், மோட்சம் என்பது பிரம்மத்தை அடைவதே. The ultimate goal.

**1.3.3. நாநுமாநம் அதச் சப்தாத் ப்ராண ப்ருச்ச.**

*ஜீவன் அல்ல, ஜடப் பொருள் அல்ல, அவைகளுக்கே உரிய குணங்கள் கூறப்படாததால்.*

உயிருள்ளவை உயிரற்றவைகளுக்கான குணங்கள் ஏதும் பிரம்மத்திற்குச் சொல்லப்படவில்லை.

**13.4. பேத வ்யபதேசாத்**

*(ஜீவனைக் காட்டிலும்) வேறுபட்டவனாகச் சொல்லப் பட்ட தால் அது பிரம்மமே.*

முண்டகோபனிஷது ''மரம்போல அழிவுள்ள உடலுக்குள் உள்ள ஜீவன் வருந்துகிறது. அதே உடலில் உள்ள பிரம்மத்தைக் காணும்போது வருத்தம் போய்விடும்'' என்னும்போது, ஜீவனை யும் பிரம்மத்தையும் வேறுபடுத்துகிறது.

**1.3.5. ப்ரகரணாத்**

*(இவ்விடத்து விஷய நோக்கு பிரம்மம் பற்றி இருப்ப தால்), குறிப்பீடுகளும் பிரம்மத்தைப் பற்றியவையே.*

**1.3.6. ஸ்தித்யதநாப்யாம் ச**

*இருப்பதை மட்டும் கூறுவதால்.*

பிரம்மம் உடலில் இருப்பதோடு சரி. அதன் கர்ம பலன்களையும் விளைவுகளையும் பிரம்மம் அனுபவிக்காது. பிரம்மம் என்ற பறவை கர்மம் என்ற பழத்தை உண்பதில்லை என்கிறது உபநிஷது.

**2. பெரியது என்பது**

**1.3.7. பூமா ஸம்ப்ரஸாதாதத்யுபதேசாத்.**

*ஜீவனைக் காட்டிலும் மேலானவன் என்று சொல்லப் படுவதால்.*

இது, சாந்தோக்ய உபநிஷதில் ஒரு கேள்வி விடை மூலமாக விளக்கப்படுகிறது. நாரத முனிவர், சநத்குமாரர் என்கிற ஞானி யிடம் ஒரு கேள்வி கேட்கிறார். ''வேதங்களைப் படித்த பின்னும் ஆத்மாவை அறிந்திலேன்.'' சநந்குமாரர் அதற்கு, ''பெயர்களே பிரம்மம்'' என்கிறார்.

நாரதர், ''அதற்கும் விஞ்சியது, பெரியது உண்டோ?'' என்ப தற்கு ''சொற்கள் அதனிலும் பெரியது. சொற்களைச் சொல்வது மனம். அதற்கும் பெரியது, நினைத்தல் அல்லது தீர்மானம் அதை விடப் பெரியது. இப்படியே போய்... ஜீவன் வரை சென்று அவ



னுக்குப் பெரியது சத்யம். அல்லது உண்மை அல்லது பிரம்மம்.'' என்கிறார். இதைத் தான் இந்த சூத்திரம் குறிப்பிடுகிறது.

**1.3.8. தர்மோபபத்தேச்ச**

*பெரியது என்று சொல்வதற்கான தகுதிகள் பொருந்த வேண்டுமானால்,*

பெரியது என்பதற்கான வார்த்தை 'பூமா' இதன் தன்மைகள் யாவை? அது மரணமற்றது (அமிர்தம்), தனிப் பெருமை உடை யது. வேறு எதையும் தனக்குப் பற்றுக்கோலாகக் கொள்ளாதது, அதுவே எல்லாம். இவையெல்லாம் பரமாத்மாவுக்கே பொருந்தும், ஜீவனுக்கு அல்ல.

**3. அக்ஷரம் பிரம்மமே**

**1.3.9. அக்ஷரம் அம்பராந்த த்ருதேஹ:**

பிருகதாரண்யக உபநிஷதில் இந்தக் கருத்து வருகிறது. கார்கி (Gargy) என்பவள், யாக்ஞவல்க்யரின் ரிஷிபத்தினி. அவள் கேட்கும் கேள்விக்கு விடையாக, பிரம்மத்தை ரிஷி, அக்ஷரம் என்கிறார். அதற்கு பருமன், உயரம், நிறம் என்பன கிடையாது. அது நிழலற்றது என்று சொல்லி, அக்ஷர என்கிற சொல்லைப் பயன்படுத்துகிறார். இதன் அன்றாட அர்த்தம், சொல், வார்த்தை என்பதே. அந்த அர்த்தத்தில் பயன்படுத்தாமல் ஆகாயத்துக்குக் காரணமாகச் சொல்லப்படும் மூலப்பிரகிருதி என்பதே அது. ஆகாசம் என்பது அன்றாடம் பார்க்கும் வானத்தை அல்ல. தேவலோகத்துக்கு மேலும் பூமிக்குக் கீழும் இவைகளுக்கு இடையிலும், கடந்த, நிகழ்கின்ற, வருங்காலங்களையும் எல்லாப் பொருள்களையும் ஆகாசம் குறிக்கிறது என்கிறார். இயற்பியல் சொல்லும் Spacetime இதுதான்.

**1.3.10. ஸா ச ப்ரசாஸானாத்.**

*அது மேலான ஆணையினாலே அக்ஷர என்பது அவைகளைக் கொண்டிருப்பது பிரம்மத்தின் ஆணையினால்.*

பூமியும் சூரியனும் சந்திரனும் தாங்கப்பட்டிருப்பது இந்த அக்ஷரத்தின் ஆணையினால். இதனால், இதுதான் பிரம்மம்.

**1.3.11. அந்யபாவ வ்யாவ்ருத்தேச்ச**

*மற்றொன்றை நிராகரிப்பதாலும் ( அது பிரம்மமே ).*

இந்த அக்ஷரத்தை வேறு எதும் பார்க்க முடியாது. வேறெதும் அதைக் கேட்க முடியாது. இதுதான் எல்லாவற்றையும் பார்க்கிறது. கேட்கிறது. இதனால் அட்சரம்தான் பிரம்மம். உயிரற்ற ஜடப் பொருளால் பார்க்க, கேட்க முடியாது. உயிருள்ள ஜீவனால் எல்லா வற்றையும் பார்க்க, கேட்க முடியாது, ஆனால், அட்சரம் பிரம்மமே. ஆழ்ந்து சிந்தித்தால், சொல்லுக்கு பார்க்கும், கேட்கும் வருணனைகள் உள்ளன. பார்க்கப்படும், கேட்கப்படும் வருண னைகள் உள்ளன. பார்க்கப்படும், கேட்கப்படும் வரிவடிவம், ஒலிவடிவங்களும் உள்ளன. அத்தனை குணங்களும் உள்ள அக்ஷரம் என்னும் Concept தான் பிரம்மம் என்று சொல்வது வசீகரமான கருத்து. யாக்ஞவல்க்யரும் கார்கியும் கணவன் மனைவியர். தன் சந்தேகங்களுக்கு விளக்கம் பெறவே கார்கி அவரை மணந்தாளாம். இக் காலத்தில் கணவன் மனைவி சந்தேகங்கள் வேறுவிதமானவை.

**4. காணப்படுபவன்**

**1.3.12. ஈக்ஷதிகர்ம வ்யபதேசாத் ஸ:**

*காணப்படுபவனாகச் சொல்லப்படுபவன் ( பிரம்மமே ).*

இந்த அத்தியாயமே சமன்படுத்துதல் என்று சொன்னோம். ஒன்றுக்கொன்று விரோதம் போலத் தோன்றும் வேதஉபநிஷதக் கருத்துக்களை ஒருமைப்படுத்துகிறது பிரம்ம சூத்திரம். எவராலும் காணப்படாதது என்று சென்ற சூத்திரத்தில்தான் சொல்லிவிட்டு உடனே காணப்படுபவன் என்று சொல்வது முரண்பாடாகத் தோன்றலாம். பிரச்ன உபநிஷதில் 'எவன் *ஓம்* என்ற சொல்லை தியானம் செய்கிறானோ, 'எவன் உடல் உயிரைக் காட்டிலும் வேறான புருஷனைக் காண்கிறானோ', என்று வருகிறது. காண்பது என்பது அடைவது Realisation என்கிற அர்த்தத்தில்தான். சங்கரர் உண்மையான பூரணமான அறிவை அடைந்து அதன்மூலம் காணப்படுவது பிரம்மம் என்கிறார்.

ராமானுஜருக்கு இது பரமபதத்தைக் காண்பது.



இப்பாதத்தின் அடுத்த அதிகரணங்களையும். தஹர ஆகாசம் என்னும் சிறிய ஆகாயத்தையும் இப்போது சந்திக்கலாம்.

முதல் அத்தியாயத்தின் ஐந்தாம் அதிகரணத்தின் மூன்றாவது பாதத்தின், 13-வது சூத்திரத்தில் இருக்கிறோம்.

**1.3.13. தஹர உத்தரேப்ய:**

*( இதயத்தாமரையின் சிறிய ஆகாயம் )*

***இனிவரும் காரணங்களால், சிறிய ஆகாயம் பிரம்மமே.***

இது சாந்தோக்ய உபநிஷதில் வருகிறது. 'பிரம்மம் இதயத் தாமரையின் உள்ளே இருக்கும் ஆகாயத்தின் உள்ளே தேடத்தக்க தாய், அறியத்தக்கதாய் உள்ளது' இது பஞ்ச பூதங்களில் ஒன்றான ஆகாயமா என்றால், அல்ல. **நம் உள்ளத்தின் உள்ளே ஒரு திறந்தவெளியைக் காண்கிறது உபநிஷது.** உள்ளுள்ளும் இந்த தஹர ஆகாசம் என்று பெயர் கொண்ட இந்த ஆகாயத்தில் பிரம்மத்தின் இருப்பிடம் உள்ளது; இதுதான் பிரம்மமாகவே உருவகப்படுத்தப் படுகிறது. இதற்கு தஹர ஆகாசம் அல்லது சிறிய ஆகாயம் என்று பெயரிடப்பட்டுள்ளது. நம் உடல் பிரம்மத்தின் நகரம்; இதயம் பிரம்மத்தின் மாளிகை. அதன் உள்ளிருக்கிறது சிறிய ஆகாயம். இது ஜீவனில்லை, பாவமற்றது, மரணமற்றது, உலகை அணிந்து கொள்ளும் சக்தி, என்பதெல்லாம் இதற்குக் கூறப்படுகிறது.

**1.3.14. கதிசப்தாப்யாம் ததா ஹி த்ருஷ்டம் லிங்கம் ச**

*அனைவரும் தினம் இதை அடைகிறார்கள். இதுவே பிரம்ம உகைத்தில் உள்ள பிரம்மம்.*

சாந்தோக்ய உபநிஷது, நாம் தூங்கும் போது சிறிய ஆகாசத்தை அடைகிறோம். ஆனால், காலடியில் கிடக்கும் தங்கத்தை அறியாததுபோல பிரம்மத்தை உணரமாட்டார்கள்; பிரம்மத்தின் உலகம் இதுவே என்கிறது. பிரம்மத்தின் உலகை பிரம்மமாகவே கொள்ளலாம் என்கிறது பிருகதாரண்யக உபநிஷத்.

**1.3.15. த்ருதேஸ்ச மஹிம்ந அஸ்ய அஸ்மின் உபலப்தே:**

*உலகங்களை அணிந்து கொண்டிருப்பதால், தரித்திருப்பதால் சிறிய ஆகாயம் பிரம்மமே.*

சாந்தோக்யம் இதைச்சொல்கிறது. இந்தச் சிறிய ஆகாயம் உலகங்களைப் பிரித்து அணிந்து கொள்கிறது என்று.

**1.3.16. ப்ரஸித்தேச்ச**

*பிரம்மத்திற்கு சிறப்பாகக் கூறப்படுவதால் தஹர ஆகாசம் பிரம்மமே.*

**1.3.17. இதர பரமார்சாத் ஸ இதி சேத் ந, அஸம்பவாத்**

*ஆகாயம் பிரம்மத்திலிருந்து வேறு பட்டது என்றால், அது பொருந்தாது.*

**1.3.18. உத்தாரத்சேத் ஆவிர்பூத ஸ்வரூபஸ்து**

*ஆத்மாவுக்கு மூன்று நிலைகள் உள்ளன. விழித்திருத்தல், கனவு காணுதல், ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பது. பிறகு பரஞ்சோதியை வணங்குவதால் முக்தி நிலையை அடைகிறது. அப்போது பிரம்மத்தின் குணங்கள் ஜீவனை அடைகின்றன. சிறிய ஆகாயத்திற்கு இந்தக் குணங்கள் எப்போதும் உள்ளன.*

அதனால் சிறிய ஆகாயம் ஜீவன் இல்லை, பிரம்மமே.

சங்கரர் இதை வேறுவிதமாகச் சொல்கிறார். ஆத்மாவும் பிரம்மமும் ஒன்றுதான், ஆத்மா ஜீவனின் தன்மையை ஏற்றுக் கொள்வதால், அது வேறு ஒன்று போலத் தோற்றமளிக்கிறது. ஜீவ சுமையை உதறி விட்டால், ஆத்மாவும் பிரம்மமும் ஒன்றே என்கிறார்.

**1.3.19. அந்யார்த்தச்ச பராம்ரச:**

*இங்கே ஜீவனைச் சொல்வது வேறு ஒரு காரணத்துக்காக.*



'இங்கே' என்பது பிரம்மன், இந்திரனுக்கு தஹர ஆகாசத்தைப் பற்றிச் சொன்ன வார்த்தைகளில் என்று பொருள் கொள்ள வேண்டும். அந்தக் காரணம் பரமாத்மா ஜீவனை முக்தி அடையச் செய்யும் என்பதைக் காட்டவே.

**1.3.20. அல்ப ச்ருதே: இதி சேத் தத் உக்தம்**

*மிகவும் சிறியது. அதனால் அதை ஜீவனாகச் சொல்ல முடியும் என்றால், இதற்கு மறுப்பு முன்பே கூறப்பட்டு விட்டது.*

பார்க்க 1.2.7 விளக்கம்

**1.3.21. அநுக்ருதேஸ் தஸ்ய ச**

*அதை ஒத்திருப்பதால்*

முக்தி அடைந்த ஜீவன் பிரம்மத்தை ஒத்திருக்கிறது. முண்டக உபநிஷது பொன்னிறமானவனும் மிகப்பெரியவனும் உலகக் காரணமும் ஆன பிரம்மத்தை, எப்போது ஞானி காண்கிறானோ, அப்போது பிரம்மத்தோடு ஒத்திருக்கிறான் என்று சொல்லும் பின்னணியில் இந்த 'ஒத்திருத்தலை'க் கொள்ள வேண்டும்.

**1.3.22. அபி ஸ்மர்யதே.**

*ஸ்மிருதிகளிலும் கூறப்படுவது*

உரையாசிரியர்கள் இங்கே கீதையை எடுத்துக்காட்டுகிறார்கள். ஆனால் கீதை, பிரம்ம சூத்திரத்துக்குப் பிறபட்டது.

இது பொருத்தமாக எங்களுக்குப் படவில்லை. யாரேனும் இந்த முரண்பாட்டை விளக்கலாம்.

ஆறாவது அதிகரணத்திற்குப் போவதன்முன் இந்த சிறிய ஆகாயம் என்னும் கருத்தை சற்று யோசிக்கலாம். இதைப் புரிந்து கொள்வது சற்றுக் கடினம்தான். பிரம்மம் எல்லோர் இதயத்திலும் உள்ளது என்னும் அருமையான கருத்தே முக்கியம். 'வெள்ளத்தில் உள்ளானும் வேங்கடத்துமேயானும் உள்ளத்தில் உள்ளான் என்று ஓர்' என்று பொய்கையாழ்வார் கூறியது இந்த தஹர ஆகாசம் என்றுதான் தோன்றுகிறது. நவீன இயற்பியலும், மிக மிகச்சிறிய

இடத்தில் எல்லையற்ற வெளியையும் சக்தியையும் கூறுகிறது. இன்றைய அணுக்கருக்களின் உள்ளுக்குள் உள்ள க்வார்க் என்னும் துகள்களுக்கிடையில் கூட இருப்பது ஒரு திறந்த வெளி என்றுதான் முடிவெடுத்திருக்கிறார்கள். அவைகளை வர்ணிக்க க்வார்க், ஹேட்ரான், லெப்டான், பேரியான், மிஸான் என்று புதிய புதிய வார்த்தைகளைத் தேடுகிறார்கள். சரியான வார்த்தை கிடைக்காத போது Up down strange போன்ற அன்றாட வார்த்தைகளுக்கு வேறு அர்த்தம் கற்பிக்கிறார்கள். அது போலத்தான் தஹர ஆகாசம் என்னும் வார்த்தையும். ஓர் எல்லைக்கு அப்பால் பாதராயணர் ஐன்ஸ்டைன்களையும் ஃபேய்ன்மன்களையும் ஸ்டீஃபன் ஹாக்கிங்களையும் முந்திவிட்டார் என்று சொல்லத் தோன்றுகிறது.

**அதிகரணம் 6**

**கட்டைவிரல் பரிமாணம்**

**1.3.23. சப்தாதேவ ப்ரமித:**

*கட்டை விரல் அளவு உள்ளவன் (பிரம்மம்) என்பதாலே.*

அங்குஷ்ட மாத்ர: புருஷ: என்ற தொடக்கம் மூன்று இடங்களில் கடோபநிஷதில் வருகிறது. சுவேதாசுவர உபநிஷதிலும் இந்தக் கருத்து உள்ளது. கட்டைவிரல் பருமனுள்ளவன் பிரம்மமா, ஜீவனா என்கிற சந்தேகம் வருகிறது. கடவல்லியில் முக்காலமும் எல்லாப் பொருள்களுக்கும் ஈசன் கட்டைவிரல் பரிமாணமுள்ளவன் என்று சொல்லப்படுவது பரமாத்மாவே.

**1.3.24. ஹ்ருதி அபேக்ஷயா து மநுஷ்யாதிகாரத்வாத்**

*மனித இதயத்தில் இருக்கையில் கட்டை விரல் பரிமாணம் என்று சொல்லப்படுவது. ஏனென்றால் மனிதனுக்கு பிரம்மத்தைச் சிந்திக்கும் தகுதி இருப்பதால்*

குதிரை, பாம்பு போன்ற மற்ற பல ஜீவன்களுக்கு கட்டைவிரல் கிடையாது. அடுத்த தடவை உங்கள் கட்டை விரலைப் பார்க்கும் போது பிரம்மத்தை யோசியுங்கள்.



**7ம் அதிகரணம்: தேவர்களும் உண்டு.**

**1.3.25. ததுபர்யபி பாதராயண: ஸம்பவாத்**

*அடுத்த இரண்டு உட்பிரிவுகளில் பெரிய ஆழ்ந்த கருத்துகள் சொல்லப்படவில்லை. பிரம்மத்தைப் பற்றி யோசிக்கத் தகுதி தேவர்களுக்கு உண்டு.*

**1.3.26. விரோத: கர்மணி இதி சேத்ந, அநேக ப்ரதிபத்தேர் தர்சநாத்**

*விரோதமாவதில்லை, பல உருவங்களை எடுத்துக் கொள்வதால்.*

தேவர்கள் ஒரே சமயத்தில் பல யாகங்களில் தோன்றக்கூடிய சக்தி படைத்தவர்கள். இது அவர்களின் சிறப்பான தன்மை அல்லது திறமை.

**1.3.27. சப்த இதி சேத் ந, அத: ப்ரபவாத் ப்ரத்யக்ஷ அநு மாநாப்யாம்**

*இந்திரன் முதலான தேவர்களுக்கு உடல் இருக்கிறது என்றால், உடல் அழியும் பொருள், ஆக இந்திரனைப் பற்றி வேத வார்த்தைகள் பொய்யாகி விடும். இது முரண்பாடு அன்றி வேதம் இந்திரன் என்ற ஒரு தேவதையைக் குறிக்க வில்லை, தேவ ஜாதியைக் குறிப்பிடும் பொதுச்சொல் அது. பிரம்மன், வேத வாக்யங்களைக் கொண்டே மற்றொரு இந்திரனைப் படைக்கிறான். யஜுர் வேதத்தில், வேதத்தாலே, ப்ரஜாபதி உருவங்களைப் படைத்தார் என்று வருகிறது.*

**1.3.28. அத ஏவ ச நித்யத்வம்**

*ஆகையால் வேதம் நித்யமானது.*

**1.3.29. ஸமாந நாமரூபத்வாத் ச ஆவ்ருத்தௌ அபி அவிரோதோ தர்சநாத் ஸ்ம்ருதேச்ச**

*மறுபடி உண்டாக்கும்போது முன்பிருந்த பெயர்களையே, வடிவங்களையே பொருள்கள் ஏற்பதால் விரோதமில்லை.*

ஊழிக்காலத்தின் முடிவில் மறுபடியும் முன்போல உற்பத்தி தொடங்குகிறது. அதே பெயரில் அதே உருவங்களோடு. ஆகையால் வேதம் பொய் ஆவதில்லை.

இங்கே காலம் வட்ட வடிவம் (Circular time) பெறுகிறது. திரும்பத் திரும்ப நாம் அதே வாழ்க்கையை வாழ்கிறோம். அடுத்த காலச் சக்கரத்திலும் நாங்கள் இதே பெயருடன் பிரம்ம சூத்திரம் எழுதிக் கொண்டிருப்போம். நீங்களும் படிப்பீர்கள். இப்போது புரியவில்லையென்றால், அப்போதும் புரியாது.

**அதிகரணம் 8**

இதில் மூன்று சூத்திரங்கள் உள்ளன. இந்திரன் போன்ற தேவர்களுக்கும் சில வழிபாட்டு முறைகளில் உரிமை உண்டா என்று கேட்டு, முதல் இரண்டு சூத்திரங்களில் அவ்வுரிமை கிடையாது என்று ஜைமினி முனிவர் கருதுகிறார் என்று சொல்லி, மூன்றாவதில் அப்படிச் சொல்வது சரியல்ல என்று பாதராயணர் கருதுகிறார் என்று சொல்கிறது. பாதராயணர் பிரம்ம சூத்திரங்களின் ஆசிரியர்!

**1.3.30. மத்வாதிஷு அஸம்பவாத் அநதிகாரம் ஜைமினி:**

*தேவர்களுக்கு சில வழிபாடுகள் பொருந்தாது என்கிறார் ஜைமினி.*

**1.3.31. ஜ்யோதிஷி பாவசாச்ச**

*பரமாத்மாவின் வழிபாடு மட்டுமே தேவர்களுக்கு விதிக்கப் பட்டிருக்கிறது.*

தேவர்களுக்கு தமது பதவிக்குக் கீழான பதவியை அடையச் செய்யும் வழிபாடுகள் பொருந்தாது என்பது குறிப்பு. (Who will pray for demotion)



**1.3.32. பாவம் து பாதராயணோ அஸ்தி ஹி**

*எல்லா தேவர்களுக்கும் எல்லா முறைகளும் ஏதோ ஒரு காலத்தில் பொருந்தும் என்கிறார் பாதராயணர்.*

**9-ம் அதிகரணத்தில்** சிலருக்கு பிரம்ம ஞானத்தை அடையும் உரிமை இல்லை என்று சொல்லும் கருத்து, இக்கால சமூக சிந்தனைகளுக்குத் தேவையற்ற ஒன்றாக நாங்கள் கருதுகிறோம். அவைகள் நமக்கு இன்றைய காலகட்டத்தில், எந்த மேம்பாட்டையும் தரப்போவதில்லை. பிரம்ம சூத்திரத்தில் உள்ள ஆழ்ந்த தத்துவ வேதாந்தக் கருத்துக்களை மட்டும் குறிப்பிட விரும்பும் நாங்கள், இந்த அதிகாரணத்தை விவரிக்க வில்லை.

இந்த எளிய அறிமுகத்திற்கு இவை தேவையில்லை. எனவே *1.3.33*-லிருந்து *1.3.40* வரை நாங்கள் விட்டு வைத்திருக்கிறோம்.

**1.3.40. கம்பநாத்**

*நடுங்குவதால்.*

தேவர்கள் கட்டைவிரல் அளவு உள்ளவனிடம் நடுங்குவதால் என்று கூறுவதால் அவன் பிரம்மமே, தனிப்பட்ட ஜீவனல்ல.

**1.3.41. ஜ்யோதிர் தர்சநாத்**

*அந்தக் கட்டைவிரல் அளவுள்ளவனுக்கு ஒளி சொல்லப் படுவதானும்*

கடோபநிஷதில் ''அந்தப் புருஷனிடம் சூரியனும் சந்திரனும் நட்சத்திரங்களும் மின்னல்களும் ஒளிவிட மாட்டா. அக்னியைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ. ஒளி வீசும் புருஷனைப் பின் பற்றியே எல்லாம் ஒளி வீசுகின்றன. அவனுடைய ஒளியாலேயே இவை ஒளிர்கின்றன' என்று வருவது, இந்த சூத்திரத்துக்குப் பொருத்தம். கட்டைவிரல் அளவுள்ளவன் பிரம்மமே.

**1.3.42. ஆகாசோ அர்த்தாந்தரத்வாதி வ்யபதேசாத்**

*வேறுபட்ட தன்மைகள் கூறப்படுவதால் ஆகாயம் பிரம்மமே*

இது நாம் சாதரணமாக அறியும் ஆகாயத்திலிருந்து வேறுபட்ட தன்மை.

**1.3.43. ஸுஷுப்த்யுத்க்ராந்த்யோர் பேதேந**

*தூங்கும் நிலையிலும், மரணத்தின்போதும் வெளிக் கிளம்பும் நிலையிலும் வேறு வேறாகவே*

பிருகதாரண்யக உபநிஷதில் இது வருகிறது. தூங்கும் நிலையிலும், உயிர் பிரியும் நிலையிலும், ஜீவனுக்கு அப்பாற்பட்டு பிரம்மம் நிற்கிறது என்பது.

நம் அனைவரிடமும் மரணமற்ற ஒன்று இருக்கிறது என்கிற கருத்து நம் இருத்தலில் ஒரு குறிக்கோளை ஏற்படுத்துகிறது. நம்மை யெல்லாம் ஆட்டிப்படைக்கும் மரண பயத்திலிருந்து விடுதலை கிடைக்க, நாம் எல்லாம் இறக்கும்போது பிரம்மத்தைத் தழுவப் போகிறோம் என்கிற எதிர்பார்ப்பு நம் மனத்தை நிலைபெறச் செய்யும். இயற்பியல் தத்துவத்தின்படி பிரபஞ்சமும் நாமும் ஒரே துகள்களால், சக்தியால் ஆனவர்கள்!

**1.3.44. பத்யாதி சப்தேப்ய:**

*பதி முதலான வார்த்தைகள் சொல்லப்படுவதால்*

இதுவும் ப்ருகதாரண்யத்தில்தான். எல்லாவற்றுக்கும் தலைவன். எல்லாவற்றையும் தன் வசத்தில் வைத்திருப்பவர். அனைத்துக்கும் ஈசுவரன்.

இந்தப் பாதத்தில் சொன்ன கருத்துக்களை வரிசைப்படுத்துவோம்.

1. உலகங்களின் இருப்பிடம் பிரம்மம்.

2. நல்ல அறிவினால் மோட்சத்தை அடைபவன் பார்ப்பது பிரம்மம்.

3. ஜீவன், ஜடப்பொருள் அல்ல, பிரம்மம்.. அவைகளின் குணங்கள் பிரம்மத்திற்கு இல்லாததால்.

4. பிரம்மம் மிகப் பெரியது.

5. அட்சரம் எனப்படுவது பிரம்மம்.

6. காணப்படுபவன் பிரம்மம்.

7. நம் இதயத்தாமரையின் சிறிய ஆகாயம் பிரம்மம்.

8. கட்டைவிரல் அளவு அவன், தேவர்களும் அடைய முடியும்.



9. பெயர்களையும் உருவங்களையும் படைப்பில் திரும்பத் திரும்ப அளிப்பவன் பிரம்மமே.

நான்காம் பாதத்தை விளக்கும்முன் சாங்க்யத்தைப் பற்றிச் சிறிது அறிந்தால் நல்லது. மிகப் பழமையான இந்திய தத்துவப் பிரிவான 'நிரீச்வர' சாங்க்யத்தில் கடவுள் கிடையாது. கபிலர் என்பவர் இந்தத் தத்துவத்துக்கு முதலில் உயிர் கொடுத்தவர். பிரபஞ்சத்தில் இரண்டே இரண்டு பொருள்கள் தான் உண்டு. ஒன்று பிரக்ருதி மற்றது புருஷன். ப்ரக்ருதி மூன்று குணங்கள் கொண்டது. (இவைகளுக்கு பருமன், எடை எல்லாம் உண்டு.) இவைகளுக்கு சத்வ, ரஜஸ், தமஸ் என்று பெயர். இவைகளின் கலவை அல்லது விகிதாசார வேறுபாட்டினால், சேர்க்கையால், நாம் காணும் பொருள்கள் எல்லாம் உண்டாகின்றன. அதற்கு கடவுளின் நியமனம் தேவையில்லை. ஒரு காலத்தில், மூன்று குணமும் சம அளவில் ஒவ்வொன்றும் 33.3 விழுக்காடு இருந்தன. இந்நிலையில் அதை மூலப்பிரக்ருதி என்னலாம் (Unevolved matter). அப்போது இயக்கம் இல்லை. ஏதோ ஒரு காரணத்துக்காக இந்த அளவில் மாற்றம் நிகழ்கிறது. இயக்கமும் உலகத்தோற்றமும் ஏற்படுகிறது. புருஷன் என்பதை நாம் ஜீவன் என்னலாம். இந்த அளவுக்கு சாங்க்யத்துடன் பரிச்சயம் போதும்.

இப்போது, நான்காம் பாதத்தின் சூத்திரங்கள் பல, சாங்க்யத்தின் மூலப் பிரக்ருதி பிரம்மமில்லை என்பதை விரிவாக நிலைநாட்டுகின்றன. ஆரம்பத்திலேயே பிரம்மம் உலக உற்பத்தியின் காரணம் என்று சொல்லி, இரண்டாம் பாதத்தில், அந்த உற்பத்திக்குக் காரணம் உயிருள்ள ஜீவனோ உயிரற்ற ஜடப்பொருளோ இல்லை என்று சொல்லப்பட்டது. மூன்றாம் பாதத்தில், ஜீவனும் ஜடப் பொருளும் காரணம் என்ற சந்தேகம் ஏற்படுத்தும் கருத்துக்களை எடுத்துக் கொண்டு, அவை சொல்வது சரியல்ல என்று ஸ்தாபிக்கப் பட்டது.

நான்காம் பாதத்திலும் இவ்விதமான சந்தேகம் தோன்றும் வார்த்தைகளை மேலும் எடுத்துக்கொண்டு, அவை தவறு என்று சொல்கிறது. குறிப்பாக, சாங்க்யக் கருத்துக்களுக்கு மறுப்பாகவும் உள்ளது இந்தப் பாதம்.

*1. ப்ரக்ருதி உலகக் காரணம் அல்ல.*

**1.4.1. ஆநுமாநிகமப்யேகேஷாமிதி சேந்ந சரீர ரூபக விந்யஸ்த க்ருஹீதேர் தர்சயதி ச**

*மூலப்பொருள் சில இடங்களில் உகை உற்பத்திக்குக் காரணமாகச் சொல்லப்படுகிறதென்றால், அது தவறு. அது உருவகமாகக் காட்டப்பட்டது.*

கடோபநிஷதில், 'மகத்துக்கு மேலே, பரிணாமமடையாதது, (unevolved) பிறகு உருவடையாதது (அவ்யக்த), அதற்கு மேலே புருஷன், அதுவே முடிவு, குறிக்கோள்' என்று வருகிறது. சாங்க்யத்திலும் 'மகான்' என்னும் மகத்தானதைக் கூறி, அதற்கும் மேலானது அவ்யக்த என்னும் உருவமற்ற மூலப்பொருள் என்று கூறுவதால், உயிரற்ற ஜடப்பொருள்தான் உலக உற்பத்திக்குக் காரணம் என்று தோன்றுகிறது. சங்கரரின்படி, உபநிஷது சொல்லும் 'உருவமற்றது', சாங்க்யத்தின் 'ப்ரதானப் ப்ரக்ருதி' இல்லை. அது தனிப்பொருள் அல்ல; பிரம்மத்தின் சக்தி அல்லது மாயை அல்லது அவித்யை என்கிறார்.

கடோபநிஷதில், ஆத்மா தேர்ப்பாகன், உடல் தேர் என்று உருவகப்படுத்துவதால், 'அவ்யக்த' என்று குறிப்பிடப்பட்டது சாங்க்யத்தின் மூலப்பொருள் அல்ல. சூக்கும நிலையில் உள்ள சரீரத்தையே குறிக்கிறது. கடோபனிஷத் சொல்லும் 'புருஷன்' சாங்க்யத்தின் இருபத்தைந்தாவது தத்துவம் அல்ல. பிரம்மமே சொல்லப்படுகிறது.

**1.4.2. ஸூக்ஷ்மம் ததர்ஹத்வாத்**

*அந்த மூலப்பிரக்ருதியே ஸ்தூல நிலையடைந்து சரீர மாகிறது.*

**1.4.3. தததீ நத்வாதர்த்தவத்**

*வசப்பட்டிருப்பதால் (மனிதனுக்கு) பயனுடையதாகிறது.*

இதில் தான் சாங்க்யத்திலிருந்து வேறுபாடு வருகிறது. சாங்க்யத் தின் மூலப்பொருள் சுதந்தரமானது; வேதாந்தியின் மூலப்பொருள் பிரம்மத்திற்குக் கட்டுப்பட்டது. மூலப் பொருளின் செயல்கள் ஜீவனுக்குப் பயன் தருகின்றன. அதற்கு சுதந்திரமில்லை.



**1.4.4. ஜ்ஞேயத்வா வசனாச்ச**

*'அறியத் தக்கதாய்' என்று சொல்லப்படாததால்,*

சாங்க்யம் மூலப்பொருளை அறியவேண்டும் என்று சொல் கிறது. வேதாந்தம் முக்தியடைவதற்கு மூலப்பொருளை அறிந்தாக வேண்டும் என்று சொல்வதில்லை.

வேதாந்திக்குப் பிரம்மமே அறியத்தக்க பொருள்.

**1.4.5. வததீதி சேந்ந, ப்ராஜ்ஞோ ஹி ப்ரகரணாத்**

*அதே கடோபநிஷத்தில் (மூலப்பொருளை) வேறொரு இடத்தில் அறியத்தக்கதாகச் சொல்கிறதே என்றால், அது இல்லை. சொல்லப்படுவது பிரம்மமே.*

கடோபநிஷதில் 'சப்தம், ஸ்பரிசம், ரூபம், ருசி, கந்தம் (ஒலி, தொடுகை. வடிவம், சுவை, மணம்) எதுவுமற்றதை அழிவற்றதும், ஆதி அந்தமற்றதும், மிக மகத்தானதும், நிலையானதுமான அதை அறிவதால் மோட்சம் கிடைக்கும்' என்று வருகிறது. இதில் கூறப்படுவது மூலப்ரக்ருதி அல்ல, பிரம்மமே (மோட்சத்திற்கு அறிய வேண்டியது பிரம்மம் மட்டுமே)

**1.4.6. த்ரயாணாமேவ சைவமுபந்யாஸ: ப்ரச்னச்ச.**

*மூன்றைப் பற்றியே கூறப்பட்டிருக்கிறது. கேள்வியும் அதைப் பற்றியே.*

கடோபநிஷதில் யமனுக்கும் நசிகேதசுக்கும் நடந்த உரை யாடலில் சொல்லப்படும் மூன்று விஷயங்கள். அடையும் வழி, அடையப்படுவது, அடைபவன். அடையப்படுவது பிரம்மம், அடைபவன் ஜீவன். நசிகேதசின் கேள்வி இவைபற்றித்தான். யமனின் விடையும் இவை பற்றியே.

**1.4.7. மஹத்வச்ச**

*பெரியது எவ்வாறு சொல்லப்படவில்லையோ,*

(அப்படியே மூலப்ரக்ருதி சொல்லப்படவில்லை.)

கடோபநிஷது பெரியது என்று பரமாத்மாவைக் குறிப்பது சாங்க்யத்தின் பெரியதை (மகத்தை) அல்ல. அது போன்ற அவ்யக்தம் (உருவமில்லாதது) என்பது சாங்க்யரின் மூலப்பொருளைக் குறிப்பதும் அல்ல.

**2-சமஸபாத்திரம் போலே**

**1.4.8. சமஸவத விசேஷாத்**

இதை விளக்குவதற்கு சமஸம் என்கிற பாத்திரத்தைக் குறிக்கும் சொல்லின் பொருளையும், அஜா (பிறப்பற்றது) என்கிற சொல்லின் பொருளையும், சுவேதாச்வர உபநிஷதின் சில கருத்துக்களையும் கொண்டு வந்து, அவைகளில் முரண்பாடு இல்லை என்று சுற்றி வளைத்து விளக்க வேண்டும். இதை இங்கே விவரித்தால் இந்த நிலையிலேயே நீங்கள் எங்களையும் பிரம்ம சூத்திரங்களையும் கை விட்டு விடும் அபாயம் இருப்பதால், சாங்க்யத்தில் ஆதாரமாக உள்ள மூலப்ரக்ருதி, அஜா என்று தொடங்கும் வாக்கியத்தில் குறிப்பிடப்படவில்லை என்பதே வாதம்.

**1.4.9. ஜ்யோதிரூபக்ரமா து, ததா ஹ்யதீயத ஏகே**

*சோதியான பிரம்மத்தைக் காரணமாகக் கொண்டது இந்த மூலப்பொருள் என்றல்லவா கூறுகிறது (வேதம்).*

உபநிஷதுகளில் சில இடங்களில் மூலப் பொருள் பிறப்பற்றது என்று வருகிறது. சில இடங்களில் மூலப்பொருள் படைக்கப் படுகிறது என்றும் வருகிறது. இது முரண்பாடு அல்லவா? இதை நீக்க சாந்தோக்யத்தில் உள்ள கருத்து மேற்கோள் காட்டப்படுகிறது. பிரளய காலத்தில் இந்த சூரியன் உதிப்பதுமில்லை மறைவது மில்லை. அது நுட்பமான சூட்சும நிலையில் உள்ளது. ஒரே சூரியன் நுட்ப நிலையில் ஒன்றாகவும் சிருஷ்டிக்குப் பிறகு வேறாகவும் இருக்கிறது. அதுபோல, மூலப்பொருளும் இருவிதமாக இருக்க முடியும்

இயற்பியல் தத்துவங்களின்படி, பிரபஞ்சத்தின் முதல் கணத் துக்கு முன் அதன் தோற்றம் ஒரு சாத்தியக் கூறாக probabillityயை தன்னுள் அடக்கி இருந்தது. அந்தக் கணக்கில் அந்த சாத்தியக்கூறு உண்மையாயிற்று என்கிறார்கள்.



**1.4.10. கல்பனோபதேசாச்ச மத்வாதிவத் அவிரோத:**

*பிரளயத்திற்குப் பிறகு உற்பத்தியின்போது சூரியன் வேறாவது, மூலப்பொருள் சூக்கும நிலையிலிருந்து ஸ்தூல நிலைக்கு மாறுவதில் எந்த விரோதமுமில்லை.*

**3. வேதமும் சாங்க்யமும் வேறு**

**1.4.11. நஸங்கயோபஸங்க்ரஹாத் அபி நாநாபாவாததிரேகாச்ச.**

*வேதம் ஐந்து ஐந்து பொருள்களைக் குறிக்கிறது. சாங்க்யம், இருபத்தைந்தை.*

வேதம் கூறும் ஐந்தைந்தும் சாங்க்யம் கூறும் இருபத்தைந்தும் ஒன்றல்ல என்கிறது. இந்த சூத்திரம்.

சாங்க்யம் கூறும் இருபத்தைந்து இவை- ஐந்துபூதங்கள், அவைகளின் ஐந்து தன்மைகள், ஐந்து ஞானேந்திரியங்கள், ஐந்து கர்மேந்திரியங்கள், இவைகளுடன் மிச்சமிருக்கும் ப்ரக்ருதி, மஹக், அகங்காரம், மனம், ஆத்மா.

என்று கணக்கிட்டு 25 சொல்கிறார்கள். சாங்க்யம் கூறும் இருபத்தைந்தில் பிரம்ம சம்பந்தமில்லை.

**1.4.12. ப்ராணாதயோ வாக்ய சேஷாத்**

*மேலே சொன்ன ஐந்தைந்து என்று வரும் வாக்கியத்தின் அடுத்துள்ள வாக்கியத்தில் 'ஐவர்' எனப்படுவது தொடுதல் முதலிய ஐந்தே.*

வாக்கியத்தின் தொடர்ச்சி கண்ணுக்குக் கண், காதுக்குக் காது, மனத்துக்கு மனம் என்று சொன்னதால், அவைகளை இருபத் தைந்தாக்கக் கூடாது என்கிறது இந்த சூத்திரம். ஐந்து என்றே கொள்ள வேண்டும். (கண், காது, மூக்கு/நாக்கு, மனம், தோல்)

*1.4.13. ஜ்யோதிஷைகேஷாமஸத்யந்நே*

*பரஞ்சோதி என்கிற வார்த்தையும் ஐந்தையே கூறுகிறது. ஆகவே வேதம், சாங்க்ய இருபத்தைந்தைச் சொல்வதில்லை. ஐந்து இந்திரியங்களையே சொல்கிறது.*

**4. காரணம் பிரம்மமே**

**1.4.14. காரணத்வேந ச ஆகாசாதிஷு யதா வ்யபதிஷ்டோக்தே:**

*ஆகாயம் முதலான காரியங்களுக்கு காரணம் பிரம்மமே.*

**1.4.15. ஸமாகர்ஷாத்**

*எல்லாம் அறியும் பிரம்மமே உள்ளது. இல்லாதது என்று கூறப்படுவதால்.*

பிரம்மத்தை விளக்கும் பல உபநிஷத் வாக்கியங்களை முன்னுக்குப் பின் படித்து தொகுத்துப் பார்க்கையில், முதன் முதலில் இது இல்லாத தாக இருந்தது (தைத்திரீய உபநிஷது). உலக உற்பத்திக்கு முன்னால் இது இருப்பதாக இருந்தது. பிறகு இருந்ததாக ஆயிற்று (சாந்தோக்யம்). அப்போது இது வெளிப் படாததாக இருந்தது (பிருகதாரண்யகம்), நாம் குழம்பிப் போய் விடுவோம்.

பெயரற்ற வெளிப்படாத பொருள் எப்படி உலக உற்பத்திக்குக் காரணமாக இருக்க முடியும்? என்ற கேள்விக்கு 'நானே பலவாக ஆகக் கடவேன்' போன்ற வாக்கியங்கள் விடையாகின்றன.

க்வாண்டம் இயற்பியலின் சங்கடம், வேத உபநிஷத் காலத்திலிருந்தே இருந்திருக்கிறது என்பது இதில் ஆச்சரியம். ஆரம்பத்தில் காலம், விண்வெளி, எதுவுமே இல்லாமலிருந்தது. காலம் Time அதுவே அப்போதுதான் துவங்கியது. இல்லை என்பதும், இல்லா நிலை என்று சொல்வதெல்லாம் பிரபஞ்சத்தின் காரணத்தை, மூலாதாரத்தை, முதல் கணத்தை (குறைபட்ட) மொழியின் வார்த்தைகளால் அறிய முற்படும் ஒரு பிரமாண்டமான முயற்சி என்றுதான் சொல்ல வேண்டும்.



*ஐந்தாம் அதிகரணம்: உலகைச் சொல்வதால் பிரம்மமே காரணம்.*

**1.4.16. ஜகத் வாசித்வாத்**

*உலகைச் சொல்வதால் பிரம்மமே காரணம்*

(யாருடைய வேலை இது என்னும்போது) உலகைச் சுட்டிக் காட்டுவதால் (பிரம்மமே உலக உற்பத்திக்குக் காரணம். கர்ம வசப்பட்ட ஜீவன் இல்லை என்பது இங்கே குறிப்பு) உரையாசிரியர் கௌஷீதகி உபநிஷதின் வார்த்தைகளை எடுத்துக் காட்டுகிறார். 'பாலாகியே, எவன் இவர்களை உண்டாக்குகிறானோ அவனே அறியத் தக்கவன். இந்த பாலாகி முதலில் சூரியன். சந்திரன் ஆகாயம் இவைகளின் ஜீவனே பிரம்மம் என்கிறான். அதற்கு அஜாத சத்ரு (மகத ராஜா இல்லை இது), நீ சொல்வது சரியல்ல. எவன் சூரியன் முதலானவைகளை உற்பத்தி செய்கிறானோ அவனே அறியத் தக்கவன். இதில் 'கர்ம' என்ற பிரயோகம் வருகிறது. இதற்கு, செய்யப்படுவதால் கர்ம என்று கருதப்படும் உலகம் என்றே பொருள் கொள்ள வேண்டுமாம். உலகைப் படைத்தவன் கர்மவயப்பட்டவன் அல்லன். முடிவான பொருள், உலகக் காரணம், பிரம்மமே என்பதுதான்.

**1.4.17 ஜீவமுக்யப் ப்ராணலிங்கத் நேதிசேத் தத்வ்யாக்யாதாம்**

ஜீவன், முக்ய ப்ராணன் இவைகளின் அடையாளங்கள் பிரம்மத்திற்குச் சொல்லப்படுகிறது. ஆகையால் பிரம்மம் ஜீவனே என்றால், அதற்கு முன்னமே விளக்கம் தந்தாயிற்று. 1.1.32-ல் ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது. அங்கே சுருக்கமாகச் சொன்னதை இங்கே விஸ்தாரமாகச் சொல்லலாம்.

பாலாகியை, அஜாதசத்ரு, தூங்கும் ஒரு மனிதனிடம் அழைத்துச் சென்று, அவனைப் பல பெயர்களில் அழைத்து எழுப்புகிறான். அவன் எழுந்திருக்கவில்லை. ஒரு தடியால் தட்டினதால் திடுக்கிட்டு எழுந்திருக்கிறான். ''இவன் விழிப்பதற்கு முன் எங்கிருந்தான், எங்கு தூங்கினான், இவன் சுரணைகள் எங்கிருந்தன, விழித்த போது எங்கிருந்து வந்தன?'' என்று கேட்கிறான். பாலாகிக்கு விடை சொல்லத் தெரியவில்லை. அஜாதசத்ருவே விடையும் தருகிறான். ''இதய நாடியில் இருந்து கொண்டு தூங்குகிறான். தூங்கும்போது பொறிகள் ஜீவனிலுள்ள ப்ராணனைச் சரீரமாகக்

கொண்ட பிரம்மத்துடன் ஒன்றி இருந்தது. விழிக்கும்போது நெருப்புப் பொறிகள் போல அவை ஜீவனிடமிருந்து முன்பிருந்த இடத்தை அடைகின்றன.''

**1.4.18. அந்யார்த்தம் து ஜைமிநி: ப்ரச்னவ்யாக்யானாப்யாமபி சைவமேகே**

கேள்வி - விடையில் வேறொரு காரணத்துக்காக ஜீவன் சொல்லப்பட்டது என்கிறார் ஜைமினி. மேலே சொன்ன கேள்வி - விடையை மறுபடி படித்தால் தெரியும். தடியால் தட்டி எழுப்பியதால் உடலும் ஜீவனும் வேறு என்று காட்டிவிட்டார். ஆகவே ஜீவனைத்தவிர வேறொன்றைக் காட்டவே கேள்வியும் விடையும். ஜீவன் பிரம்மத்தில் ஒன்றியிருக்கிறது என்று சொல்லிவிட்டதால் பிராணன் பிரம்மத்தைக் குறிக்கிறது.

*அதிகரணம் ஆறு: சொற்றொடர்கள் பிரம்மத்தையே குறிக்கிறது.*

**1.4.19. வாக்யாந்வயாத்**

*எல்லா சொற்றொடர்களும் பிரம்மத்திடமே பொருந்துகின்றன*

இங்கே சொற்றொடர்கள் என்பது ப்ருகதாரண்யக உபநிஷத்தில் மைத்ரேயிக்கு யாஜ்ஞவல்க்யர் கூறியதைச் சொல்கிறது.

அதன் மொழி பெயர்ப்பு;

காமத்திற்காக கணவன் பிரியனாகவில்லை, ஆனால் ஆத்மாவுக்காக. அவ்வாறே மனைவி, மக்கள், பணம் போன்ற யாவும்.

ஆத்மாவே காணத்தக்கது, கேட்கத்தக்கது. நினைக்கத் தக்கது, தியானிக்கத் தக்கது. ஏனெனில் அதை அறிந்தால் எல்லாமே அறியப்படுகிறது. இங்கே ஆத்மா என்பது பிரம்மத்தைத்தான் கூறுகிறது.

மைத்ரேயி இந்த அறிவை வைத்துக்கொண்டு நித்யத்தை அடைய முடியாவிடில் என்ன பயன் என்கிறாள். சுவேதாச்வதரம், பிரம்மத்தை அறிந்தவனே இறப்பைக் கடக்கிறான் என்கிறது.



**1.4.20. ப்ரதிஜ்ஞா ஸித்தேர்லிங்கம் ஆச்மரத்ய:**

*வேதத்தின் உறுதிமொழியை மெய்ப்பிக்க ஜீவன் என்று சொல்லும் வார்த்தைகள் பிரம்மத்தின் அடையாளங்கள் என்பார் ஆச்மரத்யர்.*

ஆத்மாவானது காணவும், கேட்கவும், அறியவும் படுவதால் இது எல்லாம் அறியப்பட்டதாகிறது. ஆகவே ஆத்மா எனப்பட்டது பிரம்மமே என்று கூறுகிறார் அவர்.

**1.4.21. உத்க்ரமிஷ்யத ஏவம் பாவாதித்யௌடுலோமி:**

*மேலே கிளம்பும்போது ஒன்றாக ஆவதால் பரமனைச் சொல்கிறது என்றார் ஔடுலோமி.*

அவர் சொன்னது இது - ஜீவன் முக்தி அடையும்போது பிரம்மத்தோடு சேர்கிறது. ஒன்றாகிறது. சாந்தோக்ய உபநிஷதும் இதைச் சொல்கிறது. எனவே இந்தச் சந்தர்ப்பத்தில் ஜீவன் என்ற சொற்குறியீடும் பிரம்மத்தைக் குறிக்கிறது.

**1.4.22. அவஸ்திதேர் இதி காசக்ருத்ஸ்ந:**

பிரம்மம் ஜீவனுக்குள் உறைவதாக காசக்ருத்ஸ்நர் சொல்கிறார்.

*அதிகரணம் 7- பிரம்மமே, பிரபஞ்சம் என்னும் பானைக்கு மண்ணும் குயவனும் ஆவான்.*

**1.4.23. ப்ரக்ருதிச்ச ப்ரதிஜ்ஞாத்ருஷ்டாந்தாநுபரோதாத்**

*பிரம்மம் ப்ரபஞ்ச பானைக்கு மண்ணாகிறது.*

*அவ்வாறு கொண்டால்தான் வேதத்தின் உறுதியான மொழியும், காட்டப்பட்ட உதாரணங்களும் முரண்பாடில்லாமல் இருக்கும்.*

உறுதியான மொழி - எதை அறிந்தால் எல்லாம் அறிந்தவாறோ அது பிரம்மம்' சாந்தோக்யம் 6.1.3

உதாரணம் 'எப்படி ஒருமண் கட்டியை அறிந்தால் மண்ணால் ஆன சட்டி பானைகள் முதலான எல்லாப் பொருள்களும் அறியப்பட்டதாகிறதோ' சாந்தோக்யம் 6, 14.

**1.4.24. அபித்யோபதேசாச்ச**

*(பிரம்மம்) தானே பலவாக ஆவதால், சங்கல்பம் செய்வதால், பிரபஞ்சத்தின் மண்ணும் பிரம்மமே.*

**1.4.25. ஸாக்ஷாச்சோபயாம்நாநாத்**

*நேராகவே வேதம் சொல்வதால்- மண் குயவன் இரண்டும் பிரம்மமே என்று*

உபாதான நிமித்த காரணம் பிரம்மமே என்னும் யஜுர் வேத வாக்கியம் இங்கே எடுத்தாளப்படுகிறது. இவ்வுலகுக்கு பிரம்மம் காடு போலே ஆதாரம். அதில் மரம் இவ்வுலகைச் செய்வதற்கு உபயோகப்படுகிறது. மரங்களின் கூட்டமே காடு.

**1.4.26. ஆத்மக்ருதே:**

*பிரம்மம் தன்னைத்தானே உண்டாக்கிக் கொண்டது என்று சொன்னதாலும்*

பிரம்மமே உலகின் 'மண்' என்று தைத்திரிய உபநிஷதில் வருகிறது.

**1.4.27. பரிணாமாத்**

*இந்தப் பரிணாம மாறுதலால் (மண், பானை ஆவதால்) பிரம்மத்திற்குக் குறைவு இல்லை.*

**1.4.28. யோனிச்ச ஹி கீயதே**

*பிரம்மம் எல்லாப் பொருளுக்கும் தோற்றுவாய் என்று சொல்லப்படுவதால்*

பிரம்மமே பிரபஞ்சத்தின் 'மண்'- முண்டக உபநிஷதில் இந்தக் கருத்து வருகிறது.



அதிகரணம் 8 எல்லா வேதமும் பிரம்மத்தையே முதல் காரணம் என்கிறது.

**1.4.29. ஏதேந ஸர்வே வ்யாக்யாதா வ்யாக்யாதா:**

*இவ்வகையிலான காரணங்களால் பிரம்மம் தான் முதல் காரணம் என்று விளக்கியாயிற்று.*

அத்தியாய முடிவைக் காட்ட (மற்றும் தத்துவத்தின் அழுத்தம் கூட்ட) வ்யாக்யதா: என்ற வார்த்தை இருமுறை வருகிறது.

இந்தப் பாதத்தில் சொன்ன முக்கிய கருத்துக்கள் இவை:-

**1. உலகக் காரணம் சாங்கியரின் மூலப்பொருளில்லை.**

**2. பிறப்பிற்கு முன்பான மூலப் பொருள் பிரம்மமே.**

**3. புலன்களில் உள்ளுறையும் சோதிப் பொருள் பிரம்மமே.**

**4. ஆகாயம், ஜீவன், பிராணன் என்று சில இடங்களில் சொல்லப்படுவதும் பிரம்மமே.**

**5. யாருடைய வேலை என்று கேட்கும்போது சுட்டப்படுவது பிரம்மமே.**

**6. உலகத் தோற்றத்தில் 'மண்ணும் குயவனும்' பிரம்மமே.**

அதிகரணத் தலைப்புகள் இவை. சூத்திரங்களின் எண்ணிக்கை அடைப்புக்குறிகள்.

சாங்கிய மூலப்பொருள் இல்லை *(7)*;

பருகும் பாத்திரமோ? *(3)*; வேதத்தின் இருபத்தைந்து தத்துவங்களும் சாங்க்ய இருபத்தைந்தும் வேறு *(3)*; காரணம் பிரம்மமே *(2)*; உலகைச் சொல்வதால் *(3)*; சொற்றொடர்கள் பொருந்தும் *(4)*; காரணமும் பிரம்மமே *(6)*;

பிரம்மமே அனைத்துக்கும் முதற்காரணம் என்கிறது *(1)*.

முதல் அத்தியாயத்திற்கு

# முடிவுரை

முதல் அத்தியாயத்தை எங்களால் முடிந்த அளவு எளிதாக அறிமுகப்படுத்தியிருக்கிறோம். உரையாசிரியரின் கருத்துக்களை ஆங்காங்கே தொட்டுக் கொண்டு எழுதினோம். பல இடங்களில் உரைகளின் உதவியில்லாமல் பொருளை யூகிப்பது மிகவும் கடினமாக இருக்கிறது.

சமனப்படுத்துதல் என்னும் இந்த அத்தியாயத்தை மீண்டும் நிதானமாகத் தொடர்ந்து படித்தால், பின்வரும் கருத்துக்கள் தெளிவாகும். உயிருள்ளவை, உயிரற்றவை நிரம்பிய இந்தப் பிரபஞ்சம் படைக்கப்பட்டதா? படைத்தது யார்? படைப்புக்கு முன் இந்தப் பிரபஞ்சமே எப்படி, எங்கே இருந்தது? இதற்கு இறுதி உண்டா? இது போன்ற சிக்கலான, ஆனால், நம் ஆவலைத் தூண்டும் கேள்விகளுக்கு பிரம்ம சூத்திரம் வேதத்தின் விடைகளைச் சுருக்கி தருகிறது.

பிரம்மமே தோன்றக் காரணம். பிரம்மமே தோன்றிய பிரபஞ்சமும். பிரம்மத்தை முரண்பாடுகள் இல்லாமல் அறிவிக்கிறது. அது உயிரற்ற ஜடப் பொருள் அல்ல. பிரபஞ்சத்தைப் படைக்க பிரம்மம். ஆனந்தமே உருவானது. சூரியனின் ஒளி இவற்றின் உயிர். படைக்கும் பிரம்மம் ஜீவாத்மா அல்ல ஜீவாத்மா அடைவது. பரிசுத்தமான மனத்தால் அதை அறிய வேண்டும்.

சங்கரர் பிரம்மத்தைத் தவிர மற்றவையெல்லாம் தோற்றமே என்கிறார். அவர் சொல்லும் நிர்க்குண பிரம்மத்தைப் பற்றிப் படிக்கும் போது அவர் காலத்தின் கட்டாயங்களை நாம் அறிய வேண்டும். 7-ம் நூற்றாண்டில் வைதிக மதம் பௌத்த, சமணர்களால் நலிந்து போகும் நிலையில் இருந்தது. மக்களை வைதிகத்திற்கு மீண்டும் கொண்டுவர சங்கரர் கையாண்ட உத்தி (Strategy) அத்வைதம். பௌத்தர் சொன்ன 'ஒன்றுமில்லாமையையே' மாற்றி ஒன்றே உண்டு என்றார். பௌத்தருக்கு உருவம்,





கடவுள் இல்லை. சங்கரரின் பிரம்மத்திற்கும் அதே. எல்லாமே ஒன்று என்னும் போது கடவுள் என்பது யாது?

சமணர்களுக்கும் கடவுள் கிடையாது. மனிதனே சிறந்த சீலத்தால் கடவுள் தன்மை அடைய முடியும் என்றனர். இந்த இரு மதங்களிலும் உள்ள (மக்களை மதமாற்றம் செய்யத் தூண்டிய) கருத்துக்கள் வேத உபநிஷதுகளில் இருப்பதைக் கண்டார் சங்கரர். தன் வேதாந்தத்தால் மக்களைக் கவர்ந்தார். To destroy, adopt their gods. இது தான் சங்கரரின் சாமர்த்தியம். சங்கரருக்குப் பின் வந்தவர்கள் நிர்க்குண பிரம்மம் என்பதே சிந்திக்க இயலாது என்றனர். அதுவே சகுணபிரம்மமாயிற்று. சங்கரை மாறுவேடம் பூண்ட பௌத்தர் என்று சிலர் சொன்னாலும், அவரது வேதாந்தத்தில் ஒரு தனி வசீகரம் இருக்கிறது. நீயும், நானும், மரமும் பிரம்மமே என்றெண்ணி மகிழ வாய்ப்பு இருக்கிறது.

# இரண்டாம் அத்தியாயம்
# அவிரோதம்-விரோத நீக்கம்

இரண்டாவது அத்தியாயத்தில், 150 சூத்திரங்கள் உள்ளன. அவிரோதாத்யாயம் (முரண்பாட்டு நீக்கம்) என்று சொல்லப்படும் இரண்டாம் அத்தியாயத்தில் 'பிரம்மம் பிரபஞ்ச காரணம் என்ற கருத்துக்கு விரோதம் ஒன்றுமில்லை' என்பது நிரூபிக்கப் படுகிறது.

அதாவது, மாற்றுக் கருத்துக்களை நீக்குகிறது.

இந்த அத்தியாயத்திலும் நான்கு பாதங்கள் உள்ளன. முதல் பாதத்தில் பத்து உட்பிரிவுகள், 32 சூத்திரங்கள் உள்ளன. உலகக் காரணம் பிரம்மமே என்பதற்கு எதிரான கருத்துகள் சாங்க்யம், நையாயிகம், சில ஸ்ம்ருதிகள் போன்றவற்றில் உள்ளன. இந்த ஸ்ம்ருதிகள், நைய்யாகிக காரணங்களை எடுத்துக் கொண்டு, அவை தவறு என்று சொல்கின்றன. இரண்டாம் பாதத்தில், சாங்க்யத்தைத் தவறு என்கிறது. மூன்றாவது பாதத்தில், ஆகாசம் முதலானவை பிரம்மமே என்றும் விளக்கப்படுகிறது. பிரம்ம சூத்திரத்தின் அடிப்படைக் கொள்கை இது. உலகக் காரணம் பிரம்மம்-முதலில் அதுதான் இருந்தது. உலகமாக ஆக நினைத்தது, உலகங்கள் அதுவே ஆனது, நுட்பநிலையில் இருந்த பிரம்மம் ஸ்தூல நிலையாகியது, இந்த அடிப்படைக் கருத்துக்களிலிருந்து ஏதும் வேறுபட்டால், அதை ஆராய்ந்து அது தவறு, வேத உப நிஷதுகளால் அவை ஆதரிக்கப்படவில்லை என்று, இந்த அத்தி யாயத்தின் சூத்திரங்கள் கூறுகின்றன. மேலும், ஆகாயம் போன்ற உண்டாக்கப்பட்ட பொருட்களும் புலன்களும் பிரம்மமே என்று அறிவுபூர்வமாக நிரூபிக்கப்படுகிறது. (Rational).

சாங்க்யம் என்ற சொல்லுக்கு பூரண அறிவு என்று பொருள் சொல்கிறார்கள். கபிலர் என்னும் முனிவர் (கீதையில் கண்ணன் 'கபிலர் எனது அவதாரமே' என்கிறார்) சாங்க்ய ஸ்ம்ருதி என்ற நூலில் சொன்னதாகவும் ஈசுவர கிருஷ்ணர் என்பவர் சாங்க்ய





காரிகை என்கிற நூலை இயற்றியதாகவும் சொல்கிறார்கள். சாங்க் யம், வேதத்தை உண்மை என்று ஒப்புக் கொள்கிறது. ஆனால், கடவுள் என்ற ஒன்று தேவையில்லை என்கிறது. உலகம் அறிவு வடிவம் கூடிய மூலப் பொருள்களிலிருந்து தோன்றியது என்கிறது.

இரண்டு மூலப்பொருளாக, புருஷன், ப்ரக்ருதி என்பவற்றை சொல்கிறது. புருஷனுக்கு மாறுதல் கிடையாது. ப்ரக்ருதி மாறும். சத்வ ரஜஸ் தமஸ் குணங்களின் விகிதாச்சார மாறுதல்களினால்தான் சிருஷ்டி ஏற்படுகிறது. இதைப் பற்றி இதற்கு முன் எழுதியிருந்தது நினைவிருக்கலாம்.

இங்கே யோக சாஸ்திரம் பற்றியும் சிறிது சொல்ல வேண்டி யுள்ளது. இதன் மூல நூல் பதஞ்சலியால் எழுதப்பட் யோக சூத்திரம் ஆகும். முதலில் பிரமனால் வெளிப்படுத்தப்பட்டது, யோக ஸ்ம்ருதி. ஸ்ம்ருதி என்பது, வேதங்களுக்கு அடுத்தபடியாக உண்மை என்று கொள்ளக் கூடியது. கபிலஸ்மிருதி, மநுஸ்மிருதி போன்றவை உதாரணங்கள், பதஞ்சலியின் யோக சூத்திரத்துக்கு வியாசர் என்பவர் விளக்கம் எழுதியிருந்தார். யமம் (தவிர்க்க வேண்டியவை), நியமம் (கடைபிடிக்க வேண்டியவை), ஆசனம் (உடற்பயிற்சி), பிராணாயாமம் (மூச்சுப் பயிற்சி) என்ற நான் கினால் மனத்தையும், புலன்களையும் அடக்கலாம். பிரத்யாகாரம் மூலம் சமாதி நிலைகளை அடைந்து தளைகள் நீங்க ஜீவன் முக்தன் ஆகலாம். சாங்க்யத்தில் கடவுள் இல்லை, யோகத்தில் கடவுள் உண்டு. ஆனால், இந்த இறைவன் காப்பவனும் அல்லன், ஒரு விசேட புருஷன். யோகம், கடவுள் உண்டு என்றாலும் கடவுளுக்கு மற்ற சிறப்புகள் தரவில்லை.

### வைசேஷிகம்/ நியாயம்

அடிப்படையில் வைசேஷிகமும் நியாயமும் ஒரே கருத்துக் கொண்டவை. அவர்களின்படி, காணும் உலகம் உண்மை. மாயை (தோற்றம்) இல்லை. ஆத்மாவும் உண்மை. காணும் பொருள்கள் யாவும் அணுக்களால் ஆனவை. (மேலும் பிரிக்க முடியாதது அணு). உலகப் பொருள்கள் யாவும் நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம், காலம், இடம், ஆத்மா, மனம் என்பவைகளின் சேர்க்கை, முதல் நான்கும் அழிவுடைய (மாறுபடும்) அணுக்களால் ஆனவை. இரண்டு அணுசேர்க்கை, இணை அணுக்கள். மூன்று இணைகளின் சேர்க்கை, மூவின அணுக்கள் இந்நிலையில் அவை புலப்படும். தொன்மையான வைசேஷிகள் உலக உற்பத்திக்கு (அணுச்

சேர்க்கைக்கு) 'அதிஷ்டம்' (புலப்படாதது) என்று ஒரு தத்துவத்தை நம்பினர். பிறகு அதை 'கடவுளர்' என்றனர். பொருள் உற்பத்தியின் போது பகுதிகளான அணுக்களும் உண்டு. உண்டான பொருளும் உண்டு. அதாவது உற்பத்தியான பொருளுக்குள் அணுக்களும், உண்டான பொருளும் இருக்கின்றன. அவைகளுக்கு இடையில் ஏற்பட்ட சம்பந்தமும் ஒரு பொருளாக உள்ளது.

நையாயிகர், உண்மை அறிவை பெற நான்கு தேவை என்றனர். அறிவதற்கு, அறிபவன் (ப்ரமாதா), அறியப்படும் பொருள் (ப்ரமேயம்), அறிவு வரும் வழி (ப்ரமாணம்), நான்காவது, அறிவு (ப்ரமதி) தேவை. மொத்தம் ஆறு பிரமாணங்கள் உள்ளன. நையாயிகர் அவற்றில் நான்கினைக் கைக்கொள்கின்றனர். அவை பிரத்யட்சம், அநுமானம் (புகை இருந்தால் நெருப்பு), ஆப்தவாக்கியம் (வேதம்), உபமானம் (பொருளைப் பற்றிய அறிவினை ஒற்றுமை, வேற்றுமைகளின் மூலம் அடைவது) விட்டுப்போன இரண்டு அருந்தா பத்தி, அநுஉபலப்தி என்பவை. ஏனைய பிரமாணங்கள் தராத நிலை தரும் வழி, அருந்தாபத்தி. பொருளின் இல்லாமையை உணர்வதால் வரும் அறிவு அனுஉபலப்தி.

நியாய மதத்தினர் கடவுள் உண்டு என்கின்றனர். அணு முதலிய மூலப் பொருள்களைத் துணையாகக் கொண்டு கடவுள் இவ்வுலகைப் படைத்து, காத்து, ஒடுக்குவார். மூலப்பொருளைக் கொண்டு உலகைப் படைத்தல் கடவுளின் செயல். ஆனால் மூலப் பொருளைப் படைப்பது அல்ல. கடவுள் குயவன் மட்டுமே, மண்ணோ பானையோ அல்ல.

மேலே தந்த சுருக்கங்களில் இருந்து முக்கியமாக நாம் தெரிந்து கொள்ள வேண்டியது கடவுளைப் பற்றிய (பிரம்மத்தைப் பற்றிய) கொள்கைகளில் சில வேறுபாடுகள். சாங்கியர் கடவுள் இல்லை என்றனர். யோகத்தினர் உண்டு; ஆனால் கடவுளுக்கு வரையறை உண்டு என்கின்றனர். இருவருக்கும் ஒற்றுமை மூலப் பொருள் பற்றி.உலக உற்பத்திக்கு மூலப் பொருள் தேவை. மூலப்பொருள் கடவுள் அல்ல. வைசேஷிகர், பொருள்கள் அணுக் கூட்டம் என்றனர். சேர்வதற்கு 'அதிருஷ்டம்' அல்லது கடவுள் தேவை. ஆனால், கடவுள் அணுக்கூட்டம் அல்ல. நியாய மதத்தினர் கடவுள் படைத்து, காத்து, அழிப்பது உலகையே, மூலப் பொருளை அல்ல என்றனர்.

இனி சூத்திரங்களைப் பார்ப்போம்.



**முதல் பாதம்**

**1. கபிலரின் சாங்கியம்-மயக்கம்**

**2.1.1. ஸ்ம்ருதி அநவகாச தோஷ ப்ரஸங்க இதி சேத், ந, அந்ய ஸ்ம்ருதி அநவகாச தோஷ ப்ரஸங்காத்**

*(உலகக் காரணத்தைப் பற்றி) ஒரு ஸ்மிருதி மற்ற ஸ்மிருதிகளிலிருந்து வேறுபடுகிறது. (அல்லது) ஸ்மிருதிகளுக்குள் விரோதம் உள்ளது.*

இங்கே குறிப்பிடுவது கபில ஸ்மிருதிக்கும் மற்ற மநு முதலான ஸ்மிருதிகளுக்கும் உள்ள உலகக் காரணம் பற்றிய கொள்கையில் உள்ள வேற்றுமை. கபில (சாங்கிய) ஸமிருதிப்படி உலகக் காரணம் மூலப்பொருளே, கடவுள் அல்ல.

**2.1.2. இதரேஷாம் ச அநுபலப்தே:**

*மற்றவர்கள், (கபிலர் கண்டதை) காணவில்லையே. (ஆகையால் கபிலர் கண்டது- உலகுக்கு மூலப் பிரகிருதி தான் காரணம்- என்பது உண்மை இல்லை)*

மற்றவர்கள், மநு முதலானோர். அவர்களும் மிக்க அறிவுடையவர்கள். ஆனால், அவர்கள் உலகக் காரணம் மூலப்பொருள் என்று கூறவில்லை. ஆகையால் கபிலர் கூறியது தவறு என்று முடிவு காண்கிறார் பாதராயணர்.

**2. யோகமும் அவ்வாறே**

**2.1.3. ஏதேந யோக: ப்ரத்யுக்த:**

*அதேபோல, யோக (தத்துவ)மும் தவறு.*

யோகஸ்மிருதி மும்மூர்த்திகளில் ஒருவரான பிரமனால் இயற்றப்பட்டது. அதன்படி பிரம்மம் குயவன் போல. ஆனால் குடம் இல்லை. (வேதங்கள் பிரம்மம், குயவன், மண், குடம் எல்லாமே என்கிறது) பிரமனுக்கும் கபிலர் போன்று மயக்கம் உண்டு. ஏனெனில் அவர்கள் படைக்கப்பட்டவர்கள். வேதம்

அவ்வாறல்ல. அது ஒருவரால் புனையப்பட்டது அல்ல. ஆகையால் யோகம் சொல்வது தவறு.

**3. வேறுபட்டாலும் பிரம்மமே காரணம் - சாங்கிய மறுப்பு:**

*இரண்டாம் அத்தியாயத்தை அறிமுகப்படுத்திவிட்டு, முதல் பாதத்தில் நான்கு சூத்திரங்களைப் பார்த்தோம்.*

கபிலரின் சாங்க்யம் மயக்கம்... 'யோகமும் அவ்வாறே' என்ற அதிகரணத் தலைப்பின் கீழ் முதல் மூன்று சூத்திரங்களைப் பார்த்தோம். இப்போது அதைத் தொடர்வோம்.

*மூன்றாவது அதிகரணம் வேறுபட்டாலும், பிரம்மமே காரணம் (சாங்க்ய மறுப்பு)*

**2.1.4. ந விலக்ஷணத்வாதஸ்ய ததாத்வம் ச சப்தாத்**

*வேதங்கள், வேறுபட்டது (உலகும், பிரம்மமும்) என்று கூறுவதால், பிரம்மம் ஆகாது.*

இது பூர்வ பட்சக் கருத்து.

வேதங்கள் உலகும், பிரம்மமும் வேறுபட்டது என்று கூறுவதால், பிரம்மம் உலகம் ஆகாது என்று மறுப்பைக் குறிக்கும் பூர்வபட்சக் கருத்து இது. (வேதாந்திக்கு எதிர்ப்புக் கருத்து) வேதம், இவ்வுலகம் மாறுதல் அடையும், அறிவற்ற, துக்கத்தின் இருப்பிடம் என்கிறது. ஆனால், பிரம்மமோ, மாறுதல் அடையாத, அறிவே வடிவான ஆனந்தம் என்கிறது.

**2.1.5. 'அபிமானி- வ்யபதேசஸ்து விசேஷாநுகதிப்யாம்**

*பூமி, தீ முதலியவை 'கூறிற்று' என்னும்போது அவற்றின் உள்ளே இருக்கும் தேவதைகளையே குறிப்பதால், பிரம்மமும் உயிரும் வேறு என்னலாம்.*

இதுவும் பூர்வபட்சக் கருத்தைச் சொல்லும் சூத்திரம். சாந்தோக்யம் (6.3.2) 'தீ, நீர், பூமி இம்மூன்று தேவதைகளின் உள்ளே புகுந்து வருவேன்' என்று பிரம்மம் சொல்வதாகக் கூறுகிறது. 'தீ வாக்காகி முகத்தில் நுழைந்தது' என்றது ஐதரேய



உபநிஷது (2.4) இவைகளிலிருந்து பிரம்மமும், உலகமும் வேறு வேறு என்றாகிறது.

**2.1.6. 'த்ருச்யதே து'**

*(ஆனால்) காணப்படுகிறது.*

ஈ-யிலிருந்து வேறுபட்ட புழு முதலானவை உண்டாவதை உலக நியதியில் காண்கிறோம். அதேபோல பிரம்மத்திலிருந்து அதனினும் வேறுபட்டதாக உலகம் தோன்றலாம் என்பது இங்கே குறிப்பு.

**2.1.7. 'அஸத் இதி சேத் ந ப்ரதிஷேத மாத்ரவத்'**

*(மேலே சொன்ன சூத்திரத்திலிருந்து) பிரம்மத்தில் (உற்பத்திக்கு முன்னே) உலகம் இல்லை என்று முடிவு கொள்ளக்கூடாது. வித்தியாசமான பொருள்கள் தோன்ற முடியும் என்று சொல்ல மட்டும்தான் முதல் சூத்திரம்.*

முன் சூத்திரம், தோன்றிய பொருளுக்கும் அதைத் தோற்றுவிக்கும் பொருளுக்கும் ஒற்றுமை இருக்க வேண்டும் என்கிற கொள்கையை நிராகரிக்கிறது. அவற்றில் வேறுபாடுகள் இருந்தாலும், தோன்றும் பொருளும் தோற்றுவித்த பொருளும் ஒன்றே ஆக இருக்கத் தடையில்லை.

**2.1.8. 'அபீதௌ தத்வத் ப்ரஸங்காத் அஸமஞ்சஸம்'**

*உலகை ஒடுக்கத்தில் (ஊழிக் காலத்தில்) பிரம்மத்திற்கும் மாறுதல் அடையும் தன்மை வந்துவிடும். இது வேத வாக்கியங்களுக்குப் பொருந்தாது. ஆகையால், உலகமும் பிரம்மமும் வேறு என்றே சொல்ல வேண்டும்.*

இது ஒரு பூர்வ பட்ச சூத்திரம். ஊழிக் காலத்தில் உலகம் பிரம்மமாகிறது, குடம் உடைந்து மண் ஆவதுபோல. உலகத்தின் குறைபாடுகள் (அறிவின்மை, கர்ம வசப்படுதல், துக்கம் முதலியன) பிரம்மத்திற்கும் வந்துவிடும். அப்படி என்றால், பிரம்மம் அறிவு, ஆனந்தம் என்ற குணமுடையது என்ற முண்டகம் 6.1.9; சாந்தோக்யம் 6.1.3; சுவேதாசுவதரம் 4.6, 4.7ஆகிய உபநிஷதுகளின் கருத்துகள் பொய்யாகிவிடும். சங்கரர் இங்கே ஊழிக்காலம் என்பது

உலகின் வேறுபாடுகள் அழிந்து விடுவது என்கிறார். மேலும், இவ் வேறுபாடுகளும் தோற்றமே என்கிறார். ஆகையால், உலகமும் பிரம்மமும் வேறு என்று கொள்ளலாமே என்கிறார் வாதி.

**2.1.9. 'ந து த்ருஷ்டாந்த- பாவாத்'**

ஆனால், எடுத்துக்காட்டுகள் உள்ளன.

மேலே கூறிய கருத்துக்களுக்கு இங்கே விடை தரப்படுகிறது. ஒரே பொருள் மாறுதலான குணங்களுடன் வெவ்வேறு நிலை களில் இருப்பதை நாம் காண்கிறோம். மனித வாழ்வில் குழந்தைப் பருவம், இளமை, முதுமை போன்ற நிலைகளில் அறிவு, குணங்கள், தோற்றம் போன்றவை மாறுபட்டிருப்பதைக் காண்கிறோம். இளமை உடலோடு நிற்பது, அறிவு ஆத்மாவோடு, அதுபோல பூரண அறிவு ஆனந்தம் முதலியன பிரம்மத்திடமும் அறிவின்மை போன்றவை ஆத்மாவிடமும் நிற்கும்.

பிரளய காலத்தில் அவை பிரம்மத்தைப் போய்ச் சேராது.

**2.1.10. 'ஸ்வபக்ஷ- தோஷாச்ச'**

*குறையிருப்பதால்.*

(சாங்க்ய தத்துவத்தில்) குறையிருப்பதால், (உலகக் காரணம் பிரம்மமே)

சாங்க்யக் கொள்கைப்படி புருஷன் அருகுவதால் மூல-ப்ரக்ருதி உலகப் பொருள்களாக மாற்றமடைகிறது. அப்போது புருஷனிடம் ப்ரக்ருதியின் செயல்பாட்டுத் தன்மையும் ப்ரக்ருதியிடம் புருஷனின் அறிவுத் தன்மையும் ஏறிடுகின்றன. பூரணன் ஆன புருஷன் பேரில் ப்ரக்ருதியின் செயல்பாட்டுத் தன்மைகளும் குணமும் எவ்வாறு படியும்? அதேபோல, ப்ரக்ருதிக்கு புருஷனின் பூரண அறிவு தரிக்காது. இவைதான் சாங்க்யத்தில் உள்ள குறைகள். ஆகவே, வேதாந்தம் அறுதியிடுவது போன்று பிரம்மமே உலகக் காரணம் ஆகும் என்று கொள்ளலாம் என்பது குறிப்பு.

**2.1.11. 'தர்க்காப்ரதிஷ்டாநாத் அபி'**

*தர்க்கம் ஒருநிலையுள்ளதல்ல.*

வெறும் தர்க்கத்தினால் மட்டும் உண்மையை நிலைநாட்ட முடியாது. தர்க்கம் என்பது இங்கே லாஜிக் என்ற அர்த்தத்தில்



பிரயோகிக்கப்படுகிறது. நவீன தர்க்க சாஸ்திரத்தில், சில உண்மைகளை உண்மையென்றோ, பொய்யென்றோ நிலை நாட்டவே முடியாது' என்று கெடல் (Gedel) என்கிறவர் எண்ணு கிறார். ஒரு வாதத்திற்கு எதிரே மற்றொரு வாதம் சொல்லலாம். சாங்க்யமானது வாதத்தின் அடிப்படையிலேயே உண்மையைத் தேடுகிறது. வாதம் எப்படி வேண்டுமானாலும் செய்யலாம் (தற்காலத்துப் பட்டிமன்றங்கள் உதாரணம்). ஆனால், வேதத்திற்கு எதிரான வாதம் கூடாது; அது, அஸ்திவாரத்தையே குலைப்பது போலாகும்.

**2.1.12. அந்யதா அநுமேயம் இதி சேத், ஏவமபி அவிமோக்ஷ-ப்ரஸங்க:**

*வேறு வழியில் (உலகக் காரணம் மூலப் பொருள் என்ற சாங்க்ய கோட்பாட்டை நிரூபிக்கலாம்) என்றாலோ, மேலே சொன்னபடி அதற்கும் ஓர் எதிர்ப்பு வாதம் தோன்றும் (ஆதலால், சாங்க்யம் தவறு).*

எப்படி தர்க்கம் செய்தாலும், அதற்கு ஒரு மறுப்பு தெரிவிக்க லாம். அதற்கு முடிவே இல்லை.

வேதம் காட்டும் வழியில் இந்தக் குறைகள் இல்லை.

*4-வது அதிகரணம்- வேதம் ஆதரிக்காத மற்ற வழிகள் தவறு*

**2.1.13. ஏதேந சிஷ்டாபரிக்ரஹா அபி வ்யாக்யாதா:**

*இதேபோல வேதத்தால் ஆதரிக்கப்படாத மற்ற கோட்பாடு களும் தள்ளப்பட வேண்டியவையே.*

வாதங்களின் அடிப்படையில், பரமாணுக்களே உலகக் காரணம் என்னும் யோக வைசேடிக மதங்களும், மற்ற ஜைன, பௌத்த மதங்களும், வெறும் தர்க்கத்தையே நாடியிருப்பதால், அவையும் தள்ளப்பட வேண்டியவையே.

Released by Maran's Dog ,Toronto, Canada

*5-வது அதிகரணம்: பிரம்மம் கர்மங்களை அனுபவிப்ப தில்லை.*

**2.1.14. 'போக்த்ராபத்தே: அவிபாக: சேத்-ஸ்யாத் லோகவத்'**

*(சுகதுக்கங்களை) அனுபவிப்பது என்று சொன்னால், பிரம்மத்துக்கும், ஜீவனுக்கும் வேறுபாடு போய்விடும். ஆனால், உலகநியதி அவ்வாறு இல்லை.*

உலகில் நாம் பார்க்கிறோம். ஓர் அரசனின் ஆணை மக்களைத் தான் பாதிக்கிறது, அரசனை அல்ல. அதுபோல், பிரம்மத்துக்கும், சுக துக்கங்கள் இல்லை. சாங்க்யர் எவ்வாறு நம் உயிர் அல்லது ஆத்மா உடலின் இன்ப துன்பங்களை அனுபவிக்கிறதோ, அது போல் பிரம்மம் ஆத்மாவை தன் உடலாக ஏற்பதால், பிரம்மமும் சுகதுக்கங்களை அனுபவிக்கிறது என்னலாமே என்றனர். சாந்தோக்யம் (8.12.1) உடல் இருக்கும் வரை இன்ப துன்பங்களி லிருந்து விடுபட முடியாது. உடலற்றவன் ஆனபின்பே, இவனை இன்ப துன்பங்கள் 'தொடுவதில்லை' என்கிறது. இதன்படி, ஜீவனை பிரம்மத்தின் உடலாகக் கொண்டு, பிரம்மத்தையும் இன்ப துன்பங்கள் தொடும் என்று சொன்னால் தவறு. இந்த உபநிஷச் சொற்றொடர், உயிர் தன் கர்மத்தால் ஏற்றுக்கொண்ட உடலுக்கே பொருந்தும். பிரம்மம் உயிரைத் தன் விருப்பத்தால் ஏற்றுக் கொள்கிறது. ஆகையால், கர்மங்கள் பிரம்மத்தைச் சேராது எனப் பொருள்தரும்.

*6-ம் அதிகரணம்: காரணமும் காரியமும் பிரம்மமே.*

இது முக்கியமான அதிகரணம். ஆறு சூத்திரங்கள் கொண்டது. பிரபஞ்ச உற்பத்தியை குயவன் மண்ணெடுத்துப் பானை செய்வ தற்கு ஒப்பாகச் சொல்லலாம். இதில் மண்ணும் (காரணமும்) பானையும் (காரியமும்) பிரம்மமே. சங்கரர் திறமையுடன் பிரபஞ்சம் மாயையே என்று இங்கே வாதாடுகிறார்.

**2.1.15. ததநந்யத்வம் ஆரம்பண-சப்தாதிப்ய:**

*அவற்றின் வேறுபாடின்மையானது, ஆரம்பணம் முதலிய குறியீட்டுச் சொற்களால் விளங்கும்.*



மண்ணும் குடமும் ஒன்றே; ஆனால், மண்ணில் நீர் ஏந்தி வா என்று சொல்ல முடியாது. குடம் என்று சொல்லினால் ஒரு வடிவம் இட்டு நீர் கொண்டு வருவது சாத்தியமானது. வேதம் காரியப் பொருளின் பெயரை ஆரம்பணம்-குறியீடு என்கிறது. குடம் என்ற சொல் குறியீட்டுச் சொல் மட்டுமே; அடிப்படையில் குடம், மண் மட்டுமே.

**2.1.16. பாவே ச உபலப்தே:**

*காரணங்கள் காரியத்தை நினைவுபடுத்துவதால், (காரிய காரணங்கள் ஒன்றே)*

குடத்தைப் பார்க்கும்போது, மண் நினைவு வருகிறது. குடம் மண்ணே என்று நினைக்கிறோம்.

**2.1.17. ஸத்வாத் ச அபரஸ்ய**

*வேறுபட்ட காரியப் பொருள், காரணப் பொருளாகக் காண்கையாலும் (காரண கார்யம் ஒன்றே)*

நாம் உலகில் பார்க்கிறோம், உணர்கிறோம். இந்தக் குடம் நேற்று மண்ணாக இருந்தது என்று. சாந்தோக்யம் (6.2.1) கார்ய மான இவ்வுலகம், முதலில் காரணமான பிரம்மமாகவே இருந்தது என்கிறது. Cause and effect இரண்டும் ஒன்றே; அவை அடிக்கடி அடையாளம் மாறும் என்கிற கருத்து, இயற்பியலில் பருப்பொருள் (Matter) சக்தி (energy) இரண்டும் மாறும் என்பது போல.

*இரண்டாம் அத்தியாயத்தின் முதல் பாதத்தில் ஆரம்பணாதிகரணத்தில் வரும் பதினெட்டாவது சூத்திரம் சற்று சிக்கலானது. அதை விளக்க முயற்சிப்போம்.*

**2 .1.18. "அஸத்- வ்யபதேசாத் ந இதி சேத் ந, தர்மாந்தரேண வாக்யசேஷாத் யுக்தே: சப்தாந்தராத் ச.**

*உலகம் முதலில் இல்லாமலேயே இருந்தது என்பதால், காரியம் காரணத்தில் உள்ளது என்று சொல்வது தவறல்ல, 'இல்லாமலே' என்ற சொல் வேறு ஒரு நிலையைக் குறிக் கிறது. வேதவாக்கியத்தின் முடிவிலிருந்தும் யுக்தியி*

*விருந்தும் மற்ற வேத வாக்கியங்களிலிருந்தும் இது விளங்கும்.*

தைத்திரீய ஆனந்தவல்லி 7.1, சாந்தோக்யம் 3.19.1, யஜுர் அஷ்டகம் 2.2.7 போன்றவை 'இவ்வுலகம் முதலில் இல்லையாக இருந்தது, 'முதலில் இவ்வுலகம் இல்லை' என்று சொல்கின்றன.

இதற்குப் பொருள் 'இவ்வுலகம் நேற்று இல்லை, இன்று உண்டு' என்பது மட்டுமே. முயல்கொம்பு என்பது போல என்றுமே இல்லாதது அல்ல. இவ்வுலகம் உற்பத்திக்கு முன் உலகமாக இல்லை; அவ்வளவே. 'அஸத்' என்ற வார்த்தைக்கு அவ்வளவே பொருள் கொள்ள வேண்டும். 'ஒன்றும் தேவும் உலகும் உயிரும் மற்றும் யாதுமில்லா அன்று' என்று நம்மாழ்வார் கூறுவது இந்த உற்பத்திக்கு முற்பட்ட நிலையையே.

1. **வேதவாக்கிய முடிவு.** ('அது இல்லாததாகவே இருந்து கொண்டு') 'நான் பலவாக ஆகக்கடவேன்' என்று தன்னையே பணித்துக் கொள்வதைச் சொல்லும் யஜுஸ் அஷ்டகம்.

2. **யுக்தி.** உள்ள ஒரு பொருளுக்கே உண்டு- இல்லை என்ற வர்ணனை பொருந்தும். 'இல்லை என்பதுவே தனிப்பொருள் அல்ல.

'உளன் என இலன் என இவைகுணம் உடைமையில்.

உளன் இரு தகைமையொடு ஒழிவிலன் பரந்தே', என்கிறது திருவாய்மொழி.

3. **வேறு வேத வாக்கியங்கள்.** சாந்தோக்யம், 'இல்லாத பொருள் எப்படி உண்டாக முடியும்?'' என்கிறது. 'இவ்வுலகம் உள்ளதாகவே முதலில் இருந்தது' என்கிறது. பிருகதாரண்யகம். 'இவ்வுலகம் அப்போது பெயர், உரு, இல்லாததாக இருந்தது. பிறகு பெயர் உருவாயிற்று' 'அஸத்' என்பதற்கு, பெயர், உரு இல்லாமை என்று பொருள் கொள்ள வேண்டும். இவை அனைத்துமே உற்பத்திக் கணத்துக்கு முற்பட்டதை யோசித்துப் பார்க்கும் முயற்சிகள்தாம்.

நவீன இயற்பியலும் அதைத்தான் செய்கிறது.

**2.1.19. ''படவத் ச''**

*நூல் ஆடையாவது ஆடை நூலே ஆனாலும், உடுத்துவது என்ற செயலினால், உடை என்று பெயர் பெற்றது.*



**2.1.20. ''யதா ச ப்ராணாதி:''**

வாயுவானது பிராணன் முதலான பெயர் மாற்றங்களை அடைவது போல.

உண்மையில் உள்ளது வாயுவே. வெவ்வேறு செயல்பாடு களுக்கு ஏற்ப வாயுவானது, பிராணன் முதலான பெயர்களை ஏற்கிறது.

அதிகரணம்-7
**பிரம்மமும் ஜீவனும் வேறு**

**2.1.21. இதர- வ்யபதேசாத் ஹிதாகரணாதி- தோஷ- ப்ரஸக்தி:**

*(பிரம்மத்தை) ஜீவனாகக் கூறினால், தனக்குத்தானே நல்லது கெட்டது செய்து கொள்கிறது என்கிற குறைகள் வரும்.*

இது ஒரு பூர்வபட்ச சூத்திரம். இதன் எதிர்வாதத்தைப் புரிந்து கொள்ள, பிரம்மத்தை நிமித்த காரணம் (குயவன்) என்று வேதாந்திகள் சொல்வதை நினைவுகொள்ள வேண்டும். எப்படி (குயவன்) பிரம்மன் தெரிந்தே குறைகள் உள்ள உலகைப் படைக்கிறான்?

'நீ அதுவாகிறாய்', சாந்தோக்யம் 3.2.7

'இவ்வாத்மா பிரம்மமே', பிருகதாரண்யகம் 6.4.5

இவை ஜீவ பிரம்ம ஐக்கியத்தைக் கூறுகின்றன. பிரம்மம் எல்லாம் அறிந்தது, அது எவ்வாறு குறையுள்ள உலகைப் படைக்கும்? ஆகையால், பிரம்மம் உலகைப் படைக்கவில்லை என்பது கருத்து.

**2.1.22. அதிகம் து பேதநிர்தேசாத்**

*வேதம் வேறாகக் கூறியதால் (பிரம்மம் ஜீவனிலிருந்து) வேறுபட்டதே.*

மேலே கூறியதற்கு மறுப்பு இது. சுவேதாசுவதரம், பிருகாதரண்யகம் போன்ற உபநிஷதுகள் பிரம்மமும் ஜீவனும் வேறு என்று கூறுகின்றன. இங்கே 'தத்வமஸி' என்பதற்கு ஜீவனை உடலாகவும், பிரம்மத்தை அதன் உயிராகவும் கொள்கிறார் ராமாநுஜர்.

**2.1.23. அச்மாதிவத் ச தத் அநுபபத்தி:**

*கல் முதலானவை போல் ஜீவனும் பிரம்மமும் ஒன்றல்ல. கல், கட்டை இவைகள் குறையுள்ளவை.*

அவற்றுக்கு அறிவு கிடையாது. பிரம்மம் பூரண அறிவுடையது. ஜீவனுக்கு அளவான அறிவுதான் உள்ளது. ஆகையால் அதுவும் பிரம்மமும் ஒன்றல்ல.

**அதிகரணம்-8**

*பிரம்மத்திற்கு பிரபஞ்சத்தை உண்டாக்க வேறு பொருள் தேவையில்லை.*

**2.1.24. உபஸம்ஹார- தர்சநாத் ந இதிசேத் ந, க்ஷீரவத் ஹி**

*உலகை நியதிப்படி உதவிப்பொருள் தேவை என்றால், அது தவறு. பால், தயிராவதற்கு உதவிப் பொருள் ஒன்றுமில்லை.*

பால், தயிராக மாறுவதற்கு உபகரணங்கள் தேவையில்லை என்பது பாதராயணர் காலத்து எளிய உதாரணம். அப்போது பாக்டீரியா பற்றி அவருக்குத் தெரிந்திருந்தால், வேறு உதாரணம் சொல்லியிருப்பார்.

இங்கே உதவிப் பொருள் என்பது, குயவன் பானை செய்ய உபயோகிக்கும் மண், நீர், சக்கரம் போன்ற உபகரணங்கள் ஆகும். சாதாரணமாக ஒரு பொருள் ஏற்பட சஹகாரிகாரணம் (உதவிப் பொருள்) தேவை. ஆனால் பிரம்மத்திற்கு, உலகைப் படைக்க உதவிப் பொருள் தேவையில்லை. பால், தயிராவதுபோல் அது.

**2.1.25. தேவாதிவத் அபி லோகே.**

*அவரவர் உலகில், தேவர்களே,உதவியல்லாமல் படைக்கிறார்கள்.*

வேதம், தேவர்கள் தாம் விரும்பின பொருள்களை நினைத்த மாத்திரத்தில், உதவியின்றிப் படைக்கிறார்கள் என்கிறது. பிரம்மம், தேவர்களுக்கு தேவன். பிரம்மம் படைக்கும் போது உதவிப் பொருளே தேவையில்லை.



**அதிகரணம் 9**

*அங்கங்களற்ற பிரம்மமே பிரபஞ்சத்துக்குக் காரணப் பொருள்.*

**2.1.26. க்ருத்ஸ்ந- ப்ரஸக்தி: நிரவயவத்வ- சப்தகோஅபி வா''**

பிரம்மம் (அங்கங்கள் அற்றதால்) முழுவதுமே உலகாக ஆக வேண்டும். இதை ஏற்காமல் தவிர்க்க, பிரம்மம் அங்கங்கள் உள்ளது என்றால், வேதம் பொய்யாகிவிடும். இது, சற்று நிதானமாகப் புரிந்துகொள்ள வேண்டிய கருத்து. ஒரு பொருள் அங்கங்களற்றது என்று சொன்னால், அது முழுமையானது, Not made of parts என்றால், அது மாறும்போது முழுசாக இன்னொரு பொருளாக மாற வேண்டும். மீதி இருக்க முடியாது. ஏனெனில், அது அங்கங்கள் இல்லாதது. காரணப் பொருளான பிரம்மம் உலகாக, காரியப்பொருளாக மாறிய பின் அது பிரம்மவடிவில் இருக்க முடியாது. ஆனால்,பிரம்மம் பிரபஞ்ச தோற்றத்திற்குப் பின்பும் உண்டு. ஆகையால் பிரம்மத்திற்கு அங்கங்கள் உண்டு என்று சொன்னால், வேதத்திற்கு முரண்பாடாகும். இது ஒரு பூர்வ பட்ச சூத்திரம்.

**2.1.27. ச்ருதே- ஸ்-து சப்த-மூலத்வாத்**

*வேதம் கூறுவதால் அதைக் கொண்டே அறியலாம்.*

மாறுதல் இல்லாத பிரம்மமே பிரபஞ்ச காரணப் பொருள் என்பதால், மாறுதல் இல்லாத பிரம்மம் மாறுதல் கொண்ட உலகைப் படைக்க வேண்டும் என்று சொல்வது ஒரு முரண்பாடு. (Contradiction) பிரம்மத்திற்கு தான்மாறாமல் உலகைப் படைக்கும் விசித்திர சக்தி உண்டு என்று வேதம் சொல்வதை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**2.1.28. ஆத்மநி ச ஏவம் விசித்ரா: ச ஹி**

*ஜீவனுக்கும் இந்த விசித்திர சக்தி உள்ளது.*

ஜடப்பொருள் குறைகள் உள்ளது. ஜீவனுக்கும் அப்படியே. நெருப்புக்கு சூடு போல, தண்ணீருக்குக் குளுமைபோல, பிரம்மத் துக்குத் தான் மாறாமல் இருந்து கொண்டு, மாறும் பிரபஞ்சத்தைப்

படைக்கும் குணம் உள்ளது எனக் கொள்ளலாம். இந்த விசித்ர சக்தியை பிரபஞ்ச குணமாகக் கொள்ளலாம்.

**2.1.29. ஸ்வ-பக்ஷ-தோஷாத் ச**

*உங்கள் பக்கம் அதே குறையிருப்பதால் (பிரம்மம் காரணப் பொருளே)*

''உங்கள்'' என்பது பிரபஞ்சகாரணம் மூலப்பொருள் என்னும் சாங்கியர்களைக் குறிக்கிறது. மூலப்பொருள் மாறும் போது, பல பொருள்களாக ஆக முடியாது. காரணம், அது அங்கங்கள் இல்லாதது. முன்சொன்ன அதே காரணத்தால், வேதம் சொன்னதை அப்படியே ஏற்பது பொருத்தமாகும்.

**2.1.30. ஸர்வோபேதா ச தத்- தர்சநாத்**

*பிரம்மம் எல்லா சக்தியையும் உடையது என்று வேதம் கூறுகிறது.*

சுவேதாசுவதரம் 'இந்த பரமாத்மாவுக்கு விதவிதமான சக்தியும், ஞானமும், ஆற்றலும் உண்டு', என்கிறது. அதனால் மாறுதலற்ற பிரம்மம், மாறும் பிரபஞ்சத்தின் காரணமாவதற்குத் தடையில்லை.

**2.1.31. விகரணத்வாத் ந இதி சேத் தத் உக்தம்**

*(பிரம்மத்திற்கு) சரீரம், இந்திரியங்கள் இல்லை; ஆகையால் நிமித்த காரணம் (குயவன்) ஆகமுடியாது என்றால், இதற்கு முன்னமே விடை சொல்லி ஆகிவிட்டது.*

*(2.1.27,28 பார்க்க)* விசித்திர சக்தியால், சரீர இந்திரியங்கள் இல்லாத பிரம்மம் உலகின் நிமித்த காரணம் ஆகத் தடையில்லை.

இந்தப் பாதத்தை முடித்துவிட்டு. இதன் அடிப்படைக் கருத்துக் களைப் பொழிப்புரையாகத் தந்துவிட்டு, இரண்டாம் பாதத்திற்குச் செல்வோம். அதுவரை, 'அஸத்' மட்டுமே இருந்தது என்பதையும் முழுமையான பிரம்மம், வேறு ஒன்றின் உதவியின்றி, பிரபஞ்சத் தைப் படைத்தபின், முழுமையாகவே இருந்தது என்பதையும் சிந்தியுங்கள்.



**2.1.32. ந ப்ரயோஜனவத்வாத்**

*எல்லா பயன்களையும் முன்பே அடைந்திருக்கும் பிரம்மம் பிரபஞ்ச காரணம் ஆகாது, பிரபஞ்ச உற்பத்திக்குப் பயன் உண்டு என்றால்.*

இது ஒரு பூர்வ பக்ஷக் கருத்தைச் சொல்லும் சூத்திரம்.

பிரம்மத்திற்கு எல்லாம் கிடைத்துவிட்டது. உலகைப் படைப்ப தில் என்ன இருக்கிறது? ஆகையால் படைப்பிற்கு பிரம்மம் காரணமாகாது.

**2.1.33. லோகவத் து லீலா கைவல்யம்**

*உலகில் இருப்பவர்களுக்கு விளையாட்டுப் போல (பிரம்மத்திற்கு பிரபஞ்ச உற்பத்தி)*

எல்லாம் பெற்ற அரசன் பந்து விளையாடுவது போல, பிரபஞ் சத்திற்கு உலக உற்பத்தி தேவையில்லாத ஒன்று. இங்கு லீலை என்ற சொல்லுக்கு அப்போது மட்டும் ஏற்படும் சின்னச் சந்தோஷம் என்பது பொருள். விளையாட்டு என்பதே அதுதானே? தாற்காலிக சந்தோஷம். சங்கரர் இதைச் சாதாரண அனுபவத்தால் ஏற்பட்ட சூத்திரம் என்கிறார்.

**2.1.34. வைஷம்ய நைர்க்ருண்யே ந, ஸாபேக்ஷத்வாத் ததா ஹி தர்சயதி**

*பாரபட்சமும் கருணை இன்மையும் பிரம்மத்திற்கு இல்லை, எதிர்பார்த்து இருப்பதால்.*

இது முக்கியமான சூத்திரம். படைப்பு, பிரம்மத்தின் விளை யாட்டு என்று சொன்னால், அதில் ஏற்றத் தாழ்வுகள், பணக்காரன்- ஏழை, சுகம்-துக்கம், ஏன்? இது என்ன படைப்பு? பிரம்மம் நல்ல குணங்களின் இருப்பிடம் என்றால், நம் எல்லா செயல்பாடு களுக்கும் பிரம்மம் முழுப் பொறுப்பு என்றால், அதற்கு பாரபட் சமும் கருணையின்மையும் குணங்களாகி விடும். இது தவறு என்கிறது இந்த சூத்திரம். இந்த பரமாத்மா ஜீவர்களைப் படைக்கும்போது அவர்கள் ஏற்கெனவே செய்திருக்கும் பாவ புண்யங்களைப் பார்த்து அதற்கேற்ப படைக்கிறது. பிரம்மம் நம் முயற்சியை எதிர்பார்த்தே நம்மை செயல்படுத்துகிறது. முதல்

முயற்சி அல்லது பிரதம பிரயத்தனம், நாம் நல்லதோ தீயதோ செய்ய எடுத்து வைக்கும் முதல் முயற்சியானது நம்மை அந்த முதல் அடியை எடுக்க வைக்கின்றது. இதற்கு நமக்கு சுதந்திரம் இருக்கிறது (Free Will) முதல் அடிக்கு ஏற்ப இரண்டாவது மூன்றாவது அடிகளை பிரம்மத்தின் அங்கீகாரத்துடன் எடுத்து வைக்கிறோம்.

**முதல் அடிக்கு நாம்தான் பொறுப்பு, பிரம்மமில்லை.**

பிருகதாரண்யக உபநிஷது (6.45) இந்தக் கருத்தைச் சொல்கிறது. ''நற்கருமம் செய்பவன் நல்ல சரீரத்தை உடையவனாகிறான். தீய கருமம் செய்பவன் தீய சரீரத்தை அடைகிறான். கர்மங்களே ஏற்றத் தாழ்வுக்குக் காரணம்.''

இந்து நம்பிக்கைகளின் அடிப்படைக் கருத்துக்களில் ஒன்று இது.

**2.1.35. ந கர்மாவிபாகாதிதி சேந்ந அநாநாதித்வா துபபத்யதே சாப்யுபலப்யதே**

*(முதலில்) கர்மம் இல்லையே என்றால் அது சரியல்ல, ஜீவன் முதல் இல்லாதது என்கிறது வேதம்.*

நம் எல்லோருக்கும் இந்த சந்தேகம் வரும். முதல் பிறவிக்கு எந்தக் கருமம் வந்தது? What is our original sin? உற்பத்திக்கு முன் ஜீவனுக்கு என்ன கருமங்கள்? முதல் பிறவிக்கு அது ஏது? இதற்கு விடை, ஜீவன் எப்போதும் உள்ளது, அதற்கு ஆரம்பமில்லை; அநாதி, ஆகையால் கர்மங்களும் அநாதி.

ஜீவன் அநாதியில்லையென்றால் பிரளய காலத்தில் ஜீவனுக்கு மிச்சமிருக்கும் கர்மங்கள் அழிந்துவிடும், படைப்பு காலத்தில் முதற் பிறவியில் ஜீவனுக்கு இல்லாத கர்மம் பயனளிக்கும் என்றாகும். கடோபனிஷது, (1.2.18) ஜீவன் பிறப்பதுமில்லை; அழிவது மில்லை என்கிறது. வேதங்களின்படி காலம் வட்டமானது, முதலும், முடிவும் அற்றது. படைப்பது அனைத்தும் திரும்பத் திரும்ப வருகின்றன. காலம் ஆரம்பமற்றது. முடிவற்றது.

சுருக்கமாக, நமக்கு ஏற்படும் நன்மை தீமைகளுக்கு கடவுளைப் பொறுப்பாக்க வேண்டாம் என்கிறது இந்த சூத்திரம்.

வாழ்க்கையில் முயற்சி, சாதிக்கும் ஆர்வம் போன்றவை எல்லாமே கடவுள் செயல் என்றால், சோம்பேறித்தனம் வந்துவிடும்.

Free will, determinism இரண்டிற்கும் உள்ள விவாதங்களை மேலைநாட்டு அறிஞர்களும் நிறைய எழுதியுள்ளார்கள். Is the



universe Deterministic என்ற Stephen Hawking கட்டுரை இது பற்றிய நவீன இயற்பியல் காஸ்மாலஜி தத்துவங்களை அருமையாக விவரிக்கிறது. Black Holes and Baby Universes என்ற புத்தகத்தில் உள்ளது. அந்தக் கட்டுரையைப் படித்துப் பார்த்தால் பிரம்ம சூத்திரம் போலவே இருக்கும். பிரம்ம சூத்திரம் கடவுள் மேல் பாரத்தைப் போட்டு உனக்குப் பொறுப்பேயில்லை எனச் சும்மா இருக்காதே என்கிறது.

**2.1.36. ஸர்வதர்மோபபத்தேச்ச**

*எல்லாத் தன்மைகளும் பிரம்மத்தில் பொருந்தியிருப்பதால்.*

மூலப்பொருள், அணுக்கூட்டம், பிரபஞ்ச காரணம் என்னும் போது பல தன்மைகள் அல்லது வேதச் சொற்கள் பொருந்தவில்லை. பிரம்மமே காரணமென்றால்தான் பொருந்துகிறன. பிரம்மம் ஒன்றுதான் இவ்வனைத்து குணங்களையும் ஏற்க முடியும்.

36 சூத்திரங்கள் கொண்ட இந்த முதல்பாதத்தைக் கடந்து விட்டோம்.

இதில் சொன்ன அடிப்படைக் கருத்துக்களை ஒருமித்துப் பார்த்துவிடலாம்.

**சாங்க்யம் ஒரு மயக்கம்.**

**யோக தத்துவமும் தவறு.**

**உலகமும் பிரம்மமும் வேறுபட்டாலும் உலகக் காரணம் பிரம்மமே.**

**வேதவார்த்தைகளே முக்கியம்.**

**பிரம்மத்திற்கு கர்மம் கிடையாது.**

**காரணமும் காரியமும் ஒன்றே (மண், குடம் உதாரணம்), அது பிரம்மமே.**

**பிரம்மமும் ஜீவனும் வேறு,**

**ஒன்றேயான பிரம்மமே உலகின் காரணப் பொருள். அதற்கு விசித்திர சக்தி உண்டு.**

**பிரபஞ்சப் படைப்பு, பிரம்மத்தின் விளையாட்டு (நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா அலகிலா விளையாட்டு-கம்பர்)**

**நமக்கு நேர்வதற்கு நம் கர்மங்களே பொறுப்பு. பிரம்மமல்ல.**

*முதல் பாதத்தில் வேத உபநிஷதுகளைக் கொண்டு பிற கொள்கைகளை எதிர்த்த ஆசிரியர், 42 சூத்திரங்கள் கொண்ட இந்த இரண்டாம் பாதத்தில் அவற்றைத் தர்க்கரீதியாக எதிர்க்கிறார்.*

இதன் முதல் அதிகரணத்தில், 'பிரபஞ்சத் தோற்றத்துக்கு உயிரற்ற அறிவற்ற மூலப்பொருள் மட்டுமே காரணம்' என்ற சாங்கியரின் கொள்கையை மறுக்கிறார். சாங்கியரின் அடிப்படைக் கொள்கையை முதல் அத்தியாயம் நான்காம் பாதத்தைப் பேசுகையில் ஏற்கெனவே விவரித்திருக்கிறோம். சிரமம் பாராமல் அதை இன்னொரு முறை படித்துவிட்டால் நல்லது, இது புரிவது எளிதாயிருக்கும்.

*பொருத்தமற்ற, அறிவற்ற, உயிரற்ற, ஜடப்பொருள் உலகை மாகாது.*

**2.2.1. ஈசநாநுபபத்தேச்ச நாநுமாநம், ப்ரவ்ருத்தேச்ச**

*(அறிவுள்ள ஒன்றின் உதவியின்றி) உலகை உண்டாக்குவது என்பது பொருந்தாதது. உயிரற்ற, அறிவற்ற பொருட்களானவை உயிருள்ள, அறிவுள்ள பொருட்களின் தூண்டுதலாலேயே ஆவதால், அநுமானத்தால் மட்டுமே அறியப்படும் மூலப்பொருள் உலக காரணமாகாது.*

மரப்பலகை தானாகவே நாற்காலியாவதில்லை. அதனை ஆக்க உயிருள்ள, அறிவுள்ள ஒரு தச்சன் வேண்டும். அவ்வாறே மூலப் பிரகிருதியான ஜடப்பொருள், தானாகவே உலகமாகாது. மூலப் பொருள் கொண்டு ஏற்பட்டது ஜடப்பொருள். அது, உயிரற்றது. அதனால், மூலப்பொருளும் உயிரற்றது என அநுமானிப்பது தவறு. (சாங்கியர் உயிரற்ற ஜடப்பொருள், உயிரற்ற மூலப் பொருளில் இருந்து வந்தது என்று அனுமானித்தார்கள்.)

இப்போது சூத்திரத்தைப் படித்துப் பாருங்கள்.

**2.2.2. பயோம்புவத் சேத் தத்ராபி.**

*பாலும் நீரும் போல் எனில், அவ்விடத்தும் அறிவுப் பொருளாலேயே மாற்றம் ஏற்படுகிறது. பால் தயிராவதும், மழைநீர் இளநீராவதும் தானே ஏற்படும் மாறுதல்கள் அல்ல.*



*அத்தகைய மாறுதலுக்கும் உட்காரணம் மிகப்பெரிய மூல அறிவு என்கிறது பிருகதாரண்யக உபநிஷது (5.7.4). 'நீர் முதலானவற்றில் நின்று அவற்றைப் பரிணமிக்கச் செய்பவன் பரமாத்மாவே.''*

சாங்கியர் கொள்கைப்படி, உலகம் தானாகவே உண்டானது. உலகின் இயற்கை உண்டாவது. இந்தக் கருத்தினை இந்த சூத்திரங்களைக் கொண்டுதான் சங்கர பகவத்பாதர் மறுத்திருக்கிறார்.

பொருள்கள் உண்டாவது ஏதாவது ஒரு காரணத்துக்காவே. இந்த வாதத்தை Teleological argument என்பார்கள். Design presupposes a designer. முதலுக்கும் முடிவுக்கும் இடையே எப்போதும் ஓர் இணக்கம், காரணம், இருப்பதைக் காண்கிறோம். அவ்வாறே, உலக உற்பத்திக்கு ஒரு பெரும் அறிவு தேவை. இம்மாநுவெல் கான்ட் (Immanuel Kant) உலகப் படைப்பிற்கு ஒரு ஆர்க்கிடெக்ட் தேவை என்கிறார். கட்டடப் பணியாளி, படைப்பாளி ஆவதில்லை என்கிறார். பொருட்கள் ஏற்பட பொருளுக்குப் புறம்பான, வெளிப்பட்டதான ஓர் அறிவு தேவை. ஒவ்வொரு காரணத்தையும் பின்னோக்கி இழுத்துச் சென்றால், நாம் முதல் காரணத்தைச் சென்றடைவோம். அது ஜடப் பொருளிலிருந்து வேறுபட்டதாகவே இருக்கும்.

இதனைக் கொண்டே, கடவுள் இருக்கிறார் என்று கான்ட் கொள்ளவில்லை. ஆயினும் இது சாங்கியர் கருத்துக்கு வலுவான எதிர்ப்பாயமைகிறது. பிரகிருதியானது பரிணமிக்க ஓர் அறிவு தேவை என்பது தகர்க்கவொண்ணாத வாதம் ஆகும்.

**2.2.3. வ்யதிரேகாநவாஸ்திதேச் சாநபேக்ஷத்வாத்**

*எதிர்பாராமையால் எப்போதும் உண்டாவது தேவைப்படும் என்பதால் (மூலப் பொருள் உலகக் காரணமாக முடியாது)*

பிரபஞ்சம் உண்டாக ஒரு பெரும் அறிவு தேவையில்லை என்றால், அது தன்பாட்டுக்கு உற்பத்தியாகிக் கொண்டேயிருக்க வேண்டும். ஆரம்பம், முடிவு ஏதும் தேவையில்லை. ஏதும் கிடையாது என்றாகிவிடும். இது ஏற்கப் படாதது.

ஃபிரெட் ஹாய்ல் (Fred Hoyle) போன்ற இயற்பியலாளர்கள், முதலில் இருந்த பிரபஞ்சம் மாறவே மாறாது, எப்போதுமே

அப்படித்தான் இருந்தது, என்ற (Steady State Universe) கருத்துக் கொண்டிருந்தார்கள். இதன் பின்னர், காஸ்மாலஜி-யின் Red Shift, Hubble's Law போன்ற கண்டுபிடிப்புகளால், அந்த சித்தாந்தம் சரியல்ல என நிரூபிக்கப்பட்டது. நவீன இயற்பியலும் பிரபஞ்சத் தின் ஆரம்பத்தைக் குறிப்பிடுகிறது.

**2.2.4. அந்யத்ராபாவாச்ச ந த்ருணாதிவத்**

*புல், பாலாவதுபோல் என்றால் அது தவறு. காளையிடம் புல் பாலாவதில்லையோ?*

புல், பசுவால் தின்னப்பட்டு, தானாகவேயா பாலாகிறது? அல்லவே? அவ்வாறென்றால், நாமெல்லாருக்குமே பால் சுரக்க வேண்டுமே?

**2.2.5. புருஷாச்மவதிதி சேத் ததாபி**

புருஷனின் முன்னிலையில் செயல்படலாம் என்றால், அது தவறு, வேற்றுமை உள்ளதாலே.

சாங்கியத்தில் புருஷன் என்ற அழிவில்லாத, மாறுபடாத, தத்துவம் உண்டு. அதன் முன்னிலையில், அல்லது அருகில் தான் மூலப் பிரகிருதி உலகமாக மாறுகிறது. இதற்கு இரண்டு உதாரணங்கள் காட்டப் படுகின்றன. ஒன்று, கண் உள்ள முடவன் (புருஷன்) உதவியுடன், கண்ணில்லாதவன் (மூலப் பிரகிருதி) நடப்பது, மற்றது. காந்தத்தின் (புருஷன்) அருகில் இரும்புத் துண்டுகள் (மூலப் பிரகிருதி) நகர்வது. புருஷனின் சாந்நித்யம் (Presence) போதும் என்பது சாங்கியர் வாதம்.

இந்தக் கருத்து தவறு என்கிறார் உரையாசிரியர். நொண்டிக்கும் குருடனுக்கும் இடையே அறிவுப் பரிமாற்றம் உண்டானால்தான் அவர்கள் இடம்பெயர முடியும். இருவருக்கும் பொதுவாக வாய்வார்த்தை சார்ந்த அறிவு உண்டு. அவ்வாறே, காந்தத்துக்கும் இரும்புத்துண்டுக்கும் இடையே உள்ளது கவர்ச்சி. சாங்கியப்படி, புருஷன் செயல் பாடற்றவன். ஆகவே இந்த உதாரணங்கள் பொருந்தா.

**2.2.6. அங்கித்வாநுபபத்தேச்ச**

*பகுதியான ஒன்றின் ஏற்றத்தாழ்வினால் (உற்பத்தி ஆரம்ப மாகிறது) என்பது பொருந்தாது.*



சாங்கியர் சாத்விக, ராஜஸ, தாமஸ குணங்களின் விகிதம் சரிசமமாக இருக்கையில் ஏதும் நிகழாது; சற்றே இக்கலவை மாறும்போது உலக உற்பத்தி தொடங்குகிறது, என்கிறார்கள். ஆனால் எதனால் அந்த சரிசமத்துவம் கலைக்கப்படுகிறது என்று சாங்கியர் விளக்கு வதில்லை. ஆகவே, இது பொருந்தாது.

வேதாந்தக் கொள்கைப்படி, உலக உற்பத்திக்கு ஞானசக்தி யுடைய சர்வேசுவரன் எனப்படும் பிரம்மம் தேவை.

**2.2.7. அந்யதாநுமிதௌ ச ஜ்ஞ- சக்தி- வியோகாத்**

*வேறுவிதமாக (மூலப்பொருள் உலகக் காரணம் என்று) ஊகித்தாலும், அது தவறே.- அறிவும் சக்தியும் (அதற்கு) இல்லாமையால்.*

மூலப்பொருளுக்கு ஏதோ ஒரு சமயத்தில் மட்டும் குணங்களின் விகிதத்தை மாற்றிவிடும் அறிவும் சக்தியும் ஏற்பட்டது என்று கூறினால், அது தவறு. மூலப்பொருள், அறிவும் தன்னிச்சையாக செயல்படும் திறனும் இல்லாதது.

**2.2.8. அப்யுபக மேப்/ யர்த்தா/ பாவாத்**

*(மூலப்பொருள் உகை உற்பத்திக்குக் காரணம் என்று) ஒப்புக் கொண்டாலும் அதனால் எந்தப் பயனும் இல்லை.*

உலகக்காரணம் மூலப்பொருள்தான் என்றே கொண்டாலும், சாங்கியர் கொள்கிறபடி மூலப்பொருள், புருஷனின் (ஜீவாத்மா வின்) அநுபவிப்பது, தளையிலிருந்து விடுபடுவது என்ற இரண்டு தேவைகளுக்காக புருஷனின் பூரண அறிவு மாறுதல் இல்லாதது என்றால், அந்த மூலப்பொருள் அநுபவம் முடிவின்றித் தொடர்ந்து கொண்டே இருக்கும். காரணம், புருஷனும் மூலப் பொருளும் எப்போதுமே அருகருகாகவே உள்ளன. ஆகவே, 'விடுதலை அடைதல்' எனும் தேவை ஏற்படச் சாத்தியமில்லை. இவ்வித மானால், மூலப்பொருள் பயனற்றதாகிறது.

**2.2.9. விப்ரதிஷேதாச்ச அஸமஞ்ஜஸம்**

*முரண்பாடுகள் காண்பதாலும் சாங்கியம் பொருந்தாது.*

சாங்கியத்தில் முன்னுக்குப் பின் முரணான விஷயங்கள் உள்ளன என்கிறார். புருஷன் விகாரம் (மாறுதல்) அற்றவன் என்று சொல்லி விட்டு, அவன் மூலப்பொருளைக் காண்பவனாகவும் அநுபவிப்பவனாகவும் ஆகிறான் என்கிறார்கள். காண்பதும் அநுபவிப்பதும் மாறுதலுக்கான அடையாளங்கள். இது முன்னுக்குப்பின் முரணான பேச்சாகும். 'புருஷனுக்கு சம்சாரபந்தமும் மோக்ஷமும் கிடையாது, அவை மூலப்பொருளுக்கே உண்டு'- என்று சொல்பவர்கள், 'புருஷனுடைய மோக்ஷத்துக்காக, பிரகிருதி (மூலப்பொருள்) செயல்படுகிறது என்கிறார்கள். இதுவும் ஒரு முரண்பாடே.

குறையற்ற பிரம்மத்திலிருந்து குறையுள்ளதான உலகம் எவ்வாறு தோன்ற முடியும் என்று கேட்டு, பிரம்மம் எனும் தத்துவத்துக்கு ஒவ்வாதவாறு ஜீவாத்மா, ஜடம் எனும் இரண்டு பூர்ணமாக விளக்கம்பெறாத கருத்துக்களை மட்டும் கொண்டு உலக உற்பத்தியை விளக்க முற்பட்டபோதிலும், தோற்றத்துக்கு முன் மூலப்பொருள் சமச்சீரான நிலையில் இருந்தது என்ற அரிய கருத்தை வெளியிட்டது சாங்கியம் ஆகும். இதில் காணும் குறைபாடுகளையும் முரண்பாடுகளையும் சுட்டிக்காட்டி இக்கருத்துகளை இந்த அதிகரண சூத்திரங்கள் மறுத்திருந்த போதிலும், இந்திய தத்துவஞான சரித்திரத்தில் சாங்கியத்துக்கு ஒரு முக்கிய இடம் அமைந்தே உள்ளது.

மேலும் நவீன Cosmology நோக்கில், ஒரு சாத்தியக் கூறு வடிவத்தில் இருந்த பிரபஞ்சம் ஒரு கணத்தில் சாத்தியமாயிற்று எனும் கருத்துக்கு, சாங்கியரின் இந்த சமச்சீர்- கலைந்த பிரபஞ்ச உற்பத்திக் காரணம் மிக நெருங்கி வருகிறது.

இனி, வைசேஷிகரின் வாதங்களை மறுக்கும் அதிகரணம்.

உலகக் காரணம் வைசேஷிகரின் அணுக்களுமல்ல. வைசேஷிகர் காணும் உலகம் அணுக்களால் ஆனது. உலகத் தோற்றத்தின் முன் எல்லாமே அணுக்களாக மட்டும் இருந்து, அதிர்ஷ்டத்தால் அணுக்கள் சேரத் தொடங்கி பொருள்கள் உண்டாயின என்கிறார்கள். இங்கு இக்கருத்து மறுக்கப்படுகிறது.

**2.2.10. மஹத்- தீர்க்கவத் வா ஹ்ரஸ்வ- பரிமண்டலாப்யாம்**

> *பரமாணுவிலிருந்து இரட்டை, மூவிரட்டை என்ற அணுச் சேர்க்கையும் பொருந்தாது.*



நியாய- வைசேஷிகர்களின் கருத்தின்படி, பொருள்களை இனியும் பிரிக்க முடியாது என்றவாறு சிறியதாக்கினால் கிடைப்பது பரமாணு Atom போல. இப்பரமாணுக்கள் இரண்டிரண்டாகச் சேர்ந்தால் அதனை த்வயணு என்றார்கள். இவ்விரட்டைகள் மூன்று- மூன்றாகச் சேரும்போது கண்ணுக்குத் தெரிய ஆரம்பிக்குமாம்.

இந்தக் கருத்தை பாதராயணர் எப்படி மறுக்கிறார் என்று பார்க்கலாம். பரமாணு என்பது அவயவம் இல்லாதது (dimensionless) என்னும் போது. இரண்டு சேர்ந்தால் என்ன, ஆறு சேர்ந்தால் என்ன? அதுவும் அவயவம் இன்றித்தானே இருக்கும்? (பூஜ்யம், சைபர், இதனை நூறால் பெருக்கினாலும் சைபர் தானே கிடைக்கும்?) என்று சொல்லி எதிர்த்திருக்கிறார். இது சரியானால், இதே வாதத்தைக் கொண்டு சூக்குமநிலையில் இருந்த பிரம்மன், தன் இச்சையால் பல பொருள்களானது எனும் பிரம்ம காரணக் கொள்கையினையும் மறுக்கலாமே!

**2.2.11. உபயதாபி ந கர்மாதஸ் ததபாவ:**

> *இரண்டு பரமாணுக்கள் அதிர்ஷ்டம் காரணமாகச் சேர முடியாது.*

வைசேஷிகர்கள் 'அதிர்ஷ்டம்' எனும் பதத்தை, 'காணமுடியாதது' 'புலப்படாதது' என்கிற பொருளில் பயன்படுத்துகிறார்கள். தற்செயலாக இரண்டு பரமாணுக்கள் சேருகின்றன என்றால், அந்தத் தற்செயல்பாடு எங்கிருந்தது, பரமாணுவிலா அல்லது ஜீவனிலா? எனும் கேள்விகள் சங்கடப்படுத்தின. கடவுளை முதற் காரணமாகச் சொல்லும் எல்லா தத்துவங்களுக்கும் இத்தகைய சங்கடம் உண்டு. நவீன இயற்பியல் இதனை Collapse of probability என்று சமாளிக்கிறது.

**2.2.12. ஸமவாயாப்யுபகமாத் ச ஸாம்யா/ தநவஸ்திதே:**

> *ஸமவாயத்தை ஒப்புக்கொண்டால், முடிவில்லா தொடர்புகள், தொடராக ஏற்பட்டு விடும்.*

ஸமவாய சம்பந்தம் என்பது ஒருவிதமான Dependency & relationship ஆகும். உதாரணமாக, புடவைக்கும் நூலுக்கும் உள்ள சம்பந்தத்தை ஸமவாய- சம்பந்தம் எனலாம். நூல் இல்லையேல்

புடைவையில்லை. இது இத்தோடு நிற்காது. புடைவை யில்லை யேல் நூலும் இல்லை என்று திருப்பிப் போடலாம். நூலில்லை யேல் தறியில்லை. நெசவாளனின்றி நெசவுத் தொழிலே இல்லை. இப்படி (அல்ஜிப்ரா-வில் Infinite regression என்பது போன்று) முடிவில்லாத, பின்னடையும் சார்புக் கோப்புகளாகி விடும்.

**2.2.13. நித்யமேவ ச பாவாத்**

*நித்யம் என்று ஒப்புக்கொண்டால், பொருள்களும் நித்யமாகி விடும்.*

நியாய- வைசேஷிகர்கள், அணுவுக்கும் பொருளுக்கும் உள்ள சம்பந்தம் நித்யமானது என்பர். அணு அழியாதது. ஆகையால், எந்தப் பொருளும் ஸமவாத சம்பந்தத்தால் அழியாததாக இருக்க வேண்டும். இது சரியல்ல.

**2.2.14. ரூபாதிமத்வாத் ச விபர்யயோ தர்சநாத்**

*வடிவம் உடையவை என்னும்போது எதிர்மறையே உண்மை யாகும்.*

வைசேஷிகர் கொள்கையில் பரமாணுக்களுக்கும் நிறம், வடிவம் முதலியவை உண்டு. அப்படியிருந்தால்தான் அவைகளால் உண்டாகும் பொருள்களுக்கு நிறமும் வடிவமும் வரும் என்று நம்பினார்கள்.

இதில் சங்கடம் ஒன்றுண்டு. பரமாணுவிலிருந்து பொருள் களுக்குத் தகுதிகள் வரலாம் என்றால், பொருள்களிலிருந்தும் பரமாணுக்கள் தகுதிகளைப் பெறலாம் உதாரணமாக, பொருள் களின் அழியும் தன்மை பரமாணுவுக்கு உண்டு என்றாகிவிடும். பரமாணு அழிவில்லாதது அல்லவா?

**2.2.15. உபயதா ச தோஷாத்**

*இரண்டிலுமே குறையுண்டு*

நிறம் முதலியவை கடத்தப்படும் என்று சொன்னாலும் தப்பு, கடத்தப்படாது என்று சொன்னாலும் சரியில்லை. பொருளுக்கு எப்படி நிறம் அமைகிறது என்ற கேள்வி எழும்!



**2.2.16. அபரிக்ரஹாத் ச அத்யந்தம் அநபேக்ஷா**

*வைசேஷிகர் மதத்தின் எந்த அம்சத்தையும் வேதாந்திகள் ஏற்கமுடியாது.*

அடுத்ததாக, பௌத்தத்துக்கு எதிர்ப்பான வாதங்களைப் பார்ப்போம்.

*ஹீநயாந பௌத்தக் கருத்தும் தவறே, ஸமுதாயா திகரணம்*

இனி வரும் சூத்திரங்களுக்கு முன்னுரையாக பௌத்த மதத்தின் சில முக்கியக் கருத்துக்களைத் தெரிந்துகொள்ளலாம், பௌத்தத் தின் உட்பிரிவுகளாக மஹாயாநம் (மேல்வழி), ஹீநயாநம் (கீழ் வழி) என்றுள்ளன. ஹீநயாநத்தில் வைபாஷிகம், ஸௌத்ராந்திகம் எனவும், மஹாயாநத்தில் யோகாசாரம், மாத்யமிகம் எனவும் பிரிவுகள் உண்டு.

இன்றைக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் (ஏறத்தாழ 563 கி.மு.-483கி.மு) வாழ்ந்த ஸ்ரீ கௌதமபுத்தர் மானிடத்தின் அடிப்படைச் சிந்தனையாளர்களில் முக்கியமானவர் ஆவார். அவர் வாழ்க்கை வரலாறு பொதுவாக நம் எல்லோருக்கும் தெரிந்தே இருக்கும்.

அவர் உணர்ந்த அடிப்படை உண்மை இதுதான். உலகிலுள்ள எல்லாப் பொருள்களும் ஒவ்வொரு கணமும் (நொடியிலும்) மாறுதல் (Flux) அடைந்துகொண்டே இருக்கின்றன. மாறுதல் பெறாதவை என்று நாம் எண்ணிக்கொண்டிருக்கும் கல், மலை போன்ற உயிரில்லாப் பொருட்களும் கூட உண்மையில் மாறுதல் அடைந்துகொண்டேதான் இருக்கின்றன. அவை மெதுவாக, ஆனால் நிச்சயமாக மாறுகின்றன. மாறுதல் அடையாதது ஒன்று மில்லை.

ஆகவே, மாறுதல் அடையும் பொருள் யாவும் உண்மை யானவை அல்ல. அதாவது, மாற்றம் என்பதேயன்றி நிலை யானவை என்றில்லை. இக்காரணம் பற்றியே அவை உண்மையில் இல்லை என்றே ஆகிறது. உலகப் பொருட்கள் எதுவுமே இல்லை. உலகம் சூனியம் ஆனது, மாறுதல் என்பதொன்றே உண்மை.

இந்த கணபங்க நியாயச் சூனியவாதக் கருத்தினைப் பின்வருமாறு ஆங்கிலத்தில் கூறிப் பார்க்கலாம்.

Everything is changing and nothing exists constantly. Since nothing has constant existence, it follows that nothing is real, or, only Nothing is Real. Thus Nothing, in fact, exists!

புத்த தேவரின் இக்கருத்தின் அடிப்படையில், பௌத்தர்களைச் சூனியவாதிகள் என்றும் க்ஷணிகர்கள் என்றும் குறிக்கிறோம். இனி, பௌத்த மதத்தின் நான்கு உட்பிரிவுகளின் வேறுபாட்டைப் பார்க்கலாம்.

வெளியே உள்ள புற உலகம் நமது ஐம்பொறிகள் வாயிலாகப் பதிந்து நமது உள் உலகம் ஆகிறது. ஆயினும் வெளிஉலகம் அப்படியே உள் உலகம் ஆகிறது என்று எப்படி முடிவாகச் சொல்லமுடியும்?

ஒரு பொருளைப் பார்க்கும்போது ஒரு மனதில் பதியும் காட்சியும் மற்றொரு மனதில் பதியும் காட்சியும் ஒன்றே என்று சொல்லவே முடியாது. நமது பொறிகள் வெளியுலகத்தை மாற்றி உள் உலகமாக ஆக்கிவிடலாம் அல்லவா? மேலும் இவ்விதமான வெளி மற்றும் உள் உலகங்களும் கணத்துக் கணம் மாறுபாடு அடைந்து செல்கின்றன.

அவ்விதமே கணத்துக்குக் கணம் மாறினபோதும், வெளியுலகமும் உள் உலகும் (ஒரு கணத்தில்) உண்மையாகவே (Real) நிற்கின்றன என்கிறார்கள் வைபாஷிகர்கள். ஸௌத்ராந்திகரோ, நம்மால் புற உலகை ஊகிக்க மட்டுமே முடியும். (It can only be deduced) என்கிறார்கள். உள் உலகும் புறவுலகும் உண்மை (Real) என்று கொள்ளும் இவ்விருவரும் ஹீநயாந பௌத்தர்கள் ஆவர். உலகம் உண்மை என்று நம்பும் இவர்களை உண்மைவாதிகள் அல்லது மெய்ம்மைவாதிகள் என்னலாம்.

யோகாசாரர் அல்லது விஞ்ஞான வாதிகள் கணபங்க நியாயப்படி புற உலகம் உண்மையில் இல்லை என்கிறார்கள். உள் உலகு அல்லது நமது சிந்தனை மட்டுமே உண்மை என்கிறார்கள், இந்தக் கருத்து வாதிகள். மாத்யமிகா இன்னும் ஒரு படி மேல் சென்று நமது உள்உலகும் இல்லை, வெளியுலகும் இல்லை எனக் கொள்வர். இவர்கள்தான் சார்பற்ற சூனியவாதிகள் (nihilists) ஆவர். யோகாசாரர், மாத்யமிகர் இருவருமே மஹாயாநப் பிரிவைச் சேர்ந்தவர்கள்.

கணபங்க நியாய அமைப்பை நன்றாகச் சிந்தித்துப் புரிந்து கொண்டால், அதன்படி மஹாயாந (அதிலும் மாத்யமிகக்) கருத்துதான் பொருத்தமானது என்ற முடிவுக்கு வருவோம்.



இப்போது நாம் காணும் ஸமுதாய அதிகரண சூத்திரங்களில் தர்க்க ரீதியாக ஹீநயாநக் கருத்துக்கள் தவறு என்று காட்டுகிறார் பாதராயணர்.

**2.2.17. ஸமுதாய- உபய- ஹேதுகே அபி தத் அப்ராப்தி:**

> *(பராமணுக்களைக் காரணமாகக் கொண்ட) இவ்வுலகமும் (ஐம்பூதங்களைக் காரணமாகக் கொண்ட) உடலும் உயிரும் சேரும் தன்மை அற்றவையாகும்.*

முதல் பார்வைக்கு இந்த சூத்திரம் விளங்காது. ஆனால் உண்மையில் எளியது. பௌத்தர் கூற்றுப்படி, அணுக்களும் ஐம்பூதங்களும் கணத்துக்குக் கணம் மாறுகின்றன என்று வைத்துக்கொண்டால், உலகப் பொருள்களும் உடலும் உயிரும் எவ்வாறு தோன்றி அமையக்கூடும்? அணுக்கள் சேர்ந்து உருவாக அதற்கான கால வெளி (time duration) வேண்டாமா? ஆனால், அணுக்கள் ஒவ்வொரு கணத்திலும் குலைந்துவிடுகின்றன என்றல்லவோ பௌத்தர் கூறுகின்றார்கள்! கணபங்க நியாயப்படி, பொருட்கள் ஒவ்வொரு கணமும் முழுமையாகக் குலைந்துபோய் புதுப் பொருளாக மாறுகின்றன. இதுவும் அடுத்த கணத்தில் குலைவதற்கே. ஆனால் அணுக்கள் சேர கால அவகாசம் தேவை. அந்த அவகாசத்தில் அணுக்கள் நிலைமை பெற்றிருந்தாலன்றோ படைப்பு அமையும்?

இப்போது சூத்திரத்தைத் திரும்பப் படியுங்கள் புரியலாம்.

**2.2.18. இதரேதர- ப்ரத்யயத்வாத் உபபந்தம் இதி-சேத், ந, ஸங்காத- பாவா நிமித்தத்வாத்**

> *ஒன்றுக்கொன்று தொடர்ந்து காரணம் ஆவதால், (உலகில்) பொருட்கள் உண்டாகலாமே என்றால், அவ்வாறாகாது. ஏனெனில் அவை (பொருட்கள்) உண்டாகக் காரணம் ஆகா.*

பௌத்தர்கள் உலகப் பொருட்கள் உண்டாக அணு மற்றும் ஐம்பூதங்களின் கூட்டு என்ற வகையில் (கீழ்வருமாறு) காரணம் காட்டலாமே என்றால், அது தவறு என்று அறிவிக்கிறது இந்த சூத்திரம். மெய்யறிவின்மையால் ஏற்படும் விபரீத அறிவை முன்னிட்டே நிலையில்லாப் பொருள் நிலைத்த பொருளாகக்

காண்கிறது. இது கொண்டு விருப்பும் வெறுப்பும் உண்டாகின்றன. இத்தகைய உணர்வுகளால் மனமானது சிறுகச் சிறுக ஒரு உலகையே உண்டாக்கிவிடுகிறது. அதனால் துன்பம் ஏற்படுகின்றது. துன்பம் தன்போக்கில் மறுபடி அறிவின்மையை உண்டாக்கு கின்றது. இந்த சக்கரச் சுழற்சி பின்னும், பின்னும் தொடர்கிறது. இந்தச் சக்கரம் தொடர்வதற்குப் பொருட்கள் தேவை. ஆக அவற்றின் உண்டாக்குதல் நிரூபிக்கப்பட்டது!

மேலே இவ்விதம் சொன்ன கருத்து தவறானதாகும். நிலையற்ற பொருளை நிலையானதாக நினைக்கும் விபரீத அறிவானது எவ்வாறுதான் கணநேரமே நிலைக்கும் அணுக்கூட்டத்தையும் ஐம்பூதங்களையும் சமைத்து உலகப் பொருள் ஆக ஆக்க முடியும்? கிளிஞ்சலை வெள்ளி என்று கொள்ளும்அறியாமையானது எப்படி கிளிஞ்சல் ஏற்படக் காரணம் ஆகும்? மேலும், பௌத்தத்தின் படி நிலையற்றதை நிலையானது என்று நினைப்பவனே ஒரே கணத்தில் அழிகிறான். ஆகையால் அவனுக்கு விருப்பும் வெறுப்பும் எப்படி உண்டாகும்? இத்தகைய பௌத்த கொள்கை ஏற்புடையதேயல்ல!

**2.2.19. உத்தரோத்பாதே ச பூர்வ- நிரோதாத்**

*வரும் கணநேரமானது முந்தைய கணம் அறிந்த பின்னரே வருவதால். (முந்தைய கணப்பொருளானது வரும் கணப் பொருளுக்குக் காரணம் ஆகாது. ஏனெனில் முந்தைய பொருள் முற்றாக அழிந்து விட்டதால்.)*

இந்தக் கணத்தில் இருக்கும் குடம் அடுத்த கணத்தில் முழுவது மாக அழிந்துவிடுவதால், அது அடுத்த கணத்தில் ஏற்படும் குடத் துக்குக் காரணமாக முடியாது. பொருள்கள் ஒவ்வொரு கணமும் அழிகின்றன என்னும்போது, புதுப்பொருளின் தோற்றத்தைப் பகுத்தறிவால் விவரிப்பது கடினம் (Logic would fail here. Things cannot come out of nothing!)

**2.2.20. அஸதி ப்ரதிஜ்ஞோபரோத: யௌகபத்யம் அந்யதா**

*காரணமின்றியே (பொருட்கள்) தோன்றும் என்றால், அது (பௌத்தக்) கொள்கைக்கு முரண்படும். அல்லது (காரணம், காரியம் என்னும்) இரண்டும் ஒரே சமயத்தில் தோன்றி நிற்கும்.*



இங்கே சொன்ன கொள்கையில் பொருட்களைக் காண்பதும் உணர்வதும் ஆகிய திறன்கள் அடங்கும். பௌத்தரின்படி காட்சி அமைய நான்கு தேவைகள் உண்டு- காணும் பொறிகள், காண உதவும் வெளிச்சம் முதலியன, காணப்படும் பொருள் மற்றும் பார்க்கும் கணத்திற்கு முந்தைய கணத்தைச் சார்ந்த அறிவு.

ஒரு குடத்தைப் பார்க்கிறோம் என்றால் நம் கண், குடத்தைக் காட்டும் வெளிச்சம், ஆன முந்தைய கணத்தின் அறிவு இவை தேவைப்படும். இவை நான்கும் பொருளை உணரத் தேவையான காரணங்கள். இவையன்றி பொருள் காட்சியிலோ உணர்விலோ தோன்றமுடியாது.

மற்றொரு வகையாக, ஒரே கணத்தில் ஒரே பொருள் அழிந்து, அதன் காரணமாக அந்தப் பொருள் திரும்பத் தோன்றுகிறது என்று வைத்துக்கொண்டால், அந்தக் கணத்தில் இரண்டு பொருள்கள் காட்சிப்பட வேண்டும். ஆனால் அவ்வாறில்லையே என்கிறது சூத்திரம்.

ஒரு குடம் இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். பௌத்தரின்படி ஒவ்வொரு கணமும் பொருட்கள் அழிந்தவண்ண மாகவே இருக்கின்றன. குடம் அழிகிறது. அதன் அழிவையே காரணமாகக் கொண்டு மற்றொரு (அதே போன்ற) குடம் தோன்று கிறது என்று சொன்னால், இந்த அழிவும் தோற்றமும் ஒரே சமயத்தில் நிகழவேண்டும் (பார்க்க: 2.2.19) அப்போது (அழியும் குடமும் புதுக் குடமும் ஆக) இரண்டும் குடங்கள் அல்லவா தோன்றவேண்டும்? பௌத்தரின் கணபங்கக் கொள்கையில் இது தான் சிக்கல்.

**2.2.21. ப்ரதி- ஸங்க்யா அப்ரதி- ஸங்க்யா- நிரோத- அப்ராப்தி: அவிச்சேதாத்**

*பொருட்கள் முற்றும் அழிய முடியாது, அவ்வாறு நாம் காண்பதில்லை.*

பௌத்தரின்படி ஒவ்வொரு கணமும் பொருட்கள் முற்றும் அழிந்து (அதே போன்று) புதுப்பொருளாக மாறுகின்றன. ஒரு குடத்தை உடைத்தால் மண்பாண்டச் சிதறல் இருக்கவே செய்யும். இது நாம் கண்ணால் காண்பது, முழுமையாக அழிவு என்பது கிடையவே கிடையாது.

**2.2.22. உபயதா ச தோஷாத்**

*(பௌத்தரின் இந்த) இரண்டு வாதங்களுமே தவறானவை.*

இல்லாத பொருளிலிருந்து பொருள் தோன்றுவது. இருக்கும் பொருள் முற்றிலுமாக அழிவது, இவ்விரண்டு கொள்கைகளுமே தவறு.

**2.2.23. ஆகாசே ச அவிசேஷாத்**

*ஆகாசமும் (பூமி மற்றும் அதனுட்பொருள்கள் போன்றே) இல்லாப் பொருள் ஆகாது.*

நம் கண்ணால் காணாவிடினும், ஆகாசமும் பூமி போன்று ஒரு பொருளே. அதுவும் (கணபங்க நியாயப்படி) முழுவதும் அழிந்து உண்டாவதில்லையே என்கிறார்.

**2.2.24. அநு-ஸ்ம்ருதேச் ச**

*மறுபடி அனுபவிப்பதாலும் (பொருட்கள் கணத்தில்/ நொடியில் அழிபவையல்ல)*

ஒரு பொருளை நாம் தொடர்ந்து பார்க்கிறோம். அனுபவிக்கிறோம். பின் எவ்வாறு அப்பொருள் கணந்தோறும் அழிய முடியும்?

**2.2.25. நா-ஸதோ அத்ருஷ்டத்வாத்**

*அழிந்த பொருளின் தன்மை மட்டும் (கொண்டு அப்பொருள்) காணப்படுவதில்லை.*

ஸௌத்ராந்திக பௌத்தர், பொருளானது அழிந்தபின் அதன் உருவம், நிறம் முதலிய தன்மைகள் மட்டும் மனதில் பதிந்து, அப்பொருள் இருப்பது போலவே தோற்றமளிக்கிறது என்பர். ஆகையால் புற உலகை நம் மனத்தில் ஏற்படும் உணர்வுகளைக் கொண்டு ஊகிக்கலாம் என்பர். (உண்மையில் புற உலகு இல்லை.) இவரின் இக்கருத்து இங்கே மறுக்கப்படுகிறது.

ஒரு பொருள் அழிந்தபின் அதன் குணங்கள் பற்றிய நினைவு நிலை (ஸ்ம்ருதி) மட்டும் அப்பொருளை உண்டாக்க முடியாது கண்ணாடியில் காணும் செம்பருத்திப் பூவானது, அந்தப் பூ



உள்ளவரைதான் இருக்கும். அதுபோலே இது. The image lasts only so long as the object lasts.

**2.2.26. உதாஸீநாநாம் அபி சைவம் ஸித்தி:**

*(பொருட்கள் கணநேரமே இருக்கின்றன) என்றால், முயற்சி செய்யாதவர்களுக்கும் பலன் ஏற்படும் என்ற குறை வரும்.*

Transience leads to such absurdities.

ஒரு பரீட்சைக்கென்று நாம் முயன்று படிக்கிறோம். நன்றாகவும் எழுதுகிறோம் ஆனால், பௌத்தரின் கணபங்க நியாயப்படி, பரீட்சை எழுதுபவன் அழிந்துவிடுகிறான். அதன் பலனை அனுபவிப்பவன் வேறொருவன் என்பது குறை இல்லையா? கடன் வாங்கியவன் ஒருவன், அதைத் திருப்பிக் கொடுப்பவன் வேறு ஒருவனா?

கிரேக்க தத்துவஞானி ஜீனோ (Zeno)வின் முரண்பாடுகள் (paradoxes) பிரசித்தமானவை. ஒரு உதாரணம் பாருங்கள். எய்யப்பட்ட அம்பு எப்போதும் நகர்வதே இல்லை!

எந்த கணத்தில் யோசித்தாலும் அந்த அம்பு ஏதாவது ஓர் இடத்தில் இருக்கிறது. அது நகர்வதை நாம் எப்பொழுதுமே பார்ப்பது இல்லை. அதனால், எய்யப்பட்ட அம்பு எப்போதும் அசைவற்று நிற்கிறது என்றார் ஜீனோ. இதன் அடித்தளத்தில் கணிதத்தின் infinite series தத்துவம் அடங்கி இருக்கிறது.

**2.2.27. நாபாவ உபலப்தே:**

*அறிவைத் தவிர வேறில்லை என்பது தவறு. (ஏனெனில் அறிவில் பொருட்கள்) புலப்படுவதால்.*

லோகாசார பௌத்தரின்படி, நான் பானையை அறிகிறேன் என்னும்போது, அறிவொன்றே உண்மை ஆக, நானும் பானையும் இல்லாப் பொருட்கள் எனக்கொண்டு, பொருட்கள் உண்மையிலேயே உள்ளனவா அல்லது நாம் உணரும்போது மட்டுமே அவை உண்டு என்ற அறிவை உண்டாக்குகின்றனவா எனவும் கேட்டுக்கொள்ளும் கேள்வியானது தத்துவஞானிகளை வசீகரித்தது.

பொருளை உணர, பொருளுக்கும் நமது பொறிகளுக்கும் தொடர்பு (Contact) அமைய வேண்டும். மேலும், இத்தொடர்பு ஏற்படுவதற்கு சற்று முன்பாகவே பொருள்கள் இருக்க வேண்டுகிற தல்லவா? ஆகவே, பொருளும் அதனைப்பற்றிய அறிவும் ஒன்றல்ல என்பது தெளிவு.

சரி, பொருளும் அதனைப்பற்றிய அறிவும் பிரிக்க முடியாதபடி சம்பந்தப்பட்டுள்ளன எனில், பொருளைப்பற்றிய அறிவு உண்மை யெனும்போது, பொருளும் உண்மைதான் என்றாகிறது. ஏனெனில் ஓர் உண்மையும் உண்மையல்லாததும் இரண்டறப் பிரிக்க முடியாதவை என்றாகாது.

ஐந்து நிமிடம் சிந்தித்தால், இது புரிந்துவிடும் அவ்வளவு கஷ்டமில்லை.

**2.2.28. வை-தர்ம்யாச் ச ந ஸ்வப்நாதிவத்**

*கனவிலும் நனவிலும் வெவ்வேறு விதமாக அறிவதால், (நனவுப் பொருட்கள்) கனவுப் பொருட்கள் போல அல்லாதன வல்ல.*

கனவில் அறியும் அறிவானது (உறக்கத்தால்) மழுங்கின அறிவாகும். நனவின் அறிவோ, கூரிய அறிவாகும். ஆகவே உறங்கி விழித்தவுடனே கனவில் ஏற்பட்ட அறிவு தள்ளப்படுகிறது. நனவறிவானது அவ்வாறு தள்ளப்படுவதில்லை. ஆக நனவின் அறிவில் வரும் பொருட்கள் உண்மையே.

**2.2.29. ந பாவோ அநுபலப்தே:**

*(பொருள்சாரா) தனிப்பட்ட அறிவு காணப்படுவதில்லை.*

உலகிலெங்கும் அறிவு ஒரு பொருளைச் சார்ந்ததாகவே உள்ளதாகக் காண்கிறோம். ஆகவே, இல்லாத பொருளைச்சார்ந்த அறிவு மட்டுமே உண்மை என்ற யோகாசாரக் கொள்கை தவறு.

மாத்யமிகரின் சூன்யக் கருத்து (nihilism) தவறே.

பௌத்த மதத்தின் முக்கியமான சூன்யக்கொள்கையை எவ்வாறு நிரூபிக்கிறார்கள் என்று பார்ப்போம். ஒரு பொருள் உண்டாக, மற்றொரு பொருள் தேவை, குடம் செய்ய மண் தேவை. ஆனால், மண் அழிந்தால் தானே குடம் ஆகமுடியும்? அழிவது என்றால் என்ன? முழுவதுமாக இல்லாமல் போவது அல்லவா? மண் என்பது முற்றிலும் இல்லாது போனால், குடம் எப்படி உருவாகும்? இல்லாத பொருளானது இருக்கும் பொருள் ஒன்றை எப்படி ஆக்க முடியும்? ஆகவே, பொருட்கள் என்பதே கிடையாது. இல்லை, என்றுதான் முடிவு செய்ய வேண்டும். இதுவே சூன்யவாதம் ஆகும். பௌத்தக் கொள்கைகளில் இந்த சூன்யவாதம் மிக வசீகரமான தாகும்.



**2.2.30. ஸர்வதா அநுப்பத்தேச் ச**

*எந்த வகையிலும் (சூன்யவாதம்) பொருந்தாது.*

எல்லாமே சூன்யம் எனும் வாதப்படி. பொருட்கள் இல்லை என்று கொண்டால், அப்பொருட்கள் வேறொரு அமைப்பில் இருந்தன என்றுதான் மறைமுகமாகச் சொல்வதாகும். அதாவது, பானை இல்லை என்றால் பானை முந்தைய மண்- நிலையில் உள்ளது என்றுதான் அர்த்தமாகும். அதுபோல், சூன்யம் என்ற தத்துவத்தை அறிவின் வழியே உணர்கிறோம் என்றால், அந்த அறிவானது உண்மையானதே என்றாகிறது அல்லவா? இந்த நிலையானது நாமெல்லாம் சூன்யம் எனும் நிலைக்கோட்பாட் டுக்கு எதிர்மறை ஆகிவிடுகிறது. ஆகவே, எப்படிப் பார்த்தாலும் சூன்யவாதமானது பொருந்தாமல் போகிறது.

ஜைனமதக் கருத்துகளும் தவறே.

இந்த அதிகரணத்தினைத் தொடங்கும் போது, ஜைனமதத்தின் அடிப்படைக் கொள்கைகளை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். ஜைன மதத்தில் படைப்பாளியான கடவுள் என்பது கிடையாது. உலகம் (பிரபஞ்சம்) மட்டுமே உள்ளது. அது, ஆறு திரவியங் களினால் ஆனது (1) ஜீவன், (2) தர்மம், (3) அதர்மம், (4) புத்கலம் அல்லது உடல், (5) காலம், (6) ஆகாசம்- இவையாகும்.

ஜீவர் மூன்று வகையானவர். பத்தர் (கட்டுண்டவர்) யோக சித்தர், முக்தர் தர்மம் உயிர்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத் துக்குச் செலுத்துவது, அதர்மம் என்பது மரம் போன்ற அசையாப் பொருட்களை, அதனதன் அசையாநிலையில் வைத்திருப்பது, புத்கலம் என்பது பராமணு மற்றும் நீர், நிலம், ஏரி, காற்று முதலியவற்றின் கூட்டு. காலமானது கடந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் எனப் பாகுபடும். ஆகாசம் என்பது (Space) வெளி.

எல்லாப் பொருளுமே பலவாறாக இருக்கும். அதாவது, பொருட்கள் உள்ளதாக (Are), அல்லாததாக (Are not) உள்ளதும்

அல்லாததுமாக ஆக (Are and are not), உள்ளதோ அல்லாததோ என்று சொல்ல முடியாதபடி (uncertain whether are or are not) நித்தியமாக, அநித்தியமாக, பகுதிகள் கொண்டதாக, பகுதிகள் இல்லாததாக- இவ்வாறு இருக்கலாம்.

**2.2.31. நைகஸ்மிந் ந ஸம்பவாத்**

*(ஒரே பொருளில்) ஒன்றுக்கொன்று முரண்பட்ட தன்மைகள் இருக்க முடியாது. (ஆகையால், ஜைனமதம் பொருந்தாது)*

பொருளானது எப்படி (ஒரே சமயத்தில்) இருப்பதாகவும் இல்லாததாகவும் ஆகமுடியும்?

**2.2.32. ஏவம் ச ஆத்மா அ- கார்த்ஸ்ந்யம்**

*இப்படி (ஜீவனானது உடலினளவே) என்று கொண்டால், அதற்கு நிறைவின்மை எனும் குறை வரும்.*

ஒரு பிறவியில் சிறிய (எறும்பு) வடிவம் கொண்ட ஜீவன் மறு பிறவியில் பெரிய (யானை) வடிவம் கொள்ளுமானால். இத்தகைய கோட்பாட்டின் அடிப்படையில் ஜீவனுக்கு முழுமையின்மை எனும் குறை வரும். **ஜீவன் என்பது அதன் இருப்பிடமான உடலின் அளவுக்கு மட்டுப்படுத்தியோ விரிவாகவோ அமையும் என எண்ணுவது பொருந்தாது.**

**2.2.33. ந ச பர்யாயாத் அபி அவிரோதோ விகாராதிப்ய**

*(சிறியதும் பெரிதும் ஆகும்) நிலைகள் ஜீவனுக்கு உண்டு என்று சொன்னால், அதற்கு மாறுதல் (/அழிவு) என்ற குறை வரும்.*

ஜீவனானது அழிவு / மாறுதல் அற்றது. அது சிறிதும் பெரிதும் ஆக சுருங்கி விரியும் தன்மை உள்ளது என்றால், அதற்கு மாறுதல்/ அழிவு என்ற குறை வந்துவிடும்.



**2.2.34. அன்த்யாவஸ்திதேச்- ச உபய -நித்யத்வாத் அவிசேஷ:**

*கடைசியில் ஏற்படும் பரிமாணம் அதன் இயல்பு. அது வேறு (சிறிய அல்லது பெரிய) பரிமாணம் அடையமுடியாது- அது நித்தியம் ஆதலால்.*

கடைசியான மோட்ச நிலைக்குப் பின் ஆத்மாவானது வேறு தேஹத்தை அடைவதில்லை. ஆக அந்நிலையில் ஆத்மாவுக்கு ஏற்படும் பரிமாணமே இயல்பானது. இவ்விதமிருக்க, தேஹத்தை யொத்த பரிமாணத்தை ஒப்புக் கொள்வது பொருந்தாது. இவ்வண்ணமாக முன்னுக்குப் பின் முரணாகப் பேசும் இம்மதம் பொருந்தாது எனத் தெளிவாக விளக்குகிறார் புத்தூர் கிருஷ்ண ஸ்வாமி ஐயங்கார்.

பாசுபத மதமும் சரியில்லை

பாசுபதம், சைவமதங்களில் ஒன்று. மற்றையோரான காபாலிகர், காளாமுகர், சைவர் இவர்கள் சைவ ஆகமங்களை நம்புகின்றனர். பாசுபதர்கள் எண்ணமானது பசுபதி, உலகுக்கு நிமித்தகாரணமாக மட்டுமே இருப்பார். உபாதாந காரணமல்ல. (செயல் அத்தனையே கொண்ட குயவன் மட்டுமே, மூலப்பொருளான மண் அல்ல.) இக்கருத்து வேத மற்றும் உபநிஷதக் கருத்துக்கு மாறானது.

**2.2.35. பத்யு: அஸாமஞ்ஜஸ்யாத்**

*(பசு) பதியின் மதம் பொருத்தமற்றது.*

வேத ஸம்ஹிதையும் உபநிஷத்துக்களும் பிரம்மத்தை உலகுக்கு உபதாந காரணமாகவும் கூடுதலாக நிமித்த காரணமாகவும் கூறும். இதனைப் பாசுபதம் ஏற்கவில்லை. மற்றும் பாசுபதம், வேதத்தின் நாராயண அநுவாகத்துக்கு மிகவும் முரண்பட்டதாக அமைந் துள்ளது. ஆகவே, வேதத்தை விஞ்சின சாஸ்திரம் இல்லை என்று அறிந்து, மோக்ஷத்தையே விரும்பும் விவேகிகளால் இம்மதம் ஆதரிக்கத்தக்கதல்ல.

**2.2.36. அதிஷ்டாந-அநுபபத்தே-ஸ் ச**

*அங்கங்கள் (body and limbs) அற்ற (பசுபதி) எவ்வாறு மூலப்பொருளை இயக்கி உலகை உண்டாக்க முடியும்?*

(நிமித்தனான) குயவன், தனக்குண்டான கை, கால்களைக் கொண்டு (உபாதாநமான) மண்ணைச் சமைத்துப் பானையை ஆக்குகிறான். பசுபதிக்கு தேகமில்லை என்பது பாசுபதர்களின் கொள்கையாக இருக்க, படைப்பென்ற செயல்பாட்டுக்கான அவயவங்கள் (body and limbs) அவர்க்கு ஏது என்றவாறெல்லாம் கேள்விச் சிக்கல்கள் வந்துவிடும்.

**2.2.37. கரணவத் சேத், ந போகாதிப்ய:**

*(அவயவங்கள் இல்லாதிருந்தும்) ஜீவன் உடலை இயக்குவது போன்றே என்றால் (பசுபதிக்கு) கருமபலன் ஏற்பட்டுவிடும்.*

ஜீவனானது புண்ணிய பாபங்களை அநுபவிக்கவே உடலை இயக்குகிறது. (வெறும் நிமித்தனான பசுபதிக்கு) செயல்பாட்டுக்கான அவயவங்கள் விஷயத்தை ஜீவனுக்குப் போன்று ஏறிட்டால், அப்போது பசுபதிக்கும் கருமபலன் ஏற்பட்டுவிடும். ஆனால், இறைவனுக்கு ஜீவனைப் போன்று கருமபலத்தின் அநுபவம் என்பதில்லையன்றோ?

**2.2.38. அன்தவத்- த்வம் அ-ஸர்வஜ்ஞதா ச**

*(மாறாக, புண்ணியபாபங்கள் பசுபதிக்கு உண்டென்றால், அப்போது) அழிவு, மற்றும் அனைத்தையும் அறிவது என்பது இல்லாமை, இவ்வகையான (பெரும்) குறைகள் வரும்.*

கடவுளுக்குப் புண்ணிய பாபங்கள் உண்டென்றால் அழிக்கப் படும்போது அழிவதால் அநித்யத்வம் வரும். மேலும், (படைக்கப் படும்போது, புண்ணிய -பாபத்திற்கு ஏற்பது உண்டாகும்) அதன் அறிவில் ஏற்றத் தாழ்வுகள் வரும். இவ்விதமாக, வீடு பேற்றை நாடுவோரால் பாசுபதம் ஆதரிக்கத் தக்கதல்ல.

பாஞ்சராத்ரத்தில் வேதத்துடன் முரண்பாடில்லை

பாஞ்சராத்ரம் என்பது பகவானான நாராயணனால் அருளப்பட்ட வழிபாட்டு விதிகள் (ஆகமம்) ஆகும். மிகத் தொன்மையும் அநுட்டான அழகும் வாய்ந்த இவ்வழிபாட்டுக்குச் சான்று, மத்தியப் பிரதேச மாநிலத் தலைநகரான போபாலுக்கு சற்று வடக்கான விதிசா பேஸ்நகர் எனும் ஊரில் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் அங்கு செயல்பட்ட ஹீலியோடோரஸ் என்ற கிரேக்க அரசத் தூதர் நிறுவிய கருடக் கம்பம் உள்ளது. அதில் இவர் தம்மை பாஞ்சராத்திர விதியைத் தழுவிய வாசுதேவ பக்தராக அறிவித்துக் கொள்கிறார். குப்தப் பேரரசின் நீண்ட பொற்கால ஆட்சியில் பாஞ்ச ராத்ரத்திற்குப் பேராதரவு இருந்தது.



நாம் மேற்கொண்டுள்ள பிரம்ம சூத்திரக் காட்சியில் இப்போது பாஞ்சராத்ர அதிகரணத்தில் இருக்கிறோம். வேதத்திலிருந்து (மேல் தோற்றமாக) மாறிக்காணும் சில பாஞ்சராத்ரக் கொள்கைகளை பிரம்ம சூத்திரக்காரர், முதல் இரண்டு சூத்திரங்களில் பேசி, அடுத்த இரண்டு சூத்திரங்களில் முரண்பாடு இல்லையென்று விளக்கி. அது காரணமாக பாஞ்சராத்ரம் முறையான பிரமாணம், அத்தாட்சி, ஆகும் என்று நிறுவுகிறார்.

மத்வர் இந்த சூத்திரங்கள், சக்தி (பெண் தெய்வம்) மதத்தை மறுக்கிறது என்கிறார்.

**2.2.39. உத்பத்/த்யஸம்பவாத்**

*(பாஞ்சராத்ரத்தில் சொல்லும்விதமான ஜீவனின்) உற்பத்தி ஓட்டாதாகையால் (இந்த ஆகமம் ஏற்பதற் கில்லை)*

பாஞ்சராத்ரத்தின் கூற்றுப்படி வாசுதேவரிடமிருந்து ஸங்கர்ஷணன் எனப்படும் ஜீவன் பிறந்து. ஸங்கர்ஷணனிடத்து ப்ரத்யும்நன் என்னும் பெயருடைய மனம் தோன்றி, ப்ரத்யும் நனிடத்து அநிருத்தன் எனும் பெயருடைய அஹங்காரம் உண்டாகிறது. இக்கூற்றானது கடோபநிஷதத்தில் (2-18) ஜீவன் பிறப்பதில்லை. இறப்பதில்லை, என்று நிறுவிய கொள்கைக்கு மாறாக இருக்கிறது. (ஆக இவ்வாகமம் பிரமாணம் அல்ல.)

மத்வர் 'எங்காவது ஆண் உதவி இல்லாமல் பெண் மட்டுமே உற்பத்திக்குக் காரணம் ஆவது உண்டோ? என்கிறார்.

**2.2.40. ந ச கர்த்து: கரணம்**

*செயலாளனிடமிருந்து (அதாவது, ஜீவனிடமிருந்து, மனம் எனும்) கரணம் (உறுப்பு) தோன்றுவது என்பது (பொருத்தமாக) இல்லை.*

முண்டக உபநிஷதத்தில் (2.1.3) பிரம்மத்திட மிருந்தே தான் பிராணன், மனம், பொறிகள் (ஆகிய) உண்டாயின என்றிருக்க, அதற்கு மாறாக பாஞ்சராத்ரம் விளக்கம் தருகிறது.

**2.2.41. விஜ்நாதிபாவே வா தத் அப்ரதிஷேத:**

*சிறந்த ஞானவடிவுடன் (இப்பெயர்கள் பரம்பொருளையே குறிப்பதால்) இதற்கு (பாஞ்சராத்திரத்துக்கு) தள்ளுபடி யில்லை.*

(இதற்கு முந்தைய இரண்டு சூத்திரங்களிலும் பாஞ்சராத்ரத்துக் குத் தோற்றுவது போன்ற குறைபாடுகள் சொல்லி, இந்த சூத்திரம், இதற்கடுத்தது இரண்டிலும் விளக்கம் தந்து இத்தோற்றக் குறை பாடுகளை மறுத்துக் களைந்து, பாஞ்சராத்ரத்தின் சான்றுச் சிறப்பினை நிறுவுகிறார். பிரம்ம சூத்திரக்காரர்.)

ஸங்கர்ஷணன், ப்ரத்யும்நன், அநிருத்தன் ஆகிய மூவரும், பரப்பிரம்மம் தன்னை நாடுவார்க்குப் புலன்படவேண்டி ஏற்று விளங்கும் அவதாரங்களே ஆகும். இவர்கள் பிறப்பு- இறப்பு ஆகிய சூழலில் அகப்படும் தனி ஜீவர்களல்லர். ஆகவே, இம் முப்படைத் தோற்றமும் பிரம்மத்துக்கோ தனி ஜீவனுக்குமோ பிறப்பைக் கூறுவன அல்ல. ஆகவே, பாஞ்சராத்ரத்தின் இத் தோற்றக் கொள்கையானது வேதத்துக்கு முரணானதல்ல.

ஸ்ரீசங்கர பகவத்பாதர், இந்நான்கு சூத்திரங்களையுமே (2-2-39/ 42) பாஞ்சராத்ரத்தின் குறை கூற்றாக உரைப்படுத்தியிருக்கிறார். ஸ்ரீ ராமாநுஜர் தமது ஸ்ரீபாஷ்யத்தில், சூத்திரக்காரர் முதலிரண்டையும் குறை- கூற்றாக (பூர்வபக்ஷமாக) குறித்து, பின்னிரண்டும் குறை- நீக்கமாக அமைத்து பஞ்சராத்ரத்தின் சிறப்பை (ஸித்தாந்தமாக) நிறுவுவதை எடுத்துக்காட்டி உரைசெய்திருக்கிறார்.

இது தவிர, விசேஷ சுவாரஸ்யமாக பகவத்பாதரின் திருவாக்கு ஒன்று காணக்கிடைக்கிறது. இதில் 2.2.39 எண் கொண்ட சூத்திரத் தில் ஸ்ரீ சங்கரர், ஜீவனின் பிறப்பாகத் தாம் கருதும் பாஞ்சராத்ரக் கொள்கைக்கு ஆட்சேபம் தெரிவிக்கையில் கூறுவதாவது-

*'(பாஞ்சராத்ரத்தில்) நாராயணன், பரமாத்மா எனவும் ஸர்வாத்மா எனவும் கூறுவதை நாம் மறுக்கவில்லை. பகவானான அவனை வேறெண்ணமின்றி அபிகமநம் என்ற விசேட அணுகுமுறையால் ஆராதிப்பதை நாம் ஒதுக்கவோம் அல்லோம்.'*



**2.2.42 வி-ப்ரதிஷேதாத் ச**

*இந்தப் பஞ்சராத்ரத்திலேயே ஜீவனுக்குப் பிறப்பென்பது) மறுக்கப்பட்டிருப்பதாலுமே, (இது ப்ரமாணமே ஆகும்)*

ஸங்கர்ஷணன் என்று பெயர் தாங்கிய அவதாரத்தினை (ஜீவன் தோன்றுகிறான்) என்று குறிப்பிடும் பரம- ஸம்ஹிதை நூலிலேயே, அந்த ஜீவன் தொடக்கமும் இறுதியும் அற்ற மெய்ப்பொருளாகத் தேறுகிறான் என்றும் அறுதியிட்டுச் சொல்லியிருக்கிறது. ஜீவன் என்று இங்கே குறித்திருப்பது பிறப்பு- இறப்பு ஆகிய சுழலில் அகப்படும் தனி ஜீவன் அல்ல என்பதும் ஸங்கர்ஷணன் எனும் ஜீவனின் பிறப்பு என்பது பரவாஸுதேவனின் அவதாரமே என்பதும் தெளிவாகின்றன. ஆக, பாஞ்சராத்ரம், தலைமையான வைதிகச் சான்றுநூல் எனவே கொள்ள வேண்டும்.

இந்த பாதத்தில் சொன்ன முக்கியக் கருத்துக்கள் வருமாறு:

1) சாங்கியர் கொள்வதுபோல அறிவற்ற, உயிரற்ற, மூலப் பொருள் உலகம் ஆகாது. அவ்வாறாயின், உற்பத்தியின் ஆரம்ப காரணமே சரியில்லை.

2) வைசேஷிகரின் அணுக்கொள்கையும் தவறு.

3) பௌத்த மதத்தின் உட்பிரிவினர்கள் சொல்வது எதுவும் பகுத்தறிவுக்குச் சரியாக வராது. கணக்கொள்கையும் சூன்யக் கொள்கையும் தவறே.

4) ஜைனரின் ஜீவ- மற்றும் பொருட்- கொள்கையும் வேதத்தோடு ஒத்து அமையவில்லை.

5) பாசுபதத்தின் நிமித்த -காரண- மாத்திரமான இறைவன், வேதம் சொல்லும் கடவுள் அல்ல.

6) பாஞ்சராத்ர ஆகமத்தில் வேதத்தோடு முரண்பாடு என்பதில்லை. ஆகவே, பாஞ்சராத்ரம் சிறந்த சான்று நூலே ராமாநுஜரின்படி.

*இரண்டாம் அத்தியாயம் (அவிரோதா அத்தியாயம்) முற்றிலும் மாற்றுக் கருத்துக்களுக்கு மறுப்பாக அமைந்தது.*

இவை எவை? பிரம்மமே உலகத்துக்கு உபாதாந, நிமித்த ஸஹகாரி- அதாவது மண், குயவன், சக்கரம் இப்படி -காரணம் என்றும், அவ்வாறு படைக்கப்பட்ட உலகமும் பிரம்மமே என்னும் வேதக் கொள்கைக்கு மாறான கொள்கைகள் இவை (இந்த

இடத்தில், மத்வரின் பேதக் கருத்துக்களைச் சற்று நிறுத்திக் கொள்வோம்.)

முதல் பாதத்தில் மேலே பிரம்மம் பற்றிச் சொன்ன கருத்துக் களுக்கு கபில- ஸ்ம்ருதி போன்றவற்றில் விரோதம் சொல்லப்பட வில்லை என்று கூறப்பட்டது. அதனாலே, இந்தப் பாதத்திற்கு ஸ்ம்ருதி பாதம் என்று பெயரிட்டிருக்கிறது.

இரண்டாம் பாதத்தில் தர்க்க வழியாக சாங்கிய, வைசேஷிக, பௌத்த, பாசுபத, ஜைந மதங்களில் சொன்ன உலகக் காரணம் பற்றிய கொள்கைகளை மறுத்து, பாஞ்சராத்ரத்தின் கொள்கையை விளக்கி நிறுவி, உலகக் காரணம் பிரம்மமே தான் என்று நிலை நாட்டப்படுகிறது. ஆகையால், இதற்குத் தர்க்க பாதம் என்று பெயர்.

இப்போது மூன்றாம் பாதத்தில் (ஆகாச பாதம்) ஆகாசம் முதலான ஜடப்பொருள்கள் உலகக் காரணம் ஆக முடியாது என்று நிரூபிக்கப்படுகிறது. இதன் சூத்திரங்களைப் படிக்குமுன் பிரம்மம் பற்றி முன்னம் சொன்ன அடிப்படைகளை நினைவில் கொள்ள வேண்டும்.

முதலாக உலக உற்பத்திக்குமுன் பிரம்மம் தானே ஒன்றாக, இரண்டென்பது இன்றி, இருந்தது. அடுத்ததாக, தன் இச்சையால், பலவாக ஆவேன் என்றெண்ணியது. மூன்றாவதாக, தானே பலவாக ஆனது.

சங்கரரின் படி, மூன்றாவது மற்றும் நான்காவது பாதங்கள், உற்பத்திக்குப் பின்னர் வந்த பொருட்கள் (effects of creation) பிரம்மமே என்று கொள்கின்றன. இப்பொருட்கள் முறையே ஐம்பூதங்கள், உயிர்மூச்சு எனும் பிராணன், ஐம்புலன்கள் இவை யாகும். இவையெல்லாமே பிரம்மமே என்கின்றன பின்வரும் சூத்திரங்கள்.

ஐம்பதுக்கும் மேற்பட்ட சூத்திரங்கள் கொண்ட இந்தப் பாதத்தில் நமக்கு ஏற்படும் சுக-துக்கங்களுக்கு நாம் காரணமா, கடவுள் காரணமா, கடவுளே காரணமானால் நமக்குச் செயல் சுதந்திரம் உண்டா என்ற அடிப்படைச் சந்தேகங்களுக்கு விடை உள்ளது. (சொல்ல வந்த விஷயம் மிக முக்கியமானதால், எங்கள் அறிமுகம் சற்று விரிவாக இருக்கும்)

இப்போது இந்த பாதத்தின் சூத்திரங்களைப் பார்க்கலாம். சங்கரர் இதைப் பதினேழு அதிகரணங்களாகவும் ராமாநுஜர் ஏழாகவும் பகுக்கிறார்கள். நாங்களும் ஏழாகக் கொண்டிருக்கிறோம்.



ஆகாசம் உண்டாக்கப் பட்டதே: எப்போதும் உள்ளதல்ல.

ஆகாசம் என்பது காற்றுமண்டலம் (காற்றைக் கொண்டிருக்கும் வெளி) மட்டுமல்ல, அதற்கு மேலும் (?) கீழும் எல்லையில்லாமல் இருக்கும் வெளி. அந்தரிக்ஷம். இந்த ஆகாசம் பிரம்மமே என்று சொல்கிறது இவ்வதிகரணத்தின் 9 சூத்திரங்கள்.

இந்த ஆகாசம் எப்போதும் உள்ள பொருளல்ல. பிரம்மத்தால் உண்டாக்கப்பட்டது. சாந்தோக்ய உபநிஷதத்தின் ஆறாம் அத்தி யாயத்தில் ஆகாசத்தின் தோற்றம் குறித்துச் சொல்லப்பட வில்லை. தைத்திரியத்தின் கருத்தான ஆகாசம் பிரம்மத்திலிருந்து தோன்றியது என்பது தள்ளிவிடுகிறது. அதேபோல், ஆகாசம் ஒரு கூட்டுப் பொருள் அல்ல (not made up of component parts). ஆகையால் அது தோன்ற முடியாது என்ற வாதமும் தவறானது. தோன்றும் பொருள் யாவும் கூட்டுப் பொருளே என்று நிரூபிக்கப்படுகிறது.

**2.3.1. ந வியத் அச்ருதே:**

*ஆகாசம் தோன்றுவதில்லை வேதம் (அதன் தோற்றத்தை) சொல்லாமையால்.*

இந்த சூத்திரம் வாதிக் கருத்தாகக் கொள்ளப்படுகிறது. சாந்தோக்யம், பிரம்மம் பலவாக ஆக நினைத்தது என்று உலகத் தோற்றத்தைச் சொல்லும் போது, முதலில் தேஜஸ் (ஒளி) தோன்றியது என்கிறது. ஆகாசம் இந்த தோற்றமான பொருள்களின் பட்டியலில் இல்லை.

**2.3.2. அஸ்தி து**

*ஆனால் ஆகாசத்திற்கும் தோற்றம் உண்டு.*

தைத்திரீய ஆனந்தவல்லி, பரமாத்மாவிடமிருந்து ஆகாசம் உண்டாயிற்று என்கிறது. ஜீவாத்மாவைப் போல, ஆகாசமும் கூட்டுப் பொருள் அல்ல. (அவற்றுக்கு அவயவங்கள் இல்லை) ஆகையால் தோற்றம் இல்லை என்று சொல்வது தவறு. ஜீவனுக்கு அவயவமில்லாததால் தோற்றம் இல்லை என்று கூற முடியாது. வேதம், ஜீவனுக்கு உற்பத்தி இல்லை என்பதால் மட்டுமே நாம் ஜீவனுக்குத் தோற்றம் இல்லை என்று நம்புகிறோம். அதற்கு அவயவங்கள் இல்லாததால் தோற்றம் இல்லை என்று சொல்வது

சரியில்லை. ஆகையால் தைத்திரீயம் ஆகாசத்தின் தோற்றத்தைச் சொல்லும்போது அப்படியே ஏற்போம்.

**2.3.3. கௌண்ய- ஸம்பவாத் சப்தாத் ச**

*(ஆகாசத்தின் உற்பத்தி பற்றி மேலே சொன்ன தைத்திரியக் கருத்து) முக்கியமில்லை (தீயை முதலில் படைத்ததாகக் கூறும்) சாந்தோக்யக் கருத்துக்கும் (ஆகாசம் அழி வில்லாதது என்று கூறும்) பிருகதாரண்யக் கருத்துக்கும் விரோதம் வந்துவிடும் என்பதால்.*

இதுவும் ஒரு வாதிக் கருத்து (பூர்வ பக்ஷ) சூத்திரம் ஆகும். தோற்றமும் அழிவும் எப்போதும் கூடியே வருவன. அழிவில்லை என்றால் தோற்றமும் இல்லை. ஆகையால் ஆகாசத்திற்குத் தோற்றம் கூறப்பட்ட தைத்திரீயக் கருத்துக்கு நாம் முக்கியத்துவம் தர வேண்டாம். இந்த சூத்திரமும் வாதியின் கருத்தைச் சொல்கிறது.

**2.3.4. ஸ்யாத் ச ஏகஸ்ய ப்ரஹ்ம- சப்தவத்**

*(தோன்றியது என்ற) சொல்லை சில இடங்களில் முக்கிய மானதாகவும் மற்றவிடங்களில் சாதாரணமாகவும் உபயோகிக்கலாம்.*

பிரம்மம் என்ற சொல் (இவ்வாறு இரண்டு வகையிலும்) உபயோகிக்கப்பட்டது போல.

தைத்திரீயம் 21-பிரம்மத்திலிருந்து ஆகாசம் தோன்றியது, ஆகாசத்திலிருந்து காற்று, காற்றிலிருந்து தீ- என்கிறது. ஆகாசம் தோன்றியது எனும்போது, தோன்றியது என்பதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டாம். ஆனால் காற்று, தீ முதலியன தோன்றின என்கையில், தோன்றியது என்பதற்கு முக்கியத்துவம் தரவேண்டும் என்பது எப்படிச் சரியாகும் என்றால், அந்தப் பரமாத்மாவிடமிருந்து பிரம்மம் எனப்படும் இந்த மூலப்பொருள் பிறக்கிறது என்னும் முண்டக உபநிஷத்தில் (1-1-10) முக்கியமில்லாத மூலப் பொருளை பிரம்மம் என்ற சொல் குறிக்கும்போது, அதே உபநிஷத்தில் (1-1-9) பிரம்மம் நிச்சயித்தது, என்னும்போது பிரம்மம் எனும் சொல் முக்கியமானதைக் குறிக்கிறது அல்லவா- அதுபோலே. இதுவும் வாதிக் கருத்தான பூர்வபக்ஷம்.



**2.3.5. ப்ரதிஜ்ஞா அஹாநி: அவ்யதிரேகாத்**

*(பிரம்மத்தை அறிந்தால் எல்லாம் அறிந்ததாகும் என்னும்) உபநிஷதச் சொற்கள் பொய்யாகாமல் இருக்க (பிரம்மத்தால் தோற்றுவிக்கப்பட்ட) ஆகாசம் பிரம்மமே.*

பிரம்மம் ஆகாசத்தைத் தோன்றுவித்தது. ஆதலால், ஆகாசம் காரியப் பொருள், பிரம்மம் காரணப் பொருள். பிரம்மத்தை அறிந்தால் பிரம்மத்தால் தோற்றுவிக்கப்பட்ட எல்லாப் பொருள் களையும் அறிந்ததாக (மண்ணை அறிந்தால், மண்ணால் செய்யப் பட்ட பானை முதலான எல்லாவற்றையும் அறிந்ததாகும்) என்பது உண்மையானால், ஆகாசம் பிரம்மமே.

**2.3.6. சப்தேப்ய:**

*வேதம் சொல்வதாலும் (ஆகாசம் தோன்றிய பொருளே)*

இங்கு சாந்தோக்ய உபநிஷத்தில் (6-2-1), முதலில் ஒன்றே, இரண்டில்லாமல், இருந்தது என்று காணும் வார்த்தைகள், பிரம்மம் ஒன்றேயிருந்தது எனும்போது, ஆகாசம் பிரம்மத்திலிருந்து தோன்றிய பொருள் என்பது குறிப்பு.

**2.3.7. யாவத் விகாரம் து விபாகோ லோகவத்**

*(ஆகாயம் முதலான) எல்லாப் பொருள்களும் தோன்றிய வையே. (ஒளி முதலிய) சிலவற்றைக் குறிப்பிட்டுச் சொன்னது, உலகவழக்கப்படி,*

இவர்கள் அனைவரும் தேவதத்தனின் பிள்ளைகள் என்று சொல்லிவிட்டு, அதில் சில பிள்ளைகளைப் பெயரிட்டுக் குறிப்பது உலகவழக்கு. அதுபோலவே ஆகாசம் குறிப்பிடாவிட்டாலும், அது தோன்றிய பொருள்தான்.

மேலும், வாயும் ஆகாயமும் அழிவில்லாதவை, எனும் பிருகதாரண்யக (4-3-3) வார்த்தைகளுக்கு விசிஷ்டாத்வைதி வசீகரமான விளக்கம் தருகிறார். இவையிரண்டும் தேவர்களைப் போலே. அனைத்துக்கும் முன்பாகத் தோன்றி எல்லாம் அழிந்தபின் அழிபவை. வெகுகாலம் இருப்பவைகளை அழிவில்லாதன என்று மிகைப்படுத்துவதுபோல. இந்த விளக்கம் இல்லாவிடில், அழிவில்லாத ஒன்று எப்படித் தோன்றக் கூடும்? நவீன

காஸ்மாலஜியும் (Cosmology) வெளி (Space) என்பது தோன்றியதே என்று சொல்கிறது. பெரும் வெடிப்புக்கு (Big bang) முன் வெளி-காலம் (Space-time) எனும் துவந்துவப் பிணைப்பு (இரட்டைத் தன்மை) இல்லை. ஆகையால் பெரும் வெடிப்புக்குப் பின் அது தோன்றியது என்கிறார்கள்.

**2.3.8. ஏதேந மாதரிச்வா வ்யாக்யாத:**

*காற்றும் அதேபோல (ஆகாயம் போலவே) தோன்றியதே.*

காற்றும் பிரம்மத்தின் காரியப் பொருள்.

**2.3.9. அஸம்பவஸ்- து ஸதோ அநுபபத்தே:**

*தோன்றுதல் இல்லாமை பிரம்மம் ஒன்றுக்கே பொருந்தும் (மற்றைய உண்டான பொருள்களுக்குப் பொருந்தாது) இல்லாவிடில், வேதம் சொன்னது சரியில்லை என்றாகி விடும்.*

காரணப் பொருள் ஆன பிரம்மத்திலிருந்து தோன்றிய பொருள்கள் (காரியப் பொருள்கள்) பல. ஆகாயமும் அதில் ஒன்று. அதற்குத் தோன்றுதல் இல்லை என்று கொண்டால், இதை அறிந்தால் எல்லாம் அறியப்பட்டதாகும் எனும் வேதமொழி பொய்யாகி விடும். இங்கு எல்லாம் என்பது காரியப் பொருட்கள். இதில் காரண- காரிய சம்பந்தம் சொல்லப்படுகிறது.

ஆகாசம் பிரம்மத்திலிருந்து உண்டான பொருள், அதாவது, ஆகாசம் முதலான உயிரற்ற பொருள்களெல்லாம் என்பது குறிப்பு.

தீ முதலியன பிரம்மத்தின் காரியப் பொருளே.

**2.3.10. தேஜோ அத: ததா ஹி ஆஹ.**

*தீ (வாயு அல்லது காற்றிலிருந்து) உண்டானது என வேதம் சொல்கிறது.*

இது வாதியின் சூத்திரம். பிரம்மம், தீ போன்றதற்கு நேரடிக் காரணம் இல்லை. தாத்தா பேரனுக்கு நேரடிக் காரணம் இல்லை, அதே போல, தைத்திரீய உபநிஷத்தில் (1-2) வாயுவிடமிருந்து அக்னி தோன்றியது என்று காண்கிறது.



**2.3.11. ஆப:**

*நீரும்*

நீர், தீயிலிருந்து உண்டானது (சாந்தோக்யம் 6-2-3)

**2.3.12. ப்ருதிவீ**

*நிலமும்.*

நீரிலிருந்து நிலம் உண்டானது (சாந்தோக்யம் 6-2-4)

**2.3.13. அதிகார- ரூப-சப்தான்தரேப்ய**

*உணவும் நிலத்தின் (காரியப்) பொருளே என்கிறது வேதம்.*

இது சாந்தோக்யத்தில் (6-4-1) வருகிறது. உணவு கருப்புநிறம் என்கிறது. எல்லாமே கரி (Carbon) தானே.

**2.2.14. ததபித்யாநாத் ஏவ தல்- லிங்காத் ஸ:**

*(தானே பலவாகிறேன் என்னும்) பிரம்மத்தின் அடையாளங் களாலே எல்லாப் பொருட்களுக்கும் பிரம்மமே நேரடிக் காரணம். இதற்குமுன் நாலு சூத்திரங்களில் சொன்ன வாதிக் கருத்துக்களுக்கு விடை இதோ.*

பிரம்மம் பொருட்களின் அப்பா, தாத்தா இல்லை. அதுவே சொல்கிறது, நானே பலவாகிறேன், என்று. இந்த அடையாளத்தின் மூலம், முன்பு சொன்னது போலவே, நினைத்தது, என்ற சொல், தீ, நீர், நிலம் போன்ற உயிரற்ற பொருட்களுக்கும் பொருந்தாது. ஆகவே, காணும் பொருட்கள் யாவும் பிரம்மத்தின் நேரடிக் குழந்தைகள் ஆகும்.

**2.3.15. விபர்யயேண து க்ரம: அத: உபபத்யதே ச**

*வரிசை மாறுபடுவதால் பிரம்மத்திலிருந்தே ஒவ்வொன்றும் உண்டாகிறது என்றே கொள்ளவேண்டும்.*

வேறு ஒரு இடத்தில் வேதம், மஹத்து, அஹங்காரம், ஆகாசம், என்று ஒன்றன்பின் ஒன்றாக (பிரம்மத்திலிருந்து) தோன்றினதாக கூறுகிறது. முன் சொன்ன தீ, நீர், நிலம் என்னும் வரிசைக்கு இது

மாறுபடுகிறது. இரண்டுக்கும் பொருந்துவதாக, பிரம்மமே எல்லாப் பொருட்களுக்கும் நேரடிக் காரணம் என்றே கொள்ள வேண்டும்.

**2.3.16. அன்தரா விஜ்ஞாந- மநஸீ க்ரமேண தல்-லிங்காத், இதிசேத், ந/அவிசேஷாத்**

*அறிவும் மனமும் தோற்றத்தின் வரிசையில் பிராணனுக்கும் (உயிர் மூச்சுக்கும்) ஐம்பெரும் பூதங்களுக்கும் இடையே இருப்பதால், அதுவே தோற்ற வரிசை என்றால், அவ்வாறல்ல- வேறுபாடு இல்லாததால்.*

முண்டக உபநிஷத்தில் மேலே கூறிய வரிசை காண்கிறது. இங்கு முதலில், ஏதஸ்மாத் ஜாயதே, பிரம்மத்திலிருந்து உண்டாகிறது. என்று சொல்லிவிட்டு பிராணன், மனம், அறிவு முதலியவை வரிசைப் படுத்தப்படுகின்றன. ஆகவே, பிரம்மத்திலிருந்து உண்டா கிறது, என்ற முதல் வாக்கியத்தை, வரிசையில் உள்ள ஒவ்வொரு பொருளுக்கும் வேறுபாடு இல்லாமல் சேர்த்துப் படிக்க வேண்டும்.

அடுத்த சூத்திரம், நாம் உலகில் பொருள்களின் பெயரையிட்டே அழைக்கிறோம். இப்படி வழக்கு இருக்க, அப்பொருட்கள் பிரம்மத்தையே குறிக்கும் என்று எவ்வாறு சொல்லலாம்? என்ற சந்தேகத்துக்கு விடை தருகிறது.

**2.3.17. சராசர- வ்யபாச்ரய- ஸ்-து ஸ்யாத் தத்- வ்யபதேச: அபாக்த: தத்-பாவ- பாவித்வாத்.**

*பிரம்மமானது, பொருட்கள், அவற்றின் பெயர்கள் முதலிய குறியீடுகள் ஏற்படும் முன்பே அவற்றின் உள்ளே உறைவதால், பிரம்மமே முக்கியம் (பெயர்கள் அல்ல) என்கிறார்கள் வேதமறிந்தவர்கள். வேதமறியாதவர்கள் (சாதாரண அறிவாளர்கள்) உள்ளுறையும் பிரம்மத்தை உணராமல், பொருட்களின் பெயருக்கு மட்டுமே முக்கியத்துவம் தருகிறார்கள். ஆனால் இது முக்கியமல்ல.*

பெரிய சூத்திரம் இது. விளக்கமில்லாமலேயே உங்களுக்குப் புரிந்திருக்கும். வேதாந்திகளைப் பொறுத்தவரை, புலப்படாத



பிரம்மமே முக்கியம், புலப்படும் தீ, நீர், உலகம் முக்கியமல்ல. எவ்வளவு ஆச்சரியமான கருத்து!

*ஓரே ஒரு சூத்திரம் கொண்ட இந்த அதிகரணம் மிக முக்கியமானது.*

'ஆத்மா' என்று கூறப்படுவது எது?- ஜீவாத்மாவா, பரமாத் மாவா? அதன் அடையாளங்கள் என்ன என்பதெல்லாம் ஆராயப் படுகிறது இனிமேல். சங்கரருக்கும், ராமாநுஜருக்கும் உள்ள அடிப்படை வேறுபாடு அவர்களின் (இந்த சூத்திரத்தின்) விரிவுரை களில் நன்றாகத் தெரிகிறது. இந்த சூத்திரமும் இதை அடுத்து வரும் சூத்திரங்களும், ஜீவனைப் பற்றி வேதம் சொல்லும் முக்கியக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டவை. அவைகளை நாம் கவனமாகவும், நிதானமாகவும் படிக்க வேண்டும்.

சூத்திரம் ஒன்றுதான், வியாக்கியானங்கள் வேறு.

**2.3.18. ''நாத்மா ச்ருதேர் நித்யத்வாச்ச தாப்ய:''**

*வேதம், ஆத்மா உண்டாவதில்லை, அழிவதில்லை என்கிறது!*

மிகவும் சுலபமாகத் தோன்றினாலும், ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய சூத்திரம் இது. ஆத்மா எப்போதும் உள்ளது என்றால், அது பிரம்மமா? சங்கரர், 'ஆம்' என்கிறார். ராமாநுஜர் 'ஜீவனுக்கு (ஜீவன்= ஆத்மா) பிரம்மம் காரணமாகிறது என்கிறார். இங்கே காரணம் என்பது நிலைமாற்றம். உயிரின் தர்மபூத அறிவின் விரிவாக்கிய நிலை. அவர்கள் எடுத்துக்காட்டும் உபநிஷத மேற்கோள்கள் பின்வருமாறு:

1. முதலில் பிரம்மமே இருந்தது, இரண்டில்லாமல் (சாந்தோக்யம்)

2. ஐந்து பூதங்களோடு பரமாத்மா ஜீவர்களைப் படைத்தான் (தைத்திரீயம்)

3. பிரஜாபதி (பிரம்மா) பிரஜைகளை உண்டாக்கினார் (யஜுர்வேதம்)

மேலே சொன்ன வாக்கியங்கள் ஜீவனுக்கு (ஆத்மாவை ஜீவன் என்று கொண்டால்) உற்பத்தி அல்லது தோற்றம் உண்டு என்கின்றன.

4. அறிவுள்ள ஜீவன் பிறப்பதில்லை, இறப்பதில்லை (கட உபநிஷத்து)

5. எல்லாம் அறிந்த பிரம்மமும், அறிவில்லாத ஜீவனும் பிறப்பற்றவர்கள் (சுவேதாசுவதரம்)

6. நித்தியமான பல உயிர்களுக்கு நித்யனான ஒருவன் விருப்பங்களைத் தருகிறான் (சுவேதாசுவதரம்)

7. பிறப்பற்ற, நித்தியனான, எல்லாம் அறிந்த பழமையான இந்த ஜீவன், உடல் அழியும் போது அழிவதில்லை (கட உபநிஷத்து)

இப்போது முரண்பாடு தெரிகிறதா? உற்பத்தி அல்லது தோற்றம் இல்லாத ஜீவன் எப்படி காரண பிரம்மத்தின் விளைவு ஆகும்?

நிகழ்வும் விளைவும் (Cause and effect) எப்படி ஒன்றாகும்?

சங்கரருக்கு, தன் ஒருமைக் கோட்பாட்டை (monism) நிறுவும் வாய்ப்பாக இந்த சூத்திரம் பயன்படுகிறது. அவரின்படி, இங்கே ஆத்மா எனப்பட்டது, முதற்காரணமான பிரம்மமே. அது காரியப் பொருள் அல்ல. கடந்த, நிகழ், எதிர் காலங்களை உணரும் ஆத்மா, காலத்திற்கு அப்பாற்பட்டது. அது காலத்திற்கு அப்பாற்படா விட்டால், கடந்த, நிகழ், எதிர்காலங்களின் 'வரிசையை' உணர முடியாது. (unless atma is beyond time, it cannot experience the succession of time) காலத்துக்கு அப்பாற் பட்டதால்தான் காலத்தின் வரிசையை உணரமுடியும். காலத்தைக் கடந்த ஆத்மா, காரியப் பொருட்களுக்கு அப்பாற்பட்டது. 'தத்வமஸி- சுவேத கேது'- நீ அதுவாய் இருக்கிறாய், அபேதமே உண்மை.

ராமானுஜர், மேலே சொன்ன எல்லா உபநிஷத வாக்கியங் களையும் உண்மை என்று கொண்டு சமன்படுத்துகிறார். பிறப்பில் லாத ஜீவனும் (ஆத்மாவும்) பிரம்மத்தின் காரியப் பொருள்தான், விளைவுதான் ஜீவனுக்குப் பிறப்பு என்பது, ஸ்வரூப (தோற்றத்தில்) மாற்றமில்லை, அதன் பொருள்களைப் பற்றிய அறிவின் (தர்ம பூத ஞானத்தின்) விரிவு இது, அதன் தன்மையில் வேறுபாடு. சரி, முதலில் ஒன்றேயாக இருந்தது என்னும் போது ஜீவன் என்ன ஆயிற்று என்றால், அந்நிலையில் அதற்குப் பெயர், உருவம் கிடையாது.

உற்பத்தி எனும் நிகழ்வு ஜீவன் உடலோடு சேர்தல் ஆகும். அதன் தர்ம பூதஞானத்தின் அறிவின் விரிவு.

அழிவு (இறப்பு)- உடலின் அழிவு-தர்ம பூத ஞானத்தின் சுருக்கம். மறுபடி அது பழைய நிலைக்கு வந்துவிடும். ஆகவே, ஜீவனுக்கு அதன் அடிப்படை இயற்கையில் தோற்றமோ, மாறுதலோ, அழிவோ இல்லை. அதன் அறிவில் மட்டும் விரிவும், சுருக்கமும் உண்டு. அவற்றையே, அதன் பிறத்தல், இறத்தல் என்கிறோம். இது, ராமானுஜர்.



எந்தக் கோட்பாடு சரி என்று தோன்றுகிறது உங்களுக்கு?

நாங்கள் எழுதியதைப் படித்தால் மட்டும் போதாது. இந்தக் கருத்துகளை, நல்ல படிப்புள்ள, மெய்யுணர்வு பெற்றவர்களிடம் அணுகிக்கேட்டு உணரவேண்டும். அதே உபநிஷத் வாக்கியங்கள் தாம். வியாக்கியானம் தான் வேறு.

*அறிவின் உருவம் ஜீவன்.*

**2.3.19. ஜ்ஞோ அத ஏவ**

*ஆத்மா, அறிவை உடையவன் என்கிறது வேதம்.*

அறிவே உருவெடுத்ததாக உள்ளதா ஜீவன் அல்லது அறிவைக் குணமாகக் கொண்ட ஜடஉருவா? தூங்கும்போது, மூர்ச்சை நிலையில், ஜீவனுக்கு இயற்கையாக அறிவு இல்லை. முக்திநிலை அடையும் போது, ஜீவனுக்கு அறிவு போய் விடுகிறது என்கிறது பிருகதாரண்யகம். ஆனால் உண்மையில், ஜீவனுக்கு இரண்டுமே உண்டு. பிருகதாரண்யகம், 'அறிவே உருவெடுத்த ஜீவன், காண்பவனாய், கேட்பவனாய், நுகர்பவனாய், அறிபவனாய் இருக்கிறான்' என்கிறது.

ஜீவன் ஜடம் அல்ல. இயற்கையாகவே அதற்கு அறிவு உருவம். புலன்கள் மூலம் உலக அறிவும் ஏற்படுகிறது.

**2.3.20. உத்க்ரான்தி- கத்யா- கதீனாம்**

*(உடலிலிருந்து) வெளியேறுதலும், உட்புகுதலும் ஆத்மாவிற்கு உண்டு என்று வேதம் கூறுவதால் (அது அணுவே)*

இங்கே ஆத்மாவின் அணுவடிவம் கூறப்படுகிறது. பிருக தாரண்யகம், ஆத்மா கண் மூலமாவது, தலை மூலமாவது அல்லது உடலின் மற்ற எந்த உறுப்பு மூலமாவது வெளிச் செல்கிறது என்கிறது. (இறக்கும்போது)

மேலும் கர்மம் செய்ய இவ்வுலகுக்குத் திரும்பி வருகிறது என்கிறது. ஆகவே, அது எங்கும் பரந்ததல்ல (பிரம்மம் போல்) அது அணுவடிவானது என்பது குறிப்பு. மறுபிறவியின் ஆதாரக் கருத்துகள் இவை.

**2.3.21. ஸ்வாத்மநா ச உத்தரயோ:**

*செல்லுதல், திரும்புதல் ஆகிய செயல்பாடு ஆத்மா அணு வடிவாக இருந்தால் மட்டுமே முடியும். (ஆகவே அது எங்கும் பரந்ததல்ல)*

மேல் உலகுக்குச் செல்லுதல், அங்கிருந்து திரும்புதல் என்ற வகையில் இங்கும் அங்கும் செல்வது ஆத்மாவின் செயல்பாடு. அதற்கு அது அணுவடிவமாகவே இருக்க வேண்டும் (பிரம்மம் போல பரந்தது அல்ல.)

**2.3.22. ''நாணு: அதச் ச்ருதே: இதி சேத் ந, இதராதிகாராத்''**

*வேதம், ஆத்மா பரந்தது என்று கூறுகிறதே என்றால், அப்படிச் சொல்லப்பட்டது பிரம்மமே.*

பிருகதாரண்யக உபநிஷத்தில், ஆத்மா பெரியவனாக இருப்பவன் என்கிறதே, ஆத்மா எப்படி அணுவாகும் என்றால், அந்த இடத்தில் (6.4.15) இந்த உடலில் ஜீவனுக்கு ஆத்மாவாக பிரமன் இருக்கிறான் என்று கூறப்பட்டதால், குறிப்பிடப்பட்டது பரமாத்மாவே. ஜீவன் அல்ல. சங்கரர் வேறுவிதமாக, பரந்துள்ள ஆத்மா உடலோடு சேர்வதால் அணுத்தன்மை பெறுகிறது என்கிறார்.

**2.3.23. ''ஸ்வ- சப்தோன்- மானாப்யாம் ச''**

*ஜீவன் அணு என்றும், அதன் அளவையும் கூறுகிறது, வேதம்.*

முண்டக உபநிஷத்து (3.19) ஜீவாத்மா அணு என்கிறது. சுவேதா சுவர உபநிஷத்து (5-9) நெல்லின் நுனியின் நூறில் ஒரு பங்கை நூறு கூறிட்ட பகுதியின் ஒரு பகுதி என்று அளவு சொல்கிறது.

'சாணிலும் உளன் அணுவைச் சத கூறிட்ட
கோணிலும் உளன்'



என்று கம்பர் சொன்னதை நினைவுகூரலாம். ஆனால் அவர் கடவுளைப் பற்றி இவ்வாறு கூறினார்.

**2.3.24. அவிரோத: சந்தன-வத்**

*உடலின் ஒரு பகுதியில் சந்தனம் பூசினால் அதன் ஆனந்தம் உடல் முழுவதும் பரவுவது போலே.*

அணுவான ஜீவாத்மா, எப்படி உடல் முழுவதும் கொண்டு அழகான உணர்ச்சிகளை அனுபவிக்கிறது என்பதற்கு அழகான இது உதாரணம்.

**2.3.25. ''அவஸ்த்திதி- வைசேஷ்யாத் இதி- சேத்-ந. அப்யுபக மாத் ஹ்ருதி ஹி''**

*சந்தனம் உடலின் ஒரு பகுதியில் உள்ளது- ஜீவாத்மா அது மாதிரி ஒரு பகுதியில் இல்லையே என்றால், அது பொருந்தாது. ஜீவன் இதயத்தில் உள்ளது என்கிறது வேதம். பிருகதாரண்யகம் (6-3) இவ்வாத்மா இதயத்தில் இருக்கிறான் என்கிறது. இதயம் என்பது இயக்கத்தின், உயிரின் அடையாளம்.*

**2.3.26. குணாத் வா ஆலோகவத்**

*(சூரியனின்) கிரணங்கள் போலே, அறிவின் மூலம் ஜீவாத்மா பரவுகிறான் (உடல் முழுவதும்).*

இதயத்தில் உள்ள ஜீவன் எவ்வாறு உடல் முழுவதும் பரவி செயல்படுகிறது என்ற கேள்விக்கு இது விடை. அத்வைதத்தின்படி அறிவு/ அறிதல் என்பது உணர்தல். ஆத்மா (Consciousness). உணர்தல் ஆத்மாவின் குணம் (Attribute) அல்ல. அதுவே ஆத்மா.

**2.3.27. வ்யதிரேகோ கந்தவத்ததா ச தர்சயதி**

*மணமும் பூமியும் வேறுபடுவது போல, புனறிவும் ஆத்மாவும் வேறுபடுகிறது என்கிறது வேதம்.*

இந்தியத் தர்க்க ஞானத்தின்படி, மணம் என்ற குணம், தன்மை, பூமிக்கு மட்டுமே உள்ளது. ஆனால், அந்தக் குணமே பூமியிலிருந்து

வேறுபட்டது. மணம் பூமி அல்ல. அதே போல, நம் புலன்கள் மூலம் ஏற்படும் அறிவு (தர்ம பூத அறிவு) ஜீவனின் குணம் அதனிட மிருந்து வேறுபட்டது. பிருகதாரண்யகம் (6330) 'இப்புருஷன் அறியவே செய்கிறான்' என்கிறது.

**2.3.28. ப்ருதக் உபதேசாத்**

*வேறாகவே சொல்லப்படுவதால்.*

பிருகதாரண்யகம் (6.3.30) 'அறிபவனான ஆத்மாவினுடைய அறிவுக்கு அழிவில்லை' என்னும்போது, ஆத்மாவும் அறிவும் வேறுபடுத்தப்படுகின்றன. ஆகையால் ஆத்மாவும், (தர்மபூத ஞான) அறிவும் வேறுவேறு.

**2.3.29. ''தத் குண ஸாரத்வாத் து தத் வ்யபதேச: ப்ராஜ்ஞவத்.''**

*ஆத்மா அறிவாகவே இருக்கிறது என்று வேதம் சொல்கிறதே என்றால், அதற்கு விளக்கம் இதோ.*

பரமாத்மா ஆனந்த குணத்தை உடையதால், (அது) ஆநந்தம் என்று கூறப்பட்டது போலே, இங்கே ஆத்மா (ஜீவாத்மா) வை அறிவு என்று குறிக்கலாகிறது.

**2.3.30. ''யாவத் ஆத்மபாவித்வாத் ச ந தோஷ:- தத் தர்சனாத்''**

*ஆத்மா உள்ளவரை அறிவும் அதனுடன் இருக்கிறது.*

பசு இருக்கும் வரை, பசுத்தன்மை அதனுடன் இருப்பது போல ஆத்மாவை அறிவு என்பதில் குறையில்லை.

**2.3.31. ''பும்ஸ்த்வாதிவத் து அஸ்ய ஸதோ அபிவ்யக்தி யோகாத்''**

*மனிதனுக்கு சமயம் வரும்போது ஆண்மை வெளித் தோன்றும். ஆயினும் அது எப்போதும் உள்ளதே, அவ்விதமே இந்தப் புனலறிவும் ஆத்மாவிற்கு எப்போதும் உள்ளது.*



தூங்கும்போது புலனறிவு (தர்மபூத அறிவு) வெளிப்படா விட்டாலும், அது ஆத்மாவுடன் எப்போதும் உள்ள ஒன்று என்றே கொள்ள வேண்டும்.

**2.3.32 நித்ய உபலப்தி அநுபலப்தி ப்ரஸங்க: அந்யதர நியமோ வா அந்யதா**

*ஆத்மா எங்கும் பரந்துள்ள அறிவே வடிவானது (அது அணு, தர்மபூத அறிவைக் குணமாகக் கொண்டது என்பதற்கு எதிர்மறை) என்றால், தோற்றமும் தோற்ற மின்மையும் எப்போதும் நிகழ வேண்டிவரும். அல்லது, தோற்றமோ,தோற்றமின்மையோ (ஏதாவது ஒன்று) எப்போதும் நிகழவேண்டிவரும்.*

சிக்கலான சூத்திரம், எளிமையாக்க முயற்சிக்கிறோம்.

ஆத்மா ஞான ரூபமானது என்கிறது சாங்கியம். ஆத்மா எங்கும் பரவியுள்ளது என்கிறது வைசேஷிகம். இந்த சூத்திரம் இவ்விரு கருத்துக்களுக்கும் எதிர்ப்பு கூறுகிறது.

ஒரு பொருளைப் பார்க்கிறோம், பார்க்காமல் இருக்கிறோம். ஆத்மாவே இரண்டையும் செய்கிறதா?

அப்படியெனில் எப்போதும் அது நிகழ வேண்டும்.

பார்ப்பதும், பார்க்காமல் இருப்பதும் இரண்டில் ஒன்று Choice ஆக நிகழ்வதற்கு வாய்ப்பில்லை. ஆனால், இரண் டில் ஒன்றுதான் நிஜம். பார்க்கிறோம் அல்லது பார்ப்பதில்லை, நம் ஆத்மாதான் பார்க்கிறது என்றால், ஆத்மா எங்கும் பரவியது என்றால், இந்த உலகம், முழுவதும் நான் என்று உணர வேண்டும்.

அப்படியில்லை நம் உடலை மட்டுமே நான் என்று உணர்கிறோம்.

சற்றுக் குழப்பமாக இருக்கிறதல்லவா?

'நான் எனும் பொய்யை நடத்துவோன் நானே' என்று பாடிய பாரதியின் குழப்பம் இது.

Subjective, objective அகம்- புறம்- மனம். உடல் இவைகளின் அனுபவங்களிடையே ஏற்படும் குழப்பம் இது.

மறுபடி நிதானமாகப் படித்துப் பாருங்கள்.

**(5) செயல் புரிபவன் ஆத்மா**

**2.3.33. கர்த்தா சாஸ்த்ரார்த்தவத்வாத்...**

*வேதம் உண்மையென்றால், ஆத்மா செயல்படுபவன் ஆகின்றான்.*

இனிவரும் சூத்திரங்களைக் கவனமாகப் படிக்க வேண்டும். இங்கே, செயல்படுதல் (Ability to act) என்பது ஆத்மாவுக்குக் கொடுக்கப்பட்ட (Agency Function) சக்தியாகும். அதன் இயல்பான (Inherent Function) சக்தியல்ல என்று கூறப்படுகிறது. இதுபற்றி இன்னும் வரும்.

மேலே ஜீவனின் அறிவு மற்றும் அணுத்துவம் பற்றிக் கூறியபின், இங்கு அதன் செயல்படுதல் பற்றிக் கூறுகிறார். கடோபநிஷத்து (2-18) உடலின் தன்மைகளான பிறப்பு, இறப்பு ஆகிய செயல்பாடுகள் ஜீவனுக்கு இல்லை என்கிறது. ஆகவே, துன்புறுத்துபவன் தன்னைத் துன்புறுத்துவோனாக எண்ணினாலும், துன்புறுவோன் தான் துன்புறுவதாக நினைத்தாலும், இரண்டுமே தவறாகும். முன்னவன் துன்புறுத்தவுமில்லை, மற்றவன் துன்புறவு மில்லை என்கிறது ஸ்ரீமத் பகவத்கீதை (3-27). நானே செய்பவன் என்று பலர் மயங்குவர் என்னும் அறியாமையை எடுத்துப் பேசுகிறது.

இந்நிலையில் ஜீவனுக்கு செயல்படும் சக்தியினை எப்படி ஏறிடமுடியும்? அவ்விதம் அல்ல. வேதம், ''யாகம் செய், வணங்கு'' என்று கட்டளைகளை ஜீவனுக்கே இடுகிறது. (அதாவது, இக்கட்டளை அறிவுள்ள ஜீவனுக்கே ஆகிறது. அறிவற்ற ஜடப்பொருளான தனித்த உடலுக்கல்ல) மேற்சொன்ன உதாரணங்கள் ஜீவாத்மா அழிவில்லாதது என்று அறுதியிட வந்தவையே. (அழிவது, துன்புறுவது இதெல்லாம் ஆத்மாவை ஒட்டாது.) ஸ்ரீமத் பகவத்கீதையும் (18-14) ஜீவனையே கர்த்தா என்கிறது.

**2.3.34. உபாதாநாத் விஹாரோபதேசாத் ச.**
**ஏதான் ப்ராணான் க்ருஹீத்வா ஸ்வே சரீரே ப்ரவர்த்ததே**

*ஜீவன் புலன்களைப் பற்றிக்கொண்டு இங்குமங்கும் செல்கிறது என்று வேதம் சொல்வதால்.*



புலன்களின் உதவியுடன் ஜீவன் இஷ்டப்படி செல்கிறது என்கிறது பிருகதாரண்யகம் (2-1-18). ஆகவே ஜீவன் செயல்படு பவன் என்றாகிறது. சங்கரர் இதை இரண்டு சூத்திரங்களாகக் கொள்கிறார்.

**2.3.35. வ்யபதேசாத் ச க்ரியாயாம் ந சேத் நிர்தேச- விபர்யய:**

*வேதம் ஜீவனை 'செய்பவனாகக்' கூறுகிறது. அங்கே அறிவு என்ற சொல் ஜீவனைக் குறிக்கிறது. இல்லாவிடில் **அறிவினால்** என்று மூன்றாம் வேற்றுமைச் சொல் வந்திருக்கும்.*

தைத்திரீய உபநிஷத்தில் (ஆநந்தவல்லி 5-1) அறிவானது, யாகம் ஆகிய செயல்களைச் செய்கிறது என்று காண்கிறது. இங்கே அறிவு என்று ஜீவனையே குறிக்கிறது. அவனே செயலாளி.

**2.3.36. உப- லப்திவத் அநியம:**

*தோற்றத்திற்குச் சொன்னது போலவே (ஜீவனுக்குச் செயல் படும் தன்மை இல்லையென்றால்) நடைமுறைக்கு ஒத்துவராது.*

இங்கே 2-3-32 சூத்திரத்தில் சொன்ன கருத்து மீண்டும் கை வருகிறது. அதைச் சற்றுத் திரும்பப் பார்த்தபின் மேலே படிக்கவும். செயல்படும் தன்மை ஜடப்பொருளான உடலுக்கே, அல்லது மூலப்பொருளுக்கே உரியது என்று சொன்னால், மூலப்பொருள் எல்லா ஜீவன்களுக்கும் பொதுவானது, ஆகையால் செயல்களின் மூலம் வரும் பலன்கள், அனைத்து ஜீவன்களையும் சேரும். அவ்விதமே, எல்லா ஜீவாத்மாக்களுமே எல்லா கர்மபலன்களை யும் அநுபவிக்க நேரும். இதுதான் முரண்பாடு. நடைமுறைக்கும் ஒவ்வாது. ஆகவே, செயல்படுபவன் ஜீவனே என்பது குறிப்பு. சங்கரர் இதைக்கொண்டு ஜீவனுக்குச் செயல்பாட்டு சுதந்திரம் உண்டு என நிரூபிக்கிறார்.

**2.3.37. சக்தி- விபர்யயாத்**

*மூலப்பொருளுக்கு 'செயல்படுதல்' உண்டு என்றால், அதுவே பலனையும் அநுபவிக்கும் என்றாகும்.*

செயல்படுவதும் செயலின் பலனை அநுபவிப்பதும் ஒன்றேயாக இருக்க முடியும்.

**2.3.38. ஸமாத்/ யபாவாத் ச**

*சமாதி நிலை (உடல்/ மூலப் பொருளுக்கு) அமையாதாகையாலும் (ஜீவனுக்கே செயல்படுதல் என்பது பொருந்தும்).*

யோகநிலையின் இறுதி சமாதி. மோட்சம் சேர முன்னம் சமாதியென்னும் நிலையை அடையவேண்டும். மோட்சம் அடைவது ஜீவனே என்பதால் செயல்படுபவன் ஜீவனே.

**2.3.39. யதா ச தக்ஷ- உபயதா**

*(ஜீவன் தச்சன் போலவே செயல்படுகிறான்).*

உரையாசிரியர்கள் இரண்டுவிதமாகப் பொருள் கொள்கிறார்கள். சங்கரர் இத்தகைய செயல்புரியும் தன்மை ஆத்மாவுக்கு நிஜமாகவே (தனக்கேயாகவே) உள்ளதா அல்லது தோற்றமா (உடல் சம்பந்தத்தால் வந்த ஒட்டுத் தன்மையா) என்று கேட்டுக் கொண்டு, பிருகதாரண்யகத்தில் (4-3-15) ஆத்மா எதிலும் ஒட்டாதது என்பது கொண்டு செயல்படுதல் ஆத்மாவுக்கு நிஜமாக இல்லை என்கிறார். தச்சன் தனது உளி முதலியன கொண்டு செயல்பட்டு கஷ்டப்படுவது போலே என்கிறார். இது அவ்வளவு சரியாகப்படவில்லை.

இதனில் வேறாக, தச்சன் இஷ்டமிருந்தால் வேலை செய்வான், இல்லாவிடில் செய்வதில்லை. அதுபோன்றே அறிவுள்ள ஜீவனுக்குச் செயல்படுதல் என்ற தன்மை கொடுக்கப்பட்டதாயினும், ஜீவன் தன் விருப்பம் போலவே செயல்படுகிறது என்கிறார் ராமாநுஜர், இது சுதந்திரமான நினைப்பு (Free Will) உண்டு என உறுதிப்படுத்தும் முக்கியமான கருத்தாகும்.

**(6) பிரம்மத்தால் கொடுக்கப் பட்டது 'செயல்படுதல்'**

**2.3.40. பராத் து தத் ச்ருதே:**

*ஆனால் அச் செயல்பாடானது பிரம்மத்திடமிருந்தே.*



ஜீவனுக்குச் செயல்படும் தன்மை சுதந்திரமாக உள்ளதா அல்லது பிரம்மத்துக்குக் கட்டுப்பட்டு உள்ள தன்மையா? என்று கேள்வி. வேதம் 'இதைச் செய்' அல்லது, 'அதைச் செய்யாதே' என்னும் போது, ஜீவனுக்கு முழுமையான செயல்பாட்டுச் சுதந்திரத் தன்மை உண்டு போலத் தோன்றுகிறது அல்லவா? ஆனால், அவ்வாறல்ல. தைத்திரீய ஆரண்யகம் (3-11-10) பகவான் உயிர்களின் உள்ளுறைந்து நியமிக்கிறான் என்கிறது. அதன்படி, செயல்படும் தன்மையும் பிரம்மத்தின் நியமனமே. (இங்கே, 'ஆனால்' என்ற சொல் மேலே சொன்ன வாதியின் கருத்தை மறுக்கிறது).

**2.3.41. க்ருத- ப்ரயத்நா / பேக்ஷ- ஸ்து விஹித- ப்ரதிஷித்த- வையர்த்யாதிபி:**

*(ஜீவனின்) முயற்சிக்குத் தக்கபடி (பிரம்மம் ஜீவனை) செயல்படுத்துகிறது- (வேதத்தின்) ஆணைகளோ தடைகளோ பொய்க்காதிருக்கவே.*

மிக முக்கியமான கருத்து கூறப்படுகிறது. இதனைப் *பராயத்தா திகரணம்* என்று குறிப்பர்.

வேதம், 'இதைச் செய்' என்றும், 'அதைச் செய்யாதே' என்றும் (தருமம் செய், திருடாதே என்பது போல) விதித்தோ தடுத்தோ பேசும் பேச்சானது பொருள் பட வேண்டுமாயின், ஜீவனுக்குச் செயல்புரியும் சுதந்திரம் தேவைப்படும். (பிரம்மமே எல்லாச் செயல்பாட்டுக்கும் பொறுப்பு என்றால், 'செய்' அல்லது 'செய்யாதே' எனும் கட்டளைகள் எவர்க்காக என்ற கேள்வி வருமல்லவா?)

எவ்வாறாயினும், பிரம்மத்தின் அனுமதியின்றி அணுவும் அசையாது. ஆனால், ஜீவனுடைய முதல் முயற்சியில் மட்டும் பிரம்மம் சுதந்திரம் அளித்துள்ளது. ஓர் உயர் அதிகாரி, தனது அதிகாரத்தைத் தனக்குக் கீழ்ப்பட்ட இளம்நிலை அதிகாரிக்கு நியமித்துக் கொடுப்பது போன்று இது அமையும். ஆக, பிரம்மம் ஜீவனின் முதல் முயற்சிக்கு அனுகூலமாக அவனைச் செயல் படுத்துகிறது. சங்கரர் ஒருபடி மேலே சென்று, பிரம்மம் ஜீவனின் கர்மத்துக்கு ஏற்றபடி செயல்படத் தூண்டுகிறது என்கிறார். அரசனுக்கு அனைத்துவகை செயல்பாட்டுச் சக்தி இருந்தாலும், குற்றவாளிக்கு ஏற்பட்ட தண்டனையில் குறுக்கிடுவதில்லை

அல்லவா? இங்கே 2-1-34, 35 சூத்திரங்களையும் திரும்பிப் பார்க்க வேண்டுகிறோம்.

**(7) ஜீவன் பிரம்மத்தின் பகுதி போலே.**

**2.3.42. அம்சோ நாநா- வ்யபதேசாத், அந்யதா சா / பி தாச- கிதவா / தித்வம் அதீயத ஏகே.**

*ஜீவன் பிரம்மத்தின் பகுதி. இரண்டின் வேற்றுமையிலும், ஒற்றுமையிலும் (உயர்வும்) வேடுவனும் மீனவனும் பிரம்மமே (என்று சாமானியமும்) சொல்லப்படுவதால்.*

இது விசித்திரமான சூத்திரம். நெருடலானதும் கூட. பிரம்மம் பகுதிகள் இல்லாதது என்று கூறிவிட்டு, ஜீவன் அதன் பகுதி என்கிறது. அதேசமயம் ஜீவன் பிரம்மமே என்கிறது, அபேத (சங்கரர்), பேத (மத்வர்), விசிஷ்டாத்வைத (ராமாநுஜர்) பிரிவின ருக்கு இது நாணல் போல வளைந்து கொடுக்கிறது. அவர்கள் மிக விரிவாகக் கையாண்ட சூத்திரம் இது. அனைத்துக் கொள்கைகளும் (அரேபிய- இரவுக் கதைகளின் பறக்கும் கம்பளம் போல) இச்சூத்திரத்தில் இடம் பிடிக்கின்றன. இங்கே அந்த விரிவுரைகளை அளிக்கப் போவதில்லை. ஆதாரமான ஒன்றிரண்டு வேத வாக்கியங் களைக் காட்டிவிட்டு, அவரவர் உணர்வுகளின்படி மேலும் படித்துத் தெளிவுபெற வழிவிட்டு விலகிவிடலாம்.

ஜீவனுக்கும் பிரம்மத்திற்கும் உள்ள உறவுதான் என்ன? வேலை யாளுக்கும் அரசனுக்கும் ஆன உறவா? இரண்டும் ஒன்றேயா? பிரம்மத்தின் சரீரம் (பகுதி) ஜீவனா? அதர்வண வேதம், வேடுவரும் மீனவரும் பிரம்மம் என்கிறது. ஜீவன் பிரம்மத்தின் சரீரம் என்கிறது. பிருகதாரண்யகம் (5-7-22) 'நீ அதுவாக உள்ளாய்' என்கிறது. சாந்தோக்யம் (6-10-3) சுவேதாசுவதரம் (1-9) 'பிரம்மமும் ஜீவனும் முறையே எல்லாமறிந்தவன்- ஏதுமறியாதவன், நியமிப்பவன்- நியமிக்கப்படுபவன், இவ்வாறு உள்ளனர்' என்கிறது.

**2.3.43. மந்த்ர- வர்ணநாத்.**

*மந்திரத்தின் சொற்களாலும் (ஜீவன் பிரம்மத்தின் பகுதியே) அனைத்து ஜீவராசிகளுமே இவனுக்குக் கால்பகுதியாகும்* (Just a quarter, or an infinitesimal fraction) *முக்கால் பகுதி பரமபதத்திலே, என்கிறது புருஷசூக்தம்.*



**2.3.44. அபி ஸ்மர்யதே.**

*ஸ்மிருதியிலும் இதே (சொல்லப்படுகிறது).*

ஸ்ரீமத் பகவத்கீதையில் (15-7) "இவ்வுலகில் ஜீவன்கள் எனது அம்சமாக இருக்கிறார்கள்" என்று காணும் வாக்கியத்தை உரையாசிரியர்கள் இங்கே எடுக்கிறார்கள். பிரம்ம சூத்திரம் ஸ்ரீமத் பகவத்கீதைக்கு காலத்தால் முந்தையது என எடுத்துக் காட்டி யிருக்கிறோம்.

**2.3.45. ப்ரகாசாதிவத் து நைவம் பர:**

*ஒளியைப் போன்றது (பிரம்மம்), ஜீவனைப் போலல்ல.*

**2.3.46. ஸ்மரந்தி ச.**

*ஸ்மிருதியிலும் அதே.*

பிரம்மத்துக்கும் ஜீவனுக்கும் ஆன உறவை விஷ்ணுபுராணம் முதலான ஸ்மிருதிகளும் சொல்கின்றன.

**2.3.47. அநுஜ்ஞா- பரிஹாரௌ தேஹ- ஸம்பந்தாத் ஜ்யோதி/ ராதிவத்.**

*அநுமதியும் தடையும் (ஜீவனுக்கு) உடல் சம்பந்தத்தால் ஏற்படுவது, இது நெருப்புப் போல.*

ஒரு செயலை அநுமதித்தோ தடை செய்தோ உள்ள முறை பாடுகள் ஜீவனுக்கு உடல் தொடர்பால் அமைவதே. (ஜீவனைப் பொறுத்தவரை எல்லாம் ஒன்றே) நெருப்பு ஒன்றேயானாலும் வேள்வியெரியும், இடுகாட்டுத் தீயும் வேறுபடுவது போல. ஒத்தும் உணவும் இவ்வாறே அமைவது.

**2.3.48. அஸந்ததே: ச அவ்யதிகர:**

*(ஜீவன்) உடலின் உள்ளுறைந்தே இருப்பதால், அநுபவங்கள் வேறுபடுவதில் குழப்பமில்லை.*

ஜீவன் அணுவானவன். உடலுக்கு வெளியில் பரவுவதில்லை. ஆகவே, ஜீவர்களின் அநுபவங்கள் வெவ்வேறாக அமைகின்றன.

ஜீவன் உடலின் வெளிப்புறமும் பரவியிருந்தால், ஜீவர்களின் ஒட்டாத்தன்மை பங்கப்பட்டு, பரஸ்பரம் ஒன்றிவிடும் குழப்பம் உண்டாகும். ஆகவே, அநுபவங்கள் எல்லாமே எல்லோர்க்கும் (எல்லா ஜீவன்களுக்குமே) ஒன்றேபோல அமைந்துவிடும், ஒழுங்கின்மை ஏற்பட்டுவிடும்.

**2.3.49. ஆபாஸ ஏவ ச**

*(இந்த வாதத்தில்) குறைபாடுகளும் (வேதத்துடன்) முரண்பாடுகளும் உள்ளன.*

அனைத்துமறிந்தோனான பிரம்மத்துக்கு அறியாமையும் தோற்றமயக்கும் உண்டு எனும் (அத்துவைத) வாதத்தின் குறை பாடுகளும் முரண்பாடுகளும் வெளிப்படை.

**2.3.50. அத்ருஷ்டா/ நியமாத்**

*அதிருஷ்டம் என்பதற்கும் வரைமுறையில்லாததால்.*

சாங்கியர்கள் அதிருஷ்டம் (காணலாகாதது) என்று ஒரு தத்துவத்தை பிரம்மம் அல்லது புருஷ தத்துவத்துடன் இணைத்துக் கூறுகிறார்கள். இதுவே ஜீவன் செயல்பாட்டுப் பலன்களை அநுபவிக்க வைப்பது. இந்த ஜீவனுக்கு இவ்வாறு பலன் அமையும் என்று இதில் விதிமுறையில்லை. பிரம்மத்தைச் சார்ந்த அதிருஷ்டம் எப்படி விதவிதமான அநுபவங்களை ஏற்படுத்த முடியும்? ஆக, இவர்கள் கூற்று தவறு என்பது குறிப்பு.

**2.3.51. அபிஸந்த்யாதிஷு அபி ச ஏவம்**

*அதுபோன்றே சங்கல்பம் என்பதும்.*

அதிருஷ்டத்துக்கு மேலே சங்கல்பம் (Resolve) என்று ஒன்றினைக் கற்பனை செய்தாலும், மேற்கூறிய சிக்கல் வரும்.

**2.3.52. ப்ரதேச- பேதாத் இதி சேத், நான்தர்பாவாத்**

*(அநுபவ வேற்றுமை) பிரம்மத் தொடர்பின் இடவேறு பாட்டால் ஆகும் என்பதும் தவறு. ஏனெனில் (பிரம்மம்) எங்குமே பரந்துளதால்.*



நையாயிகர் போன்றவர்களின் பல- ஜீவர் கருத்துக்கு இது மறுப்பு என்கிறார் சங்கரர். ராமாநுஜரோ, சூத்திரங்கள் 50-52 மூன்றுமே அத்துவைதப் பார்வைக்கு மறுப்பானவை என்பார்.

நிதானமாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

(சங்கரர் கணக்குப்படி) ஐம்பத்திரண்டு சூத்திரங்கள் கொண்ட இப்பாதம், வேதமுறையில் பிரம்மம் ஜடப் பொருள் அல்ல என்று நிறுவியபின் ஜீவாத்மாவின் அடையாளங்கள், பிரம்மத்துடன் அதற்குள்ள உறவுமுறை, நம் செயல்களுக்குக் கடவுள் பொறுப்பா? என்பது போன்ற அடிப்படைக் கேள்விகளுக்கு விடையளிக்கிறது.

வழக்கம் போல, சொன்ன கருத்துக்களை வரிசைப் படுத்தலாம்:

**1. ஆகாசம் பிரம்மத்தால் உண்டாக்கப்பட்டது.**

**2. காற்று, தீ, நீர், நிலம், உணவு, அறிவு, மனம் அனைத்துமே பிரம்மம் நேரிடையாகப் படைத்திட்ட பொருள்கள் ஆகும்.**

**3. ஆனால் ஜீவாத்மாவுக்குப் பிறப்பில்லை, அழிவில்லை என்பது வேதத்தின் முக்கியக் கருத்து.**

**4. ஜீவாத்மா அறிவே வடிவானது. புலன்களைச் சார்ந்து வரும் அறிவு அதன் குணம் ஆகும்.**

**5. ஜீவாத்மா அணு பரிமாணமே.**

**6. எங்கும் பரவியது ஜீவாத்மா என்பார் சங்கரர். அது உடலளவு பரவியது என்பார் ராமாநுஜர்.**

**7. ஜீவாத்மா பிரம்மமே என்று சங்கரரும், ஜீவாத்மா பிரம்மத்தின் உடல் என ராமாநுஜரும், ஜீவாத்மாவும் பரமாத்மாவும் வேறு வேறு என்று மத்வரும் கொள்வர்.**

**8. செயல் புரிவது ஜீவாத்மா.**

**9. செயல் புரியும் திறன் பிரம்மத்தால் நியமித்து அளிக்கப் பட்டது** (Delegated)

**10. நம் செயல்களுக்கு நாமே பொறுப்பு, பிரம்மம் அல்ல.**

**11. ஜீவன், பிரம்மத்தின் பகுதி போல. ஆனால், ஜீவனின் கருமபலன்கள் பிரம்மத்தைத் தீண்டுவதில்லை.**

பிரம்மம், ஜீவனுக்கு ஒரு 'தன்னிச்சை' சுயாட்சி தருகிறது. அதைத் தவறாகப் பயன்படுத்தினால் அதற்கு பிரம்மம் பொறுப்பல்ல.

**இந்தப் பாதம் எளிதானது.**

முந்தைய பாதம் போலல்லாமல், பத்தொன்பது சூத்திரங்களே (சங்கரர்- 22) கொண்ட இந்தப் பாதம், எட்டு அதிகரணங்களாகப் (சங்கரர்-9) பிரிக்கப் பட்டிருக்கிறது.

ஜீவாத்மாவின் கருவிகளான (Tools) இந்திரியங்கள் (Senses) பிரம்மத்தால் உண்டாக்கப்பட்டவை என்கின்றன, இந்தப் பாதத்துச் சூத்திரங்கள். இந்திரியங்களை பிராணன்கள் என்று வேதம் குறிக்கிறது. பிராணன் எனும் சொல்லுக்கு ஆன பல பொருள்களில் ஒன்று- இந்திரியம் (புலன்), இரண்டு- பிரம்மத்தின் மூச்சுக் காற்று, மூன்று- பிரபஞ்சம் முழுதுமாகப் பரவி நிற்கும் வெளி (Space) இவை முக்கியமானவை. இம்மூன்று பொருள்களாகவுமே இப் பாதத்தில் வருகிறது. ஆகையால், இப்பாதத்துக்கு பிராணபாதம் என்று பெயர்.

**பிராணன்களின் உற்பத்தி (இந்திரியங்கள்)**

**2.4.1. ததா ப்ராணா:**

> *அது (ஜீவனைப்) போலே பிராணன்களும் (இந்திரியங் களும்)*

இதை வாதிக் கருத்தாகவும் அதன் மறுப்பான சிந்தாத்தக் கருத்தாகவும் கொள்ளலாம். (வாதி) ஜீவனைப் போலே இந்திரியங் களும் தோற்றம், அழிவு அற்றவை. (சித்தாந்தி) ஆகாசம் போலே இந்திரியங்களும் உண்டாகின்றன.

சூத்திரத்தில் ஜீவன் என்ற சொல் இல்லை. 'அதேபோலே' என்றதால் வந்த விளைவு.

**2.4.2. கௌண்- யஸம்பவாத் தத்- ப்ராக்- ச்ருதேச்- ச**

> *வேதமானது உற்பத்திக்கு முன்னம், (பிரம்மம்) ஒன்றே இருந்தது என்று அறுதியிடுவதால், பிராணன்கள் என்று வரும் பன்மைச் சொல் முக்கியமில்லை. (அது அங்கு இந்திரியங்களைச் சொல்லவில்லை.)*

வேதத்தில் இவ்வாறு வருகிறது.



குரு: முதல்முன்னம் (உற்பத்திக்கு முன்னம்) இல்லாததாகவே இருந்தது.

சீடர்: அப்போது என்ன இருந்தது?

குரு: இல்லாததாக இருந்த இது, ரிஷிகளாகவே இருந்தது.

சீடர்: யார் அந்த ரிஷிகள்?

குரு: பிராணன்களே அந்த ரிஷிகள்.

பிராணன்கள் என்ற பன்மைச் சொல், இந்த இடத்தில் இந்திரியங் களைக் குறிக்கவில்லை. ஏனெனில், பன்மையான பொருள்கள் உற்பத்திக்கு முன் இருந்திருக்க முடியாது. ''முதலில் ஒன்றே இருந் தது'' என்று சொல்லப்படுவதால், இந்த இடத்தில் பிராணன்கள் என்னும்போது, பன்மைக்கு முக்கியம் தராமல், பிரம்மமே சொல்லப்பட்டது என்பது குறிப்பு. (சங்கரர் இதை இரண்டு சூத்திரங்களாகக் கொள்கிறார்.)

**2.4.3. தத்- பூர்வகத்வாத் வாச:**

> *உற்பத்திக்கு முன் (பிரம்மத்தைத் தவிர) வேறெதற்கும் பெயர் என்பதில்லை. ஆகவே, இந்திரியங்கள் (உற்பத்திக்கு முன்) இல்லை.*

சாந்தோக்கியம் (1-11-5) இவை எல்லாம் முதலில் பிராணன் எனப்படும் பிரம்மத்திடமே லயித்திருந்தன என்பதால், இந்திரி யங்கள் (பிராணன்கள்) பிரம்மத்திடமிருந்து உற்பத்தியானவை என்பது குறிப்பு.

**இந்திரியங்கள் ஏழு அல்லது பதினொன்று?**

**2.4.4. ஸப்த-கதே: விசேஷிதத்வாத் ச**

> *ஜீவனுடன் சேர்ந்து இயங்கும் இந்திரியங்கள் ஏழு.*

மெய், கண், வாய், மூக்கு, செவி, நினைக்கும் மனம், உறுதி கொள்ளும் புத்தி- என்பன (ஜீவனுக்கு அறிவைத் தரும்) ஞான இந்திரியங்கள் ஆகும். பேச்சு, கை, கால், (மல மூத்திரங்களை) வெளிப்படுத்தும் உறுப்புக்கள், ஆண்- பெண் கூடல் உறுப்புகள்- என்ற ஐந்தும் ஜீவன் காரியம் செய்யத் தேவையான கர்ம இந்திரி யங்களும் அந்தந்தப் பிறப்போடு நின்று விடுவதால், அவற்றுக்கு முக்கியத்துவம் கிடையாது.

இந்த சூத்திரத்தை வாதியின் கருத்தாகவும், அடுத்ததை சிந்தாந்தியின் உண்மைக் கருத்தாகவும் கொள்ள வேண்டும்.

**2.4.5. ஹஸ்தாதயஸ்-து ஸ்திதே. அதோ நைவம்**

(ஜீவன் உடலோடு இருக்கையில்) உதவி புரிவதால், கை முதலான கர்மேந்திரியங்களும் இந்திரியங்களே. ஏழு என்பது தவறு. பதினொன்று என்பதே சரியானது. பிருகதாரண்யகம் (5-9-4) ஸ்ரீமத் பகவத்கீதை (13-5), இரண்டிலுமே பதினொன்று என்று காண்கிறது.

**இந்திரியங்கள் அணுவின் அளவே**

**2.4.6. அணவச்-ச**

*அணுவின் அளவே அவை (இந்திரியங்கள்)*

பிருகதாரண்யகம் (6-4-2) ஜீவன் உடலைவிட்டு நீங்குகையில் ஜீவனைத் தொடர்ந்து செல்லும் முக்கியப் பிராணனைத் தொடர்ந்து பிராணன்களும் (இந்திரியங்களும்) செல்கின்றன என்கிறது. இது அருகில் நிற்பவர்களுக்குப் புலப்படாது. ஆகவே, இந்திரியங்கள் அணுவின் அளவானவையே. இந்திரியங்கள் செல்வதில்லை. அவைகளின் செயல்பாடுகள் முடிந்து விடுகின்றன.

**2.4.7. ச்ரேஷ்டச்-ச**

*முக்கியப் பிராணனும் (பிரம்மத்தின்? உயிரின் இயக்கு சக்தி?) உற்பத்தியுடையதே.*

ருக் வேதத்தில் ''பிறகு மரணம் இல்லை அமிர்தம் இல்லை. நிலா, சூரியன் இல்லை. பிரம்மம் ஒன்றே அசைந்து கொண்டிருந்தது. மாயையைத் தன்னுள் அடக்கி, காற்று இல்லாமல் தன்னைத் தவிர மற்ற எதுவும் வேறாகவோ சிறந்தோ இல்லாதிருந்தது'' என்கிறது.

இங்கு ''அசைந்து கொண்டு'' என்ற சொல்லை, பிராணனின் செயல்பாடு என்று கொள்ள வாய்ப்பு இருக்கிறது. இந்த சூத்திரம் இத்தகைய சந்தேகத்துக்கு விளக்கமாக உள்ளது. முண்டக உபநிஷத் (2-1-2) கூறுவது. ''அவன் பிராணன், மனம் இல்லாது பரிசுத்தமாக இருக்கிறான்.''



முந்தைய சூத்திரங்களின் அடிப்படைக் கருத்து, பிராணன்களும் முக்கியப் பிராணனும் பிரம்மத்தின் படைப்புகளே என்பதாகும்.

இந்த இடத்தில் வேதத்தில் காணும் ஒரு விசித்திரக் கருத்தைச் சொல்லலாம். ஞான இந்திரியங்கள் (7) அணு அளவு, இறப்புக்குப் பின் ஆவி போகும் போது அவை ஜீவனுடன் இணைந்து உடலிலிருந்து வெளியேறும் (பிருகதாரண்யகம் 6-4-2). ஞான இந்திரியங்கள் கண் (கண்ணின் திரையா?) மூக்கு (வாசனை நுகரும் நுண் நரம்புகளா?) முதலானவை உடலுடன் தொடர்பு உள்ள நம் பொறிகளா? ஜீவன், இந்திரியங்களைச் செலுத்தும் தன்னுடைய மென்பொருளைத் தன்னிடம் இருத்திக் கொண்டுள்ளதா? கண்,இந்திரியம்- பார்வை, அதன் தன்மை.

**2.4.8. ந வாயு- க்ரியே ப்ருதக் உபதேசாத்.**

*முக்கியப் பிராணன் வேறானது என்று வேதம் கூறுவதால், முக்கியப் பிராணன் காற்றோ அதன் செயலோ அல்ல.*

முண்டக உபநிஷத் (2-1-3) ''பரமாத்மாவிடமிருந்து பிராணனும் ஐம்பூதங்களும் தோன்றின'' என்று ஐம்பூதங்களில் ஒன்றான காற்றையும் பிராணனையும் வேறுபடுத்திக் கூறுகிறது.

**2.4.9. சக்ஷுராதிவத் து தத்- ஸஹ- சிஷ்ட்யாதிப்ய:**

*(முக்கியப் பிராணன்) கண் முதலானவை போன்று (ஜீவனுக்கு உதவும்) கருவியே. அவைகளைப் போன்றே குறித்திருப்பதால், இந்த முக்கியப் பிராணன் ஐம்பூதங்கள் போல ஒன்று என்றெழும் சந்தேகத்துக்கு இதுவிடை. கண்ணும் மூக்கும் போல ஜீவனுக்கு உதவும் கருவியே.*

**2.4.10. அகாரணத்வாச்ச- ந தோஷ: ததா ஹி தர்சயதி.**

*(முக்கியப் பிராணனின்) உதவிச் செயல்பாடு (கண்ணும் மூக்கும் போல) தெளிவாக இல்லையே என்றால், அவ்வாறல்ல. அதன் செயல்பாடு சொல்லப்பட்டிருக்கிறது.*

இந்திரியங்கள் ஜீவனுக்கு உதவுகின்றன. கண் ஜீவனுக்காகப் பார்க்கிறது. காது ஜீவனுக்காகக் கேட்கும் செயல் புரிகிறது. அதுபோன்று, பிராணன் என்ன செய்கிறது? முக்கியப் பிராணனின்

செயல்பாடு தெளிவாகத் தெரியவில்லை என்னலாம். அப்படியல்ல சாந்தோக்யம் (5-1-7) முக்கியப் பிராணன் உடலை இந்திரியங் களோடு சேர்த்துப் பராமரித்து வரும். பொறுப்பைச் செய்வதாகக் கூறுகிறது. (Maintains or upkeeps the body) ''அழுக்கான உடலைக் காக்கிறது'' பிருகதாரண்யகம் 4-3-12) ''எந்த உறுப்பிலிருந்து பிராணன் நீங்குமோ அது உடனே இறக்கிறது'' (அதே 1-3-19)

**2.4.11. பஞ்ச- வ்ருத்தி: மநோவத் வ்யபதிச்யதே.**

*மனம் போன்று செய்யும் ஐந்தொழில்களை ஐந்து பெயர்களால் குறித்துள்ளது.*

காமம், சந்தேகம், உறுதி, பயம், தைரியம் ஆகியவை மனத்தின் தொழில்கள். சங்கரர் ஐந்து இந்திரியங்களில் ஒவ்வொன்றுக்கும் மனதில் இடம் இருக்கும் என்கிறார். முக்கியப் பிராணனின் தொழில்களையும் விவரிக்கலாம். பிராணன் என்பது உள்ளே வாங்கும் மூச்சு. அபாநன், வெளிவிடும் காற்று. இரண்டுக்குமான இடை நேரத்தில் உள்ளே தங்குவது வியாநன். மரணத்தின் போது வெளியேறுவது உதாநன். உணவின் சக்தியை உடலின் ஒவ்வொரு பாகத்துக்கும் செலுத்துவது ஸமாநன்.

**2.4.12. அணுச்-ச**

*முக்கியப் பிராணன் அணு அளவே.*

மரணத்தின்போது வெளியேறும் ஜீவனைத் தொடர்வதாக பிருகதாரண்யகம் (6-4-2) திரும்பவும் கூறும் முக்கியப் பிராணன் இங்கே பயன்படுகிறது. ஆக, அதுவே அணுவளவே.

**பிராணன்களின் தலைவன்**

**2.4.13. ஜ்யோதிராதி- அதிஷ்டாநம் து தத் ஆமநநாத் ப்ராணவதா சப்தாத்.**

*நெருப்பு முதலானவை போலே, இந்திரியங்களுக்குத் தலைவர் தேவர்கள் ஆயினும், அவர்களுக்கும் தலைவன் பிரம்மமே.*



ஐதரேய உபநிஷத் (1-2-4) ''நெருப்பு முதலான தேவர்கள் இந்திரியங்களை ஆட்சி செய்கிறார்கள்'' என்கிறது. ஆனால் பிருக தாரண்யகம் (3-7-5) ''நெருப்பின் உள்ளுறைபவனே நெருப்பை ஆட்சி புரிகிறான்'' என்கிறது.

சங்கரர் இதனை இரண்டு சூத்திரங்களாகப் பிரித்து, வேறு பொருள் கொள்கிறார். முதல் சூத்திரத்தால் ''நெருப்பு முதலான தேவர்கள் இந்திரியங்களை ஆள்கிறார்கள்'' என்றும், இரண்டாவ தால் ''ஜீவாத்மாவே இந்திரியங்களை அநுபவிக்கிறது; தேவர்கள் அல்ல'' என்கிறார். (சங்கரர் நோக்கில் ஜீவாத்மா பிரம்மம் ஆகிறது)

**2.4.14. தஸ்ய ச நித்யத்வாத்.**

*அழிவில்லாதது, அனைத்தையும் நியமிக்கிறது.*

(சங்கரர்) ஜீவாத்மாதான் இந்திரியங்களின் தலைவனாக அநுபவிக்கிறது; (ராமாநுஜர்) அழிவிலாத பரமாத்மாவே இந்திரியங்களின் தலைவன்.

**இந்திரியங்களும் முக்கியப் பிராணனும் வேறு வேறானது.**

**2.4.15. தே இந்த்ரியாணி தத்-வ்யபதேசாத் அந்யத்ர ச்ரேஷ்டாத்.**

*முக்கியப் பிராணன் தவிர மற்ற பிராணன்கள் எவையோ அவையே இந்திரியங்கள்.*

**2.14.16. பேத-ச்ருதேர் வைலக்ஷண்யாச்- ச**

*வேதம் வேறுபடுத்திச் சொல்வதால்.*

முண்டக உபநிஷத் (2-2-3) இப்பரம்பொருளிடமிருந்து பிராணனும் மனமும் இந்திரியங்களும் உண்டாகின்றன என்று வேறுபடுத்திப் பேசுகிறது.

பெயரும் உருவமும் அளித்தவன் பிரம்மமே.

Released by Maran's Dog ,Toronto, Canada

**2.4.17. ஸம்ஜ்ஞா- மூர்தி- க்லுப்திஸ் து த்ரிவ்ருத்- குர்வத உபதேசாத்**

*இது வேதத்தின் உபதேசக் கூற்று: எல்லாப் பொருள் களுக்கும் பெயரும் உருவ அமைப்பும் இலக்கணமும், இம்மூன்றின் கலவையும் ஆக்கி அளிப்பது பிரம்மமே.*

பொருள்களுக்குப் பெயரும் உருவும் தருவோன் படைப்புத் தொழில் செய்யும் கடவுளான நான்முகப் பிரமன் அல்ல என்பது குறிப்பு. ''எனதமிசமான இந்த (நான்முகன் என்னும்) ஜீவனைக் கொண்டு உள் நுழைந்து நாம ரூபங்களை அளிக்கக் கடவேன்'' என்கிறது சாந்தோக்யம் (6-3-2). ஒற்றனைக் கொண்டு அரசன் வேவு பார்ப்பது போல. சாந்தோக்யம் மேலும் ''தீ, நீர், பூமி என்னும் மூன்று பூதங்களையும் ஒன்றோடொன்று இணைப்பதான செயல் பாட்டை நியமிப்பது பிரம்மம்'' என்கிறது. இந்தக் கலவையைத் தொடர்ந்தே பிரபஞ்சம் உண்டாயிற்று. இக்கலவைக்கும் நான்முகப் பிரமன் காரணமல்ல, பிரம்மமே காரணமாகும். சிலிக்கானில் கொஞ்சம் பாஸ்பரஸ் ஆர்ஸனிக் சேர்த்தால்தான் ட்ரான்சிஸ்டர் ஆகிறது. அக்னியிலும் மிக நுண்ணிய அளவு நீரும் பூமியும் உண்டு.

**2.4.18. மாம்ஸாதி பௌமம் யதா- சப்தம் இதரயோச்-ச**

*சதையும் (மனமும் வெளியகற்றும் கழிவுப் பொருட்களும்) பூமியின் மாறுபாடுகளே. அவ்வாறே நீரும் நெருப்பும்.*

விசித்திரமான சூத்திரம். பூமியில் விளையும் உணவை உண்பது நம் மனதுக்கு உயிர் தருகிறது; மற்றும் சதை, இரத்தம், சிறுநீர் போன்று நீர்ப்பாங்கான பொருளாகிறது. மீதி கழிவுப் பொருளாக வெளியேறுகிறது. அதில் பூமி அதிகம். மனத்தில் தீ அதிகம். அதாவது உண்ட உணவானது தீ, நீர், பூமி இம்மூன்றின் கலவை யாகும். இந்த சூத்திரத்தின்படி பார்த்தால், இந்த முக்கலவைக்குப் பின்னரே உலக உற்பத்தி, பெயரிடுதல் ஆகிய எல்லாம் நிகழும் என்கிறது. (Strange biology!)

**2.4.18. வைசேஷ்யாத் து தத்-வாதஸ் தத்-வாத:**

*எந்த பூதப் பகுதி அதிகமோ அந்தப் பெயரால் பேசப்படுகிறது.*



முக்கலவைக்குப் பின்னர் பூமி என்ற பூதத்தில் பூமி அதிகம், தீயும், நீரும் குறைவு. தீ என்ற பூதத்தில் தீ அதிகம், பூமியும் நீரும் குறைவு. நீர் எனும் பூதத்தில் நீர் அதிகம், பூமியும் தீயும் குறைவு. ஆகையால் பூமி, நீர், தீ என்று அப்பூதங்களுக்குப் பெயர். அப்படி அழைக்கப்படுவதை இருமுறை (தத் வாதஸ் தத்- வாத:) இந்த சூத்திரத்தில் சொல்லி இந்த அத்தியாயத்தின் முடிவைக் காட்டி யிருக்கிறது.

இந்தப் பாதத்தில் சொல்லப்பட்ட முக்கியக் கருத்துக்களைத் தொகுத்துப் பார்ப்போம்.

**1. பிராணன்கள் அல்லது இந்திரியங்கள் பிரம்மத்தால் உற்பத்தி செய்யப்பட்டவை.**

**2. இந்திரியங்கள் பதினொன்று ஆகும்.**

**3. ஞான இந்திரியங்கள் அணுவினளவே. (இந்த அணு நுண்ணிய அளவுக் குறியீடு ஆகும். வைசேஷிகரின் அணு அல்ல.)**

**4. முக்கியப் பிராணன் என்பதும் பிரம்மம் படைத்ததே ஆகும். அதுவும் அணுவினளவே.**

**5. முக்கியப்பிராணன் ஐவகைப்பட்டது.**

**6. பிராணன்களின் தலைவன் எல்லாப் பொருள்களுக்கும் பெயரும் உருவும் அளித்தவன், தீ-நீர்-பூமி என்ற முக்கலவை ஈந்தவன், பிரம்மம்.**

இந்தப் பாதத்தில் சொன்ன கருத்து ஒன்று. இறக்கும்போது ஞான இந்திரியங்கள் ஜீவாத்மாவுடன் சேர்ந்து வெளியேறுகின்றன. இது நமது சிந்தனைக்கு முக்கியமான விஷயமாகும்.

'உடல்மிசை உயிர் என கரந்தெங்கும் பரந்துளன்' என்று நம்மாழ் வார் வியப்பதுபோல், பிரம்ம சூத்திரக்காரரும், 'உயிர் என்பது என்ன? நாம் இறக்கும்போது எது நம்மை விட்டு நீங்குகிறது?' என்று வியந்திருக்கிறார்கள். நவீன மருத்துவத்தில் "clinical death' பற்றி பல கருத்துகள் உள்ளன.

'விரோத நீக்கம்' என்ற இரண்டாம் அத்தியாயம் நிறைவு பெருகிறது.

## மூன்றாம் அத்தியாயம்

# சாதனம்-அடையும் வழி

*முதல் இரண்டு அத்தியாயங்களிலும், பிரம்மம் என்பது யார், எது, எவ்வாறு அது உலகக் காரணம் ஆகிறது, எப்படி பிரம்மம் மண், குயவன், சக்கரம், பானை என்று எல்லாமாகவே ஆயிற்று என்று சொல்லி, எப்படி இந்தக் கொள்கைகளுக்கு எதிரான கருத்துகள், வேதத்தின்படி தவறு என்றும் நிரூபிக்கப்பட்டது. 'விரோத நீக்கம்' என்னும் இரண்டாவது அத்தியாய இறுதியில் ஆத்மாவைப் பற்றியும் சொல்லப்பட்டது.*

இந்த அத்தியாயத்தில் இறப்பைப் பற்றிய கருத்துகள் வருகின்றன. இதை eschatology என்பர். இறந்த பின் ஆத்மா அல்லது உயிரின் பயணம் பற்றி வேதம் கூறும் கருத்துக்கள் விரிவாகச் சொல்லப்படுகிறது. ஒவ்வொரு மனித இனமும் மதமும், இறந்தபின் ஏற்படும் நிகழ்வுகளைப் பற்றிய நிச்சயமான கருத்துகளை நம்புகின்றது. கிறிஸ்துவத்தில் மறுபிறப்பு இல்லை, ஒரே ஒரு வாழ்க்கைதான். எல்லா உயிர்களும் கடவுளின் கடைசி தீர்ப்பாணைக்குக் காத்திருக்கின்றன என்று நம்புகிறது. இந்தியர்களுக்கு மறுபிறப்பு உண்டு. விதி, அல்லது முன்வினை நம்மை ஒவ்வொரு பிறப்பிலும் தொடர்ந்து வருகிறது என்று நம்பிக்கை. வேதத்தைச் சாட்சியாகவே கொள்ளும் சிலர், கடவுள் கூட விதியை மாற்றுவதில்லை என்றும் நம்புகின்றனர்.

இந்த அத்தியாயம் நான்கு பாதங்களாகப் பிரிக்கப்பட்டு இருக்கிறது. மொத்தம் 182 சூத்திரங்கள் கொண்ட இந்த அத்தியாயத்தின் முதல்பாகம், ஆறு அதிகரணம், 27 சூத்திரங்கள் கொண்டது. உயிர் ஓர் உடலிலிருந்து மற்றொரு உடலுக்குச் செல்லும்போது சூட்சுமமாக ஐந்து பூதங்களோடும், கர்மத்தோடும் இணைந்தே



இருக்கிறது என்கிறது. விழிப்பு நிலையில், உயிருக்கு உள்ள குறைபாடுகளும் சொல்லப்படுகின்றன.

''உறங்குவது போலும் சாக்காடு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு,'' என்பது திருக்குறள்.

பிறப்பும் இறப்பும் நமக்கு ஏற்படும், நம்மால் ஆளவொண்ணாத நிகழ்ச்சிகள். அவைகளைப் பற்றி நாம் மகிழவோ, துக்கப்படவோ தேவையில்லை. இறப்பு, இறக்கும் காலம், நம்மை அறியாமல் வந்துவிடும். ஆகையால், அதை எதிர்நோக்க வேண்டாம், கவலைப் படவும் வேண்டாம்.

இந்த அதிகரணத்தில், சாந்தோக்ய உபநிஷத்தில் (*5.3.3* to *5.10.10*) கூறப்பட்ட இறப்பு/ மறுபிறப்பு பற்றிய கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு, உடலில் இருந்து உயிர் பிரியும்போது, ஐம்பூதங்களோடு (இவை பார்க்க முடியாத நுண் நிலையில் உயிரோடு சேர்ந்து) வெளிக் கிளம்புகிறது என்கிறது. வேத கால மனிதனின் இறப்பு, இறந்த பின் உயிரின் பயணம், திரும்பி வருதல், கருவாதல் பற்றிய நம்பிக்கைகள் ஆச்சரியமாக உள்ளன. தாயும், தந்தையும், தங்களுக்குச் சிறிதும் சம்பந்தமே இல்லாத உயிரை, உடலோடு சேர்க்கும் கருவிகள் மட்டுமே ஆவர். நவீன மரபணு கொள்கைப்படியும், பிறந்த மனிதனின் உடல், மனம் இவற்றுக்கு மட்டுமே தாய் தந்தையர் காரணமாகிறார்கள். உயிர் இவைகளுக்கு அப்பாற் பட்டது. இனி உங்கள் மகன்/ மகள் இவர்களிடம் அதிகம் உரிமை கொண்டாடாதீர்கள். நாம் வேறு அவர்கள் வேறு. (முடிவில் எல்லாரிலுமே பிரம்மம் என்றாலும்!)

இனி, சூத்திரங்கள்.

**3.1.1. ததந்தர ப்ரதிபத்தௌ ரம்ஹதி ஸம்பரிஷ்வக்த: ப்ரச்ன நிரூபணாப்யாம்**

*இறக்கும்போது, பொறிகளுடனே செல்கிறது உயிர். இறக்கும் போது, நுண் உடலுடனே செல்கிறது ( உயிர் ) - இது கேள்வி, விடையிலிருந்து தெரிகிறது.*

உயிர் அல்லது ஆத்மாவிற்கு, ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்லும் சக்தி கிடையாது. இது அடிப்படையான வேதக் கருத்து. அது செல்வதற்கு, ஒரு வாகனம் 'உடல்' தேவை. உயிர், முடவன் மாதிரி- நகர முடியாது. ஒரு உடலிலிருந்து

மற்றொரு உடலுக்குச் செல்வது- கூடுவிட்டுக் கூடு பாய்தல்- Transmigration இறக்கும்போது நிகழ்கிறது. ஆகவேதான், அதற்கு- நுண் உடல் (ஐந்து பூதங்களின் நுட்பநிலை) தேவைப்படுகிறது. சென்ற பாதத்தில், இறக்கும்போது ஜீவனுடன் ஞான இந்திரியங்களும் நுண் நிலையில் சேர்ந்து இருக்கின்றன என்று பார்த்தோம். இங்கே சொல்லப்பட்ட வினா-விடை, சாந்தோக்ய உபநிஷத்தில் இருக்கிறது. பாஞ்சால நாட்டின் அரசன் பிரவாகணன், சுவேதகேதுவிடம் ஐந்து கேள்விகளைக் கேட்டு, தானே விடை தருகிறான். வினா, 'உனக்குத் தெரியுமா, ஏன் ஐந்தாவது அர்ப்பணத்தில், நீர் மனிதனாகிறது என்று?'' இதற்கு விடை; ஐந்து பூதங்களின் நுண் உடலோடு சென்ற உயிர்; மழையாகி, உணவாகி, (அதை உண்ட) மனிதனின் விந்துவாகி (Semen) பின் பெண்ணின் கர்ப்பத்தில் சென்று மனிதனாகிறான்' இதிலிருந்து, இறக்கும்போது உயிர், (ஐம்பூதங்களின்) நுண் உடலோடு செல்கிறது என்பது புரிகிறது.

**3.1.2. த்ர்யாத்மகத்வாத் து பூயஸ்த்வாத்**

*(நம் உடலில்) நீரே அதிகமாக இருப்பதால், உயிர்நீர் (semen) மனிதனாகிறது எனப்பட்டது. (மற்ற பூதங்களும் நுண்நிலை உடலாக இருந்தாலும்)*

**3.1.3. ப்ராணகதேச்ச**

*இந்திரியங்களும் உயிருடன் செல்வதால்.*

விட்டுச் செல்லும் உயிரைத் தொடர்ந்து இந்திரியங்கள் செல்வ தால், இந்திரியங்களின் இருப்பிடம் பஞ்ச பூதங்கள் என்பதால்! கர்மங்கள் இவைகளுடன் கூடிய 'நுண் உடலுடன்' செல்கிறது.

**3.1.4. அக்ந்யாதி கதி ச்ருதேரிதி சேந்ந, பாக்தத்வாத்**

*இந்திரியங்கள் நெருப்பில் நுழைகின்றன என்று வேதம் சொல்வதால், (இறக்கும் போது) அவை உயிருடன் செல்வதில்லை என்று கூறினால், அது தவறு- அவ்வாறு கூறப்பட்டது முழு உண்மை இல்லை.*



இறக்கும்போது நம் பேச்சு சக்தி நெருப்பில் நுழைகின்றது என்று பிரகதாரண்யக உபநிஷத்தில் (3.2.13) வருகிறது. அது அடுத்த வரியிலேயே உடலில் இருந்த ரோமம் மூலிகை ஆகிறது, தலைமயிர் மரம் ஆகிறது என்கிறது. ஆனால், நாம் அவ்வாறு காண்பதில்லையே. ஆகவே, உபநிஷத்தின் இந்தக் கருத்துக்களுக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டாம் என்பது குறிப்பு.

**3.1.5. ப்ரதமே ச்ரவணாதிதி சேந்ந தா ஏவ ஹ்யுபபத்தே:**

*முதல் பாதத்தில் அர்ப்பணத்தில் நீர் சொல்லப்படாமையால், (இறக்கும்போது) உயிர் ஐம்பூதங்களோடு செல்வதில்லை என்றால், அது தவறு- அங்கே 'சிரத்தை' என்று சொல்லப் பட்டது நீரையே குறிக்கும்.*

திரும்பி 3.1.1.ஐப் பார்க்க வேண்டும். சாந்தோக்யத்தில் முதல் அர்ப்பணமாக 'சிரத்தை' கூறப்படுகிறது. ஐந்தாவது நீர் முன்பு கூறியபடி உயிர் ஓர் உடலிலிருந்து மற்றொரு உடலுக்குச் செல் வதை ஐந்து அர்ப்பணமாக இங்கே உருவகப்படுகிறது. கேள்வி, 'நீர் எவ்வாறு மனிதனாகிறது? என்பது. அதற்குப் பொருத்தமாக விடை இருக்க வேண்டும் என்றால், 'சிரத்தை' என்ற சொல்லுக்கு நீர் என்றே பொருள் கொள்ள வேண்டும்.

**3.1.6. அச்ருதத்வாத் இதிசேத் ந, இஷ்டாதிகாரிணாம் ப்ரதீதே:**

*இங்கே (ஜீவன்) சொல்லப்படவில்லை என்றால், அது தவறு- இந்த இடத்தில் மேலே வரும் வாக்கியங்கள் ஜீவனைப் பற்றியே சொல்கின்றன.*

வினா-விடை வாக்கியத்தின் முதலில் 'ஜீவன்' என்று சொல்லப் படவில்லையே என்றால், அதற்கு அடுத்து வரும் வாக்கியங்களில் ஜீவனின் பயணம் பற்றி இருக்கிறது.

இப்போது 'கர்மம்' பற்றிக் கொஞ்சம் சொல்லிவிட்டு மேலே செல்லலாம்.

கர்மம் என்றால் செயல்பாடு, செயல்படுதல் (Activity, Doing) என்று பொருள். நல்ல கர்மங்கள்- இஷ்டம் (யாகம் செய்வது), பூர்த்தம் (குளம் வெட்டுதல்), தத்தம் (தானங்கள்) கர்மம், அழி வில்லாதது. ஆரம்பமும் கிடையாது. இறக்கும் போது கர்மமே நுண்ணிய உடலைத் தாங்கி இருக்கிறது. மநு, கெட்ட கர்மங்களை,

உடலால் செய்வது, பேச்சினால் செய்வது, மனத்தால் செய்வது என்று பிரிக்கிறார். (prostitution) வேசித்தனம், கொலை செய்தல், திருடுதல்- உடலால் செய்யும் கெட்ட கர்மங்கள். மற்றவர்க்குத் துன்பம் தரும் சொற்களைக் கூறுதல், பொய் பேசுதல், இழிவாகப் பேசுதல், சம்பந்தம் இல்லாமல் பேசுதல், பேச்சினால் செய்யும் கெட்ட கர்மங்கள். மற்றவரின் பொருளுக்கு ஆசைப்படுதல், மற்றவரின் அழிவை விரும்புதல், பிடிவாதம் என்பன மனத்தால் செய்யும் கெட்ட கர்மங்கள். கர்மம், மூன்று வகையாகப் பிரிக்கப் படுகிறது. அவை 'சஞ்சிதம்' அல்லது சேர்த்து வைக்கப்பட்ட (accumulated) கர்மம், 'ப்ராரப்தம்' அல்லது பயன்தர ஆரம்பிக்கும் கர்மம் (Commenced to give result), 'க்ரியமாணம்' அல்லது தற்போது அல்லது இந்தக் கணத்தில் அறிவிக்கப்படும் கர்மம். சஞ்சித கர்மத்துக்கு அதிர்ஷ்டம் (கண்ணுக்குத் தெரியாதது) என்றும் பெயர். மீமாம்சகர் உபயோகிப்பது. வள்ளுவர், கர்மத்தை ஊழ் என்கிறார். ஊழ்மிக வலியது. ஆகு ஊழ் (நல்வினை) செல்வத்தைச் சேர்க்கும் முயற்சிகளைச் செய்யத் தூண்டும். போகு ஊழ், முயற்சி களைத் தடுக்கும். ஊழ், எவ்வளவு படித்தவனையும் முட்டாளாக் கும். ஓர் உயிரின் வினை மற்றோர் உயிருக்குச் செல்லாது. ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும் என்கிறது சிலப்பதிகாரம்.

நம் வாழ்வில் நிகழும் நல்லவை, கெட்டவைகளுக்கு நம் கர்மமே காரணம் என்கிறது வேதம். கடந்த காலமானது, எதிர் காலத்தைத் தீர்மானிக்கிறது. முதல் முயற்சியில் நமக்கு சுதந்தரம் உண்டு (Free will) என்று *2.1.34*ல் பார்த்தோம். கர்மத்தைச் சரியாகப் புரிந்து கொண்டு 'சுதந்திரமாக'ச் செயல்படுவது கடினம்!

**3.1.7. பாக்தம் வா அநாத்மவித்வாத் ததா ஹி தர்சயதி.**

> *(தேவர்களின்) உணவு என்று சொன்னது, ஒரு உருவகம் (Metaphor) ஜீவனை அநுபவிக்கிறார்கள் என்ற பொருள் தோன்ற.*

உயிரை எப்படி தேவர்கள் உண்ண முடியும்? அநுபவிப்பது (Enjoyment) என்ற பொருளே சரி. சாந்தோக்யம் *(5.10.4)* உயிரை (சோமராஜனை) தேவர்கள் உண்கிறார்கள் என்கிறது. அதன் விளக்கம் இந்த சூத்திரம்.



*2. கருமத்துடனேயே (வினையுடனே) திரும்புகிறது, உயிர்.*

**3.1.8. க்ருதாத்யயே அநுசயவாந் த்ருஷ்ட ஸ்ம்ருதிப்யாம் யதேதம் அநேவம் ச.**

வேதத்தின் மூலம் அறியலாம். மீதி இருக்கும் ஊழ்வினையுடன். ஜீவன் திரும்புகிறான்- சென்ற வழியிலோ அல்லது வேறு வழியிலோ.

சாந்தோக்யம் *5.10.7.* கூறுகிறது இந்தக் கருத்தை. மீதி உள்ள கருமம் நல்லதானால் நல்ல பிறவி கிடைக்கும். மோசமானால் நாய், பன்றி போன்ற பிறப்பு கிடைக்கும். (மனிதனுக்கு கற்காலம் முதலே தான்தான் உயர் பிறவி என்ற எண்ணம்!)

**3.1.9. சரணாதிதி சேந்ந, ததுபலக்ஷணார்த்தேதி கார்ஷ்ணாஜிநி:**

> *நல்ல ஒழுக்கம், நற்பிறவியைத் தருகிறது என்கிறது வேதம் (மற்றொரு இடத்தில்) -ஆகையால் ஊழ்வினை தொடர்வதில்லை என்று சொன்னால், அது தவறு. (நல்ல) ஒழுக்கம் என்ற சொல்லும் ஊழ்வினையையே குறிக்கிறது. கார்ஷ்ணாஜிநி என்னும் முனி வரும் இப்படித்தான் சொல்கிறார்.*

கர்மத்திற்கும் ஒழுக்கத்திற்கும் வேறுபாடு உண்டு. கருமம் (செயல்புரிதல்) குற்றம், குறை இல்லாமல் செயல் புரிதல். ஒழுக்கம் என்பது நம் நடத்தை, (Behaviour) இப்போது சூத்திரத்தைப் படித்தால் புரியும்.

**3.1.10. ஆநர்த்தக்ய மிதிசேந்ந, ததபேக்ஷத்வாத்**

> *சரி, கர்மம்தான் (ஊழ்வினை) நல்ல/ கெட்ட பிறப்பை நிர்ணயிக்கிறது. ஆகவே, ஒழுக்கம் உபயோகம் அற்றது என்றால், அது தவறு. கர்மம் ஒழுக்கத்தைச் சார்ந்திருப்ப தால்.*

'நல் ஒழுக்கம் அற்றவனை, வேதம் தூய்மையானவனாக ஆக்காது.' தூய்மையான ஒழுக்கத்துடன் கர்மங்களைச் செய்ய வேண்டும், அவை சரியான பலன்தர.

**3.1.11. ஸுக்ருத துஷ்க்ருதே ஏவேதி து பாதரி:**

*பாதரி முனிவரின்படி 'ஓழுக்கம்' என்ற சொல் நல்ல/ கெட்ட கருமங்களையே நேராகக் குறிக்கிறது.*

(3.1.9-ல் வரும்) ஒழுக்கம் என்ற வேதச் சொல், கருமத்தையே குறிக்கிறது என்கிறார் பாதரி.

**3. பாவம் செய்தவர்களுக்கு சந்திர உலகம் கிடையாது.**

இனிவரும் ஐந்து சூத்திரங்களும் வாதியின் கருத்துகளாகக் கொள்ள வேண்டும். அவை, பூர்வ பக்ஷ சூத்திரங்கள்.

**3.1.12. அநிஷ்டாதிகாரிணாமபி ச்ருதம்**

*யாகம் முதலான நற்கருமங்களைச் செய்யாதவரும், சந்திர உலகை அடைகிறார்கள் என்கிறது வேதம்.*

கௌஷீதகி உபநிஷத்து, அனைவரும் சந்திர உலகம் அடைகிறார்கள் என்கிறது. சரி, நல்லவரும், கெட்டவரும் ஒரே வழியாகவா சந்திர உலகம் அடைகிறார்கள்?

**3.1.13. ஸம்யமநே த்வநுபூயேதரேஷாம் ஆரோஹா வரோஹௌ தத்கதி தர்சநாத்.**

*பாவம் செய்தவர், எமனுலகில் துன்பம் அனுபவித்த பின்னரே சந்திர உலகம் செல்கிறார்கள்.*

மேலே கேட்ட கேள்விக்கு இது விளக்கம்.

**3.1.14. ஸ்மரந்தி ச**

*ஸ்மிருதியிலும் இது சொல்லப்படுகிறது.*

விஷ்ணு புராணம், 'இவர்கள் யமனுக்கு வசப்படுகிறார்கள்' என்கிறது.

**3.1.15. அபி ஸப்த**

*பாவிகள் செல்லும் ஏழு நரகங்கள் சொல்லப்படுகின்றன (ஸ்ம்ருதியின்)*



**3.1.16. தத்ராபி தத்வ்யாபாராத விரோத:**

*அந்த ஏழு நரகங்களிலும், யமனின் ஆணையே செயல்படும்.*

நரகங்களில், யமனின் பணியாளான சித்ரகுப்தன் முதலியோர் செயல்படுகின்றனர். ஆகவே நரகங்களை யமன் உலகம் என்று சொல்வது சரியே என்பது குறிப்பு.

**3.1.17. வித்யாகர்மணோரிதி து ப்ரக்ருதித்வாத்.**

*ஆனால், வேதம் சொல்வதை ஆராய்ந்தால், இரண்டு வழியையே அடைகிறார்கள் என்று தேறும்.*

பூரண அறிவுற்றவர்கள், ஞான மார்க்கம் ஆன 'அர்ச்சிராதி' வழியாக பிரம்ம உலகையும், கர்மம் செய்பவர் மூத்தோர் (பித்ரு) உலகையும் அடைகிறார்கள்.

இதை, சாந்தோக்ய உபநிஷத்து கூறுகிறது. எல்லோரும் சந்திர உலகை அடைகிறார்கள் என்ற முன்பு சொன்ன சூத்திரங்கள் தவறு என்பது குறிப்பு.

**3.1.18. ந த்ருதீயே ததோபலப்தே:**

*வேதத்தின்படி, மூன்றாவது கூட்டம் (பாவம் செய்தவர்கள்) (உடலை எடுக்க) ஐந்தாவது அர்ப்பணம் தேவையில்லை.*

முதல் கூட்டம்- அறிவுள்ளவர்- ஞானிகள்- அர்ச்சிராதி வழியாக பிரம்ம உலகை அடைகின்றனர். இரண்டாவது கூட்டம்- யாகம் முதலிய கர்மங்களைச் செய்பவர், பித்ரு உலகம் அடைகின்றனர்.

மூன்றாவது கூட்டம்- இவை இரண்டும் இல்லாமல், பாவங்களையே செய்தவர். இந்த சூத்திரத்தைப் புரிந்து கொள்ள, 'ஐந்தாவது அர்ப்பணத்தில் நீர் மனிதனாகிறது' என்று சொன்ன 3.1.1., 3.1.2. சூத்திரங்களைத் திரும்பிப் படிக்க வேண்டும். சந்திர லோகத்தை அடைகிறது நுண்நிலை உடலை உடைய உயிர் என்று பார்த்தோம். ஆனால் இந்த மாதிரி உடலை அடைவது பாவம் செய்தவர்களுக்கு அல்ல. ஆகையால், எல்லோரும் சந்திர உலகில் இருந்து திரும்பி வந்து புது உடலை எடுக்கிறார்கள் என்பது தவறு என்பது குறிப்பு.

**3.1.19. ஸ்மர்யதேஅபி ச லோகே**

*உலகில் (ஐந்தாவது அர்ப்பணம் இல்லாமல்) உடல் படைத்தவர் உண்டு என்கிறது சீமிருதி.*

துரோணர் அம்மா இல்லாமல் பிறந்தவர். திரௌபதி, மற்றும் திருஷ்டத்யும்நன்- தாய், தந்தை இல்லாது பிறந்தவர்கள். ஸ்மிருதி- மகாபாரதம். பிரம்ம சூத்திரம் மகாபாரதத்திற்கு முந்தையது என்றால், இந்த சூத்திரம் எப்படி வந்தது? ஸ்மர்யதே என்பதற்கு 'recorded' என்று பொருள் கொண்டு, உலக வழக்கு என்னலாம்.

**3.1.20. தர்சநாச்ச**

*வேதமும் சொல்கிறது இதை.*

சாந்தோக்யம் (6-3-1) முட்டையிலிருந்து பிறப்பவை, கர்ப்பப் பையிலிருந்து பிறப்பவை, பூமியைப் பிளந்து கொண்டு பிறப்பவை (மரம், செடி முதலியன) என்று பிரிக்கிறது.

**3.1.21. த்ருதீயஸப்தாவரோத: ஸம்சோகஜஸ்ய**

*ஈரத்தில் இருந்து பிறப்பவையும், மூன்றாவதாகச் சொன்னதில் சேர்த்தி.*

ஈ, கொசு முதலியன ஈரத்தில் இருந்து தோன்றுபவை என்று நம்பினர் முன்னோர். அவையும், மரம், செடி மாதிரியே என்கிறது இந்த சூத்திரம்.

**4. கீழே வரும் போது, உயிர், ஆகாயம், காற்றின் தன்மைகளைப் பெறுகிறது.**

**3.1.22. தத்-ஸ்வாபா-வ்யாபத்தி: உபபத்தே:**

*அவற்றின் தன்மையை உடையவனாகிறான் என்று கொள்வதே பொருத்தம்.*

சந்திர உலகில் இருந்து கீழே இறங்கும் உயிர் ஆகாயம், வாயு, நீர் கொண்ட மேகம், மழை பொழியும் மேகம் ஆகிறான் என்று சாந்தோக்யம் செல்லும்போது, ஆகாயம், வாயு, மேகம் மாதிரி



ஆகிறான் என்று கொள்வதே பொருத்தம் ஆகாயமாகவே ஆகி விடுகிறான் என்பது பொருந்தாது.

**5. அங்கே உயிர் இருப்பது சிறிது காலமே**

**3.1.23. நாதிசிரேண விசேஷாத்**

*ஆகாயம், மேகம் முதலானவற்றில் உயிர் சிறிது காலமே நிற்கிறது. ஏனெனில் அது தானியமாக ஆகி நிற்கும் காலம் அதிகம் என்று கூறப்படுவதால்.*

சாந்தோக்யம் (5-10-6) 'தான்யத்திலிருந்து நீண்ட காலத்தின் பின் ஜீவன் வெளிவருகிறான்' என்கிறது.

**6. தானியமாக 'பிறப்பதில்லை' உயிர், அதைத் தொட்டுக் கொண்டு மட்டும் இருக்கிறது.**

**3.1.24. அந்யாதிஷ்டிதே பூர்வவதபிலாபாத்**

*முன் சொன்ன ஆகாயம் போல, உயிர், தானியத்தைத் தொட்டுக் கொண்டு மட்டுமே உள்ளது.*

சாந்தோக்யம் 5.10.5 'அப்படிவரும் ஜீவர்கள், இந்த பூமியில், நெல், கோதுமை, மூலிகைகள், மரங்கள், எள், உளுந்து முதலியவையாகப் பிறக்கிறார்கள்' என்கிறது. 'பிறக்கிறார்கள்' என்பதற்கு தானியமாகவே ஆகிறார்கள் என்று பொருள் கொள்ளக் கூடாது. அதனுடன் தொடர்பு மட்டுமே கொள்கிறார்கள் என்று பொருள் கொள்ள வேண்டும். ஏனெனில், மீதி உள்ள வினையின் பயனை அனுபவிக்கவே உயிர் சில பயன்களை சந்திர உலகில் அநுபவித்துவிட்டு புது உடலைத் தேடிப் போகிறது இந்த இடைக் காலத்தில் அது புது கர்மத்தைச் சேர்க்கவில்லை. ஆகையால், அதற்கு அநுபவிக்க தானியம் போன்ற புதுஉடல் தேவையில்லை.

**3.1.25. அசுத்த மிதி சேந்ந, சப்தாத்**

*சுத்தம் இல்லாத கருமங்களை (உயிர்) அநுபவிக்க 'தானியம் போன்றவைகளின்' உருவை எடுக்கலாமே என்றால், அது தவறு- வேதம் அப்படிச் சொல்கிறது.*

உரையாசிரியர்கள், இங்கே யாகம் செய்யும்போது நடக்கும் ஆடு முதலியவைகளைப் பலி இடுதலைச் சுத்தம் இல்லாத கருமம் என்கிறார். யஜுர் அஷ்டகம் (வேதம்) இந்த பலி, பாபமில்லை என்கிறது. பலி ஆடு சுவர்க்கத்தை அடைகிறது- ஆகையால், பலி இடுதல் ஆட்டிற்கு நன்மையே! அதனால் உயிர் திரும்பும்போது, தானியமாகவே ஆகி பலி என்ற செயலால் ஏற்பட்ட விளைவை அநுபவிக்கிறது என்பது தவறு.

இக்காலத்தில் இந்த மாதிரியான கருத்துக்களை நாம் ஏற்க முடியாது.

**3.1.26. ரேதஸ் ஸிக்யோகோ அத**

*உயிர்நீரை வெளியிடும் ஆண் எவ்வாறு உயிருடன் சம்பந்தப்பட்டிருக்கிறதோ அதே மாதிரி (தானியமும்-தொடுகை மட்டும்தான் உயிருடன்).*

வெளிவரும் உயிர் ஆண் ஆவதில்லை. ஆணுடன் சம்பந்தப்பட்டு மட்டும் இருக்கிறது.

**3.1.27. யோநே: சரீரம்**

*(பெண்ணின்) கர்ப்பத்தை அடைந்த பின்பே, உடல் உண்டாகிறது.*

அப்போதுதான் வினைப் பயனை அநுபவிக்கத் தேவையான உடல் உண்டாகிறது. அதற்குமுன் இல்லை.

**இனி, இந்தப் பாதத்தில் சொல்லப்பட்ட முக்கியமான கருத்துக் களைப் பட்டியல் இடுவோம்.**

1. இறந்தவுடன், உயிர் (அல்லது ஆத்மா), ஐம்பொறிகள், ஐம்பூதங்கள் மற்றும் அதன் ஊழ் அல்லது வினை இவைகளால் ஆன நுண் உடலுடன் வெளிக் கிளம்புகிறது.

2. திரும்பி இவ்வுலகுக்கு வரும்போது, பலனை அனுபவித்தது போக மீதி உள்ள கர்மத்துடன், சந்திர உலகிலிருந்து மழை முதலானவை வழியாக, தானியத்தின் வழியாக, ஆண் அதை உண்டபின், அவனின் உயிர்நீராகி, பெண்ணின் கருவில் நுழைந்து புது உடல் பெறுகிறது, மீதி இருக்கும் கர்மங்களை அநுபவிக்க.



3. அது திரும்பி வரும் வழியில், ஆகாயம், வாயு, மழை, தானியம், மனிதன் ஆகியவை இருந்தாலும், உயிர் அணுக்களாக ஆவதில்லை.

4. பூரண அறிவினைப் பெற்றவர்கள் இறந்தபின் 'அர்ச்சிராதி' வழியாக பிரம்மத்தின் உலகை அடைகிறார்கள்.

5. விதிக்கப்பட்ட, கர்மங்களை நல் ஒழுக்கத்துடன் செய்ப வர்கள் இறந்தபின் மூத்தோர் உலகை அடைகின்றனர். (பூரண அறிவு தோன்றாமல் பிரம்மனின் உலகை அடைய முடியாது)

6. பாவம் செய்தவர் யமனின் நரக உலகை அடைகின்றனர்.

மூன்றாம் அத்தியாயம், பிரம்மத்தை அடையும் வழிகளைக் கூறுகிறது.

இதன் நான்கு பாதங்களில் முதல் பாதம்; மறுபிறப்பு பற்றிய முக்கியமான கருத்துக்களைக் கொண்டது. கர்மத்தால் கட்டுண்டு, மீண்டும் மீண்டும் பிறந்து, நல்லவை கெட்டவைகளைச் செய்து இந்த சுழலிலிருந்து முக்தி பெறுவதே உயிரின் நோக்கம். ஸ்ரீ ராமானுஜர், முதல் பாதத்தை வைராக்கிய பாதம் என்கிறார். மாறி மாறிப் பிறப்பதிலிருந்து விடுபடும் வைராக்கியம் தேவை என்கிறார். ஒப்பற்ற பிரம்மத்தை அடைய இந்த வைராக்யம் (பிறப்பில் அலுப்பும், வெறுப்பும்) தேவையாகிறது. இரண்டாம் பாதத்தில், பிரம்மத்தின் இரண்டு முக்கிய அடையாளங்கள் விவரிக்கப்படுகின்றன: குறையற்ற தன்மை, நற்குணங்களின் இருப்பிடம்.

இந்தப் பாதத்திற்கு, 'உயபயலிங்க பாதம்' என்று பெயர் சொல்வர். பரமாத்மாவின் இரண்டு பெருமைகள், உயபயலிங் கங்கள். முதலில் வாழ்வில் வெறுப்பு. பிறகு இலக்கின் பெருமை. பிறகு இலக்கை அடையும் வழிகள். இவை மூன்றாம் நான்காம் பாதத்தில் சொல்லப்படும்.

எட்டு அதிகரணங்கள், 40 சூத்திரங்கள் கொண்ட இந்த இரண்டாம் பாதத்தை இரண்டாகப் பிரிக்க முடிகிறது. நான்கு அதிகரணங்கள் கனவு, தூக்கம் மற்றும் மூர்ச்சை நிலை இவைகளை விவரிக்கின்றன. அடுத்த நான்கில் பிரம்மத்தின் குறையின்மை, குண முழுமை பற்றிய தர்க்க ரீதியான கேள்விகளுக்கு விடை தரப்படுகிறது.

இனி சூத்திரங்கள்-

***1. உயிர் - கனவு நிலையில்***

***3.2.1. ஸந்த்யே ஸ்ருஷ்டிர் ஆஹ ஹி***

> *தோன்றும் பொருள்கள் உண்மையே, வேதம் அப்படிச் சொல்வதால்*





''கனவில் தேர் இல்லை. குதிரைகள் இல்லை. செல்லும் பாதை இல்லை. ஆயினும், அவைகளை உண்டாக்குகிறான்' -பிருக தாரண்யம் 6-3-10

***3.2.2. நிர்மாதாரம் சைகே புத்ராதயச்ச***

> *சிலர், அவ்வாறு பொருள்களை உண்டாக்குபவர் பிரம்மமே என்கின்றனர்.*

கடோபனிஷது (2.5.8) நம்மிடம் விழித்திருப்பவன் நாம் தூங்கும்போது பொருள்களை உண்டாக்குகிறான்' என்கிறது. ராமா நுஜர், ஜீவனே பொருள்களைப் படைக்கிறது என்று கூறுகிறார்.

**3.2.3. மாயா மாத்ரம் து கார்த்ஸ்ந்யேந அபிவ்யக்த ஸ்வரூபத்வாத்**

> *ஆனால் கனவுப் பொருட்கள் உண்மை இல்லை மாயை.*

ஏனெனில் அவைகளுக்கு பொருட்களை உண்மையான தன்மைகள் இல்லை. -சங்கரர்.

கனவுக் குதிரை புல் தின்னாது, குதிரையின் உண்மைத் தன்மை அதற்கு இல்லை என்கிறார். இங்கே ராமாநுஜர், கனவுப் பொருள்களை கனவு காண்பவர் மட்டுமே அனுபவிக்க முடியும்; மற்றவரால் முடியாது. ஆகவே இது பிரம்மத்தின் ஆச்சரிய சக்தியின் வெளிப்பாடு என்கிறார். 'மாயாமாத்ரம்' என்பது இந்த ஆச்சரிய சக்திதான். ஜீவன் முழு அறிவு அல்ல. அதனால், கனவுகளை பிரம்மமே உண்டாக்குகிறது. ராமாநுஜருக்கும், சங்கரருக்கும் முக்கியக் கருத்து வேறுபாடு இது. **'மாயை' என்ற சொல், பிரம்ம சூத்திரத்தில் முதன்முதலாக இங்குதான் வருகிறது.** சங்கரர் இங்கே கனவைக் கேட்டு குறி சொல்பவர்களைக் குறிப்பிடுகிறார். கனவின் பயன் குறி சொல்பவருக்கே என்கிறார்.

**3.2.4. பராபித்யாநாத்து திரோஹிதம், ததோ ஹ்யஸ்ய பந்த விபர்யயௌ**

> *உயிரின் நிஜ வடிவம், பிரம்மத்தால் மறைக்கப்பட்டுள்ளது. பிரம்மத்தின் அருளினாலேயே அந்த மறைப்பு நீங்கும். பராபித்யாநாத்து- பிரம்மத்தின் மீது ஆழ்ந்து சிந்தித்தால்- சங்கரர்.*

பரமபுருஷனின் இச்சையால்- ராமாநுஜர்.

**3.2.5. தேஹ யோகாத்வா ஸோ அபி**

*இந்த மறைப்பு, உயிர் உடலுடன் பிறப்பில் சேரும் போதும், பிரளய காலத்தில் உயிர் ஐம்பூதங்களுடன் நுட்ப நிலையில் சேரும்போதும் உண்டாகிறது. சங்கரர், உயிர் உடலுடன் சேரும்போது உடலின் குறைகளைத் தன் குறைகளாக வரித் துக் கொள்வதால் இந்த மறைப்பு நிகழ்கிறது என்கிறார். ராமாநுஜர் நேரடி அர்த்தத்தோடு நிறுத்தி விடுகிறார்.*

**3.2.6. ஸூசகச்ச ஹி ச்ருதேராசக்ஷதே ச தத்வித:**

*கனவின் பயன்களைப் பற்றி 'குறி சொல்வதற்காக கனவுகள் தோன்றுகின்றன.*

இந்த வினோதக் காரணம், சிந்திக்கத்தக்கது. ஏதோ ஒரு விதத்தில் கனவுகள் எதிர் காலத்தில் நிகழப் போவதை நமக்கு முன்னறிவிக்க ஏற்பட்டவை'' என்ற நம்பிக்கை பாதராயணர் காலத்தில் இருந்திருக்கலாம். கனவுகளுக்கு ஒரு வசீகரமான காரணம் கடவுள் எதற்கோ நேராகத் தோன்ற விரும்பாத் காலங் களில், கனவுகள் மூலம் தன் விருப்பங்களை, தன் ஆணைகளைத் தெரிவிப்பது என்றும் நம் புராணங்களில் காண்கிறது.

**2. கனவற்ற ஆழ்ந்த தூக்கம்.**

**3.2.7. ததபாவோ நாடீஷு தத் ச்ருதேராத்மநி ச**

*வேதம் கூறுகிறது. ''கனவற்ற ஆழ்ந்த தூக்க நிலையில் உயிர் பிரம்மத்துடன் ஒடுங்கியிருக்கிறது''*

சாந்தோக்யம் 8-6-3ம், பிருகதாரண்யம் 4-1-12ம் இதைச் சொல் கின்றன. ஆழ்ந்த தூக்கம் என்பது, 'புலன்களெல்லாம் அடங்கி வெளிப்பொருள்களின் அனுபவக் குழப்பம் இல்லாத தூக்க நிலையில் நாடிகளில் நுழைகிறேன்' என்கிற சாந்தோக்ய வாக்கு (8-6-3) பிருகதாரண்யம் தூங்கும்போது 7200 நாடிகள் வாயிலாக வந்து, இதயத்தை அடைந்து, அதில் படுத்துக் கொள்கிறான்



என்கிறது. எப்போது தூங்குகிறோமோ அப்போது ஸத் என்னும் பரமாத்மாவோடு சேர்ந்திருக்கிறான் என்கிறது, சாந்தோக்யம் 6-8

நாடிகள் என்பது நரம்புகள். அறியாமையில் இருப்பதால், உயிர் தான் தூங்கும் போது பிரம்மத்துடன் இருக்கிறோம் என்பதை உணர்வதில்லை என்கிறார், சங்கரர். கனவில்லாது ஆழ்ந்து தூங்கு பவர்கள், அதிர்ஷ்டக்காரர்கள். தன்னை அறியாமல் பிரம்மத்துடன் ஒன்றுகிறார்கள்.

**3.2.8. அத: ப்ரபோத: அஸ்மாத்**

*ஆகையால், பிரம்மத்திலிருந்து துயிலெழுகிறது. உயிர் பிரம்மத் தில் தூங்குவதால்.*

**3. நான்கு காரணங்கள்.**

**3.2.9. ஸ ஏவது கர்மாநுஸ்ம்ருதி சப்த விதிப்ய:**

*கர்மம், நினைவு, வேத வாக்யங்கள், மோட்சத்துக்கான விதிகள் இவைகளை நோக்கினால், தூங்கியவனே (எழுந்திருக்கிறான்)*

தூங்கும்போது பிரம்மத்துடன் இரண்டறக் கலந்துவிட்டால், துயிலெழுவது அதே ஜீவனா?

இல்லை வேறா?

தூங்கும்போது அவன் செய்த கருமங்களுக்கான பலனை முழுமையாக அனுபவிக்கவில்லை. அதனால் விதிப்படி, தூங்கிய வன்தான் எழுந்திருக்க வேண்டும். அவனுக்கு இன்னும் கர்ம விளைவுகள் மிச்சமிருக்கிறது.

எழுந்திருப்பவனுக்கு, நேற்று இரவு தூங்கிப் போனேன் என்ற நினைவு இருக்கிறது. ஆகவே அவன் மாறவில்லை.

வேதத்தில் சாந்தோக்யம் 6-10-2 புலி, சிங்கம், ஓநாய், பறவை, புழு எந்த ஜீவராசியும் தூங்கி எழுந்திருக்கும்போது அதே உடலில் தான் எழுந்திருக்கின்றன என்கிறது. தூங்கும்போதே பிரம்மத்துடன் கலந்துவிட்டால் மோட்சத்தை அடைவதற்கான விதிகள் எல்லாம் வீணாகிவிடும்.

இவ்வாறு தூங்குபவனும் விழித்தெழுபவனும் ஒரே ஆள் என்பதற்கு நான்கு காரணங்கள் சொல்லப்படுகின்றன.

குறளாசிரியர் ஒருபடி மேலே போய், 'உறங்குவது போலும் சாக்காடு, உறங்கி விழிப்பது போலும் பிறப்பு' என்னும்போது, அடுத்த பிறவியிலும் அவனே எழுந்திருக்கிறான் என்கிறார். செய்த காரியங்களின் விளைவுகளிலிருந்து தப்பிப்பது அவ்வளவு எளிதல்ல!

**4. மூர்ச்சை நிலை**

**3.2.10. முக்தேர்த்த ஸம்பத்தி: பரிசேஷாத்.**

*மயக்க நிலை, பாதி இறப்பு- ராமானுஜர்.*

*மயக்க நிலை, பாதி தூக்கம், (வேறு எப்படியும் சொல்ல முடியாததால்) - சங்கரர்.*

மூன்று நிலைகளைப் பார்த்தோம். விழிப்பு, கனவு, ஆழ்ந்த கனவற்ற தூக்கம். நான்காவது இறப்பு. மயக்க நிலையை இவைகளில் எதனுடன் சேர்க்கலாம்? விழிப்பு, இல்லை; கனவு நிலையில்லை உணர்வு இல்லாததால். மூர்ச்சை ஆழ்ந்த தூக்கமும் இல்லை; காரணம், ஆழ்ந்த தூக்கத்தில் சந்தோஷம் இருக்கிறது. ஆகவே அதை, பாதி இறப்பு என்று சொல்லலாம். முழு இறப்பில், விழிப்புக்குத் திரும்ப முடியாது.

**5. பிரம்மத்தின் இரண்டு அடையாளங்கள்.**

இனிவரும் சூத்திரங்களில்தான் சங்கரருக்கும், ராமானுஜருக்கும் உள்ள முக்கியமான வேறுபாடுகள் வெளிப்படுகின்றன. பிரம்ம சூத்திரம் ஒன்றே; அது எடுத்துக்காட்டும் வேத உபநிஷத் வாக்கியங்களும் ஒன்றே. இருந்தும், அவைகளை அர்த்தம் பண்ணிக் கொள்வதில் இருவரும் வேறுபடுகின்றனர். இரண்டு கருத்துக்களையும் சொல்லிவிட்டு, தீர்ப்பை வாசகர்களுக்கே விட்டு விடுகிறோம். தனிப்பட்டு எங்களைக் கேட்டால், வைணவர்களாகிய நாங்கள் ராமானுஜருடன்தான் ஒத்துப் போக வேண்டும். இருந்தும், சங்கரரின் கருத்தின் வசீகரத்தை நிராகரிக்க முடியாது. இருவரும் வெவ்வேறு காலத்தவர்கள், அவர்கள் காலகட்டாயங்கள் வெவ்வேறு என்பதை மனதில் கொண்டால்தான் இத்தனை எதிரும் புதிருமான கருத்துக்களின் காரணத்தைப் புரிந்து கொள்ள முடியும்.



**3.2.11. ந ஸ்தானாதோ அபி பரஸ்யோபயலிங்கம் ஸர்வத்ர ஹி**

*வேறு வேறு இடங்களில் பிரம்மம் இருந்தாலும் வேதத்திலும் ஸ்மிருதியிலும் அதற்கு இரண்டு தனி அடையாளங்கள் கூறப்படுகின்றன. இது ராமானுஜர். இதற்கு சங்கரர் இரண்டுவிதமாகப் பொருள் கொள்கிறார். பிரம்மத்திற்கு அது இருக்கும் இடத்தைப் பொறுத்து வேறு வேறு அடையாளங்கள் சொல்ல முடியாது. ஏனெனில், அது குணமற்றது என்பதால்.*

சங்கரர், இங்கு இருவகை அடையாளங்கள் என்பதை, குணங்கள் நிரம்பிய, குணங்கள் அற்ற என்று பொருள் கொள்கிறார்.

ராமானுஜர், குறையற்றிருத்தல், நற்குணங்களுடன் கூடியிருத் தல் என்று பொருள் கொள்கிறார். நிர்குணம் என்பது, குணமே அற்றது என்பதில்லை. கெட்ட குணம் இல்லாததே. இதுதான். இருவருக்கும் உள்ள வேறுபாடுகளின் ஆதாரம். மத்வர், இவர்கள் இருவரிலும் மாறுபட்டு ''பிரம்மம், வேறு வேறு இல்லை' என்கிறார். ஒரே சூத்திரம், மூன்று விளக்கங்கள்!

**3.2.12. பேதாதிதிசேந்ந, ப்ரத்யேகமதத்வசநாத்**

*வேறு வேறு வடிவில் இருந்தாலும், அவ்வடிவின் குறைகள் பிரம்மத்திற்கு இல்லை. -இது, ராமானுஜர்.*

*பிரம்மம் ஒன்றே வேறுபாடு இல்லாதது, வேதம் அதைச் சொல்வதால். -சங்கரர்.*

**3.2.13. அபி சைவமேகே.**

*மேலும் ஒரு பிரிவினர் இப்படி நேராகவே கூறுகின்றனர்.*

முண்டக உபநிஷத்தில், ஒரு விளக்கச் சித்திரம் காண்கிறது. ஒரு மரத்தில் இரு பறவைகள். ஒன்று உண்கின்றது; மற்றொன்று பார்த்துக் கொண்டு சும்மா இருக்கிறது என்று வருகிறது.

**3.2.14.** அருபவதேவ ஹி தத் ப்ரதாநத்வாத்

*பிரம்மத்திற்கு உருவம் இல்லை, அப்படி வேதம் கூறுவதால். -சங்கரர்.*

*அது மற்ற எல்லாப் பொருள்களையும் நடத்துவதால். -ராமாநுஜர்.*

பிரம்மத்திற்கு உருவம் உண்டு என்னும் வேதச் சொற்களை உண்மையென்று கொண்டால், அதற்கு உருவமில்லை என்னும் வேத வாக்கியங்கள் பொய்யாகிவிடும். அப்படியல்ல. உருவம், குணம் என்று சொல்வதெல்லாம், நாம் அதைப் பற்றி சுலபமாகச் சிந்திக்கத்தான் ஏற்பட்டவை.

சாந்தோக்யம் (8-14-1) 'ஆகாசம் என்னும் பரமாத்மாவே பெயர் மற்றும் உருவங்களைக் கொடுக்கிறது. அந்தப் பெயர் உருக்களால் தீண்டப் படாததே பிரம்மம்' என்கிறது.

பிரம்மம் செலுத்துவது (Driving force). அதனால், அதற்கு உருவம் இல்லை என்கிறார், ராமாநுஜர்.

**3.2.15.** ப்ரகாசவச்சாவையர்த்யாத்.

*பிரம்மம் ஒளி போலே- வேதச் சொற்கள் பொருளின்றிப் போகாது என்பதால். -சங்கரர்*

*நற்குணங்களும் குறையின்மையும் பிரம்மத்திற்குத் தரும் வேதச் சொற்கள் பயன் உள்ளவையாவதற்கு -ராமாநுஜர்.*

ஒரு அறையில் சிறிய இடைவெளியின் வழியே வரும் ஒளியை சிறிய ஒளி என்பது போலே- ஒளிக்கு சிறியது, பெரியது இல்லா விட்டாலும், பிரம்மத்திற்கு உரு இல்லாவிட்டாலும், உருவம் தருகிறது வேதம் என்கிறார் சங்கரர்.

**3.2.16.** ஆஹ ச தந்மாத்ரம்

*அறிவு மட்டுமே என்று கூறியது.*

*சங்கரர், பிரம்மத்திற்கு குணம் போன்ற தகுதிகள் இல்லை என்பதற்காக என்கிறார்.*



*பிரம்மம் ஒளியின் சொரூபம் என்று கூறியதால், மற்ற குணங்களே அதற்கு இல்லை என்று சொல்ல முடியாது. -இது, ராமாநுஜர்.*

**3.2.17.** தர்சயதி சாதோ அபி ஸ்மர்யதே

*சங்கரர், வேதம் சொல்வது நிர்குணபிரம்மம், குணமற்ற பிரம்மம் என்கிறார். ராமாநுஜர், குணங்கள் கொண்ட பிரம்மம், சூத்திரத்திற்கு இரண்டு விதமாகவும் அர்த்தம் கொள்ளலாம்.*

**3.2.18.** அத ஏவ சோபமா ஸூர்யகாதிவத்

*அதனாலேயே சூரியன் முதலியன (பிரம்மத்திற்கு உதாரணமாக) காட்டப்பட்டன. சங்கரர், தண்ணீரில் பிரதிபலிக்கும் சூரியன், நிஜ சூரியனாகாது. அதற்கு உரு கிடையாது; அதேபோல், பிரம்மம் உருவற்றது என்கிறார். ராமாநுஜர், தண்ணீரில் பிரதிபலிப்பதால் தண்ணீரின் குணங்கள் சூரியனுக்கு வராததுபோல, பிரம்மம் குறையற்றது, என்கிறார்.*

**3.2.19.** அம்புவதக்ரஹணாத்து ந ததாத்வம்

*தண்ணீரில் சூரியன் உண்மையில்லை. ஆகவே, இது பொருந்தாது. இது வாதியின் கருத்து.*

**3.2.20.** வ்ருத்திஹ்ராஸ பாக்த்வம் அந்தர்பாவாதுபய ஸாமஞ்ஜஸ்- யாதேவம் தர்சநாச்ச

*எல்லாப் பொருளிலும் உள்ளது. அவை விரியும் போதும், சுருங்கும் போதும், பிரம்மமும் விரிந்து சுருங்குகிறது என்கிற தவறான முடிவுக்கு வராமல் இருக்கவே, தண்ணீரின் உதாரணம் கூறப்பட்டது.*

ஓர் இளைஞனை சிங்கம் என்று வருணிக்கும் போது, சிங்கத்தின் அஞ்சாமை மட்டுமே குறிப்பது போல், உலகம் தண்ணீரில் தெரியும்

சூரியன் போல மாயத் தோற்றம் என்று கூறவே சங்கரர் இந்த சூத்திரத்தைப் பயன்படுத்துகிறார்.

ராமாநுஜர், தண்ணீரின் குறைகள் சூரியனுக்கு வராது என்று சொல்லவே இந்த சூத்திரம் என்கிறார்.

ஆச்சரியம்!

இனி வரும் எட்டு சூத்திரங்களையும் சங்கரர் ஓர் அதிகரணமாகக் கொண்டிருக்கிறார்.

இராமாநுஜர், அப்படியல்ல. பிருகதாரண்யக உபநிஷதம், 'இது இல்லை இது இல்லை' (நேதி) என்றுதான் கூறுகிறதே தவிர, குணமே இல்லை என்பதில்லை, நுட்பமாகவோ விரிவாகவோ, என்றார்.

பிருகதாரண்யகத்தின் இரண்டாவது அத்தியாயம், மூன்றாவது பிராமணம் ஒன்றிலிருந்து 6-வது சுலோகங்களை அறிந்து கொள்வது 21-ம் பிரம்ம சூத்திரத்திற்கு முக்கியம்.

டாக்டர் ராதாகிருஷ்ணன், இதன் முக்கியமான வாக்கியத்தை மொழிபெயர்க்கும்போது.

Now therefore there is the teaching "Not this, Not this" for there is nothing higher than this, that he is not this, now the desigantion for him is the truth of truth. verily the vital breath is truth and he is the truth of that.

ஆகவே வேதம் சொல்கிறது (அவன்) இது அல்ல, இது அல்ல, என்பது அவனுக்கு மேல் ஒன்றும் இல்லாததால். அவன் பதவி உண்மையின் உண்மை. பிராணனே உண்மை. அதன் உண்மை அவன்.

**3.2.21. ப்ரக்ருதைதாவத் த்வம் ஹி ப்ரிதிஷேததி ததோ ப்ரவீதி ச பூய:**

> *முன்பு பிரம்மம் எடுத்த உருவங்களை மாத்திரம் இது இல்லை இது இல்லை (நேதி) என்று வேதம் தள்ளுகிறது.. பிறகு மறுபடியும் (பிரம்மத்தின்) குணங்களையே கூறுகிறது.*

இந்த 'நேதி' தத்துவத்தைப் பற்றி நூல்கள் பல இருக்கின்றன. ராமநுஜரும் சங்கரரும் கூர்மையாக வேறுபடும் பகுதி இது.



ராமாநுஜர், இல்லை இல்லை என்று சொன்னது இதுவரை சொன்னது மட்டும் இல்லை என்கிற அர்த்தத்தில், என்கிறார். மேலும், அதற்கு கல்யாண குணங்கள் உண்டு. அவைகளை பூரணமாகச் சொல்ல முடியாததைத்தான் 'இல்லை' எனக் குறிப்பது என்கிறார்.

சங்கரர் பிரம்மத்திற்கு நுட்பமான, விரிவான, இரண்டு வடிவிலும் குணங்கள் இல்லை, எந்த குணமும் அற்றது, நிர்குணமானது இந்த வார்த்தைகள் எல்லாம் பிரம்மத்தை அறிய ஏற்பட்ட வழி காட்டி தான் என்கிறார் (சென்னை என்று எழுதிய கைகாட்டியை, சென்னை நகரம் என்று எடுத்துக் கொள்ளக் கூடாது... அதுபோல்)

**3.2.22. ததவ்யக்த மாஹ ஹி**

> *அந்த பிரம்மத்தை வேதம் மூலமே அறியமுடியும். வேதமே அப்படிச் சொல்கிறது.*

பிரம்மத்தை நாம் ஒரு பொருளைக் காண்பது போல் காண முடியாது.

**3.2.23. அபி ஸம்ராதநே ப்ரத்யக்ஷ அநுமாநாப்யாம்**

> *அன்புடன் ஆழ்ந்து சிந்தித்தால் பிரம்மத்தை அறியலாம் (ஒருவாறு நம்பிக்கை தரும் சூத்திரம் இது.)*

**3.2.24. பிரகாசாதிவச்ச அவைசேஷ்யம் ப்ரகாசச்ச கர்மண்யப்யாஸாத்**

> *எவ்வாறு ஒளியும் ஆனந்தமும் பிரம்மத்தின் இயற்கை என்று அறிகிறோமோ, அவ்வாறே உருவமும் அருவமும் அதன் இயற்கை என்று அறியலாம்.*

நம்மாழ்வார், ''உளன் எனில் உளன். அவன் உருவம் இவ்வுருவுகள். உளன் அலன் எனில் அவன் அருவம்,'' என்று இதை நேரடியாகச் சொல்கிறார்.

இந்த சூத்திரத்தில் 'ஒளி முதலிய' என்று வருவதை சங்கரர், சூரியனும் பிரம்மமும் ஒன்று என எவ்வாறு அறிகிறோமோ அது போல் பிரம்மமும் அதனைச் சிந்திக்கும் ஜீவனும் ஒன்று என்கிறார். உலகம் பிரம்ம மாயை என்கிறார்.

**3.2.25. அதோ அநந்தேந ததா ஹி லிங்கம்,**

*ஆகவே பிரம்மம் அளவற்ற அடையாளங்களுடன் இரண்டு நற்குணங்களுடன் உள்ளது.' -இது ராமானுஜர்.*

*'ஆகவே, ஜீவன் பிரம்மமாகவே ஆகிறது. வேதம் சொல்வதால். -இது சங்கரர்.*

அநந்தேந' என்பதற்கு ஒருவர், அளவற்ற கல்யாண குணங் களோடு என்கிறார். மற்றவர், எல்லையற்ற பிரம்மம் என்கிறார்.

**6 பிரம்மமும் உலகமும் பாம்பு**

**3.2.26. உபயவ்யபதேசாத் து அஹி-குண்டலவத்**

*பிரம்மமும் உலகும் ஒன்றே என்றும், வேறு வேறு என்றும் வேதம் கூறுகிறது. இதை பாம்பு தன்னைச் சுருக்கிக் கொள்வதற்கும் நீட்டிக் கொள்வதற்கும் ஒப்பிடலாம்.*

பிரம்மமும் உலக உற்பத்திக்கு முன் சுருங்கியும், உலகம் உண்டானதன்பின் நீண்டும் தோன்றுகிறது. ஒரு பாம்பைப்போல.

**3.2.27. ப்ரகாசாச்ரயவத் வா தேஜஸ்த்வாத்**

*சூரியனும் அதன் ஒளியும் போலவே என்னலாம்.*

ராமானுஜர், மேலே உள்ள இரண்டு சூத்திரங்களையும் பூர்வபக்ஷ வாதிக் கருத்தாகக் கொண்டு அடுத்த சூத்திரத்தின் விளக்கத்தில் விடையளிக்கிறார்.

**3.2.28. பூர்வவத் வா**

*முன்பு சொன்னது போலவே*

'முன்பு' என்பது இரண்டாம் அத்தியாயத்தின் மூன்றாம் பாதம் 7.43.45-ம் சூத்திரங்களில் சொன்னதுபோல் ஜீவ'ன் உலகம் எல்லாம் பிரம்மத்தின் அம்சமே என்றே கருத்து சொல்லப்பட்டது.



**3.2.29. ப்ரதிஷேதாச்ச**

*தன்மைகள் பிரம்மத்திற்கு இல்லை என்று சொல்வதாலும்*

பிருகதாரண்யகம் (5.4.25) பிரம்மத்திற்கு முதுமை, மரணம், பிறப்பு இவையெல்லாம் கிடையாது என்கிறது. இவை உலகின் அம்சங்கள். எனவே, உலகம் பிரம்மத்தின் அம்சம் மட்டுமே.

**7. பிரம்மத்தை விட உயர்ந்தது ஏதும் இல்லை.**

**3.2.30. பரமத: ஸேதூந்மாந ஸம்பந்தபேத வ்யபதேசேப்ய:**

*பிரம்மம் பாலம் என்றால், அதைக் கடந்து அடையும் பொருள் வேறு என்றாகிறது.*

இது சரியில்லை (இது பூர்வபக்ஷக் கருத்து)

**3.2.31. ஸாமாந்யாத்து**

*பொதுத்தன்மையையே காட்டுகிறது. (அணை என்ற சொல்)*

அணை அல்லது பாலம், இரு மருங்கிலும் உள்ள பொருள்கள் கலந்துவிடாமல் காக்கும் தன்மையைக் குறிக்கும்படி ஏற்பட்ட பொதுச் சொல்லாகவே காட்டப்பட்டது, சாந்தோக்ய உபனிஷதில் உள்ள கருத்து.

**3.2.32. புத்த்யர்த்த: பாதவத்**

*அப்படிச் சொல்வது பிரம்மத்தை வழிபடவே (பாலம், அணை, என்பதெல்லாம் ஒரு Metaphor)*

**3.2.33. ஸ்தான விசேஷாத் ப்ரகாசாதிவத்**

*இடத்தோடு சம்பந்தப்படுத்தியதால் பிரம்மத்திற்கு அளவு கூறப்பட்டது.*

ஜன்னல் வழியாக வரும் சூரிய ஒளி ஜன்னல் அளவுதான் என்ற கூற முடியாதல்லவா, அது போல்...

**3.2.34. உபபத்தேச்ச**

*பொருந்துவதாலும்*

*முண்டக உபநிஷது (2.2.5) மோட்சமடைய பிரம்மம் தான் வழி என்று சொல்லியிருக்கிறது.*

அவ்வகையில், பாலத்தை உதாரணமாகச் சொன்னது பொருத்தமே.

**3.2.35. ததா அந்யப்ரதிஷேதாத்**

*(பிரம்மத்தைக் காட்டிலும்) மேலானது வேறொன்றும் இல்லை என்று கூறுவதாலும் (30-வது சூத்திரத்தில் சொன்னது சரியல்ல)*

சுவேதாசுவதர உபநிஷது எந்த பரமாத்மாவைக் காட்டிலும் மேலானது இல்லையோ, எவனைக் காட்டிலும் பெரியவன் இல்லையோ என்கிறது (3.9)

**3.2.36. அநேந ஸர்வகதத்வம் ஆயாம சப்தாதிப்ய:**

*பிரம்மம் எல்லாவற்றிலும் பரவியிருக்கிறது (வேதம் அப்படிச் சொல்வதால்).*

**8. பலனைத் தருபவன் பிரம்மமே**

**3.2.37. பலமத உபபத்தே:**

*பிரம்மத்திலிருந்து எல்லாப் பயன்களும் கிடைக்கின்றன. பலன் தருவது அவனுக்கே பொருந்தும்.*

எல்லாம் அறிந்த பிரம்மமே பலனைத் தரமுடியும். ஒரு காரியம், அதைச் செய்தவுடன் முடிந்து விடுகிறது. பலன் அளிக்க எல்லாவற்றையும் எப்போதும் அறியும் பிரம்மம் வேண்டும்.

**3.2.38. ச்ருதத்வாச்ச**

*வேதம் அவ்வாறு சொல்வதால்*



பிருகதாரண்யகம், பிறப்பற்ற பரமாத்மா உணவையும் பொருளையும் அளிப்பவன் (5.4.24), தைத்திரியம் (7-1) இவன் மோட்சத்தை அளிக்கிறான், என்றும் சொல்கின்றன.

**3.2.39. தர்மம் ஜைமினி: அத ஏவ**

*முயற்சிகளே பயன் அளிக்கும் என்று ஜைமினி கூறினார்.*

இது பூர்வபட்ச சூத்திரம். செய்யும் யாகம் முதலானவைகளே போதும் பலன் தர, பிரம்மம் தேவையில்லை என்பது குறிப்பு.

**3.2.40. பூர்வம் து பாதராயணோ ஹேது வ்யபதேசாத்**

*ஆனால், பாதராயணர் அவ்வாறு கருதவில்லை.*

யாகத்தில் ஆராதிக்கப்படும் தேவதைகளின் உள்ளேயும் பிரம்மம் இருப்பதால்.

*இந்தப் பாதத்தில் சொல்லப்பட்ட முக்கியக் கருத்துகளை, வழக்கம் போல் பொழிப்புரைக்கலாம்:*

**1. கனவுப் பொருள்களும் உண்மையே. அவை நம்மாலே படைக்கப்படுகின்றன (சங்கரர், அவை உண்மை இல்லை என்கிறார்)**

**2. நம் உயிரின் உண்மை நிலை பிரம்மத்தால் மறைக்கப் பட்டிருக் கிறது.**

**3. ஆழ்ந்த தூக்கத்தில் நாம் பிரம்மத்துடன் ஒன்றாகிறோம்.**

**4. மயக்கம் பாதி இறப்பு, பாதி ஆழ்ந்த தூக்கம், சங்கரர்.**

**5. பிரம்மம் உருவும் அருவும் அப்பாற்பட்டதும்...**

**6. அதன் அளவின்மையைக் காட்டவே இது இல்லை என்கிறது வேதம். உருவும் அருவும் அற்ற ஒன்று என்று காட்டவே இல்லை இல்லை என்கிறது வேதம்.**

**7. பிரம்மத்தை விட உயர்ந்தது இல்லை.**

**8. பலன் தருபவன் பிரம்மமே.**

இருபத்து ஆறு அதிகரணங்களையும், 64 சூத்திரங்களையும் (சங்கரர்படி 36 அதிகரணங்கள், 66 சூத்திரங்கள்) கொண்ட இந்தப் பாதம்தான் பிரம்ம சூத்திரத்திலேயே மிகப் பெரிய பாதம். ஆனால், இந்தப் பாதத்தில் ஆழ்ந்த தத்துவக் கருத்துகள் இல்லை. மூன்றாம் அத்தியாயமே பிரம்மத்தை அடைவதன் வழிகளைச் சொல்கிறது என்கிறோம். இந்தப் பாதத்தில் அவ்வழிகளை (இந்த வழிமுறை களை பிரம்ம உபாஸனம் அல்லது பிரம்ம வித்யை என்கிறார்கள்) ஆராய்ந்து, பல உபநிஷதங்களில் சொல்லப்பட்டிருக்கும் வழிகளில் ஒற்றுமை காணப்படுகிறதா என்று நிச்சயக்கப்படுகிறது. எல்லா வழிகளும் பிரம்மத்தையே அடைவிக்கின்றன. வேதங்களில் கூறப்படும் வெவ்வேறு சில வழிகள் (வித்யைகள்) ஒன்றே என்று நிரூபித்து, அவ்வழிகளில் சொன்ன எல்லா வழிமுறைகளையும் ஒருங்கிணைத்து நாம் கடைப்பிடிக்க வேண்டும் எனக் கூறுகின்றன சில சூத்திரங்கள். சில வித்யைகள் தனித்தனி என்று கூறி, அவை களைக் கடைப்பிடிக்கக் கூறுகின்றன. மற்றும் சில சூத்திரங்கள். பெரிய பாதம் என்றாலும், சுலபமாக நாம் புரிந்து கொள்ளலாம். ஒன்றேயான பிரம்ம வித்யைகள் ஏன் பல வேதங்களில் கூறப் பட்டிருக்கிறது என்றால், நம் முன்னோர் எல்லோரும் எல்லா வேதங்களையும் கற்றுக் கடைப்பிடிக்கவில்லை. சிலர் சில வேதங்களையே, அதன் உட்பிரிவுகளையே (சாகைகளையே) கற்றுக் கடைப்பிடித்தனர். ஆகவேதான் இந்த வழிகள் (வித்யைகள்) ஒன்றே ஆனாலும், பல இடங்களில் வருகின்றன.

### 3.3.1. ஸர்வவேதாந்தப்ரத்யயம் சோதநாத்யவிசேஷாத்

*எல்லா வேதங்கள் சொல்வதும் ஓரே வழிதான். எல்லா வேதங்களாலும் சொல்லப்படும் (வைஸ்வாநர வழி முதலான) வழிகள் ஒன்றுதான்- அவ்வழிகளின் பெயர், அடையப்படும் பொருள், அவற்றின் விதிமுறைகள் ஒன்றாகவே இருப்பதால்.*





உரையாசிரியர் இங்கே வைச்வாநரவழி, தஹர வழி, அக்ஷரவழி என்றும் வழிகளை உதாரணத்திற்கு எடுத்துக் கொள்கிறார். இங்கே விளக்கம் இல்லாமலே சூத்திரம் புரியும் உங்களுக்கு.

### 3.3.2. பேதாந்நேதி சேதேகஸ்யாமபி

*அவ்வழிகள் வேறு வேறு: ஏனெனில், ஒவ்வொரு வேதத்திலும் (அவற்றைச் சொல்லும் போது) சிறு வித்யாசங்கள் உள்ளன என்று கூறினால், அது தவறு. அவை சிறு வித்யாசங்களே (வேறு வேறு வேதங்களைக் கடைப் பிடிப்பவர்களுக்காகவே ஓரே வழி பல வேதங்களில் கூறப்பட்டிருக்கிறது என்பது குறிப்பு.)*

### 3.3.3. ஸ்வாத்யாயஸ்ய ததாத்வே ஹி ஸமாசாரே அதிகாராச்ச ஸவவச்ச தந்நியம:

*வேதம் படிக்கத் தகுதியே ஒழிய, வழியில் வேறுபாடு இல்லை- 'சமாசாரம்' என்ற நூலில் சொல்லப்பட்டது போலே.*

இதற்கு விளக்கம் தேவை. அதர்வண வேதத்தைச் சேர்ந்த முண்டக உபநிஷத்தில் அக்ஷர வித்யையைக் கூறும்போது, தலையில் நெருப்பைச் சுமந்து செல்லும் சடங்கு கூறப்படுகிறது. மற்ற வேதங்களில் அக்ஷர வித்யையைக் கூறும்போது இந்தச் சடங்கு கூறப்படவில்லை. ஆகவே முண்டக உபநிஷத்தில் கூறப் பட்ட அக்ஷரவித்யை வேறு என்றால், அது தவறு என்கிறது இந்த சூத்திரம். அந்தச் சடங்கு அதர்வண வேதத்தைப் படிக்க இடப்பட்ட நிபந்தனை-வித்யை (வழி) க்காக இடப்பட்டது அல்ல என்கிறது சமாசாரம் என்ற நூல்.

### 3.3.4. தர்சயதி ச

*வேதமே காட்டுகிறது*

தஹர வழியைப் பற்றி சாந்தோக்யம் மற்றும் தைத்திரிய உபநிஷத்துகள் கூறும்போது, அடையப்படும் பிரம்மத்திற்குக் கூறிய குணங்கள் ஒன்றாக இருக்கின்றன. சாந்தோக்யம் கூறும்

எட்டு குணங்களை, தைத்திரியம் சேர்த்துக் கொள்கிறது. ஆகவே, இரண்டிலும் சொல்லப்பட்ட தஹரவித்யை ஒன்றே.

**3.3.5. உபஸம்ஹாரோர்த்தாபேதாத்**
**விதிசேஷவத் ஸமாநே ச**

*எல்லா வழிகளும் ஒன்றே என்னும்போது, (வேதத்தின்) ஓரிடத்தில் கூறப்பட்ட குணங்களை மற்றொரு இடத்தில் கூறப்பட்ட குணங்களோடு சேர்த்துக் கொள்ள வேண்டும்.*

ஒரே பெயருடைய வழி, பல வேதங்களில் கூறப்படுகிறது. ஒவ்வொரு இடத்திலும் கூறப்பட்ட வழிமுறைகளை நாம் மற்ற இடங்களில் கூறப்பட்ட விதிமுறைகளுடன் சேர்த்துக் கொள்ள வேண்டும். அவற்றினிடையே எதிர்ப்பு இல்லாததால்.

**3.3.6. அந்யதாத்வம் சப்தாதிதி சேந்நாவிசேஷாத்.**

*வேறு வேறு வழிகள் வேறுபாடு உண்டு என்றால், அது தவறு கூறப்பட்டது ஒன்றே.*

இது வாதியின் கருத்தாகக் கொள்ளப்படுகிறது. (பூர்வபக்ஷம்) பிருகதாரண்யக, சாந்தோக்ய உபநிஷத்துகளில் முக்கியப் பிராணனை அடையும் வழி கூறப்படுகிறது. கூறப்பட்ட இரண்டு வழிகளும் ஒன்றே. இந்த வழிக்கு உத்கீத வித்யை என்று பெயர்.

**3.3.7. த வா ப்ரகரணபேதாத் பரோவரீயஸ் த்வாதிவத்**

*அது தவறு - இரண்டிலும் வழிபடப்பட்டவன் வேறு வேறு என்பதால்.*

சாந்தோக்யத்தில் 'ஓம்' என்னும் பிரணவத்தை வழிபடச் சொல்கிறது. பிருகதாரண்யத்தில் முக்கியப் பிராணனை வழிபடச் சொல்கிறது. ஆகவே, இரண்டிலும் கூறப்பட்ட உத்கீத வித்யை வேறு வேறு.



**3.3.8. ஸம்ஜ்ஞாதச்சேத் தருக்தமஸ்தி து ததபி**

*பெயர் ஒன்று ஆதலால் வித்யைகள் (வழிகள்) ஒன்று என்றால் அது சரியில்லை- பெயர் ஒன்றாயிருந்தது, வழிகள் வேறாக இருக்கும் இடங்கள் வேதத்தில் உள்ளன.*

அக்னி வழிபாடு என்ற பெயரில், நித்ய அக்னி வழிபாடும் எப்போதாவது செய்யும் அக்னி வழிபாடும் கூறப்படுகின்றன. சாந்தோக்யத்தில் இரண்டும் வேறு வேறு வழிகள்.

**3.3.9. வ்யாப்தேச்ச ஸமஞ்ஜஸம்**

*நடுவில் சொல்லப்பட்டதும், பிரணவத்தை வழிபடவே சொல்கிறது என்று கூறுவது பொருத்தம்.*

சாந்தோக்யத்தில் முதலில் பிரணவ (ஓம்) வழிபாட்டைச் சொல்லி, பல இடங்களில் பிரணவ வழிபாட்டையே சொல்கிறது. ஆனால், நடுவில் மட்டும் உத்கீதம் என்ற வழிபாட்டைக் கூறுகிறது. இங்கே உத்கீதத்தின் உறுப்பாக பிரணவமே கூறப்பட்டது என்று கொள்ள வேண்டும்.

**3.3.10. ஸர்வாபேதாத் அந்யத்ரேமே**

*'பிராண' வழிகள் ஒன்றே.*

*பல இடங்களில் கூறப்படும் பிராண வித்யை (வழி) ஒன்றே ஆதலால், ஆங்காங்கே கூறப்பட்ட குணங்களை ஒருங்கிணைக்க வேண்டும்.*

கௌஷீதகி, சாந்தோக்யம், பிருகதாரண்யகம் மூன்றிலும் கூறப்பட்ட பிராண வித்யை ஒன்றே. ஆகவே, சாந்தோக்யம், பிருகதாரண்யகம் கூறிய குணங்களை கௌஷீதகியில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

எல்லா வித்யையிலும் ஆநந்தம் முதலியன உண்டு.

**3.3.11. ஆநந்தாதய: ப்ரதாநஸ்ய**

*ஆநந்தம் முதலான குணங்கள், பிரம்மத்திற்கு எல்லா வழிமுறைகளிலும் உண்டு.*

இங்கே குறிப்பிடப்படுவது ஆனந்தம், அறிவு அளவில்லாதது, உண்மையானது (மாறாதது) குறை (கரை) இல்லாதது என்ற முக்கிய குணங்கள். இவை வெவ்வேறு உபநிஷத்துகளில் வெவ் வேறு வழிமுறைகள் கூறப்பட்டாலும் அவற்றின் முக்கியம் கருதி, அவைகளை ஒருங்கிணைத்து எல்லா வழிமுறையிலும் கொள்ள வேண்டும்.

**3.3.12. ப்ரயசிரஸ்த்வாத்யப்ராப்தி: உபசயாபசயௌ ஹி பேதே**

*(பிரம்மத்தின்) தலையாகக் கொண்ட மகிழ்ச்சி முதலிய குணங்களை எல்லா வழிமுறைகளிலும் சேர்த்துக்கொள்ள முடியாது. குறைவு, நிறைவு வந்துவிடும் ஆகையால்.*

தைத்திரிய உபநிஷத்தில், (2.5.1) 'பிரம்மத்தின் தலை மகிழ்ச்சி, அதன் வலது, இடது பக்கங்கள் சுகம், பெரிய சுகம்' என்று வருகிறது. இது ஓர் உருவகம். தலை, பக்கங்கள் என்றால் அவை களுக்குப் பெரியது, சிறியது என்ற குறைபாடு வந்துவிடும். ஆகவே, இங்கே கூறப்பட்ட மகிழ்ச்சி, சுகம் என்பவை குறை யுள்ளவை ஆகின்றன. ஆதலால், அந்தக் குணங்களை (ஆநந்தம் போன்றவற்றுக்குச் சொன்ன மாதிரி) எல்லா வழிமுறைகளிலும் சேர்த்துக் கொள்ளக்கூடாது.

**3.3.13. இதரே த்வர்த்தஸாமாந்யாத்**

*(மேலே கூறிய குணங்களில் இருந்து) வேறுபட்ட ஆனந்தம் முதலான குணங்கள் பிரம்மத்தின் உண்மையான ஆதாரமான குணங்கள்.*

விளக்கம் தேவை இல்லை இதற்கு.

**3.3.14. ஆத்யாநாய ப்ரயோஜநாபாவாத்**

*(எளிதாக) வணங்குவதற்கு மட்டுமே, (பிரம்மத்தின் முடி, மகிழ்ச்சி என்றெல்லாம் கூறப்பட்டது)- வேறு பயன் இல்லை (அவ்வாறு கூறுவதற்கு)*

இதற்கும் விளக்கம் தேவை இல்லை.



**3.3.15. ஆத்மசப்தாச்ச**

*(ஆனந்தமயன் என்னும்போது) ஆத்மா என்ற சொல் (பிரம்மத்திற்கு) வருகிறது.*

ஆகவே ஆநந்தம் என்பது பிரம்மத்தின் ஆதாரம் என்பது குறிப்பு.

**3.3.16. ஆத்மக்ருஹீதிரிதரவதுத்தராத்**

*(இங்கே) ஆத்மா என்ற சொல் பிரம்மத்தையே குறிக்கிறது- மற்ற இடங்களைப் போலே.*

பிரபஞ்ச தோற்றத்தைக் கூறும் பல இடங்களில், பிரம்மத்திற்கு 'ஆத்மா' என்ற சொல்லே கூறப்பட்டது, பல உபநிஷத்துக்களில். அதுபோலே ஆத்மா ஆநந்தமயன் என்னும்போது ஆத்மா என்று பிரம்மத்தையே குறிக்கிறது.

**3.3.17. அந்வயாதிதி சேத் ஸ்யாதவதாரணாத்**

*(முன்பு சில இடங்களில் ஆத்மா என்ற சொல்) ஜடப் பொருளைக் குறிக்கின்றதுவே, (ஆகையால் இங்கே ஆத்மா எவ்வாறு பிரம்மத்தைக் குறிக்கும்) என்றால், அது சரியல்ல- அந்த இடங்களில் பிரம்மமே குறிக்கப்படுகிறது.*

முன்பு, பிராணமயன், மநோமயன் என்ற இடத்தில் ஆத்மா என்ற சொல் உபயோகிக்கப்படுகிறது. பிராணன், மனம் முதலிய பொருள் மூலம் பிரம்மமே குறிக்கப்படுகிறது.

**3.3.18. கார்யாக்யாநாதபூர்வம்**

*பிராணனுக்கு உடையாகிறது நீர் என்கிறது வேதம்.*

இந்த சூத்திரத்தை 3.1.10 உடன் இணைக்கலாம். சாந்தோக்யம், பிருகதாரண்யகம் இவற்றில் முக்கியப் பிராணனுக்கு, நாம் உணவு உண்ணும் முன்னரும், பின்னரும் பருகும் நீரை, உடையாகக் கூறுகின்றன. நம்மாழ்வார், 'உண்ணும்சோறு, பருகு நீர், தின்னும் வெற்றிலை எல்லாம் கண்ணன்' என்றனர்.

**3.3.19. ஸமாந ஏவம் சாபேதாத்**

*ஒன்றே- இரு இடங்களில் கூறப்பட்டதும் இரண்டும் ஒன்றே- கூறப்பட்ட குணங்கள் மாறாதிருப்பதால்*

இந்த சூத்திரம் பிருகதாரண்யகத்தில் சொல்லப்பட்ட சாண்டில்ய வழி முறையே. சுக்ல யஜுர் வேதத்தில் சொல்லப்படுகிறது என்கிறது. யஜுர் வேதம், 'அவன்' பரிசுத்த மனத்தால் அறியத் தக்கவனாய், பிராணனை சரீரமாகக் கொண்டவனாய், தானே ஒளியுடையவனாய் ஆகாயத்திற்கு ஆத்மாவாக இருப்பவனாய், உண்மையே வடிவமான ஆத்மாவை (பரமாத்மாவை) வணங்க வேண்டும்' என்கிறது. பிருகதாரண்யகம் 'இந்தப் புருஷன் பரிசுத்தமான மனத்தால் அறியத்தக்கவன், தானே ஒளியானவன், மாறுதல் அற்றவன், இதயத்தில் நெல்/கோதுமை அளவு உருக் கொண்டவன், எல்லாரையும் வசப்படுத்துபவன், அனைத்தையும் செயல்படுத்துபவன், அனைத்தையும் தன் உரிமையாகக் கொண்டவன், அனைத்தையும் ஆட்சி புரிபவன்' என்கிறது. இந்த சூத்திரம் இரண்டு வழிமுறைகளும் ஒன்றுதான் என்கிறது. பிருகதாரண்யகத்தில் அதிகமாகக் கூறப்பட்ட குணங்கள்- 'உண்மையே வடிவானவன்' என்பதில் அடக்கம்.

**3.3.20. ஸம்பந்தாதேவமந்யத்ராபி**

*சூரிய வழிபாடும், கண்ணின் வழிபாடும் ஒன்றே- முன்னால் கூறியபடியே, (இரண்டு இடங்களுக்கும்) சம்பந்தம் உள்ளதால், இரண்டும் ஒன்றே.*

உரையாசிரியர்கள் இங்கே பிருகதாரண்யகத்தில், சூரிய மண்டலத்திலும், வலது கண்ணிலும் உள்ளவன் பிரம்மம் என்று சொன்னதைக் கொண்டு (இரண்டிலும் உள்ளது பிரம்மம்- ஆகவே சம்பந்தம் உள்ளது) சூரிய வழிபாடும், கண்ணில் உள்ள பிரம்மத்தின் வழிபாடும் ஒன்றே என்றும் வாதிக் கருத்தைச் சொல்கிறது இந்த சூத்திரம் என்கிறார்கள்.

**3.3.21. ந வா விசேஷாத்.**

*வேறுபடுகையால், மேலே சொன்னது சரியல்ல.*



இரண்டு இடத்திலும் கூறப்பட்ட பிரம்மம் உருவ வேறுபாடு கொண்டது. பெரியதும், சிறியதும். ஆகவே, இரண்டு வழிபாட்டு முறைகளும் வேறு வேறு. ஒற்றுமை சொன்ன (3.1.19) இடத்தில் பிரம்மம் இதயத்தில் உள்ளது என்று இரண்டு இடத்திலும் வருகிறது.

**3.3.22. தர்சயதி ச**

*வேதமும் (அவ்வாறே) வேறுபடுத்துகிறது.*

ஆதித்ய புருஷனின் உள் உறைபவனும், கண்ணின் புருஷனின் உள் உறைபவனும் பிரம்மமே என்கிறது சாந்தோக்யம். இப்படி விளக்குவதால், இரண்டும் (ஆதித்ய புருஷனும், கண்ணின் புருஷனும்) வேறு என்றாகிறது. சற்று வேடிக்கையான வாதம் இது.

**3.3.23. ஸம்ப்ருதி த்யு வ்யாப்த்யபி சாத:**

*முன் போலே, (பிரம்மத்தின்) தாங்கி நிற்கை, எங்கும் பரவி நிற்கை (போன்ற) குணங்களை எல்லா வழிகளிலும் சேர்க்கக் கூடாது.*

இந்தக் குணங்கள் கூறப்பட்ட அந்தந்த இடத்திலே (வழியிலே) மட்டும் பொருந்தும். உதாரணமாக எங்கும் பரவி நிற்கை 'சிறிய ஆகாச' வழிமுறையில் பொருந்தாது.

**3.3.24. புருஷவித்யாயாமபி சேதரேஷாம் அநாம்நாநாத்**

*புருஷ வித்யைகளும் வேறுவேறு.*

*புருஷ வித்யை (புருஷ வழி) இரண்டிலும் (உரு அடையும் பயன்) வேறுபாடு இருப்பதால் அவை வேறு வேறு.*

இந்தப் புருஷ வழி தைத்திரீயம், மற்றும் சாந்தோக்ய உபநிஷத்துக்களில் கூறப்படுகிறது. பெயர் மட்டுமே ஒன்று, மற்றபடி வேறு எதிலும் ஒற்றுமை இல்லை. ஆகவே, அவை வேறுவேறு என்கிறது இந்த சூத்திரம்.

**3.3.25. வேதாத்யர்த்த பேதாத்**

*சில மந்திரங்கள், பிரம்ம வழிபாட்டுக்கு உறுப்பல்ல. அவற்றின் குறிக்கோள் வேறு. ஆகையால் அந்த சில வேத மந்திரங்களை பிரம்ம வழிபாட்டோடு சேர்க்கக் கூடாது.*

'ஸஹ நாவவது' (தைத்திரியம்) (நம் இருவரையும் நாம் கூறும் வேத மந்திரம் காக்கட்டும்) போன்றவை பிரம்ம வித்யையோடும் சேராது. அதன் குறிக்கோள், நம்மை பிரம்ம வித்யைக்குத் தயார் செய்வதுதான்.

*'விடும் விடும், 'சேரும்' என்ற வேதச் சொற்களைச் சேர்ந்தே நினைக்க வேண்டும்.*

**3.3.26. ஹாநௌ து உபாயநசப்தசேஷத்வாத் குசாச்சந்தஸ் ஸ்துத்யுபகாநவத் ததுக்தம்**

*(புண்ணிய பாவங்கள்) விட்டு விடும் (பிரம்மத்தை அடைந்தவனுக்கு) (அவை) அவனுடைய உற்றாரையும் எதிரிகளையும் சேரும் என்றும் வேத வார்த்தைகள் வெவ்வேறு இடங்களில் சொல்லப்பட்டிருந்தாலும், அவற்றை ஒன்றாகவே சிந்திக்க வேண்டும்- மரம், வேத வார்த்தைகள், வேதப் புகழ்ச்சி, வேதம் பாடுவோர் இவைகளைப் போலே.*

உரையாசிரியரின் உதவி இல்லாமல் புரியாது இந்த சூத்திரம். சாந்தோக்யம் (8.13.1), முண்டக உபநிஷத்து (3.1.3) இவற்றில் 'பிரம்மத்தின் உலகை அடைபவன் (பிரம்மத்தை உணர்பவன்) தன் புண்ணிய பாவங்களை விட்டுவிடுகிறான்'' என்கிறது. மற்றொரு இடத்தில் 'பிரம்மத்தை அடைந்தவன். உடலை விடும்போது அவனுடைய புண்ணியங்கள் அவனுடைய நண்பர்களை அடைகின்றன, பாவங்கள் விரோதிகளை அடைகின்றன' என்று வருகிறது. இந்த சூத்திரம், இரண்டு இடங்களையும் சேர்த்தே உணரவேண்டும் என்கிறது. (புண்ணிய பாவங்கள் பிறரைச் சேரும் என்ற கருத்து விசித்திரமாக இருக்கிறது. பயமாகவும் இருக்கிறது- அது உண்மையானால்! நம்முடைய புண்ணிய பாவங்களைத் தவிர மற்றவர்களின் புண்ணிய பாவமும் நம்மை ஒட்டிக் கொள்ளும் என்ற நிலை வரும். அவை நாம் நினைக்கும்படி நம் பிள்ளைகளைப் போய்ச் சேர்வதில்லை! அவர்களுக்கு நம் சொத்து மட்டுமே சேர்கிறது என்கிறது உபநிஷத்து, அவர்கள் நமக்கு நண்பர்கள் மாதிரி இருந்தால் புண்ணியம் சேரும், நம்மை விரோதித்தால் தீமை சேரும். இங்கே நாம் என்பது, பிரம்மத்தை உணர்ந்தவர்கள், மறு பிறப்பு அற்றவர்கள்).



இதற்கு நான்கு உதாரணங்கள் காட்டப்படுகின்றன.1) மரம்- யாகம் செய்யப் பயன்படும் சமித்துக்களை மரம் என்று ஓர் இடத்திலும், அத்தி மரம் என்று மற்றொரு இடத்திலும் கூறப்படுகிறது. இரண்டையும் சேர்த்து 'அத்தி மரம்' என்றே பொருள் கொள்ள வேண்டும் 2) வேத வார்த்தைகள் (சந்தம்) என்றும் தேவவேத வார்த்தையை முதலில் கூற வேண்டும் என்றும் இரண்டு வெவ்வேறு இடங்களில் வருகிறது. 3) தோத்திரம் என்ற புகழ்ச்சி பொன்னை வைத்து செய்ய வேண்டும் என்று ஒரு இடத்திலும், சூரியன் பாதி மறைந்த பொழுது செய்ய வேண்டும் என்று இன்னொரு இடத்திலும் கூறப்படுகிறது- இரண்டையும் சேர்த்துப் பொருள் கொண்டே தோத்திரம் செய்ய வேண்டும் 4) வேதம் கூறுபவர் என்று ஓர் இடத்திலும், சிலருக்கு அந்தத் தகுதி இல்லை என்று மற்றொரு இடத்திலும் கூறப்படுகிறது. இங்கேயும் சேர்த்தே பொருள்கொள்ள வேண்டும்.

கர்மம் (பாவ புண்ணியங்கள்) முடிவில்லாதது என்ற வேதக் கொள்கையால் வந்த சிக்கலைத் தீர்க்கக் 'கர்மம் தொலைந்தவனின்' மீதியை. மற்றவரின் கர்மத்தோடு இணைப்பது எந்தவிதத்தில் சரி?

**3.3.27. ஸாம்பராயே தர்த்தவ்யாபாவாத் ததா ஹ்யந்யே**

*கர்மம் இல்லை- பிரம்மத்தை அடைபவனுக்கு, உடலை விடும்போது (பிரம்மத்தை அடைபவனுக்கு) கர்மங்கள் இல்லை- வேதம் சொல்வதால்.*

கர்மங்கள் உடலைவிடும்போது விலகுகின்றனவா அல்லது பிரம்மத்தை அடையும் பாதையில் ஜீவன் செல்லும்போது விலகுகின்றனவா என்ற சந்தேகத்திற்கு விடை கூறுகிறது இந்த சூத்திரம். சாந்தோக்யம் 8.13.1, புண்ணிய பாவங்கள், உடலை விடும்போது விலகுகிறது/ கழல்கிறது என்கிறது.

**3.3.28. சந்தத உபயாவிரோதாத்**

*இரண்டு இடத்திலும் விரோதம் வராமல் பொருள் கொள்ள வேண்டும்.*

கௌஷீதகி உபநிஷத்தில் (21 to 1.37) 'பிரம்மத்தை அடைந்தவன் அர்சிராதி வழியில் முதலில் அக்னி உலகுக்கு வருகிறான்' என்று தொடங்கி, பிறகு விரஜை என்ற நதியைக் கடக்கிறான், அங்கு புண்ணிய பாவங்களை விடுகிறான்,' என்று முடிகிறது. இந்த சூத்திரம் மேலே சொன்ன சாந்தோக்யத்திற்கு அநுகூலமாக 'புண்ணிய பாவங்களை விடுகிறான்' என்பதை முதலிலே கொண்டு செல்லவேண்டும் (1.21க்கு முன்னால்) என்கிறது.

**3.3.29. கதேரர்த்தவத்தவமுபயதா அந்யதா ஹி விரோத:**

*(ஆனால்) இருவிதமாகப் பொருள் கொண்டால்தான் சரி- ஏனெனில் புண்ணிய பாவங்கள் தொலைந்தபின் நம் சூக்கும உடலும் தொலைந்துவிடும்- ஆகவே உடல் அல்லாத உயிர் எப்படி அர்ச்சிராதி வழியில் செல்லும்?*

இது ஒரு பூர்வபட்ச சூத்திரம். ஜீவாத்மா அர்ச்சிராதி வழியில் செல்ல உடல் தேவை (சூக்கும நிலையில்). பாவம்/ புண்ணியம் தொலைந்தால் இந்த உடலும் அழிந்து விடாதா? ஆகவே, மேலே சொன்ன சாந்தோக்ய, கௌஷீதேகி உபநிஷத்துகளில் சொன்ன சொற்களைத் தனித்தனியேதான் பொருள் கொள்ள வேண்டும் என்பது வாதியின் கருத்து.

**3.3.30. உபபந்நஸ்தல்லக்ஷணார்த்தோபலப்தேர் லோகவத்**

*கர்மம் தொலைந்தவனுக்கும் (சூக்கும நிலையில்) உடல் இருக்கலாம்- உலகில் நாம் பார்ப்பது போலே.*

பிரம்மத்தை அறிந்தவன் உடலை விடும்போது தனது மீதி உள்ள புண்ணிய பாவங்களை (கர்மங்களை) விட்டு விடுகிறான் என்றோம். அப்படி விட்ட பிறகும் ஜீவாத்மா சூக்கும நிலையில் உள்ள உடலைக் கொண்டிருக்கிறது என்று சொல்வதில் தவறில்லை. (அவன் பலவித சரீரங்களை எடுத்துக் கொள்கிறான்' என்கிறது சாந்தோக்யம் (7.26.2) உலகில் நாம் பார்ப்பது போலே என்பதற்கு, பயிர் வளர நாம் பாய்ச்சிய நீர், பயிர் விளைந்த பின், மக்கள் குடிக்க, குளிக்க உபயோகப்படுவது போல' என்று பொருள் கொள்ள வேண்டும்.



**3.3.31. யாவததிகாரமவஸ்திதிராதிகாரிகாணாம்**

*சிலருக்கு அவர்களின் பதவிக்காலம் உள்ளவரை கர்மம் நீடிக்கிறது.*

வியாசர், சனத்குமாரர், வசிஷ்டர் போன்றவர்கள், பிரம்மத்தை உணர்ந்த பின்னும், மறுபிறவி எடுக்கிறார்களே, இது எப்படி என்ற கேள்விக்கு விடை இந்த சூத்திரம். அவர்களின் 'பதவிக்காலம்' அல்லது 'குறிக்கோள்' (Mission) முடியும்வரை திரும்பத் திரும்ப உடல் அடைந்து கர்மங்களை அனுபவிக்கின்றனர்.

**3.3.32. அநியம: ஸர்வேஷாமவிரோத: சப்தாநுமாநாப்யாம்**

*தடையில்லை- யாருக்கும். எல்லா பிரம்ம வித்யைகளும். (கடைப்பிடிப்பன) பிரம்மத்தை அடையச் செய்கிறது- வேதமும், ஸ்மிருதியிலும் சொல்வது போலே*

இந்த சூத்திரம் சங்கரரின் உரையில் இல்லை.

**3.3.33. அக்ஷரதியாம் த்வவரோத: ஸாமான்ய தத் பாவாப்யாம் ஔபஸதவத்- ததுக்தம்**

*அழிவில்லாத பிரம்மமும் அதன் எதிர்மறைக் கருத்துக்களும்.*

*அழிவில்லா பிரம்மத்திற்குக் கூறப்பட்ட எதிர்மறைச் சொற்களை சேர்த்தே சிந்திக்க வேண்டும்- 'அர்ப்பண' மந்திரங்களுக்குச் சொன்னது போலே என்கிறார் ஜைமினி.*

அழிவில்லாத பிரம்மம் 'இருக்கும் பொருளைக் காட்டிலும் வேறுபட்டது, குட்டையுமில்லை, நெட்டையுமில்லை, சிவப்பு முதலிய நிறங்கள் உள்ளதைக் காட்டிலும் வேறுபட்டது' என்று பிருகதாரண்யகம் (5-8-7, 8) சொல்கிறது. முண்டக உபநிஷத்து (1-1-5) அழிவில்லாத பிரம்மம் 'குலமற்றது, ஜாதியில்லாதது, காலத்தால், தேசத்தால் அளவுபடாதது' என்று சொல்கிறது.

இந்த இரண்டு இடங்களிலும் கூறப்பட்ட எதிர்மறைச் சொற்களை ('இல்லாதது' போன்ற சொற்கள்) சேர்த்தே சிந்திக்க வேண்டும் என்கிறது இந்த சூத்திரம். அதற்கு விளக்கமாக ஜைமினி என்ற முனிவர் சொன்ன 'ஸாம வேதத்தில் கூறிய மந்திரங்களை, யஜுர் வேதத்தில் 'அர்ப்பணம்' செய்யும் போது சேர்த்துக் கொள்ள வேண்டும்' என்ற விதிமுறையைக் கொள்ள வேண்டும்.

அழிவில்லாத பிரம்ம வித்யை (அட்சர பிரம்ம வித்யை) என்னும் வழியை நாம் கைக்கொள்ளும்போது, அந்த பிரம்மத்தைப் பற்றி இரண்டு இடங்களிலும் கூறிய எதிர்மறைச் சொற்களை சேர்த்துச் சிந்திக்க வேண்டும்.

### 3.3.34. இயத் ஆமநநாத்

*இவைகளை மட்டுமே (சேர்க்க வேண்டும்) ஏனெனில் இவைகளால் மட்டுமே பிரம்மம் அறியப்படுவதால்*

முன்பு கூறின ஆனந்தம் முதலிய குணங்களோடு இந்த எதிர்மறைக் குணங்களை மட்டும் சேர்த்து சிந்திக்க வேண்டும். ஏனெனில் பிரம்மத்தை அறிய/அடைய இவை போதும். 'எல்லா செயலையும் செய்வது' போன்ற குணங்களை சிந்திக்கத் தேவையில்லை. பிரம்மத்தை அறிய அவற்றை அவை வரும் வித்யைகளில் சிந்தித்தால் போதுமானது. They need not be meditated upon in every vidya.

**உள்ளிருப்பவன் என்பது பிரம்மமே- இரண்டு வித்யையிலும்**

### 3.3.35. அந்தரா பூதக்ராமவத் ஸ்வாத்மநோ அந்யதா பேதா நுபபத்தி இதிசேந்ந உபதேசவத்

*'உள்ளிருப்பவன்' என்றது உடலை இயக்கும், ஜீவாத்மாவே என்றால் அது தவறு. இரண்டு வித்யைகளும் வேறல்ல- சாந்தோக்ய ஸத்வித்யையில் சொன்னது போலே.*

பிருகதாரண்யகம் (3-4-1) கேள்வி விடை உருவில் இருக்கிறது. உஷத்வ சக்ராயனர் கேட்கிறார், 'எல்லாவற்றிலும் உள்ளிருக்கும், நேரில் காணும்படியாக இருக்கும் பிரம்மத்தைக் காட்டு எனக்கு' என்று. அதற்கு யாஜ்ஞ வல்க்யர் 'எவன் பிராணனால் உயிர் தரிக்கிறானோ அவனே எல்லாவற்றிலும் உள்ள ஆத்மா' என்று



விடை கூறுகிறார். மேலும் (3-4-2) 'அவன் ஜீவாத்மா அல்ல' என்கிறார். பிறகு கஹோலர் அதே கேள்வியைக் கேட்கிறார். (3-5-1) அதற்கு விடையாக யாக்ஞவல்கியர் 'பசி, தாகம், வருத்தம், கிழத்தனம், மயக்கம், மரணம் இவற்றைக் கடந்து பிரம்மத்தை அடைகிறார்கள் பிரம்ம ஞானிகள். 'இங்கேயும் முடிவில் பரமாத்மாவையும், ஜீவாத்மாவையும் வேறுபடுத்திக் காண்கிறது. இந்த இரண்டு இடங்களிலும் 'உள்ளிருப்பவன்' என்றது பரமாத்மாவையே, ஜீவாத்மாவை அல்ல என்கிறது இந்த சூத்திரம். இதற்கு, சாந்தோக்ய உபநிஷத்தின் ஸத்-வித்யை குறிப்பை எடுத்துக்காட்டுகிறது.

### 3.3.36. வ்யதிஹாரோ விசிம்ஷந்தி ஹி இதரவத்

*(உஷத்வருக்கும் கஹோலருக்கும் இடையே) அறிவுப் பரிமாற்றம் உண்டு; இரண்டு இடத்திலும் பிரம்மமே கூறப்பட்டது; (ஸத்வித்யையில்) சொன்னது போலே.*

கஹோலரின் கேள்வி 'நேரிலேயே காணும்படி இருக்கும் பிரம்மத்தைக் காட்டு' என்றும், உஷத்வரின் கேள்வி 'நேரில்' என்று மட்டுமே என்றிருப்பதால், உஷத்வரின் கேள்வியும், அவருக்குக் கிடைத்த விடையும், கஹோலருக்குத் தெரிந்து இருக்க வேண்டும் என்று (இருவரிடையே அறிவுப் பரிமாற்றம்) கொள்ள வேண்டும். ஆகவே சொன்ன விடைகள் பிரம்மத்தைப் பற்றியதே.

சங்கரர் இந்த சூத்திரத்திற்குக் கீழ்க்கண்ட பொருள் கொள்கிறார்.

'நானே அது; அதுவே நான்' என்றும் ஐதரேய உபநிஷத்தை (2.2.4-6) குறிப்பது இந்த சூத்திரம். ஜாபால உபநிஷத்திலும் இதே கருத்து வருகிறது. வணங்குபவனும் (நாமும்), வணங்கப்படுவதும் (பிரம்மமும்) ஒன்றே. ஆகவே அவர்கள் இடம் மாறலாம்- அறிவின் பரிமாற்றம் என்பதற்கு ஒருவரை ஒருவர் வணங்கலாம் என்கிறார். எல்லாமே பிரம்மம் தானே.

### 3.3.37. ஸைவ ஹி ஸத்யாதய:

*ஸத்யம் முதலான சொற்கள் பிரம்மத்தையே குறிக்கின்றன.*

சாந்தோக்ய ஸத்வித்யையில் எல்லாக் கேள்வி விடைகளும் பிரம்மத்தையே குறிப்பது போலே, பிருகதாரண்யக (உஷஸ்த, கஹோல) கேள்வி விடைகளும் பிரம்மத்தையே குறிக்கின்றன.

**3.3.38. காமாதி இதரத்ர தத்ரச ஆயதநாதிப்ய:**

*இரண்டும் ஒன்றே. இருப்பிடம் ஒன்றாக இருப்பதால், இரண்டும் ஒன்றே.*

இங்கே இரண்டு என்பது, சாந்தோக்யத்தில் கூறப்படும் (8-1-1) தஹர வித்யையும், பிருகதாரண்யகத்தில் (6-4-2) கூறப்படும் வித்யையும். இரண்டும் (பிரம்மத்திற்கு) ஒரே தங்கும் இடமான (ஆயதனம்) இதயத்தைக் கூறுவதால், இரண்டு வித்யைகளும் ஒன்றே.

சங்கரர், ஒன்று குணமோடு கூடிய பிரம்மத்தையும் மற்றொன்று குணமற்ற பிரம்மத்தையும் குறிக்கின்றது என்கிறார்.

**3.3.39. ஆதராத் அலோப:**

*வேதம் மிகுந்த பரிவுடன் கூறுவதால் அந்தக் குணங்களை விடக்கூடாது.*

இங்கே ராமானுஜர் கூறும் குணங்கள்- பாபமற்றவன், கிழத் தன்மையற்றவன், மரணமற்றவன், வருத்தமற்றவன் போன்றவை. வேறு வேறு வித்யை (வழி)களில் கூறப்படும் இந்தக் குணங்களை சேர்த்தே சிந்திக்க வேண்டும்.

சங்கரர் இது 'ப்ராண அக்நி வழிபாடு (வைசுவாநர வித்யையில் கூறப்பட்ட) என்றதைக் குறிக்கிறது' என்று கூறி பட்டினி இருக்கும் நாளிலும் இந்த அக்நி வழிபாட்டை நாம் விடக்கூடாது என்று பொருள் கொள்கிறார். இந்த சூத்திரத்தை அவர் வாதியின் கருத்தாகக் கொள்கிறார்.

**3.3.40. உபஸ்திதே அத: தத்வசநாத்**

*பிரம்மத்தை அடைந்தவன், முன்னோர் உலகுக்கும் போய் வரலாம் என்கிறது வேதம்.*

சாந்தோக்யம் (8-12-2, 3) பிரம்மத்தை அடைந்தவன் மகளிருடனும், வாகனங்களைக் கொண்டும், முன்னோர்களுடன் கூடியும் பலவகையான போகங்களை அனுபவிக்கிறான்... எல்லா உலகிலும் விருப்பப்படி செல்கிறான் என்கிறது.



சங்கரர் இதற்கு 'உணவை உண்ணும்போது மட்டுமே ப்ராண அக்நி வழிபாடு செய்ய வேண்டும். பட்டினி இருக்கும் நாட்களில் அல்ல' என்று பொருள் கொள்கிறார். (3.3.49க்கு சமாதானமாக) உரையாசிரியர்கள் இவ்வளவு வேறுபடுவது விந்தையாக இருக்கிறது. பிரம்மத்தையே உணர்ந்தவன் 'பெண்களுடன் கேளிக்கை செய்ய விரும்பினால்' என்று கூறுவது உறுத்தலாக இருக்கிறது. அவனுக்கு இந்தவிதமான Carrot எதற்கு? பாதராயணர் சொல்ல வந்தது என்னவோ?

**3.3.41. தந்நிர்த்தாரணாநியம: தத்த்ருஷ்டே: ப்ருதக் ஹி அப்ரதிபந்த: பலம்**

*சில வழிமுறைகள் அவசியம் இல்லை. யாகங்களில் சொல்லப்பட்ட சில வழிமுறைகளைக் கடைப்பிடிக்கத் தேவையில்லை, வேதம் அவ்வாறு கூறுவதால்- அவற்றுக்குத் தனியே பலன்கள் கூறப்பட்டு இருப்பதாலும்,*

சாந்தோக்யத்தில், யாகம் தொடங்கும் முன் 'ஓம்' என்னும் பிரணவ எழுத்தைச் சொல்ல, சிந்திக்க வேண்டும் என்கிறது. இது செய்யப்படும் யாகத்தின் உறுப்பு அல்லது அங்கம் இல்லை.

பிரணவத்தை அறிந்தவனும், அறியாதவனும் யாகம் செய்கிறார்கள் என்கிறது சாந்தோக்யம். மேலும் பிரணவத்தைச் சொல்வதால், யாகத்திற்கு வரும் தடைகளை நீக்குதல் பலனாகக் கூறப்படுகிறது. இது யாகம் செய்வதால் விளையும் பலனிலும் வேறுபட்டது.

**3.3.42. ப்ரதானவதேவ தலுக்தம்.**

*பிரம்மத்தை குணங்களோடு சேர்ந்து திரும்பத் திரும்ப சிந்திக்க வேண்டும்- இந்திரனுக்கு மும்முறை ஆகுதி செய்வது போலே.*

தஹர ஆகாச (சிறியவெளி) வித்யையில் 'எவர் இந்த சிறிய ஆகாசமான பிரம்மத்தை அதன் குணங்களோடு மனத்தில் கொள்கிறார்களோ என்று வருகிறது- சாந்தோக்யத்தில். இந்த சூத்திரம் குணங்களைச் சிந்திக்கும்போது மறுபடி மறுபடி பிரம்மத்தோடு சேர்ந்தே சிந்திக்க வேண்டும் என்கிறது. உதாரணமாக தைத்திரீய உபநிஷத்தில் இந்திரனை அரசன்,

பேரரசன், ஆத்மாவை ஆள்பவன் என்று கூறி மூன்று முறை அர்ப்பணம் (ஆகுதி) (ஒரே இந்திரனுக்கு) செய்யச் சொல்வது போலே.

சங்கரர் இதற்கு 'சம்வர்க வழியில் கூறப்படும் வாயுவும், பிராணனும் ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டியவை. இந்திரனுக்குத் தனித்தனியாக ஆகுதி செய்ய வேண்டியது போலே, வாயுவும், பிராணனும் தனித்தனியே சிந்திக்கப்பட வேண்டும் என்று ஜைமினி கூறுகிறார்' என்று பொருள் கூறுகிறார்.

இந்த சூத்திரத்தைப் பற்றி அதிகம் சிந்திக்க வேண்டாம். பெரியோர்களே வேறுபடுகிறார்கள்- நாம் குழம்பி விடுவோம்!

**3.3.43. லிங்க பூயஸ்த்வாத் தத்ஹி பலீயஸ்ததபி**

*அடையாளங்களைக் கொண்டு தீர்மானிக்கலாம். அடையாளங்களைக் கொண்டே பரம்பொருள் என்று நிச்சயிக்க வேண்டும்- சொன்னது போலே.*

ராமானுஜர் பரம்பொருள் நாராயணனே என்று (தைத்திரீய) உபநிஷத்தில் வரும் அடையாளங்களைக் கொண்டு நிரூபிக்கிறார்.

சங்கரர் பிருகதாரண்யகத்தில் வரும் நெருப்பு விதிகள் வெவ்வேறு என்று இந்த சூத்திரத்திற்குப் பொருள் கூறுகிறார்.

சூத்திரம் சிறியதானால் எந்த வழிக்கும் அதை இழுத்து வரலாம்.

**3.3.44. பூர்வ விகல்ப: ப்ரகரணாத் ஸ்யாத் க்ரியா மாநஸவத்.**

*(நாம் நேரில் காணும் நெருப்புகள், நாம் நேராகவே செய்யும் யாகத்திற்கு அங்கம் ஆவது போலே) நம் மனத்தில் உருவகப்படுத்தப்பட்ட நெருப்புகள் (பிரம்ம வித்யையில்) மனத்தால் செய்யப்படும் யாகங்களுக்கு அங்கமாகும்.*

பிரம்ம வித்யை மனத்தால் செய்யப்படும் யாகம் அதற்கு அங்கம் மனத்தால் உருவகப்படுத்தப்பட்ட அக்னிகள்.

இது ஒரு பூர்வ பட்ச சூத்திரம்.

**3.3.45. அதிதேசாச்ச**

*ஒன்றுக்கு இணையாக இன்னொன்று இதுவும் வாதிக் கருத்து.*



இரண்டு அக்நிகளும் ஒன்றையே செய்கிறது. ஆகவே இரண்டும் க்ரியா மயமான அங்கங்கள் என்று கொள்ளலாம்.

**3.3.46. வித்யா ஏவ து நிர்த்தாரணாத் தர்சநாச்ச.**

*மேலே சொன்னது தவறு. மனத்தால் உருவகப்படுத்தப்பட்ட நெருப்பு, நேரடி யாகத்திற்கு அங்கமாகாது.*

**3.3.47. ச்ருத்யாதி பலீயஸ்த்வாச்ச ந பாத:**

மனத்தில் உருவகப்படுத்தப்பட்ட அக்நிகள், மனத்தால் செய்யப்படும் யாகத்திற்கு அங்கமே- அப்படி வேதம் கூறுகிறது.

**3.3.48. அநுபந்தாதிப்ய: ப்ரஜ்ஞாந்தர ப்ருதக்த்வவத் த்ருஷ்டச்ச ததுக்தம்.**

*இரண்டின் வழிமுறைகளிலும் வேறுபாடு இருப்பதால், இரண்டும் வேறு வேறு என்று சொல்லப்பட்டது.*

செயல்பாட்டு யாகத்திற்கும் மனத்தால் செய்யும் யாகத்திற்கும் வேறுபாடு உண்டு. அவைகளின் வழிமுறைகள் வேறுவேறு.

**3.3.49. ந ஸாமந்யாத் அபி உபலப்தே: ம்ருத்யுவந்ந ஹி லோகாபத்தி:**

*இரண்டும் ஒன்றல்ல.*

திரும்பத்திரும்ப அதே கருத்து. இரண்டு யாகங்களும் ஒன்றல்ல.

**3.3.50. பரேண ச சப்தஸ்ய தாத்வித்யம் பூயஸ்த்வாத் த்வநுபந்த:**

*மனத்தால் செய்யும் யாகத்தின் சில பகுதிகள் செயல்பாட்டு யாகத்தின் பகுதிகளோடு சேர்ந்து இருக்கின்றன- ஆனாலும் இரண்டு யாகங்களும் வேறு வேறு என்பது குறிப்பு.*

நெருப்பு ரஹஸ்யப் பகுதியில் (செயல்பாட்டு யாகம்) மனதால் செய்யும் யாக நெருப்பைப் பற்றி வருவது இங்கே விளக்கம் பெறுகிறது.

**3.3.51. ஏக ஆத்மந: சரீரே பாவாத்.**

*ஜீவாத்மா உடலோடு இருப்பதால், (சிலர்) இரண்டும் ஒன்றே என்று கருதுகிறார்கள். இது சார்வாகரின் கருத்து. ஜீவனைப் பார்க்க இயலாது. சார்வகர் கண்ணால் காண்பது மட்டுமே உண்மை என்பர்.*

**3.3.52. வயதிரேகஸ் தத்பாவ பாவித்வாத் ந து உபலப்திவத்.**

*ஆனால் (மேலே சொன்ன) அது தவறு. ஜீவனும் உடலும் வேறு வேறு.*

இறந்ததும் உடலில் ஜீவன் இல்லை. ஒரே பொருள் எழுவாயும்,. பயனிலையும் ஆகாது. (The Same entity cannot be both subject and object) ஆகவே சார்வாகர் கருத்து தவறு. இரண்டு சூத்திரம் கொண்ட இந்த 'சார்வாக மறுப்பு' அதிகரணம் இந்த இடத்தில் வருவது பொருத்தம் இல்லாமல் உள்ளது.

**3.3.53. அங்காவபத்தாஸ்து ந சாகாஸஸு ஹி ப்ரதிவேதம்.**

*யாகத்தின் அங்கங்களை வேதத்தின் எல்லாப் பிரிவினும் சேர்க்க வேண்டும்.*

முதலில் 'ஓம்' என்ற எழுத்தைச் சிந்தனை செய் என்கிறது. சாந்தோக்யம். இது ஒருவித முன் வழிபாடு. இந்த சூத்திரம் இம் மாதிரியான முன் வழிபாடுகளை அங்கமாகக் கொண்டு, எல்லாப் பிரிவினரும் யாகங்களைச் செய்ய வேண்டும் என்கிறது

**3.3.54. மந்த்ராதிவத்வா அவிரோத:**

*(இந்த முன் வழிபாடுகள்) மந்திரங்களைப் போலவே.*

இந்த 'ஓம்' போன்ற முன் வழிபாடுகள், யாகத்தின் மந்திரங்களைப் போலேயே- அவ்வளவு முக்கியமானவை என்பது குறிப்பு.



**3.3.55. பூம்ந: க்ரதுவஜ்ஜ்யாயஸ்வம் ததா ஹி தர்சயதி.**

*முழுமையான வைஸ்வாநர வழிபாடே (வித்யையே) சிறப்பானது -என்கிறது வேதம்.*

சாந்தோக்யத்தில் மிகப் பெரிய உருவாக வைசுவாநரனைச் சொல்லி, அந்த முழு உருவை வழிபட/சிந்திக்கச் சொல்கிறது. அந்த வைசுவாநரனின் பகுதி உறுப்புக்களை (அங்கங்கள்) வழி பட்டால் ஏற்படும் நன்மைகளையும் கூறுகிறது. இந்த சூத்திரம். வைசுவாநரனை முழுமையாக வழிபடுவதே சிறந்தது என்கிறது.

**3.3.56. நாநா சப்தாதி பேதாத்.**

*எல்லா வித்யைகளும் (வழிகளும்) ஒன்று அல்ல- அவற்றைப் பற்றிய வேத வார்த்தைகள் வேறுபடுவதால்.*

பிரம்ம வழிபாடுகள் (வித்யைகள்)- ஸத்வித்யை, ஆநந்தமய வித்யை, பூமவித்யை, தஹரவித்யை, உபகோசல வித்யை, சாண்டில்ய வித்யை, வைசுவாநர வித்யை முதலியன- வேறுவேறு அவற்றைக் கூறும் வேதச் சொற்கள் வேறுவேறாக இருப்பதால்.

**3.3.57. விகல்ப அவிசிஷ்ட பலத்வாத்**

*ஏதாவது ஒரு வித்யையைக் கடைப்பிடித்தால் போது மானது- எல்லா வித்யைகளுக்கும் 'அடையும் பயன்' ஒன்றாக இருப்பதால்.*

எல்லா வித்யைகளின் பயனும் பிரம்மத்தை அடைவது/ உணர்வது.

**3.3.58. காம்யாஸ்து யதாகாமம் ஸமுச்சியேரந் நவா பூர்வ ஹேத்வபாவாத்**

*ஆனால் உலகப் பொருள்களை (செல்வம், குழந்தைப் பேறு முதலியவைகளை) அடைவிக்க ஏற்பட்டுள்ள பல்வேறு வழிகளையும் தனித்தனியே கடைப்பிடிக்கலாம்- தவறில்லை.*

**3.3.59.** அங்கேஷு யதாச்ரயபாவ:

*(ஓம் போன்ற) அங்கங்களையும், ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். இது வாதியின் கருத்து.*

**3.3.60.** சிஷ்டேச்ச

*அப்படி என்று (வேதம்) விதிப்பதால்.*

இதுவும் வாதியின் கருத்து. முன் சூத்திரத்தின் தொடர்ச்சி.

**3.3.61.** ஸமாஹாராத்

*மற்றவரின் அறிவைக் கொண்டு நிரவிக் கொள்ளலாம் என்று வேதம் கூறுவதால்.*

இதுவும் தொடர்ச்சியான வாதியின் கருத்து. 'ஓம்' என்று கூறும் உத்காதாவுக்கு அதைப்பற்றிய பூரண அறிவு இல்லாவிட்டாலும், 'ஹோதா' என்னும் செய்பவனின் அறிவைக் கொண்டு இட்டு நிரப்பலாம் என்கிறது வேதம்.

**3.3.62.** குணஸாதாரண்ய ச்ருதேச்ச.

*அதன் குணம் (அதனால் ஏற்படும் பயன்) எல்லா வித்யைகளுக்கும் பொது என்பதால்.*

இதுவும் வாதியின் கருத்து. ஓம் எனப்படும் உத்கீத உபாஸனம் பிரம்ம வித்யையின் அங்கம்- அதுவும் ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டியது என்ற வாதியின் கருத்தை மேலே கூறிய நான்கு சூத்திரங்கள் தெரிவிக்கின்றன.

**3.3.63.** ந வா தத்ஸஹ பாவாச்ருதே:

*வேதம் உத்கீத உபாஸனத்தை யாகத்தின் அங்கம் என்று கூறவில்லை.*

இது வாதியின் கருத்துக்கு மறுப்பு.

உத்கீத உபாஸனத்தை வேதம் தனியாகவே கூறுகிறது. யாகத்தின் அங்கமாக அல்ல.



**3.3.64.** தர்சனாச்ச.

*வேதம் அப்படியே சொல்கிறது. ஓம் என்பதன் மேலுள்ள சிந்தனை, யாகத்தைக் காக்கிறது. அது யாகத்தின் பயன் இல்லை. ஆகவே அது யாகத்தின் அங்கமில்லை.*

இந்தப் பாதத்தில் சொன்ன கருத்துக்களின் சுருக்கம்.

1. ஒரே ஒரு பிரம்ம வித்யை பல வேதங்களில் கூறப்படுகிறது. உதாரணங்கள்- வைசுவாநர வித்யை, தஹரவித்யை, அட்சர வித்யை- அவை ஒன்றே.

2. சில வித்யைகள் பல இடங்களில் சொல்லப்பட்டாலும் அவை வேறுவேறு.

3. ஆனந்தம் முதலிய முக்கிய பிரம்ம அடையாளங்களை எல்லா வித்யையிலும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

4. சில மந்திரங்கள் பிரம்ம வித்யையின் உறுப்பல்ல.

5. பிரம்ம ஞானியின் மிஞ்சிய புண்ணிய பாவங்கள் பிறரைச் சேரும். அவர்களுக்குக் கருமம் தொலைந்து விடுவதால் மீதியை எங்காவது சேர்த்துவிடும் கட்டாயம் உள்ளது.

6. உள்ளிருப்பவன் என்று கூறப்பட்டது பிரம்மமே.

7. சங்கரர்- ஜீவனும் பிரம்மமும் ஒன்றே.

8. பிரம்ம ஞானி எங்கும் செல்லலாம் எதையும் அனுபவிக்கலாம்.

9. இரண்டு வழிகள்- பிரம்மத்தை அடைய-உணர கர்ம வழி, ஞான வழி- கிரியைகளைச் செய்து பிரம்மத்தை அடைதல், மனத்தால் சிந்தித்து அடைதல்.

10. ஜீவனும் உடலும் வேறு வேறு- சார்வாகர் கூறுவது தவறு.

11. "பிரம்ம வித்யைகள் பல- ஏதாவது ஒன்றைக் கடைப்பிடித்தால் போதும்.

முன்பு கூறியது போல, இந்தப் பாதத்தில் ஆழ்ந்த தத்துவக் கருத்துகள் இல்லை என்று தோன்றுகிறது. வேதம் கூறிய பிரம்ம வித்யைகளில் ஒற்றுமை காண்கிறது பல சூத்திரங்கள். இந்தப் பேரண்டத்தின் நாயகனாகவும் (வைசுவாநரன்), இதய கமலத்தின் உள்ளே இருக்கும் 'வெளி'யின் உள் இருப்பவனாகவும் (தஹர ஆகாசம்) பிரம்மத்தை உணர வேண்டும் என்ற வேதக் கருத்துக்கள் இன்றைய (cosmology)யையும் Quantum இயற்பியலையும், ஒத்திருக்கின்றன. இந்த முன்னோடிக் கருத்துக்கள், நம்

முன்னோரின் கூர்மையான அறிவின் அடையாளங்கள். வைசுவாநர வித்யையும் தஹர வித்யையும், உபநிஷத்துக்களில் படித்து உணர வேண்டுகிறோம்.

*மூன்றாவது அத்தியாயம் நான்காவது பாதத்தில், 16 அதிகரணங்களில் 51 சூத்திரங்கள் உள்ளன.*

இதை, அங்க பாதம் என்கிறார்கள். பிரம்மத்தை அடைய நாம் கடைப்பிடிக்க வேண்டிய வழிகளைப் பற்றியது. அந்த வழிகளைப் பற்றிய ஞானம்தான் பிரம்மத்தை அடைய நமக்கு உதவுகிறதா அல்லது அவற்றின் செயல்பாடுதான் நமக்கு உதவுகிறதா என்கிற கேள்விக்கு விடை காண்கிறது. இதைக் கொஞ்சம் விளக்கலாம். ஒரு சாதனையை நிறைவேற்ற ஏதோ ஒரு மந்திரத்தை ஆயிரம் முறை ஜபித்தால் போதும் என்று கொள்வோம். அந்த ஜபத்தின் பின்னணியில் உள்ள கருத்தை அறிந்ததால் அந்த சாதனை நிகழ்கிறதா, அல்லது அர்த்தம் தெரியாமல் ஜபிக்கும் செயலே அந்த சாதனைக்குக் காரணமாகிறதா? ஒரு செயலின் முழு ஞானத்தையும் அறிந்தவனுக்கு, அந்தச் செயல் அவசியமில்லையா? வேதாந்திகளுக்கு யாகம் போன்ற சடங்குகள் தேவையில்லையா? அவற்றின் முழு முக்கியத்துவத்தை உணர்ந்தால் தேவையற்றுப் போய் விடுமா? இந்த ஆதாரக் கருத்தை மனதில் கொண்டு, சூத்திரங்களைப் பார்ப்போம்:

**அது அடைய வைக்கிறது.**

**3.4.1. புருஷார்த்தோ அத: சப்தாதிதி பாதராயண:**

*பிரம்ம வித்யைகள் மூலம்தான் பிரம்மத்தை அடையலாம் என்று, பாதராயணர் சொல்கிறார்.*

பின்வரும் 6 சூத்திரங்களை, வாதியின் பூர்வபட்ச கருத்தாகக் கொண்டு, அதற்கடுத்த 13 சூத்திரங்களில் அது மறுக்கப்படுகிறது.

**3.4.2. சேஷத்வாத் புருஷார்த்தவாதோ யதா அந்யேஷு இதி ஜைமினி:**

*பிரம்ம அறிவு அல்லது ஞானம் கர்மத்தின் பகுதி மட்டுமே. யாகம் போன்றவற்றைச் செய்பவனை ஏற்பாடு செய்கிறது. இது, ஜைமினியின் கருத்து.*



**3.4.3. ஆசாரதர்சநாத்**

*பிரம்மத்தை உணர்ந்த ஞானிகளுக்கும் கர்மம் விதிக்கப் படுகிறது.*

அசுவபதி என்ற ஞானிகூட, 'நான் யாகம் செய்து கொண்டிருக்கிறேன்' என்றான். ஆகவே, பிரம்ம ஞானமான மோட்சத்தை அடைய பிரம்மத்தைப் பற்றிய அறிவு மட்டுமே போதாது, கர்மமும் தேவை.

**3.4.4. தத்ச்ருதே:**

*வேதமும் அதையே சொல்கிறது. சாந்தோக்யம், 'வித்யையோடு கூடச் செய்யப்படும் கர்மம் வீர்யமுள்ளது.' என்கிறது.*

**3.4.5. ஸமந்வ ஆரம்பணாத்.**

*'அறிவும் கர்மமும் சேர்ந்தே ஒருவனைப் பின் தொடர்கின்றன' என்று பிருகதாரண்யகம் சொல்கிறது.*

**3.4.6. தத்வதோ விதாநாத்.**

*வேதத்தில், அறிவுடையவனுக்கும் கர்மம் விதிக்கப் படுகிறது.*

ஆகவே, கர்மத்தை விடக்கூடாது.

**3.4.7. நியமாத்.**

*வாழ்நாள் முழுவதும் ஒருவனுக்குக் கர்மம் நியமிக்கப் படுகிறது. (ஈசாவாஸ்யம் 2)*

மேலே சொன்ன 6 சூத்திரங்களும் பிரம்மத்தை அடைய கர்மம் முக்கியம் என்று சொல்கிறது.

இனி, ஸித்தாந்தியின் மறுப்பைப் பார்க்கலாம்.

**3.4.8. அதிகோபதேசாத் து பாதராயணஸ்ய ஏவம் தர்சநாத்**

*மேலான பிரம்மத்தை உபாஸிக்க சிந்திக்கச் சொல்வதால், பாதராயணர் மோட்சமடைய வழி ஞான வழியே என்றார்.*

**3.4.9. துல்யம் து தர்சநம்**

*இரண்டுமே பொருந்துகிறது வேதத்தின்படி*

இது, மேலே சொன்ன மூன்றாவது சூத்திரத்துக்கு மறுப்பாக அமைகிறது. பிரம்மத்தை அடைய விரும்புபவன், நீண்ட ஆயுள், செல்வம், குழந்தைகள் நலம் போன்ற பயன்களை விரும்பிச் செய்தால் கர்மங்கள் தேவையே. பிரம்மத்தை மட்டும் உணர, அறிவுதான் முக்கியம்; செயல் அல்ல.

**3.4.10. அஸார்வத்ரிகீ**

*அந்த வேதவாக்கு, எல்லா வித்யைகளுக்கும் சொல்லப்படவில்லை.*

நான்காம் சூத்திரத்தில் குறிப்பிடப்பட்ட சாந்தோக்யம் 1.1.10 உத்கீதவித்யை என்பதற்கு மட்டும் தான் பொருந்தும்.

**3.4.11. விபாக: சதவத்**

*பிரிவே கூறப்படுகிறது. நூறு போல.*

பிருகதாரண்யகம், பரலோகம் செல்பவர்களை ஞானமும், கர்மமும் தொடரும் என்று சொன்னது. அவையிரண்டும், தனித்தனி என்று சுட்டிக்காட்டவே, நூறு நாணயங்கள் பெற்று நிலத்தையும் நகைகளையும் விற்றான் என்றால், ஒருபகுதி நிலத்துக்கு; மற்றது நகைகளுக்கு என்பதுபோல்.

**3.4.12. அத்யயநமாத்ரவத:**

*வேதத்தை உருப்போட்டு ஒப்பிப்பவனுக்கு மட்டுமே கர்மங்கள் விதிக்கப்பட்டன.*



இது ஆறாம் சூத்திரத்துக்கு மறுப்பு. வேதத்தை ஒப்பிப்பதால் மட்டும் அறிவல்ல; மறப்பினும் ஒப்புக் கொள்ளலாம் என்கிறது திருக்குறள்.

வேதத்தின் இறுதிப் பகுதியான உபநிஷத்துகளில்தான் ஞானம் குறித்து நீண்ட விசாரங்களும் ஆராய்ச்சிகளும் காண்கின்றன.

**3.4.13. நாவிசேஷாத்**

*விசேஷமான காரணம் இல்லாததால், பிரம்மம் ஞானகர்மத்தின் அங்கம் அல்ல.*

ஏழாவது சூத்திரம் மறுக்கப்படுகிறது. பிரம்ம ஞானி, ஆயுள் உள்ளவரை கர்மங்களைச் செய்ய வேண்டும் என்று ஈசாவஸ்ய உபநிஷத் சொன்னது, மற்ற பயன்களுக்கான கர்மங்களை அல்ல; பிரம்மவித்யைக்கான கர்மங்களை மட்டுமே.

**3.4.14. ஸ்துதயே அநுமதிர்வா**

*புகழ்வதற்காகவே அனுமதிக்கப்பட்டிருக்கிறது.*

பிரம்மவித்யையின் பெருமையைப் பற்றி புகழ்வதற்காகவே ஆயுள் உள்ளவரை கர்மங்கள் செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, அறிவே முக்கியம். இது 3.4.13க்கு மறுப்பு.

**3.4.15. கர்மகாரேண சைகே**

*வேதத்தின் ஒருபிரிவினர் கருமங்களை விட்டுவிட விரும்புகின்றனர்.*

பிரம்மத்தை அடையும் பயனுடன் கர்மங்களைச் செய்தால், (உலக சுகங்கள்) கிடைக்கும் பயன்களை ஒப்பிட முடியாது.

இங்கே, பிருகதாரண்யகம் 6.4.22 எடுத்துக்காட்டு.

**3.4.16. உபமர்தம் ச**

*வேதம் பிரம்ம அறிவு இரு வினைகளை (புண்ய- பாவங்களை) அழிக்கிறது என்கிறது.*

கர்மம் முக்கியமில்லை என்பது குறிப்பு.

**3.4.17. ஊர்த்வ ரேதஸ்ஸு ச சப்தே ஹி**

*வேதம், துறவிகளுக்கு கர்மங்கள் தேவையில்லை என்கிறது.*

பிருகதாரண்யகம் 6.4.22 சாந்தோக்யம் 2.23.1-ல் குறிப்பிட்டபடி.

**3.4.18. பராமர்சம் ஜைமினி: அசோதநா ச க்ஷபவததி ஹி**

*துறவிகள் என்கிற பாகுபாடே தவறு என்கிறார் ஜைமினி.*

சாந்தோக்யம் துறவிகள் என்ற பாகுபாடே சொல்வதில்லை. பிரம்மச்சர்யம், இல்வாழ்க்கை, வனவாசம் மூன்று மட்டுமே.

**3.4.19. அநுஷ்டேயம் பாதாராயண ஸாம்யச்ருதே:**

*அது தவறு என்கிறார், பாதராயணர்.*

துறவிகள் என்ற பாகுபாடு உண்டு. வாதம் எதிர்வாதம் இரண்டையே பார்க்கிறோம், இரண்டு சூத்திரங்களில்.

**3.4.20. விதிர்வா தாரணவத்**

*துறவு நிலையும் விதிக்கப்பட்டதே. அதையும் தரிக்க வேண்டும்.*

சாந்தோக்யம், வானப்ரஸ்த நிலையையும், துறவு நிலையையும் சேர்த்துச் சொன்னதால் வந்த குழப்பம் இது.

*ஓம் என்ற சொல் பிரம்மத்தின் புகழைச் சொல்வது மட்டும் அல்ல, பிரம்ம வழிபாடே அது.*

**3.4.21. ஸ்துதி மாத்ரம் உபாதாநாத் இதிசேந்ந, அபூர்வத்வாத்**

*(சாந்தோக்யத்தில் ஆரம்பத்தில் வருகிற) ஓம் என்பது புகழை மட்டும் சொல்வதல்ல, ஆழ்ந்து சிந்திக்க விதிக்கப்பட்டது.*



**3.4.22. பாவ சப்தாச்ச**

*சிந்திக்க வேண்டும் என்னும் வினைச்சொல் வருவதால், வெறும் புகழ்ச்சி மட்டும் இல்லை.*

*உபநிஷத்தில் வரும் கதைகள் பொழுது போக்கிற்கல்ல.*

**3.4.23. பாரிஸ்ர வார்த்தா இதிசேந்ந, விசேஷித்வாத்**

*உபநிஷத உபகதைகள் பொழுது போக்குக்கல்ல, அதற்குத் தனிப்பட்ட கதைகள் உள்ளன.*

அச்வமேதயாகம் செய்ய ஒரு வருஷம் ஆகும். இடையிடையே ராஜாக்களுக்கு ரிஷிகள் கதைகள் சொல்வார்கள். அது, பொழுது போக்குக்கு விதிக்கப்பட்டது. ஆனால், உபநிஷத கதைகள் பிரம்ம வித்யைக்காக ஏற்பட்டவை.

**3.4.24. ததா ச ஏக வாக்யதோபபந்தாத்**

*பிரம்ம வித்யையோடு வரும் கதைகள், பிரம்ம ஞானியின் கவனத்தை ஈர்ப்பதற்காக.*

**3.4.25. அத ஏவ ச அக்நீந்தநாத் அநபேக்ஷா**

*பிரம்ம வித்யையைத் தேடும்போது, நெருப்பினால் செய்யப் படும் காரியங்கள் தேவையில்லை.*

மற்றவருக்கு (அக்நிஹோத்ரம்) நெருப்பு காரியம் உண்டு.

**3.4.26. ஸர்வாபேக்ஷா யஜ்ஞாதி ச்ருதே: அச்வவத்**

*துறவு அல்லாத இல்வாழ்க்கை வாழும் மற்றவருக்கு, நெருப்பு சார்ந்த தினசரி காரியங்கள் உண்டு.*

*முரண்பாடு இல்லை- புலன் அடக்கத்திற்கும், கர்மங்களைச் செய்வதற்கும்.*

3.4.27. சமதமாத்யுபேதஸ் ஸ்யாத் ததாபி து, தத்விதேஸ் ததங்கதயா தேஷாம் அவச்யாநுஷ்டேயத்வாத்.

நீண்ட சூத்திரம். ஆனாலும் பொருள் சுலபம். பிரம்ம வித்யைக்கு புலன்களைச் செயலிழக்க விட்டால் எவ்வாறு நாம் கருமங்களைச் செய்ய முடியும்? செயல்பட புலன்கள் தேவை. முரண்பாடு புரிகிறதா? இந்த சூத்திரம், கெட்ட அல்லது விலக்கப்பட்ட கருமங்களுக்கு மட்டுமே புனடக்கம் தேவை என்கிறது. நல்ல கருமங்கள் செய்யத் தடை இல்லை.

3.4.28. ஸர்வாந்நாநுமதி: ச ப்ராணாத்யயே தத்தர்சனாத்

உயிர் போகும் நிலையில் (பிரம்மத்தை வழிபடுபவனுக்கு) எல்லாவித உணவும் அனுமதிக்கப்படுகின்றன. உயிரே போய்விடும் நிலைக்குத் தள்ளப்பட்டால், உணவுக் கட்டுப்பாடு வேண்டாம். எல்லாவித உணவையும் உண்டு உயிரைக் காப்பாற்றிக் கொள்ளலாம்.

3.4.29. அபாதாச்ச

இந்த விதிவிலக்கு ஆபத்துக் காலத்தில் மட்டும்தான்.

3.4.30. அபி ஸ்மர்யதே.

(மநு) ஸ்ம்ருதியிலும் இது கூறப்பட்டது.

3.4.31. சப்தாச்சாத: காமகாரே

விதிவிலக்கு என்பதாலேயே விருப்பப்படி எதையும் உண்ணுவது தடுக்கப்படுகிறது Exception enforces the rule.

இல்வாழ்வில் உள்ளோருக்கு கர்மங்கள் விதிக்கப்படுகின்றன.



3.4.32. விஹிதத்வாச்ச ஆச்ரமகர்ம அபி.

எல்லாப் பிரிவினருமே விதிக்கப்பட்ட யாகம் முதலிய கர்மங்களைச் செய்யவே வேண்டும்.

3.4.33. ஸஹகாரித்வேந ச.

விதிக்கப்பட்ட கருமங்கள் பிரம்ம ஞானத்தை அடைவதற்கு உறுப்புகளாகின்றன.

3.4.34. ஸர்வதாபி த ஏவ உபயலிங்காத்.

பிரம்ம ஞானம் அடைவதற்காகவும், இல்வாழ்க்கை போன்ற வாழ்க்கை நிலைகளிலும் செய்யவேண்டிய கருமங்களும் ஒன்றே.

3.4.35. அநபிபவம் ச தர்சயதி.

வேதம், இந்தக் கருமங்கள், பிரம்ம ஞானம் அடைதலுக்குத் தடையாக நிற்கும் பாவங்களைப் போக்குகின்றன என்கிறது.

இந்தப் பாதத்தில் இதுவரை சொல்லப்பட்ட சூத்திரங்கள், பிரம்ம ஞானத்தை அடைய வைக்கும் விதி (வழி) களுக்கு, யாகம் செய்தல் முதலிய கருமங்கள் அவசியம் இல்லை என்று கூறிவிட்டு, ஆனால் அந்தக் கருமங்கள், நம்மிடம் இருக்கும் பாவங்களைத் தொலைத்து நாம் பிரம்ம வித்யைகளைக் கடைப்பிடிக்க உதவுகின்றன என்று தெளிவிக்கின்றன.

எல்லோரும் பிரம்ம வித்யை (வழி)யைக் கடைப்பிடிக்கலாம்.

3.4.36. அந்த்ராச அபி து தத்த்ருஷ்டே:

நடுவில் உள்ளோருக்கும் பிரம்ம வித்யை செய்ய அதிகாரம் உண்டு. ரைக்வர் போன்றோரிடம் இது காணப்படுகிறது.

மனைவியை இழந்தவர் போன்றோரை 'நடுவில் உள்ளோர்' என்கிறது. பிரம்ம ஞானத்திற்கு ஆர்வமே முக்கியம் என்பது குறிப்பு.

**3.4.37. அபி ஸ்மர்யதே**

*இவ்வாறே ஸ்ம்ருதியிலும் கூறப்படுகிறது.*

**3.4.38. விசேஷாநுக்ரஹச்ச**

*அவர்களுக்கும் (பிரம்மத்தை அடைதலாகிய) பலன் கிடைக்கும்.*

**3.4.39. அதஸ்து இதர ஜ்யாயோ லிங்காச்ச**

*ஆனால், ஏதாவது ஒரு வாழ்க்கை நிலையே (பிரமச்சரியம், இல்வாழ்க்கை, வானப்ரஸ்தம் முதலிய நிலைகள்) சிறந்தது என்கிறது ஸ்ம்ருதி.*

மனைவி இல்லாமல் இருப்பது கடினம், ஆபத்தானது என்பது குறிப்பு.

*அந்த அந்த வாழ்க்கை நிலையில் இருந்து நழுவக்கூடாது.*

**3.4.40. தத்பூதஸ்ய து நாதத்பாவ: ஜைமிநே: அபி நியமாத் தத்ரூபா பாவேப்ய:**

*அந்த அந்த வாழ்க்கை நிலையில் உள்ளோர் (பிரம்மச்சாரி, இல்வாழ்வான், வானப்ரஸ்தன் போன்ற) தங்கள் நிலையில் இருந்து (அந்தந்த நிலைக்கு ஏற்பட்ட வழி முறையில் இருந்து) நழுவக் கூடாது. ஏனெனில் அவ்வாறு நழுவியவர்களுக்கு எந்த விதிமுறையும் சொல்லப் படாததால். இதுவே ஜைமினியின் கருத்தாகும்.*

**3.4.41. நா ச ஆதிகாரிகம்அபி பதநாநுமாநாத் ததயோகாத்.**

*வேதத்தில் சொல்லப்பட்ட பிராயச்சித்தங்கள், எப்போதுமே பிரம்மச்சரிய விரதம் பூண்டவர்களுக்கு அல்ல.*



சிறு வயதிலேயே, வாழ்நாள் முழுவதும் பிரம்மச்சாரியாக இருக்க விரதம் பூண்டவர்களுக்கு (நைஷ்டிகப் பிரம்மச்சாரிகள்) அவர்களின் தர்மத்திலிருந்து தவறினால் மன்னிப்பு இல்லை என்கிறது சூத்திரம்.

**3.4.42. உபபூர்வம் அபி து ஏகே பாவம் அச்நவத் ததுக்தம்.**

*இதை பூர்வ பக்ஷ சூத்திரமாகக் கொள்ள வேண்டும். சிலர், ஸ்ம்ருதியின்படி பிராயச்சித்தம் நைஷ்டிக பிரம்மச்சாரி களுக்கும் உண்டு, என்கிறார்கள்.*

**3.4.43. பஹிஸ்துபயதாபி ஸ்ம்ருதே: ஆசாராச்ச.**

*ஆனால் அது தவறு. இது, ஸ்ம்ருதி, முன்னோரின் பழக்க வழக்கிலிருந்து தெரிகிறது.*

குறிப்பு: மேலே சொன்ன 'வழிமுறையிலிருந்து விலகாமை', பிரம்மத்தை ஞானம் மூலம் அடைவதற்குத் தேவை என்றது. இந்த சூத்திரங்கள், ஞானமே பெரியது என்று எல்லா வழிமுறைகளையும் (கர்மங்களையும்) விட்டுவிடக் கூடாது. கருமங்கள் ஞானத்தின் அங்கம் என்று கூறவே வந்தன என்று எங்களுக்கு தோன்றுகிறது.

*யார், விதிக்கப்பட்ட கர்மங்களைச் செய்ய வேண்டும்?*

**3.4.44. ஸ்வாமிந: பலச்ருதே: இதி ஆத்ரேய:**

*எவன் பலனை அனுபவிக்கிறானோ அவனே கர்மங்களைச் செய்ய வேண்டியவன் என்கிறார் ஆத்ரேயர்.*

**3.4.45. ஆர்த்விஜ்யம் இதி ஔடுலோமி: தஸ்மை ஹி பரிக்ரீயதே.**

*ஆனால் ஔடுலோமி என்பவர் 'பலன் அடையும் எஜமானனால், பணம் கொடுத்து நியமிக்கப்பட்ட அந்தணரே செய்ய வேண்டும்' என்கிறார்.*

இந்த சூத்திரங்கள் பெரிய சித்தாந்தக் கருத்தைக் கூறவில்லை.

*பிரம்மத்தை அடைய இளமை, அறிவு, மௌனம் தேவை-*

Released by Maran's Dog ,Toronto, Canada

3.4.46. ஸஹ கார்யாந்தர விதி: பக்ஷேண த்ருதீயம் தத்வதோ வித்யாதிவத்.

பிரம்ம ஞானத்தை அடைவதற்கு இளமையும், அறிவும், மௌனமும் தேவையானவை.

3.4.47. க்ருத்ஸ்நபாவாத் து க்ருஹிணோபஸம்ஹார:

எல்லா வாழ்க்கை நிலைகளில் உள்ளோருக்கும் பிரம்ம வித்யைகள் உண்டு. இல்வாழ்க்கையில் உள்ளோருக்கு குறிப்பிட்டுச் சொல்லி இருப்பது ஓர் உதாரணத்திற்காக மட்டுமே.

சாந்தோக்யம் இல்வாழ்க்கையில் உள்ளவன், தன் ஆயுள் உள்ளவரை பிரம்ம உபாஸனத்தைச் செய்தால், பிரம்மத்தை அடைந்து திரும்பி வரமாட்டான் என்கிறது. அதற்கு இந்த சூத்திரம் விரிவுரை.

3.4.48. மௌநவத் இதரேஷாமப்யுபதேசாத்.

அதேபோல, மௌனம், துறவிகளுக்கு விதிக்கப்பட்டாலும், மற்றவர்களுக்கும் பொருந்தும்.

பால்யம் என்று சொன்னது அகம்பாவம் அற்ற தன்னடக்கத்தையே.

3.4.49. அநாவிஷ்குர்வந் அந்வயாத்.

தன்னை வெளிப்படுத்திக் கொள்ளாததே (அடக்கமாக இருப்பதே) பால்யம் என்று ஊகிக்க முடிகிறது.

இம்மைப் பயன்கள் உண்டாகும். தடை இல்லாமல் இருந்தால்



3.4.50. ஐஹிகமபி அப்ரஸ்துத ப்ரதிபந்தே தத்தர்சநாத்

இவ்வுலகப் பயன்களான செல்வம், நீண்ட ஆயுள் முதலியவற்றை விரும்பிச் செய்யும் கர்மங்கள் (யாகங்கள் போன்றன) பயன்தரும்- நம் பூர்வ வினை தடை செய்யாமல் இருந்தால்.

அதுபோலவே மோட்சமும் உண்டாகும்.

3.4.51. ஏவம் முக்திபலா நியமஸ் ததவஸ்தா- வத்ருதேஸ் தத வஸ்தா-வத்ருதே:

அதேபோல பிரம்மத்தை அடைய, பிரம்ம வித்யைகளைக் கடைப்பிடிப்பவர், வித்யையின் முடிவில் பிரம்மத்தை அடைவர். அத்தியாய முடிவைக் காட்ட, கடைசி சொற்றொடர் இருமுறை வருகிறது. இங்கே 'அதுபோலே' என்பதற்கு, மற்ற பிரம்ம ஞானிகளை அவமதிப்பது போன்ற தடை இல்லாமல் இருந்தால் என்று உரையாசிரியர்கள் கூறுகின்றனர்.

மூன்றாம் அத்தியாயத்தின் கடைசியான நான்காம் பாதத்தில் சொன்ன கருத்துகளை வரிசைப் படுத்துவோம் இப்போது.

1. பிரம்மத்தை அடைவிப்பது பிரம்ம வித்யைகள்- அவற்றின் அடிப்படை ஞானமே.

2. குருட்டுத்தனமாக வெறும் மந்திரங்களை, கருமங்களைச் செய்வதால் பிரம்மத்தை உணரமுடியாது.

3. அதனால் விதிக்கப்பட்ட கருமங்களைச் செய்தால் பிரம்மத்தைப் பற்றியே தீவிர சிந்தனை கூர்மையாகும். ஆகவே கர்மத்தையும் விடாதே.

4. துறவு பூண்டவர், எப்போதும் பிரமச்சரிய விரதத்தைக் கடைப்பிடிப்பவர். ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். பாவ மன்னிப்பு இல்லை அவர்களுக்கு.

5. எல்லோரும் பிரம்ம வித்யைகளைக் கடைப்பிடிக்கலாம்.

6. 'ஓம்' என்ற பிரணவத்தைச் சிந்திப்பதே ஒரு பிரம்ம வித்யை.

சாந்தோக்யத்தில் விவரிக்கப்பட்ட ஒரு பிரம்ம வித்யையை (தஹர வித்யை) கீழே தருகிறோம். பிரம்மத்தை அடைய அறிவே முக்கியம் என்பது தெளிவாகும், இதைப் படித்தால்.

''ஹரி: ஓம். பிரம்மம் என்ற இந்த நகரத்தில் ஒரு வீடு உள்ளது. அது ஒரு சிறிய தாமரைப்பூ. அந்தப் பூவின் உள்ளே ஒரு சிறிய வெளி (Space). அதன் உள்ளே இருப்பதை (நீ) தேட வேண்டும். ஏனெனில் அதுவே அறிய, ஆசைப்பட வேண்டியது.

அங்கே என்ன உற்றது தேட, அறிய என்றால், அந்த வெளி இந்த உலகத்தில் உள்ள வெளியைவிட பெரியது. அதில் இவ்வுலகமும், வானுலகமும், நெருப்பும், காற்றும், சூரியனும், சந்திரனும், மின்னலும், நக்ஷத்திரங்களும் அடங்கி உள்ளன. அவனின் எல்லாமும், அவனின் ஒன்றுமில்லாமையும் அதில் அடக்கம். அதற்கு மூப்பு இல்லை. அதைக் கொல்ல முடியாது. அதுவே பிரம்ம நகரம்- உடல் அல்ல. அதில் ஆசைகள் அடக்கம். அதில் பாவமில்லை. அதில் பசி தாகம் கிடையாது.

அந்த சிறிய வெளியை உணராதவர்களுக்கு சுதந்திரம் இல்லை. உணர்ந்தவர்களுக்கு எவ்வுலகிலும் சுதந்திரம் உண்டு.''

நாம் அன்றாடம் பயன்படுத்தும் சொற்களைக் கொண்டு, அநந்தத்தை விவரிக்கும் முயற்சி-மேலே சொன்னது. அதன் மூலம் உங்களுக்கு பிரம்மத்தை அடையாளம் காணமுடிகிறதா? முடிந்தால் நீங்கள் எங்கள் முயற்சியால் பயன் அடைந்தவர்கள்!

மற்றொரு பிரம்ம வித்யையின் மொழிபெயர்ப்பு கீழே தருகிறோம்.

*சாந்தோக்யத்தில் வரும் வைசுவாநர வித்யை அல்லது பிரம்மாண்டத்தின் தனியொருவனான பிரம்மம்.*

(universal self) *அல்லது 'பிரம்மாண்ட நாயகன்' வழி*

நான்கு பேர் பிரம்மத்தைப் பற்றி அறிய விரும்பினர். அவர்கள் அசுவபதி என்றும், (வைசுவாநரனை அறிந்த) மன்னனிடம் சென்று வேண்டினர்- தங்களுக்கும் வைஸ்வாநரனைத் தெரிந்து கொள்ள ஆவல் என்று.

முதல்வனிடம், மன்னன் 'நீ எதை ஆத்மா என்று நினைக் கிறாய்?'' என்று கேட்க, அவன் 'விண் உலகை' என, மன்னன் 'அதுவே வைசுவாநரன்- நல்ல ஒளி' என்றான்.



இரண்டாமவன், 'சூரியனை ஆத்மாவாக நினைக்கிறேன்' என, மன்னன் 'அதுவே வைசுவாநரன்- தேர், பெண் அடிமைகள், தங்க நகைகள் இவற்றுடன் உள்ளது' என்றான்.

மூன்றாமவன் 'காற்று' என மன்னன் 'அதுவே வைசுவாநரன்' என்றான். நான்காமவன் 'வெளி' (Space) என்ன, மன்னன் 'அதுவே சரி' என்று சொல்லிவிட்டு. 'நீங்கள் வழிபடுவது வைசுவாநரனின் தலை, கால் முதலிய அங்கங்கள். வைசுவாநரன் ஒரு முழுமை, Singularity. அவனை பகுதிகளாக வழிபடுவது தவறு' என்கிறான்.

இங்கேயும் பிரம்மத்தை வைசுவாநரனாக, ஒரு முழுமையாகச் சிந்திக்கச் சொல்கிறது வேதம். பிரம்ம வித்யைகள், பிரம்மத்தைக் கோடி காட்டுகின்றன. அதை அடிப்படையாக வைத்துக்கொண்டு நம்மைச் சிந்தித்து உணரச் சொல்கிறது.

**இனி, நான்காவது அத்தியாயத்திற்குச் செல்வோம்.**

# நான்காவது அத்தியாயம்

# பலன்-அடையும் பயன்

பிரம்ம சூத்திரத்தின் நான்காவது அத்தியாயத்துக்கு வந்து விட்டோம். இது சிறிய அத்தியாயம். மொத்தமே 76 சூத்திரங்கள் தான். அடையும் பயன் என்று இந்த அத்தியாயத்துக்குப் பெயரிடலாம். மூன்றாவது அத்தியாயத்தில் பிரம்மத்தை அடைவதற்கு வேதம் சொல்லும் வழிகளைப் பற்றி அறிந்து கொண்டோம். அந்த பிரம்ம வித்யைகளின் பெயர்களையும் அறிந்துகொண்டோம். பிரம்மத்தை அடைய வைப்பது ஞானமா அல்லது கிரியைகளா என்று ஆராய்ந்தோம்.

இப்போது பிரம்மத்தை உணர்ந்த பிரம்ம ஞானிக்கு உண்டாகும் பயன்கள், விளைவுகள் என்ன என்பது ஆராயப்படுகிறது. பிரம்ம ஞானி மோட்சத்தை அடைகிறான். அந்தமில் பேரின்பத்தை அடைந்தவர் மறுபடி பூமிக்குத் திரும்புவதில்லை. மோட்சத்தை அடைந்தவனின் மிச்சமுள்ள கருமங்கள் என்ன ஆகின்றன? உடலை விட்டு அவன் எங்கெல்லாம் செல்கிறான்? மோட்சத்தில் அவனுக்குக் கிடைக்கும் சுகங்கள் எவை? இதெல்லாம் ஆராயப் படுகின்றன. சங்கரரின்படி, ஞானம் அடைந்துவிட்டால் ஜீவாத்மா, பிரம்மத்துடன் இரண்டறக் கலந்து விடுகிறான். ஞானமின்மை ஜீவனை பிரம்மத்திடமிருந்து வேறுபடுத்திக் காட்டி வந்தது. உண்மையில் உள்ளது பிரம்மமே என்றார். ராமானுஜர், எந்த நிலையிலும் ஜீவாத்மாவும் பிரம்மமும் ஒன்றாவதில்லை என்கிறார். மத்வர், இரண்டுக்கும் உள்ள வேறுபாடு, என்றைக்கும் இருப்பது. இந்த வேறுபாட்டை அறிவதுதான் மோட்ச நிலை என்கிறார்.

மற்ற அத்தியாயங்களைப் போலவே, இதுவும் நான்கு பாதங் களைக் கொண்டது. முதல் பாதத்தில் 19 சூத்திரங்கள் உள்ளன.

நான்காவது அத்தியாயத்தின் சூத்திரங்களை இனி விளக்கத் துடன் பார்ப்போம்.





***4.1.1. ஆவ்ருத்தி: அஸக்ருத் உபதேசாத்***

> *வேதம், பிரம்ம வித்யை (வழி) களைப் பல முறை சிந்திக்கச் சொல்கிறது.*

பிரம்ம வித்யைகளே சிந்தனம்தான் என்று முன்பு பார்த்தோம். இவைகளை வாழ்க்கையில் ஒருமுறை கடைப்பிடித்தால் போதுமா? அல்லது மறுபடி மறுபடி இடைவிடாது நம் வாழ்க்கை முழுவதும் சிந்தனம் செய்ய வேண்டுமா? என்ற கேள்விக்கு இது விடை.

***4.1.2. லிங்காச்ச***

> *இதுவே விஷ்ணு புராணம் என்ற ஸ்ம்ருதியிலும் கூறப் பட்டது.*

தியானம் என்பது, எண்ணெய் ஒழுக்கு போன்ற, இடையறா நினைவுக்கூட்டம். தியானம் பிரம்மத்தைப் பற்றியதானால், வேறு விதமான அறிவு (இடைவிடாது பிரம்மத்தைத் தியானம் செய்தால்) ஏற்படாது என்பது குறிப்பு.

***4.1.3. ஆத்மா இதி து உபகச்சந்தி க்ராஹயந்தி ச.***

> *நம் உள் உறைபவன் என்றே தியானம் செய்ய வேண்டும்.*

பிரம்மத்தை நாம் ஆத்மா என்றே கொண்டு தியானிக்க வேண்டும். சாஸ்திரங்களும் அவ்வாறே சொல்கின்றன.

சங்கரரும், ராமானுஜரும் இந்த சூத்திரத்திற்கு வேறுபட்டு உரை எழுதுகிறார்கள். சங்கரர் நேராகவே பொருள் கொள்கிறார். பிரம்மத்தைச் சிந்தனை செய்யும் ஆத்மாவும், பிரம்மமும் ஒன்றே. The meditator and the meditated are the same. ''நானே பிரம்மம்'', ''நீ அதுவாக இருக்கிறாய்'' போன்ற அபேத சங்கரரின்படி 'ஒருமை வாசகங்கள்' (ஜீவாத்மாவும் பிரம்மமும் ஒன்றே என்னும் வாசகங்கள்) வேதத்தில் பல இடங்களில் சொல்லப்படுகிறது. அதுவும், சந்தேகம் இல்லாமல் வெளிப்படையாக உள்ளன இந்த 'ஒருமை வாக்கியங்கள்'. ஆகவே, ஜீவனுக்கும், பிரம்மத்திற்கும் கூறப்படும் வேற்றுமைகளை நாம் கற்பனை என்றே கொள்ள வேண்டும். அந்த வேற்றுமைகள் உண்மை (யில்) இல்லை. வேறுபாடு இல்லை (ஜீவனுக்கும் பிரம்மத்திற்கும்) என்னும்போது,

'இதை செய்; அதை செய்யாதே' என்ற வேத வாக்கியங்கள் அறிவின்மையால் சூழப்பட்ட பிரம்மம் ஜீவனாகத் தோன்றும் போது, உண்மை யாகின்றன. ஒருமையை உணர்ந்த பிறகு இந்த ஆணைகள் தேவையில்லை, மறைந்துவிடுகின்றன!

மேலும், சங்கரரின் ஒருமைப்பாட்டுக் கொள்கை உண்மை என்றால், கீழே தரும் மூன்றில் ஒன்று உண்மையாக வேண்டும்.

1. பிரம்மம் குறையற்றதில்லை.

2. ஜீவன் குறைபாடு உள்ளது அல்ல- அறியாமையால் குறையுள்ளதுபோல தோன்றுகிறது.

3. இரண்டுக்கும் சொல்லப்பட்ட வேறுபாடுகள் இல்லை.

சங்கரர் இரண்டாவதை ஆதரிக்கிறார்.

இந்த வாதத்திற்கு ஒருவர் கீழ்க்கண்டவாறு சந்தேகம் எழுப்பு கிறார்.

''இந்த அறியாமை யாருக்கு வருகிறது?'' (பிரம்மத்திற்கா?)

சங்கரரின் பதில்: ''உனக்கே வருகிறது'' கேள்வி கேட்பவர் விடுவதில்லை. ''நான்தான் பிரம்மம் என்றாகிவிட்டதே. ஆகை யால் நான் எப்படி அறியாமை உடையவனாவேன்?'' என்கிறார். சங்கரரின் பதில்: ''அவ்வாறு நீ உணர்ந்துவிட்டாய் என்றால், அறியாமையும் போய்விடுகிறதே!'' கூர்ந்து சிந்தித்தால் இந்தத் தர்க்கத்தில் உள்ள முரண்பாடு (paradox) புரியும்.

வாக்கியங்களுக்கு நேரடிப் பொருள் கொள்கிறார் சங்கரர். ஆனால் நம்மாழ்வார், 'கடல் ஞாலம் செய்தேனும் யானே' என்னும் போது சங்கரரின் ஒருமையைக் கூறுவது போல தோன்றுகிறது. ஆனால் ராமானுஜர், 'குறையுடன் கூடிய, துன்பங்களை அனுப விக்கும் ஜீவாத்மா எப்படி பூர்ணனான, குறையற்ற பிரம்மம் ஆக முடியும்' என்று கேட்டு, ஜீவனின் உள் உறையும் பிரம்மமே இங்கு ஆத்மா எனப்பட்டது என்கிறார். 'எவனுக்கு ஆத்மா சரீரமோ, எவனை ஆத்மா அறியவில்லையோ, எவன் ஆத்மாவின் உள் நுழைந்து நியமிக்கிறானோ, அழிவற்றவனான அவனே உனக்கு ஆத்மாவாக இருக்கும் அந்தர்யாமி' போன்ற (பிருகதாரண்யகம் 6-7) உபநிஷத வாக்கியங்கள் இவருக்கு உதவுகின்றன.

இந்த ஒருமை, வேற்றுமை பற்றி முன்பே சொல்லப்பட்டிருக் கிறது. இந்த சூத்திரத்தைப் பார்த்தால், இந்த சந்தேகத்திற்கு முற்றுப் புள்ளி வைத்து, ஆத்மாவே பிரம்மம் என்று சொல்வது போல இருக்கிறது. ஆனால், உரையாசிரியர்கள் சுலபமாக விட்டுவிடு



வார்களா? இரண்டும் ஒன்று என்றால், 'இதைச் செய், அதைச் செய்யாதே என்னும் வேதக் கட்டளைகள் யாருக்கு? குறையற்ற ஒன்றும், குறையுள்ள ஒன்றும் எப்படி ஒன்று என்னலாம்?'' என்று கேள்விகளை அடுக்கி, சாதகமான வேத உபநிஷதச் சொற்களைக் கொண்டு, 'இங்கே ஆத்மா என்றது, ஜீவாத்மாவின் உள் உறையும் பிரம்மத்தைக் குறிக்கிறது. என்கின்றனர்.

**4.1.4. ந ப்ரதீகே ந ஹி ஸ:**

*பிரம்மத்தின் உறுப்பான மனம் போன்றவைகளையும் சிந்திக்கலாமா?- கூடாது.*

(பிரம்மத்தின்) அவயவமான மனம் போன்றவை ஆத்மா இல்லை- அவை பிரம்மத்தினால் தோன்றியவையே. தங்கத்தால் செய்த ஆபரணம் போல. தங்கம் ஆத்மா. மனம் போன்றவை ஆபரணம். இந்த சூத்திரத்தை முன்னால் சொன்ன 4.1.3 உடன் சேர்த்துப் படித்தால் புரியும்.

**4.1.5. ப்ரஹ்மத்ருஷ்டி: உத்கர்ஷாத்.**

*மனம் போன்றவற்றில் பிரம்மத்தைக் காணலாம். ஆனால் பிரம்மம் (மனம் போன்றவைகளைவிட) உயர்ந்தது.*

மனம் போன்றவை அறிவற்றவை. ஆகவே அவற்றை பிரம்மமே என்று ஒருமைப்படுத்தாதே என்பது குறிப்பு. (பிரம்மம் அறிவு மயம்).

ஆதித்யன் (சூரியன்) முதலான தேவதைகளை, யாகத்தின் அங்கங்களில் காண வேண்டும்.

**4.1.6. ஆதித்யாதி மதயச்ச அங்கே உபபத்தே:**

*இங்கே அங்கம் எனப்படுவது 'ஓம்' போன்ற மந்திரங்களை என்கின்றனர் உரையாசிரியர்கள்.*

சூரியன் முதலான தேவதைகளைக் குறித்து யாகம் செய்யும் போது, இம்மாதிரி மந்திரங்களைச் சிந்தனை செய்யச் சொல்கிறது. வேதம் அவ்வாறு சிந்திக்கும் போது அந்த மந்திரங்களில் அந்த தேவதைகளை நாம் காண வேண்டும் என்கிறது இந்த சூத்திரம்.

**4.1.7. ஆஸீன: ஸம்பவாத்.**

*உட்கார்ந்துகொண்டு சிந்தனை செய்.*

உட்கார்ந்துகொண்டு சிந்தனை செய்ய வேண்டும். அப்போது தான் மன ஒருமைப்பாடு உண்டாகும். படுத்துக்கொண்டு சிந்தித்தால் தூக்கம்தான் வரும். நடந்து கொண்டு சிந்தித்தால் களைப்பு வரும்.

**4.1.8. த்யாநாச்ச**

*தியான உருவமாக (பிரம்ம சிந்தனை) இருப்பதால்*

தியானம் என்பது எண்ணெய் ஒழுக்கு போல இடைவிடாத நினைவுத் தொகுப்பு என்று கூறினோம். ஆகவே, மன ஒருமைப் பாட்டுக்கு (பிரம்மத்தின் மேல் மனத்தை முழுமையாகச் செலுத்த) தியானம் தேவை.

**4.1.9. அசலத்வம் சாபேக்ஷ்ய**

*அசையாமல் இருப்பதும் தேவை.*

**4.1.10. ஸ்மரந்தி ச**

*ஸ்ம்ருதியிலும் இவ்வாறு சொல்லப்பட்டது.*

பகவத் கீதை சொன்னதை உதாரணமாகக் கூறுகின்றனர் உரையாசிரியர்கள்.

**4.1.11. யத்ர ஏகாக்ரதா தத்ர அவிசேஷாத்**

*எங்கே,எப்போது மன ஒருமைப்பாடு ஏற்படுகிறதோ அங்கே, அப்போதே (பிரம்ம வழிபாட்டை) செய்யவேண்டும். குறிப்பிட்ட காலம், இடம் என்று இல்லை.*

சுவேதாசுவதரம். 'மேடு- பள்ளம் இல்லாததாய், பரிசுத்த மானதாய், மணல், நெருப்பு, சிறு கற்கள் ஆகியவை இல்லாததாய், பலர் நடமாடாத இடமாய்ப் பார்த்து உபாஸனம் செய்' என்கிறது.



**4.1.12. ஆ ப்ரயாணாத் தத்ராபி ஹி த்ருஷ்டம்.**

*இறக்கும் வரை செய்.*

இறக்கும் காலம்வரை பிரம்ம சிந்தனை செய் என்கிறது வேதம்.

**4.1.13. தததிகம உத்தரபூர்வாகயோ: அச்லேஷ விநாசௌ தத் வ்யபதேசாத்.**

*பாவங்கள் அழியும்*

பிரம்மத்தை உணர்ந்தவனின் பழைய பாவம் அழியும். புதிய பாவம் எதுவும் அவனுடன் ஒட்டாது என்கிறது வேதம்.

இந்த சூத்திரம் தொடங்கி, பிரம்மத்தை அடைவதன் பலன் கூறப்படுகிறது. இங்கே பின்வரும் பாவங்களை அறியாமல் செய்யப் போகும் பாவங்கள் என்று கொள்ள வேண்டும்.

**4.1.14. இதரஸ்யாப்யேவம் அஸம்ச்லேஷ: பாதே து.**

*அதேபோல புண்ணியங்களும் நீங்குகின்றன.*

அதேபோல, உயிர் (பிரம்மத்தை உணர்ந்த பின்) உடலை பிரியும் போது புண்ணியங்களும் நீங்குகின்றன.

புண்ணியங்கள் செல்வம், மக்கட் பேறு போன்ற உலகப் பயன்களையே அளிக்கவல்லவை. பிரம்மத்தை உணர்ந்தவனுக்கு அப்பயன்கள் தேவையில்லையே.

**4.1.15. அநாரப்த கார்யே ஏவ து பூர்வே தததவதே:**

*பலன் கொடுக்கத் தொடங்காத (ஸஞ்சித) புண்ய- பாவங்களே அழிகின்றன. இப்போது நாம் அனுபவித்துக் கொண்டிருக்கும் (ப்ராரப்த) கருமங்கள் தொலைவ தில்லை.*

(எங்களுக்கு இது சற்று வேடிக்கையாகத் தோன்றுகிறது) சாந்தோக்யம் (6-14-12) 'ப்ராரப்த கருமம் முடியும், உடலின் இறுதியிலேயே பிரம்மம் அடையப்படுகிறது' என்கிறது. ஞானியும் உடல் உள்ளவரை கருமங்கள் அனுபவிக்க வேண்டும்.

**4.1.16. அக்நி ஹோத்ராதி து தத்கார்யாயைவ தத்தர்சனாத்.**

*தீ வழிபாடு முதலிய விதிக்கப்பட்ட கருமங்களை விடக் கூடாது.*

நெருப்பு வழிபாடு போன்ற விதிக்கப்பட்ட கருமங்களைச் செய்து கொண்டே இருக்க வேண்டும். ஏனெனில், அவை பிரம்மத்தை உணர உதவும் என்கிறது வேதம்.

பிருகதாரண்யகம் (6-4-22) 'வேதத்தைச் சொல்லுவதாலும், யாகம் செய்வதாலும், தானத்தாலும், பலனில் விருப்பமற்ற தவத்தாலும், பிரம்ம ஞானிகள் அந்த பரமாத்மாவைச் சிந்திக்க விரும்புகிறார்கள்' என்கிறது.

**4.1.17. அத அந்யாபி ஏகேஷாம் உபயோ:**

பிரம்ம ஞானம் ஏற்படும் முன்னும் பின்னும் மற்ற பலன் கருதி செய்யப்படும் புண்ணியங்கள் பிரம்ம ஞானியை ஒட்டாது. அந்த ஞானியின் நண்பர்களைப் போய்ச் சேரும் என்கிறது வேதம்.

நமக்குத் தெரிந்தவர், வேண்டியவர் பிரம்மத்தை உணர்ந்தால், அவர்களின் நற்கருமத்தின் நல்விளைவுகள் நமக்கு வரும்! இது, ஒருவித இடமாற்றம் போல்.

**4.1.18. யதேவ வித்யயேதி ஹி**

*தடை நீக்கம் சொல்லப்பட்டதால், சில புண்ணியங்கள் தடை செய்யப்பட்டு இருக்கும் என்று தெரிய வேண்டும்.*

'ஓம்' என்ற உத்கீதத்தோடு செய்யும் கருமங்கள், அவற்றுக்கு உள்ள தடைகளை நீக்கி பலனை உடனே அளிக்கும் என்கிறது சாந்தோக்யம். இதிலிருந்து, தடை நீக்கப்படாத நற் கருமங்கள் உண்டு என்று தெளிவாகிறது. இதுவே மேலே (4.1.17) சொன்ன படி, புண்ணியங்கள் வேண்டியோர்க்குப் போய்ச் சேரும். சில பெரிய பாவங்களைச் செய்தால், நாம் செய்த புண்ணியம் பலன் கொடுக்காது தடைபடுகிறது. இந்த மாதிரியான புண்ணியங்களே 4.1.17-ல் சொல்லப்பட்டு நம் அன்பர்களை அடையும் கருமம்.

பெரிய பாவங்களால் தடை செய்யப்பட்டிருக்கும் புண்ணியத்தால் விளையும் விளைவு.



**4.1.19. போகேந து இதரே க்ஷபயித்வா ஸம்பத்யதே.**

அனுபவித்த பிறகு பிரம்மத்தை அடைகிறான். (ஸஞ்சித கர்மங்களைக் காட்டிலும்) வேறுபட்ட (ப்ராரப்த) புண்ணிய பாவங்களை அனுபவித்துவிட்டு, பிரம்மத்தை அடைகிறான் (பிரம்ம ஞானி).

இந்தப் பாதத்தில் சொன்ன முக்கியக் கருத்துக்களைத் தொகுப்போம்:

**1. பிரம்மத்தைப் பற்றிய வித்யைகளை இடைவிடாது செய்ய வேண்டும்.**

**2. பிரம்மம் (நம்) ஆத்மா என்றே சிந்திக்க வேண்டும்.**

**3. மனம் போன்ற அறிவற்றவையில் பிரம்மத்தைக் காணலாம்- ஆனால், மனமே பிரம்மம் அல்ல.**

**4. உட்கார்ந்துகொண்டு, அசையாமல், எப்போது, எங்கே மன ஒருமைப்பாடு ஏற்படுகிறதோ அங்கே அப்போது பிரம்மத்தைச் சிந்தனை செய்- இறக்கும்வரை.**

**5. சேர்த்து வைத்த புண்ணிய பாவங்கள் அழியும்- பிரம்ம ஞானிக்கு.**

**6. ஆனால், பலன் தர ஆரம்பித்துவிட்ட புண்ணிய - பாவங்களின் பலனை (பிரம்ம ஞானியும்) அனுபவித்தே தீர வேண்டும்.**

விதி, ஊழ், கருமம் எவ்வளவு வலிமையானது! பிரம்ம ஞானியையும் விடுவதில்லை. சில சமயம் முற்றும் துறந்த- உணர்ந்தவர்களும் துயரத்தை அனுபவிப்பதைக் காண்கிறோம்.

பிரம்மத்தை உணர்ந்த ஞானிக்கு ஸஞ்சித (சேர்த்து வைக்கப் பட்ட) கர்மங்கள் (புண்ணிய பாவங்கள்) மட்டும் தொலைகின்றன. இந்த பலன்- இலவச இணைப்பு போல இருக்கிறது.

*மேலே செல்லுதல்*

*உடலை விட்ட உயிரின் பயணம் சொல்லப்படுகிறது இந்தப் பாதத்தில். இங்கே, மேலே நோக்கி நகர்தல்/ செல்லுதல் என்பதற்கு- உயர்ந்த நிலைக்குச் செல்லுதல் என்று கொள்ளலாம்.*

நம் முன்னோர், உயர்ந்த நிலையை 'மேலே' (geographical upside) என்று உருவகப்படுத்தினர். முன்பே சொன்னோம், ஜீவாத்மா அதுவாகவே ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு நகர முடியாது என்று. உயிர் (ஜீவாத்மா) நகர (Spatial movement)

உடல் தேவை. நாம் கண்டு கொண்டிருக்கும். நம் உடலை விட்டு விட்டு ஒரு சூட்சும உடலைக் கொள்கிறது, ஜீவன் நகர்வதற்காக. உயிரின் பயணத்தை spatial ஆகவே நினைத்தனர் நம் முன்னோர். இருபது சூத்திரங்கள் கொண்ட இந்தப் பாதத்தில் உயிரின் பயணம் தொடக்கம் கூறப்படுகிறது. பிரம்ம ஞானி சூரியனின் கிரணங் களின் வழியாக மேலே செல்கிறான் என்கிறது வேதம். சுலபமாகப் புரியும் இந்த சூத்திரங்கள்.

**4.2.1. வாக் மநஸி தர்சனாத் சப்தாச்ச.**

*(பேச்சின் ஒடுக்கம்)*

*(மரணமடையும்போது) பேச்சு மனத்தில் சேர்கிறது. பேச்சு போன பின்பும் மனம் செயல்படுவதால் இது காணப் படுகிறது. சாந்தோக்யம் (6-8-6) இவ்வாறு கூறுகிறது.*

இங்கே பேசுதல் என்ற செயல் குறிக்கப்படவில்லை. பேச்சு என்னும் தகுதி கூறப்படுகிறது.

**4.2.2. அத ஏவ ஸர்வாண்யநு.**

*அதுபோலவே மற்ற புலன்களும் (மனத்தோடு சேரும்).*

**4.2.3. தந்மந: ப்ராண உத்தராத்**

*(மனம் சேர்கிறது பிராணனில்)*

*அந்த (எல்லாப் புலன்களோடு கூடிய) மனம் ப்ராணனில் சேர்கிறது.*

**4.2.4. ஸ அத்யக்ஷே ததுபகமாதிப்ய**

*(தலைவனான ஜீவனோடு சேர்தல்)*

*அந்த (இந்திரியங்கள், மனம் இவைகளோடு கூடிய) ப்ராணன் அவற்றுக்குத் தலைவனான ஜீவனுடன் சேர்கிறது.*



**4.2.5. பூதேஷு தச்ச்ருதே.**

*(ஐம்பூதங்களும் சேர்கின்றன)*

*எல்லா பூதங்களிலும் (ப்ராணன்) சேர்கிறது என்கிறது வேதம்.*

**4.2.6. நைகஸ்மிந் தர்சயதோ ஹி**

*ஒவ்வொரு பூதத்தோடும் வரிசையாகச் சேர்வதில்லை (ப்ராணன்)- வேதம் சொல்கிறது.*

பூதங்களின், உற்பத்தியின்போது ஐந்து பூதங்களின் சேர்க்கை கூறப்பட்டது. (நீரிலே நெருப்பும் உண்டு) அவற்றின் தனித்தன்மை போய்விட்டது. ஆகவேதான் எல்லா பூதங்களுடனும் ப்ராணன் சேர்கிறது என்கிறது இந்த சூத்திரம். புது உடலுக்கு ஐம்பூதங்களும் தேவை.

**4.2.7. ஸமாநா ச ஆஸ்ருத்யுபக்ரமாத் அம்ருதத்வம் ச அநுபோஷ்ய**

*(வெளியேறுதல் எல்லோருக்கும் உண்டு.)*

*பிரம்ம ஞானிக்கும் மற்றவர்களுக்கும் உயிரின் பயண வழி ஒன்றுதான், பிரம்ம ஞானிக்குச் சொல்லப்படும் மோட்சம், உடலுடன் சேர்ந்து இருக்கும்போது ஏற்பட்டாலும்.*

கடஉபநிஷத்து (2-6-14) 'பிரம்மத்தை உணர்ந்தவன் (விருப் பங்கள் நீங்குகின்றன அவனுக்கு) அப்போதே மோட்சம் அடை கிறான்' என்பதற்கு விளக்கம் இந்த சூத்திரம். இந்த மோட்சம், உடல் இருக்கும் போதே நிகழ்கிறது. அது உயிர் நீங்கும்போது ஏற்படும் மோட்சத்திலிருந்து வேறுபடுகிறது.

**4.2.8. ததாபீதே: ஸம்ஸாரவ்யபதேசாத்**

*(இவ்வுலகிலேயே கிடைக்கும்) அந்த மோட்சம் உடலோடு இந்த ஸம்ஸாரத்தில் இருக்கும் பிரம்ம ஞானிக்குச் சொல்லப்பட்டது. அது பிரம்மத்தை (உயிர்*

*உடலிலிருந்து பிரிந்தபின் சேரும்) அடையும் வரையே. அந்த மோட்சம் புண்ணிய, பாவங்கள் ஒட்டாமையையே சொல்கிறது.*

**4.2.9. ஸூக்ஷ்மம் ப்ரமாணதச்ச ததா உபலப்தே:**

*(பிரம்ம ஞானி செல்லும் வழிக்கு அர்ச்சிராதி வழி என்று பெயர்.) முடியும்வரை உயிரின் நுண் உடல் தொடர்கிறது- என்கிறது வேதம்.*

**4.2.10. நோபமர்த்தேநாத:**

*(மேலே கூறிய காரணங்களால்)*

*ஸம்ஸாரம் நீங்கியபின் ஏற்படும் (அடையும்) மோட்சத்தைச் சொல்லவில்லை, மேலே சொன்ன கட உபநிஷத்துச் சொற்கள். சங்கரர் 'நம் உடல் அழியும்போது, இந்த நுண் உடல் அழிவதில்லை' என்று பொருள் கொள்கிறார் இந்த சூத்திரத்திற்கு.*

**4.2.11. அஸ்யைவ ச உபபத்தே: ஊஷ்யா.**

*மரணம் அடைந்தபின், நுண் உடல் அழிவதில்லை.*

*இறந்த உடலிலும் சிறிது வெப்பம் இருப்பதிலிருந்து தெரிகிறது.*

சங்கரர், நாம் உயிருடன் இருக்கும்போது உள்ள உடலின் வெப்பமே இந்த நுண் உடலினால்தான் என்கிறார். தயவு செய்து இன்று நமக்குத் தெரிந்த பயாலஜியைக் கலக்காதீர்கள் இங்கே. பிரம்ம சூத்திரம் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் தோன்றியது.

**4.2.12. ப்ரதிஷேதாதிதி சேத் ந, சாரீராத் ஸ்பஷ்டோ ஹி ஏகேஷாம்.**

*பிரம்ம ஞானிக்கு, மேலே சொன்ன உயிரின் பயணம் இல்லை என்று வேதம் சொல்கிறது என்றால்- அது சரியல்ல.*



வேதம் மற்றொரு இடத்தில் ஜீவாத்மா ப்ராணனிடமிருந்து பிரிவதில்லை என்றே சொல்கிறது, தெளிவாக.

பிருகதாரண்யகம் (4-4-6) 'ஆசைகளை விட்டவனுக்கு (பிரம்ம ஞானிக்கு) ப்ராணன் வெளிக்கிளம்புவதில்லை' என்கிறது. ஆகவே சந்தேகம் வருகிறது, ப்ரம்ம ஞானியின் உயிரின் பயணம் பற்றி. அதற்கு சமாதானமாக, உபநிஷத்து அங்கே உடலைவிட்டு என்று கூறவில்லை. உயிரைவிட்டு என்றே பொருள் கொள்ள வேண்டும். ப்ராணனும் உயிரும் ஒன்றாகி வெளிக்கிளம்புகிறது என்பது குறிப்பு. சங்கரர் இதை இரண்டு சூத்திரமாகக் கொள்கிறார். அவரின்படி, பயணம் என்பது இல்லை. ஜீவப் பிரம்ம ஐக்யம் உண்டு பிரம்மஞானிக்கு.

**4.2.13. ஸ்மர்யதே ச.**

*ஸ்ம்ருதியும் அவ்வாறே கூறுகிறது.*

இங்கே ஸ்ம்ருதி என்பது யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதி என்று கொள்கின்றனர் சில உரையாசிரியர்கள். சங்கரர் இங்கே மகா பாரதத்தை மேற்கோள் காட்டுகிறார். சங்கரர் இந்த சூத்திரங்களுக்கு 'குணமற்ற ஒருமையான பிரம்மத்தை உணர்ந்தவனுக்கு, மரணம் கிடையாது. (மரணமே மாயை); அப்படிப்பட்டவனுக்கு உயிரின் பாதை என்பதெல்லாம் ஏது' என்கிறார். மகாபாரதத்தில், 'தேவர்களே திகைக்கிறார்கள், பாதையேயில்லாத அவனுடைய பாதையைத் தேடி' என்று வருகிறது. சங்கரர் இதை உபயோகிக்கிறார்.

**4.2.14. தாநி பரே ததா ஹி ஆஹ**

*பரமாத்மாவிடம் சேர்கின்றன.*

அந்த (ஜீவனோடு சேர்ந்த) ஐம்பூதங்கள், பரமாத்மாவிடம் சேர்கின்றன- வேதம் அப்படிச் சொல்கிறது.

சங்கரர், பரமாத்மாவில் கரைகின்றன என்கிறார். பொய்யான பாம்பு நிஜமான கயிறாகத் தெரியும்போது, பாம்பு கரைகிறது இல்லையா- அதுபோலே.

**4.2.15. அவிபாகோ வசநாத்.**

*பிரிக்க முடியாதபடி*

பிரிக்க முடியாதபடி சேர்ந்து விடுகிறது (ஐம் பூதங்கள்) என்கிறது வேதம். சங்கரர், உலக வாழ்க்கைக்காக உபயோகப்பட்ட ஐம்பூதங்களும், ஒன்றேயான பிரம்மத்தில் கரைந்துவிடுகின்றன என்று பொருள் கொள்கிறார்.

*வெளியேற இறைவன் காட்டிய ஒளியுடைய வழி.*

**4.2.16. ததோகோ அக்ரஜ்வலனம் தத் ப்ராகாசதத்வாரோ வித்யா ஸாமார்த்யாத் தத்சேஷகத்யநுஸ்ம்ருதி யோகாச்ச ஹார்த்தாநுக்ருஹீத: சதாதிகயா.**

*பிரம்ம ஞானி, தன் இதயத் தாமரையில் உள்ள இறைவனின் அருள் பெற்று, அந்த இதயத் தாமரையினால் ஒளி பெற்று, காட்டப்பட்ட, நூற்றி ஓராவது நாடி வழியாக வெளிக்கிளம்புகிறான்.*

இதுவரை பிரம்ம ஞானிக்கும் மற்றவர்களுக்கும் பொதுவாக, இறக்கும்போது நிகழ்வன. கூறப்பட்டன. ப்ராணனோடு, ஐம்புலன்கள், பூதங்களின் சேர்க்கை முதலியன. இனி பிரம்ம ஞானிக்கு மட்டும் ஏற்படும் நிகழ்வுகள் கூறப்படுகின்றன.

நம் இதயத்தில் பல நாடிகள் உள்ளன. அவற்றில் ஒன்று இதயத்திலிருந்து தலைக்குச் செல்லும் ஸுஷும்நா நாடி (நூற்றி ஓராவது) இது தன் வாயிலை ஒளிவிடச் செய்கிறது (பிரம்மத்தின் அருளால்) அதன் மூலம், ஐம்புலன்கள், ஐம்பூதங்கள் இவைகளோடு சேர்ந்த ப்ராணனோடு கூடிய ஜீவாத்மா வெளிக்கிளம்புகிறது.

நாடி என்பதற்கு ரத்த தமனி (artery) என்று பொருள். சாந்தோக்யம் (8-6-1) நாடிகளின் வர்ணத்தைக் கூறுகிறது.

இந்த இடத்தில் பிருகதாரண்யக உபநிஷத்து இறப்பைப் பற்றிச் சொல்லும் நான்காம் அத்தியாயம், நான்காம் பிராம்மணத்தைப் படிக்க வேண்டுகிறோம். 'அவனுடன் அவன் அறிவு, செயல்பாடு, அவனுடைய அநுபவம் எல்லாமே செல்கிறது' என்ற முக்கியக் கருத்து இங்கே கூறப்படுகிறது. நம் கர்மா நம்முடன் இறந்தபின் தொடர்கிறது என்பது அடிப்படையான வேதக்கருத்து.

**4.2.17. ரச்ம்யநுஸாரி**

*சூரியனின் கிரணங்கள் வழியே*



சூரியனின் கிரணங்கள் வழியாக மேலே செல்கிறான் (பிரம்ம ஞானி). சாந்தோக்யம் 8-6-5 இதைச் சொல்கிறது.

இரவில் இறந்தவன் எப்படி சூரிய கிரணங்கள் வழியே செல்ல முடியும் என்ற சந்தேகத்திற்கு, இரவிலும் சூரியனால் பூமி வெப்பமாகவே இருக்கிறதே என்று விடை கூறுகிறார். சூரியனின் கிரணங்கள் (கண்ணுக்குத் தெரியும் ஒளியைத் தவிர) எப்போதுமே நம்மைச் சூழ்ந்து உள்ளன என்பதே உண்மை இல்லையா?

**4.2.18. நிசி நேதி சேந்ந, ஸம்பந்தஸ்ய யாவத்தேஹபாவித்வாத் தர்சயதி.**

*இரவிலும் மோட்சம் உண்டு*

இரவில் இறந்தவனுக்கு மோட்சம் இல்லை என்றால்- அது தவறு. உடலின் சம்பந்தம் நீங்கிய உடனே (அது இரவானாலும்) மோட்சம் என்கிறது வேதம்.

**4.2.19. அதச்சாயனே அபி தக்ஷிணே**

*தட்சிணாயன காலத்திலும் உண்டு*

அதேபோல தட்சிணாயன காலத்தில் மரணம் அடைந்த பிரம்ம ஞானிக்கு மோட்சம் உண்டு.

பீஷ்மர் எப்போது வேண்டுமானாலும் இறக்கலாம் என்ற வரம் பெற்றதாலும், இன்னும் சில தர்மங்கள் செய்வதற்காகவும் தன் மரணத்தைத் தள்ளி வைத்தார். ஆகவே உத்தராயணத்தில் உயிர் பிரிந்தாலும் மோட்சம் உண்டு.

**4.2.20. யோகிந: ப்ரதி ஸ்மர்யதே ஸ்மார்த்தே சைதே.**

*யோகிகளுக்கு (மரணம் அடைய) சில காலங்களே.*

சரி (பகல்) என்று கூறப்பட்டதே என்றால், அப்படிக் கூறப்பட்டது வேதம் இல்லை. (அவை யோக, சாங்கிய நூல்கள்)

இப்போது வழக்கம்போல, இந்தப் பாதத்தில் சொன்ன முக்கியக் கருத்துக்களை வரிசைப்படுத்தலாம்.

**1. இறக்கும்போது ஐம்புலன்கள் (ஞானப்புலன்கள்) மனத்தில் சேர்கின்றன. மனம் ப்ராணனில். ஐம்பூதங்களும் ப்ராணனில்.**

**2. ப்ராணன் ஜீவாத்மாவோடு சேர்கிறது.**

**3. மேலே சொன்ன ஒடுக்கம் எல்லாருக்கும் பொதுவானது.**

**4. பிரம்மஞானிக்கு உயிரின் பயணம் என்பது இல்லை என்கிறார் சங்கரர். அவனுக்கு இறப்பு என்பதே இல்லை. நிர்க்குண பிரம்மத்துடன் ஒன்றிவிடுவதால், இந்த ஒன்றுதல் என்பது இரண்டறக் கலந்து விடுதல் என்பது.**

**5. ராமானுஜர் போன்ற உரையாசிரியர்களின்படி, பிரம்ம ஞானி இறக்கும்போது இதயத்திலிருந்து தலைக்குச் செல்லும் ஒரு நாடி வழியே வெளிக்கிளம்புகிறான்- மோட்சம் அடைய.**

**6. பிறகு சூரியனின் கிரணங்கள் வழியே மேலே செல்கிறான்.**

**7. அவனுக்கு இரவிலோ, தட்சிணாயன காலத்திலோ இறந்தாலும் மோட்சம் உண்டு.**

சங்கரர் இந்த மோட்சத்தை, சகுணப் பிரம்மத்தை அடைதல் என்கிறார்.

> *ஒவ்வொரு இனமும், இறந்த பின் ஏற்படும் நிகழ்வுகளைப் பற்றிய நிச்சயமான கருத்துகளைக் கொண்டுள்ளன என்று முன்பே சொன்னோம்.*

வேதத்திலும் இவை பற்றிய கருத்துகள் நிறைய உள்ளன. சிறிது நேரம் நாம் மூத்தோர் உலகம் புகுவது, நரகம் புகுவது போன்றவற்றைப் பற்றிச் சிந்திக்காமல், பிரம்மத்தை உணர்ந்தவன் செல்லும் வேத வழியைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம். அவனை எல்லோரும் வரவேற்று, புத்தாடை, அணிகலன்கள் அணிவித்து, நறுமணம் கமழ பிரம்மத்திடம் அழைத்துச் செல்கிறார்கள். இந்த வேத வழிக்கு அர்ச்சிராதி வழி என்றும் பெயர். அங்கே சென்றவர்களுக்கு மறுபடி பிறவி (இந்த உலகத்தில்) இல்லை. சாந்தோக்ய, பிருகதாரண்யக, கௌஷீதகி உபநிஷத்துகள் இந்த சூத்திரங்களுக்கு அடிப்படை. இந்தப் பாதத்தில் பதினைந்து (சங்கரர்-பதினாறு) சூத்திரங்களே உள்ளன. ராமானுஜர் இந்த சூத்திரங்களை ஐந்து அதிகரணங்களாகப் பிரிக்கிறார்.



*தேவ வழி*

**4.3.1. அர்ச்சிராதிநா தத்ப்ரதிதே:**

> *அர்ச்சிராதி வழியிலேயே (பிரம்ம ஞானி மோட்சத் திற்கு) செல்கிறான்- வேதங்கள் சொல்கின்றன அப்படி.*

அர்ச்சிராதி என்பதற்கு 'ஒளியால் ஆரம்பிக்கப்பட்ட' என்று பொருள். The path which begins with light.

நாம் செல்லப் போகும் வழி ஒளி வெள்ளம் உடையது. மரணத்தின் மிக அருகில் சென்று மீண்டவர்களின் அனுபவமும் (Near death experience) இதற்கு ஒத்து வருகிறது. அவர்கள் வெள்ளை ஒளியான குளிர்ந்த (cool) வழியைக் கண்டோம் என்கிறனர்.

*காற்றின் உலகை அடைதல்.*

**4.3.2. வாயும் அப்தாத் அவிசேஷாப்யாம்**

> *வருஷத்திற்குப் பின்னர், வாயு உலகை அடைகிறான்- சாதாரணமாகவும் விசேஷமாகவும் அப்படிச் சொல்லி இருப்பதால்.*

*மின்னல் மழை*

**4.3.3. தடித: அதிவருணஸ் ஸம்பந்தாத்.**

> *மின்னலுக்கு மேலே வருணனின் உலகம் அடைய வேண்டும் (பிரம்ம ஞானி) இரண்டுக்கும் சம்பந்தம் இருப்பதால், மின்னலுக்கும் மழைக்கும் தொடர்பு இருக்கிறது.*

*தேவர்கள் அழைத்துச் செல்லும் வழிகாட்டிகள்*

**4.3.4. ஆதிவாஹிகா: தல்லிங்காத்.**

> *(பிரம்ம ஞானியை) அழைத்துச் செல்பவர்கள் தேவர்களே- அவர்கள் அடையாளம் காட்டப்படுவதால்.*

செல்லும் வழியில் பிரம்ம ஞானி தடுமாறாமல் இருக்க வழிகாட்டிகள் தேவை. சங்கரர் இங்கே 'உபயவ்யாமோஹாத் தத்ஸித்தே' என்று இன்னொரு சூத்திரத்தைக் கூறி, 'செல்லும் உயிர் மரத்துப்போய்' இருப்பதால், வழிகாட்டி தேவை' என்கிறார். (Guides are needed as the soul is be-numbed)

**4.3.5. வைத்யுதேநைவ தத: தத்ச்ருதே:**

*மின்னலுக்குப் பிறகு, மின்னல் தேவதையான அமாநவன் கூடவே செல்கிறான் என்கிறது வேதம்.*

அமாநவன் என்பவனை வித்யுத்புருஷன் என்கிறார்கள். அவன் ஒரு Superman. இந்த அமாநவன் கூட்டிச் செல்லும்போதும் மற்ற தேவதைகளும் கூடவே வருகின்றனர்- அவரவர் உலக எல்லை வரை.

*படைப்புக் கடவுளின் உலகம்/ சகுணப் பிரம்ம உலகு.*

இனிவரும் சூத்திரங்களுக்கு சங்கரரும் ராமானுஜரும் வெவ்வேறு பொருள் தருகிறார்கள். சங்கரர், அடையும் பிரம்மம் தாழ்ந்த சகுணப் பிரம்மம் என்கிறார். ராமானுஜர் இனிவரும் 8 சூத்திரங்களை வாதியின் கருத்தாகக் கொண்டு, மீதி உள்ள இரண்டு சூத்திரங்கள் பாதராயணரின் கருத்தாகக் கொள்கிறார். இருவரின் கருத்துக்களையும் தருகிறோம்.

**4.3.6. கார்யம் பாதரி: அஸ்ய கத்யுபபத்தே:**

*(ரா) பாதரி என்னும் முனிவர், முதற்படைப்பான பிரமனையே அடைவிக்கிறார்கள், இந்த வழிகாட்டிகள் என்கிறார்- இது வாதியின் கருத்து.*

*(ச) சகுணப் பிரம்மத்தை அடைவிக்கிறார்கள் என்கிறார் பாதரி (எங்கும் பரவி இருக்கும் நிர்குணப் பிரம்மத்திற்கு தனி இடம் ஏது?- அடைவித்தல் ஏது?* There cannot be any spatial reaching of nirguna brahmam)

'காரிய' என்பதற்கு படைக்கப்பட்ட பிரமன் என்று ராமானுஜரும், சகுணப் பிரம்மம் என்று சங்கரரும் பொருள் கொள்கின்றனர்.



**4.3.7. விசேஷிதத்வாச்ச.**

*(ரா) சிறப்பாக* (specially) *பிரம்ம உலகங்கள் என்று கூறியிருப்பதாலும் அடைவது பிரம்மனின் உலகே. இதுவும் வாதியின் கருத்து.*

*(ச) பிரம்ம உலகங்கள் என்று சொன்னது சகுணப் பிரம்மம் இருக்கும் இடங்களையே*

பிருகதாரண்யகம் (8.2.15) இங்கே எடுத்தாளப்படுகிறது.

**4.3.8. ஸாமீப்யாத்து தத்வ்யபதேச:**

*(ரா) அருகுவதால் பிரம்மனை பிரம்மம் என்றது வேதம். பிரமன் பிரம்மத்திற்கு அருகில் உள்ளான் (முதற் படைப்பு இல்லையா?). ஆகவேதான் வேதம் பிரமனை பிரம்மம் என்றே கூறியது. இதுவும் வாதியின் கருத்து.*

*(ச) அருகுவதால் நிர்க்குணப் பிரம்மத்தை சகுணப் பிரம்மமாகக் கூறுகிறது வேதம். நிர்குணப் பிரம்மமும் சகுணப் பிரம்மமும் வெகு நெருங்கியுள்ளவை. ஆகவேதான் பிரம்மம் என்ற சொல்லே சகுணப்பிரம்மத்திற்கும் உபயோகிக்கப்பட்டது.*

**4.3.9. கார்யாத்யயே ததத்யக்ஷேண ஸஹாத: பரம் அபிதாநாத்.**

*(ரா) பிரம்மாவின் உலகம் அழியும்போது, பிரம்மாவோடு, பிரம்ம ஞானியும், பிரம்மத்தை அடைகிறான். ஆகவே அவனும் திரும்பி வருவதில்லை. (பிரம்மாவுக்கு அழிவு உண்டு. அப்போது பிரம்மா பிரம்மத்துடன் சேர்கிறார்) இதுவும் வாதியின் கருத்து.*

*(ச) சகுண பிரம்ம உலகு அழியும்போது நிர்க்குண பிரம்மத்தை அடைகிறான் ஞானி.*

**4.3.10. ஸ்ம்ருதேச்ச**

(ரா, ச) ஸ்ம்ருதியிலும் இப்படியே கூறப்பட்டது.

ராமாநுஜர் இதையும் வாதிக் கருத்தாகக் கொள்கிறார்.

**4.3.11. பரம் ஜைமிநிர் முக்யத்வாத்.**

பிரம்மத்தையே அடைகிறான் என்று கருதுகிறார் ஜைமிநி. இங்கே பிரம்மம் என்பதை நிர்க்குண பிரம்மமாகக் கொண்டு, சங்கரர் இந்த சூத்திரத்தை வாதியின் கருத்தாகக் கருதுகிறார்.

**4.3.12. தர்சநாச்ச.**

வேதம் அப்படியே சொல்கிறது. சங்கரர், ராமாநுஜர் இருவரும் இதை (மேலே உள்ள சூத்திரத்திற்கு உதவுவதால்) வாதிக் கருத்தாகச் கொள்கின்றனர்.

**4.3.13. ந ச கார்யே ப்ரத்யபிஸந்தி:**

(ரா) பிரமனின் சபையை அடைகிறான் என்று சொன்னது உண்மையிலே, பிரம்மத்தையே குறிக்கிறது. சாந்தோக்யம் (8.14.1) பிரஜாபதி என்று கூறியது பிரமனைக் குறிக்காது. பிரம்மத்தையே குறிக்கும். இதுவும் ஜைமிநியின் கருத்தாகக் கொண்டு வாதியின் கருத்து என்கிறார்.

(ச) பிரம்ம ஞானி (நிர்க்குண) பிரம்மத்தையே அடைய வேண்டுகிறார், சகுண பிரம்மத்தை அல்ல. ஆகவே தேவப்பாதை சகுண பிரம்மத்தை அடைவிக்கிறது.

பாதராயணர் சொல்வது.



**4.3.14. அப்ரதிகாலம்பநாந் நயதீதி**
**பாதராயண: உபயதா ச தோஷாத் தத்க்ரதுச்ச**

(ரா) பாதராயணர் கூறுகிறார் பிரம்மத்தை உருவமாக (பெயர், உருவத்தோடு விக்கிரகமாக) ஆராதிப்பவனும், பெயர் உரு இல்லாமல் தன் உள்ளே இருப்பவனாக ஆராதிப்பவனும், ஒரே தேவ வழி மூலம் மோட்சம் அடைகிறார்கள். மேலே சொன்ன பாதரி, ஜைமிநி, கருத்துகளில் குறை உள்ளது. பிரமனை வழிபடுபவர்கள் வேதவழி மூலம் செல்கிறார்கள் என்ற பாதரியின் கருத்தும், பர பிரம்மத்தை மட்டுமே வழிபடுகிறவர்கள், தேவவழிமூலம் செல்கிறார்கள் என்ற ஜைமிநி கருத்தும், மற்ற வேத/ உபநிஷத சொற்களுக்கு விரோதமாக இருக்கின்றன. ஆகவே அவை குறையுள்ளன.

(ச) பெயர், உரு கொடுக்காமல், பிரம்மத்தை வழிபடுகிறவர்கள் மட்டுமே தேவவழி வழியாக சகுணபிரம்ம உலகை அடைகிறார்கள் என்பது பாதராயணரின் கருத்து. இப்படிக் கொள்வதில் குறை இல்லை.

ஒருவர் 'தோஷாத்' என்றும் மற்றவர். 'அதோஷாத்' என்றும் சூத்ரத்தைப் பிரிக்கிறார்கள்!

**4.3.15. விசேஷம் ச தர்சயதி.**

(4) (ரா) பலனில் வேறுபாடு கூறுகிறது வேதம்.

சங்கரர், பெயர், உருவம் போன்றவைகளை பிரம்மத்தின் அடையாளமாகக் கொண்டு வழிபடுபவர்களுக்கும், அவ்வாறு இல்லாமல் பிரம்மமாகவே வழிபடுவோருக்கும், பலனில் வேறுபாடு உண்டு என்கிறார். அடையாளங்களைக் கொண்டு வழிபட்டவர் தேவ வழியை அடைய முடியாது என்பது அவர் கருத்து.

ராமாநுஜர், வழிபடுபவர்களைக் கீழ்க்கண்டவாறு பிரிக்கிறார் (சாந்தோக்ய உபநிஷத்தில் ஸனத்குமாரருக்கும், நாரதருக்கும் நடக்கும் உரையாடலைக் கொண்டு) 1) உயிரற்ற பொருள்களை வழிபடுபவர் 2) உடலோடு உள்ள உயிரை வழிபடுபவர் 3) ஜீவாத்மாவான உயிரை வழிபடுபவர் 4) உயிரற்ற பொருளையே பிரம்மம் என்று நினைத்து வழிபடுபவர் 5) உடலோடு உயிரை பிரம்மம் என்று வழிபடுபவர் 6) ஜீவாத்மாவையே பிரம்மம் என்று வழிபடுபவர். இவர்களில் 1,2,4, 5, 6 என்று கூறப்பட்டோருக்கு சிறிய

பலன்கள்தான் கிடைக்கும். (4,5,6 என்பவர் பிரம்மம் இல்லாத ஒன்றை பிரம்மம் என்று வழிபடுவதால்) தன் ஆத்மாவை வழிபடுபவன் தாழ்ந்த கைவல்ய மோட்சமடைகிறான். பிரம்மத்தை அங்கம் இல்லாத பிரம்மமாகவே வழிபடுபவன் தேவவழியை அடைகிறான் என்கிறார். மிகவும் சிக்கலான பாகுபாடு. ஆசை உள்ளவர் வல்லார்வாய் கேட்டறியலாம் இதுபற்றி மேலும். வழக்கம்போல, இந்தப் பாதக் கருத்துக்களைச் சொல்லலாம்.

**1. பிரம்மத்தை அறிந்திருந்து இறந்த ஜீவாத்மா, ஒளிவழி (அர்ச்சிராதி கதி) அல்லது தேவ வழி என்று கூறப்படும் வழி மூலம் பிரம்ம உலகம் செல்கிறது.**

**2. அதுபோகும் பாதையில் காற்றின் உலகம், மின்னல், மழை உலகங்கள் வருகின்றன.**

**3. அந்த உலகங்களில், தேவர்கள் மற்றும் அமாநவன் என்ற 'பெரிய மனிதன்' போன்ற வழிகாட்டிகள் ஜீவாத்மாவை அழைத்துச் செல்கிறார்கள்.**

**4. சங்கரர் பிரம்மத்தை இரண்டாகக் காட்டுகிறார்- எங்கும் பரவி உள்ள, எல்லாமான நிர்க்குணப் பிரம்மம் மற்றும் குணமோடுகூடிய மாறுதல் தோற்றமளிக்கும் சகுணப்பிரம்மம். இங்கே சொல்லப் பட்டது சகுணப் பிரம்மத்தை அடையும் வழி என்கிறார்.**

இறந்தபின் நாம் வெகுதூரப் பிரயாணம் செல்கிறோம். (Travel thro' space and distance) என்று முன்னோர் நம்பினார்கள். செல்லும்போது நாம் நினைவையும் செயலையும் கொண்டு செல்கிறோம் என்றும் நம்பினார்கள்.

## நான்காம் பாதம் - மோட்சம்

இருபத்திரண்டு சூத்திரங்கள் கொண்ட இந்தக் கடைசிப் பாதம் பிரம்ம சூத்திரங்களின் முடிவாகிறது. அமாநவன் என்ற நித்யன் (Superman) பிரம்ம ஞானியை ஒளிப்பாதையான அர்ச்சிராதி வழியாகப் பல உலகங்களையும் கடந்து பிரம்ம உலகை அடைவிக்கிறான். நடுவில் காலத்தையும் கடக்கிறான்- மாதம், பட்சம், வருஷம் இவைகளைக் கடக்கிறான் என்கிறது வேதம். காலத்திற்கு அப்பால் (timeless) இருக்கும் ஓர் நிலையை/ இடத்தை அடைகிறான். அங்கு அவனுக்கு என்ன ஆகிறது என்பதைப் பற்றியது இந்த சூத்திரங்கள். இந்த பிரம்ம உலகை அடைந்தவன் திரும்பி இந்த உலகுக்கு வருவதில்லை என்று சொல்லி பிரம்ம சூத்திரங்கள்



முடிவடைகின்றன. சங்கரர் பிரம்ம உலகம் என்பது சகுண பிரம்மத்தின் இடம் என்கிறார். மற்றபடி உரையாசிரியர்களிடம் வேறுபாடுகள் இல்லை. நாம் இருக்கும் உலகம் கர்ம பூமி எனப்படும். மோட்சம் என்பது இந்தப் பூமியிலிருந்து விடுபடுதல். ஒரு அரசகுமாரன் (பேரானந்தத்திலேயே இருக்க வேண்டியவன்) ஓர் ஏழையின் குடும்பத்தில் மாட்டிக்கொண்டு அல்லல் படுகிறான். உண்மையை உணர்ந்ததும், தந்தையின் (அரச) வீட்டிற்குச் சென்று விடுகிறான்- ஏழை வீட்டை முற்றிலும் மறந்து/ துறந்து விட்டு. மோட்சத்தை இப்படி உருவகப்படுத்தலாம். (prodigal sons return). இவ்வுலக வாழ்க்கையை நாம் என்றாவது தொலைத்துவிட வேண்டும் என்ற கருத்து வேத/ உபநிஷத்தில் ஆதாரமானது. அது சரியா, தவறா என்று நிர்ணயிப்பதை உங்களிடமே விட்டு விடுகிறோம்.

### *தன் உண்மை இயல்பைப் பெறுதல்*

**4.4.1. ஸம்பத்யாவிர்பாவ: ஸ்வேந சப்தாத்.**

> *பிரம்ம ஞானி கடைசியில் தன் உண்மை இயல்பை அடைகிறான்/ உணர்கிறான். அமாநவன் கூட்டிச் சென்று பிரம்ம உலகை அடையும் போது என்று கூட்டிக் கொள்ள வேண்டும்.*

சங்கரர், ஜீவாத்மா பரமாத்வாவின் ஐக்யத்தைக் கூறுகிறது என்கிறார். ராமாநுஜர், ஞானச்சுருக்கம் (ஸங்கோசம்) நீங்கப்பெற்று ஜீவாத்மா தன் உண்மையான ஞானி விரிவு நிலையை அடைகிறது என்கிறார். அதுவே அதன் இயல்பு நிலை. இந்நிலையை அடைந்தவன் முக்தன்.

**4.4.2. முக்த: ப்ரதிஜ்ஞாநாத்.**

> *(உடலிலிருந்து) விடுபட்ட நிலையே உண்மையான ஸ்வரூபம் (ஜீவாத்மாவிற்கு) என்கிறது வேதம். இது ஜீவாத்மா ஏதோ புதிதாக ஒரு ஸ்வரூபத்தை அடைவதில்லை. தன் (எப்போதுமே உள்ள) உண்மை நிலையை அடைகிறது. சங்கரர், இங்கே விடுதலை என்பதற்கு குறைபாடுகளிலிருந்து என்று பொருள் கொள்கிறார்.*

**4.4.3. ஆத்மா ப்ரகரணாத்.**

*(ச) வேதத்தின்படி (ஜீவன்) பிரம்மமாகிறது- ஜீவ பிரம்ம ஐக்கியம்.*

*(ரா) ஜீவாத்மா (தன், மங்கி இருக்கும் எட்டு) குணங்களைப் பெறுகிறது என்கிறது வேதம்.*

ஜீவாத்மா (இவ்வுலகில் இருக்கும்போது) அழுக்கால் மூடிய வைரம் அல்லது ரத்தினக்கல் போலே இந்த அழுக்கு நீக்கப் பெற்றால் (தன்னிடம் எப்போதும் இருக்கும்) தன் ஒளியைப் பெறுவதுபோலே. இங்கே சாந்தோக்யம் (8.7.1) கூறும் எட்டு குணங்கள் (பிரமன் இந்திரனுக்குக் கூறுவதாக வருகிறது) பாவத்திலிருந்து விடுபடுதல், முதுமையிலிருந்து விடுபடுதல், மரணத்திலிருந்து விடுபடுதல், துக்கத்திலிருந்து விடுபடுதல், பசியிலிருந்து விடுபடுதல், தாகத்திலிருந்து விடுபடுதல் மற்றும் எதையும் அடையும் சக்தி. நினைத்ததை முடிக்கும் சக்திகளை அடைதல். ஜீவனுக்கும் பிரம்மத்திற்கும் ஓரளவுக்கு ஒற்றுமை அல்லது சமன்பாடு ஏற்படுகிறது. ஆனால் ஐக்கியமாவதில்லை.

*விட்டுப் பிரிவதில்லை.*

**4.4.4. அவிபாகேந த்ருஷ்டத்வாத்**

*(ச) பிரிக்க முடியாதபடியே வேதத்தில் அப்படிக் காணப்படுவ தால் தத்வமஸி, அஹம் ப்ரமாஸ்மி என்பவை எடுத்துக்காட்டுகள்.*

*(ரா) தனிப்படாதவனாகவே (அநுபவிக்கிறான்) தன் உண்மையான ஸ்வரூபத்தைக் கண்டுவிட்டதால், 'அவி பாக' என்பது ஐக்கியமல்ல* (not identified with Brahman)

*ஜைமிநி, ஔடுலோமியின் கருத்து.*

ராமாநுஜர் கீழ்வரும் இரண்டு சூத்திரங்களை விரோதக் கருத்தாகக் கொள்கிறார்.



**4.4.5. ப்ராஹ்மேண ஜைமிநி உபந்யாஸாதிப்ய:**

*(ச) பிரம்மத்தை இருவகையில் சிந்திக்கலாம். குறையற்ற, குணங்கள் அற்ற நிர்குணப் பிரம்மம், குணங்களோடு கூடிய சகுணப் பிரம்மம். பிரம்ம ஞானி இரண்டாவது நிலையை அடைகிறான் என்பது ஜைமிநியின் கருத்து.*

*(ரா) பிரம்மத்தின் மேலே சொன்ன எட்டு குணங்களைப் பெறுகிறான் பிரம்ம ஞானி என்று கருதுகிறார் ஜைமினி.*

**4.4.6. சிதிதந்மாத்ரேண ததாத்மகத்வாத் இதி ஔடுலோமி:**

*பூரண அறிவாகவே இருக்கும் பிரம்மத்தை பிரம்ம ஞானி அடைகிறார் என்று ஔடுலோமி கருதுகிறார்.*

**4.4.7. ஏவம்அபி உபந்யாஸாத் பூர்வபாவாத் அவிரோதம் பாதராயண:**

*இரண்டுமே சரி என்பது பாதராயணர் கருத்து- அவற்றில் முரண்பாடு இல்லை.*

நினைத்தது கிடைக்கும்.

**4.4.8. ஸங்கல்பாத் ஏவ தத்ச்ருதே:**

*பிரம்ம ஞானி விரும்பியதெல்லாம் அடைகிறான் என்கிறது வேதம்.*

**4.4.9. அத ஏவ ச அநந்யாதிபதி:**

*அவன் (பிரம்ம ஞானி) வேறு எதற்கும் கட்டுப்பட்டவன் அல்லன். (கருமம் முதலானவை அவனைத் தீண்டாது.)*

*அவனுக்கு உடல், உண்டா இல்லையா?*

**4.4.10. அபாவம் பாதரி: ஏவம் ஹி ஆஹ**

*பாதரி என்பவர் ஞானிக்கு உடல், முதலியன இல்லை-வேதம் அப்படிச் சொல்வதால் என்கிறார்.*

**4.4.11. பாவம் ஜைமினிர்விகல்பாமநநாத்.**

*(உடல் முதலியன) உண்டு என்கிறார் ஜைமினி.*

**4.4.12. தத்வாதசாஹவத் உபயவிதம் பாதராயணோத:**

*பாதராயணர் இரண்டும் சரியே என்கிறார்.*

பிரம்ம ஞானி தான் விரும்பியதை அடையலாம் என்று சொல்வதால், அவன் உடல், ஐம்பொன்கள் இவற்றை விரும்பினால் அடைய முடியுமா என்ற கேள்விக்குப் பதிலாக மேலே சொன்ன சூத்திரங்கள் அமைகின்றன.

**4.4.13. தந்வபாவே ஸந்த்யவத் உபபத்தே:**

*கனவு நிலையில் (உடல் இல்லாமலே) நாம் அநுபவிப்பது போலேயும்.*

**4.4.14. பாவே ஜாக்ரத்வத்**

*விழிப்பு நிலையில் (உடலோடு) அநுபவிப்பது போலேயும்.*

முக்தனாகிய பிரம்ம ஞானி ஒரே சமயத்தில் பல உருவங்களாக ஆக விரும்பினால் (அவன் இப்போது எதை வேண்டுமானாலும் விரும்பலாம்) அணுவான ஜீவாத்மாவுக்கு எவ்வாறு பொருந்தும் என்ற சந்தேகத்திற்குப் பதிலாக அமைகிறது வரும் சூத்திரம்.

**4.4.15. ப்ரதீபவத் ஆவேச: ததா தர்சயதி ஹி.**

*விளக்கு ஓரிடத்தில் இருந்தாலும், அதன் ஒளி பல இடங்களில் பரவுவது போலே என்கிறது வேதம்.*

உதாரணம் சரி என்றாலும், ஜீவாத்மா எப்படி பல உடல்களில் பாவி இருந்து அநுபவிக்க முடியும்? சங்கரர், பிரம்மத்தோடு



ஐக்கியம் ஆகிவிடுவதால் இது முடியும் என்கிறார். ராமாநுஜர், ஸௌபரி என்ற முனிவர் செய்யவில்லையா என்கிறார். (இவர் ஒரே சமயம் பல பெண்களை மணந்து, ஒவ்வொருவருடனும் தனித்தனியே குடித்தனம் நடத்தினார். என்ன விசித்திர சக்தி!)

'இப்போது, எல்லாம் அறிந்தவனான பரமாத்மாவோடு இருப்பவன் வெளியில் இருப்பதையும் உள்ளே இருப்பதையும் அறியவில்லை' என்ற பிருகதாரண்யக 6.3.21 சொற்கள் மேலே சொன்னதற்கு முரணாக இருக்கிறதே என்ற சந்தேகத்திற்கு விளக்கமாக அமைகிறது வரும் சூத்திரம்.

**4.4.16. ஸ்வாப்யயஸம்பத்த்யோ: அன்யதராபேக்ஷம் ஆவிஷ்க்ருதம் ஹி.**

*(பிருகதாரண்யகத்தில்) அங்கே சொல்லப்பட்டது தூக்க அல்லது மரணநிலையில் இருப்பவனைப் பற்றி, பிரம்ம ஞானியைப் பற்றி அல்ல.*

படைத்தல் முதலானவற்றை முக்தன் செய்யமுடியாது.

**4.4.17. ஜகத் வ்யாபாரவர்ஜம் ப்ரகரணாத் அஸந்நிஹி தத்வாச்ச.**

*பிரம்மஞானிக்கு (பிரம்மத்திற்கே உரிய) படைத்தல், காத்தல் அழித்தல் போன்ற செயல்களைச் செய்ய முடியாது. பிரம்மத்தைப் பற்றிக் கூறும் இடங்களிலும் உலகப் படைப்பைப் பற்றிக் கூறும் (வேதம்) இடங்களிலும் இது தெளிவாகிறது. (அங்கெல்லாம் பிரம்ம ஞானி கூறப்படவில்லை.)*

**4.4.18. ப்ரத்யக்ஷோபதேசாத் இதிசேத்ந, ஆதிகாரிமண்டலஸ்-தோக்தே:**

*வேதம், முக்தனானவன் எங்கேயும் செல்ல முடியும், எதையும் செய்ய முடியும் என்று சொல்கிறதே. அப்படியானால் ஏன் படைத்தல் முதலியவற்றை அவனால் செய்ய முடியாது என்று கேட்டால், அது தவறு. அவன் பிரம்மத்தால்*

படைக்கப்பட்ட உலக்ங்களிலேயே எங்கும் செல்ல முடியும்; எதையும் செய்ய முடியும், அவ்வளவே.

**4.4.19.** விகாராவர்த்தி ச ததாஹி ஸ்திதிமாஹ.

(ச) மாறுதல்களுக்கு அப்பாற்பட்டதாம் (உலகப் பொருள்கள் யாவற்றுக்கும் அப்பாற்பட்ட) பிரம்மம் உள்ளது என்கிறது வேதம்.

சங்கரரின்படி, பிரம்மம் இருவகையில் தங்குகிறது. (abides in two forms)- நிர்க்குணமாக மற்றது சகுணமாக. சகுணமாக நினைத்து வழிபடுபவன் சகுண பிரம்மத்தை அடைகிறான், (எதை வழிபடு கிறானோ அதாகவே ஆகிறான்) அங்கேயும் சகுணபிரம்மத்தின் சில குணங்களை அடைவதில்லை அவன்.

(ரா) மாறுதல் அற்ற பிரம்மத்தை முக்தன் அடைந்து அநுபவிக்கிறான்- வேதம் சொல்கிறது அப்படி.

ராமாநுஜரின்படி நிர்குணப் பிரம்மம் என்பது கிடையாது.

**4.4.20.** தர்ச்யதச்சைவம் ப்ரத்யக்ஷாநுமாநே.

(ச) இரண்டு வித பிரம்மத்தை உணரலாம். ஊகிக்கலாம் அங்கே சூரியன் இல்லை. நிலவு இல்லை ஒளி இல்லை.

(ரா) படைத்தல் முதலியவை பிரம்மத்திற்கே என்று வேதம் கூறுகிறது.

**4.4.21.** போகமாத்ர ஸாம்யலிங்காச்ச

(ச) (ரா) அநுபவிப்பது (பிரம்மத்தோடு மட்டுமே) முக்தனுக்குக் கூறப்பட்டு இருப்பதால், படைத்தல் முதலியவைகளை முக்தன் செய்ய முடியாது.

**4.4.22.** அநாவ்ருத்தி: சப்தாத் அநாவ்ருத்தி: சப்தாத்.

பிரம்ம ஞானியான முக்தன் இவ்வுலக வாழ்க்கைக்குத் திரும்பி வருவதில்லை என்கிறது வேதம்.



அத்தியாய முடிவைக் காட்ட இந்தக் கடைசி சூத்திரம் இருமுறை கூறப்படுகிறது.

சாந்தோக்யம் 8.15.1 கூறும் 'நச புநராவர்த்ததே, நச புநராவர்த்ததே' (திரும்பி வருவதில்லை, திரும்பி வருவதில்லை) இங்கே எடுத்துக்காட்டு. இதுவும் சாந்தோக்ய உபநிஷத்தின் கடைசி வார்த்தைகள்.

**இந்தப் பாதத்தில் சொன்ன முக்கியக் கருத்துகளைக் கீழ்க்கண்ட வாறு ஞாபகப்படுத்திக் கொள்ளலாம்.**

1. மோட்சத்தை அடைந்த பிரம்ம ஞானியான முக்தன், தன் உண்மை நிலையை அடைகிறான். அவனுக்கு கர்மம் கிடையாது.

2. அந்த முக்தன் எங்கேயும் செல்லலாம், அவன் நினைத்ததை முடிப்பவன்.

3. அவன் விரும்பினால் பல உருவ, உடல்களை எடுத்துக் கொள்ளலாம்- ஒரே சமயத்திலும்.

4. ஆனால் அவனுக்கு படைத்தல் முதலியவைகளைச் செய்யும் ஆற்றல் கிடையாது. அது பிரம்மத்திற்கு மட்டுமே உண்டு.

5. அவனை பிரம்மத்திடமிருந்து விட்டுப் பிரிக்க முடியாது.

6. அவன் திரும்பி இந்த உலக வாழ்க்கைக்கு வருவதில்லை. அவனுக்கு மறுபிறவி இல்லை.

சங்கரர், பிரம்மத்தை இரு வகையாகக் காண்கிறார். குணமற்ற (நிர்குண) பிரம்மமாகவும், குணங்களோடு கூடியதாகவும், அவரின்படி உண்மை ஞானம் அல்லது அறியாமையை ஒழித்தவன், இவ்வுலகிலேயே (மரணம் அடையும் முன்பே) பிரம்மத்துடன் ஐக்கியமாகலாம். இந்த அத்தியாயத்தில் சொல்லப்பட்ட அர்ச்சிராதி வழி முதலியன சகுணப் பிரம்மத்தையே அடை விக்கும். ராமாநுஜர், நிர்க்குணப் பிரம்மம் என்பது (முயலின் கொம்பு மாதிரி) ஒரு இல் பொருள் என்கிறார். நற்குணங்களின் கொள்கலன் பிரம்மம். நிர்க்குணம் என்ற சொல் கெட்ட குணங்கள் இல்லாமை யையே குறிக்கிறது. மோட்சம் என்பது ஜீவாத்மா, பரமாத்மாவின் சமன்பாடு- Equality but not identity. இந்த சமன்பாட்டு நிலையில் மறுபிறவி இல்லை, எதையும் நாம் அனுபவிக்கலாம், அந்தமில் பேரின்ப நிலையை அடையலாம். முடிவில்லாத, மாறுதலற்ற பேரின்பம். எப்படி இருக்கும் என்று நினைத்துப் பார்ப்பதை விட, அந்த நிலையை நாம் விரும்பிப் பெற வேண்டுமா என்று எண்ணிப் பாருங்கள்.

Released by Maran's Dog ,Toronto, Canada

## முடிவுரை

எங்களால் முடிந்தவரை பிரம்ம சூத்திரத்தை எளிமையாகச் சொல்லி இருக்கிறோம். சுருக்கமாக அங்கங்கே விளக்கமும் தந்திருக்கிறோம். ஒவ்வொரு பாதத்தின் முக்கியக் கருத்துகளை, பாதத்தின் முடிவில் தந்திருக்கிறோம். இந்தத் தொடர் வெளிவரும் போது, பலர், புரிவது கடினமாக இருக்கிறது என்றனர். இந்த சூத்திரங்களில் ஒரு தொடர்ச்சி இருக்கிறது. மாதாமாதம் விட்டு விட்டுப் படித்தால் புரிவது கஷ்டமாக இருந்திருக்கலாம். உங்களிடம் எங்கள் வேண்டுகோள்'' திரும்ப ஒருமுறை மெல்லப் படியுங்கள்- பாதம், பாதமாக, வார்த்தைகளைப் படிக்கும்போது அவற்றைப் பொருந்துகிற மனத்தில், (சிந்தித்து) வாங்கிக் கொள்ளுங்கள், புரிந்துவிடும். பிரம்மத்தைப் பற்றிய வேதக் கருத்துகள் அவ்வளவு கடினமில்லை நமக்கு. நீங்களே சொல்லப் போகிறீர்கள்- இவ்வளவுதானா என்று. கடைசியாக ஒரு வேண்டு கோள். பிரம்ம சூத்திரம் இவ்வளவுதானா என்று முடித்துவிடா தீர்கள். அவற்றைப் பற்றிய இன்னும் பல நூல்களைப் படியுங்கள். அவை பற்றிய சொற்பொழிவுகளை அறிஞர்கள் மூலம் விரும்பிக் கேளுங்கள். அப்போது, பாதராயணர் சொன்னது முழுமையாகப் புரிந்துவிடும்.

எங்கள் எளிமையான அறிமுகம் நிறைவடைகிறது.



## ஆசிரியரின் பிற நூல்கள்

| | |
|---|---|
| காயத்ரி | 32.00 |
| ஓலைப்பட்டாசு | 40.00 |
| சொர்க்கத் தீவு | 45.00 |
| ப்ரியா | 68.00 |
| ஜீனோம்- | 16.00 |
| சில வித்யாசங்கள் | 46.00 |
| மாயா | 32.00 |
| இரண்டாவது காதல் கதை | 87.00 |
| ஐந்தாவது அத்தியாயம் | 35.00 |
| ஓரிரு எண்ணங்கள் | 105.00 |
| ஆழ்வார்கள் (ஓர் எளிய அறிமுகம்) | 60.00 |
| ஆ!- | 80.00 |
| விக்ரம் | 48.00 |
| இருள் வரும் நேரம் | 55.00 |
| கற்பனைக்கும் அப்பால் | 35.00 |
| விபரீதக் கோட்பாடு | 40.00 |
| 21ம் விளிம்பு | 65.00 |
| கமிஷனருக்குக் கடிதம்- | 70.00 |
| அப்ஸரா- | 70.00 |
| பாரதி இருந்த வீடு | 50.00 |
| பூக்குட்டி- | 35.00 |
| விழுந்த நட்சத்திரம் | 56.00 |
| வாய்மையே சிலசமயம் வெல்லும் | 70.00 |

Released by Maran's Dog ,Toronto, Canada